உ

ஓம் நமசிவாய

# சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும்



சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் J.P.

M.A., in Saiva Shithantham

P 764

உ
ஓம் நமசிவாய

# சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும்

சைவப்புலவர்
## செ. கந்த சத்தியதாசன்
M.A. in Shaiva Shithantham

**மணிமேகலைப் பிரசுரம்**
தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,
தியாகராயநகர், சென்னை – 600 017.
தொலைபேசி : 2434 2926, 2434 6082
மின் அஞ்சல் : manimekalai1@dataone.in
மின் இணையம் : www.tamilvanan.com

## நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப் புலவர்களின் பங்களிப்பும் |
| ஆசிரியர் | சைவப் புலவர் செ. கந்த சத்தியதாசன்<br>முருகன்திடல், புத்தூர் கிழக்கு,<br>புத்தூர், இலங்கை |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2010 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | கிரௌன் சைஸ் (12 x 18 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | xxiv + 192 = 216 |
| நூலின் விலை | **ரூ. 85.00** |
| அட்டைப்பட ஓவியம் | ஓவியர் ஜமால் |
| லேசர் வடிவமைப்பு | பி.எஸ். முத்து கிராஃபிக்ஸ்<br>சென்னை - 600 015. |
| அச்சிட்டோர் | பி.வி.ஆர். ஆஃப்செட்<br>சென்னை - 600 094. |
| நூல் கட்டுமானம் | தையல் |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அத்தியாயம் - 01 நோக்கமும் வரையறையும் | | 01 |
| அத்தியாயம் - 02 யாழ்ப்பாணச் சைவக்கல்வி வரலாறு | | 09 |
| 2.1 | யாழ்ப்பாணச் சைவக்கல்வி வரலாறு - முற்காலம் | 09 |
| 2.2 | 19ம் நூற்றாண்டில் சைவக்கல்வி வரலாறு | 26 |
| 2.3 | 20ம் நூற்றாண்டில் சைவக்கல்வி வரலாறு | 48 |
| அத்தியாயம் - 03 அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் சைவக்கல்விப் பணி | | 101 |
| 3.1 | அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் | 101 |
| 3.2 | அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சைவக் கல்விச் செயற்பாடுகள் | 114 |
| 3.2.1 | இளஞ்சைவப்புலவர் சைவப்புலவர் தேர்வுகள் | 114 |
| 3.2.2 | பாடத்திட்டங்கள் | 120 |
| 3.2.3. | தேர்வு வினாத்தாள்கள் | 130 |
| 3.2.4 | பட்டம் பெற்றோர் பட்டியல் | 136 |
| 3.3.0 | இணைப்பாடவிதான செயற்பாடுகள் | 148 |
| 3.3.1 | புராண படனம் | 148 |
| 3.3.2. | பண்ணிசை | 150 |
| 3.3.3 | நாடக விழாக்கள் | 150 |

3.4.0 சைவ மகாநாடுகள் 152

3.5.0 பாராட்டு வைபவங்கள் 154

3.6.0 நூல் வெளியீடுகள் 157

3.7.0 சைவக்கல்வி நிறுவனங்களுடன் உள்ள தொடர்பு 159

3.8.0 சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களின் செயற்பாடுகள் 161

**அத்தியாயம் - 04 அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் எதிர்காலத்திட்டங்கள்** 177

4.1 சைவசமய பிரசாரகர்களை உருவாக்குதல் 177

4.2. சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம் பெற்றுக்கொடுத்தல் 179

4.3 மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனமாகத் தரமுயர்த்துதல் 181

4.4 நூல் நிலையம் அமைத்தல் 184

**அத்தியாயம் - 05 நிறைவுரை** 186

உசாத்துணை நூற்பட்டியல்



நூலாசிரியர் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் எம்.ஏ., துணைவியார் மல்லிகாதேவி, மகன் சிவகாந்தன் ஆகியோர் திருவாவடுதுறை ஆதீன 23வது குரு மகா சந்நிதானம் அவர்களிடம் ஆசி பெற்றுக் கொள்கின்றார்கள்

சைவச் சொற்பொழிவாளர், வருணனையாளர், சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர், சைவசித்தாந்த வாரிதி, சைவசித்தாந்த கலாநிதி, அருள்நெறித் தமிழருவி, அருள்நெறிச் செல்வர், அறநெறிக்குரு, அருட்சொல்வாரி, சொல்லமுதவாரி, செஞ்சொற் செல்வர், இந்து தர்மாசிரியர்

**செ. கந்த சத்தியதாசன்** M.A. in Saiva Shithantham

அகில இலங்கை சமாதானநீதவான்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் கல்வி வலயம், வலிகாமம், யாழ்ப்பாணம்

செயலாளர், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
அமைப்பாளர், மாவைசிவநாதம் பட்டிமன்றக்குழு
அதிபர், கன்னியர் வைரவர் அறநெறிப் பாடசாலை, புத்தூர்



# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

தொலைபேசி:

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.

## ஆசியுரை




சீனாதனமான சைவ சமயம் அறிவியல் சார்ந்தது. கல்வி மரபைக் கொண்டது. வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தது. இன்றைய உலகில் சமய வாழ்வுக்கு பல சவால்கள் உண்டு. குறிப்பாக இளந்தலைமுறையினர் சமயநெறிகளில் பற்றின்றி வாழ்வதைக் காண முடிகின்றது. இதனால் சமூகத்தில் ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆன்மீக விழுமியங்கள் கேள்விக்குறியாகி உள்ளது. இத்தகைய சவால்களுக்கு மத்தியில் மக்களுக்கு தம்மாலியன்ற வழிகாட்டலையும் சமய வாழ்வு பற்றிய போதனைகளையும் இறைபணி நின்று ஆற்றி வருபவர்களுள் சைவப் புலவர் செ. கந்தசத்தியதாசனும் ஒருவர்.

தனது சைவ சமயம் சார்ந்த அறிவாலும், ஆற்றலாலும் சொற்பொழிவு, நேர்முகவர்ணனை, பண்ணிசை, கதாப்பிரசங்கம் மூலம் நாடு முழுவதிலும் சைவ சமயத்தை வளர்த்தெடுத்து வரும் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் சாதாரண பாமர மக்களையும் பக்தி வயப்பட நன்கு செயலாற்றி வருகின்றார். எழுத்துத் துறையிலும் பல நூல்களை எழுதியுள்ளார். அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் கௌரவ செயலாளராக நீண்ட காலம் பணியாற்றி சைவப் புலவர்களை உருவாக்கி நெறிப்படுத்தி வருகின்றார்.

எமது வரலாறுகள் பேணப்படவேண்டும், பரப்ப வேண்டும். உலகெங்கும் பரந்து வாழும் இந்துக்கள், தமிழர்கள் யாழ்ப்பாண சைவக் கல்வியை அறிந்து கொள்ள வேண்டும் எனும் முயற்சியில் பொன்விழா ஆண்டில் இந்நூல் வெளிவருவது பெருமைக்குரியது. நீங்கள் ஒவ்வொருவரும் இந்நூலினைப் பெற்று நம்மவர்களின் பண்பாட்டை அறிவதோடு இளந்தலைமுறையினருக்கும் இவற்றை தெரியப்படுத்த வேண்டுகின்றேன். நூலாசிரியர் அவர்களின் இப்பணி மேன்மேலும் தொடர எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன். ஸ்ரீ தட்சணா மூர்த்தியின் குரு ஆசீர்வாதமும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.



உ
சிவமயம்

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
## ப. கோபாலகிருஷ்ண ஐயர்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வாழ்த்துரை



அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் சைவக் கல்விப் பணி பற்றி உலகம் அறியக் கூடிய வகையில் ஆக்கப்பூர்வமான நூலொன்று வெளிவருவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். யாழ்ப்பாணம் சைவ சமயம், சைவ சித்தாந்தம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு உறைவிடமாக விளங்கி வருவது வரலாற்று உண்மையாகும். நல்லை நகர் நாவலருக்கு திருவாவடுதுறை ஆதீனம் அவரது சமயப் புலமைத்துவத்தைப் பாராட்டி கௌரவித்து நாவலர் பட்டம் வழங்கியமை தமிழகத்தில் யாழ்ப்பாணத்துச் சைவப் பாரம்பரியத்திற்குக் கிடைத்த கௌரவமெனில் மிகையில்லை. அத்தகைய பெரியாரின் வழிகாட்டலில் சைவக் கல்விப் பணியாற்றி வரும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 2010 ஆம் ஆண்டு பொன்விழா கொண்டாடியதோடு அதன் ஞாபகார்த்தமாக 'சைவ நாதம்' என்ற அரிய சிறப்பு

மலரொன்றினை வெளியிட்டமை அச்சங்கத்தின் அளப்பரிய பணிகளை உலகறியச் செய்துள்ளது. அதற்கு மேலும் மெருகூட்டும் வகையில் சங்கத்தின் பல்வேறு பரிமாணங்களை எடுத்து விளக்குவதாக அமைவது 'சைவக்கல்விப் பாரம்பரியமும் சைவப் புலவர்களின் பங்களிப்பும்' என்ற இந்நூலாகும். மேலும், சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் இந்நூலில் எடுத்துக் கூறப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இந்நூலாசிரியர் சைவப் புலவர் திரு. செ. கந்த சத்தியதாசன் சைவசித்தாந்த முதுகலைமாணி உயர்பட்டப் பயிற்சியின் போது என்னிடம் கல்வி பயின்ற மாணவன். என் மீது அன்பும் குருபக்தியும் கொண்டவர். தனது ஆற்றலை வளர்த்து உயர்ச்சி கண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டதாரியாகவும் சைவ சித்தாந்த முதுகலைமாணிப் பட்டம் பெற்றவராகவும் திகழ்பவர். எழுத்திலும், பேச்சிலும் சைவ சமய அறிவை மக்களிடையே பரவச் செய்து வருபவர். சிறந்த பேச்சாளர். சைவப் புலவர்கள் சிறந்த சமயப் பிரசாரகர்களாகத் திகழ வேண்டும் என யான் வலியுறுத்தி வரும் கருத்துக்கு ஏற்ப சைவப்பணியில் ஈடுபட்டு வருபவர். இத்துறை சார்ந்த அவரது ஆற்றலை வெளிப்படுத்துவனவாக அவருக்குக் கிடைத்த பல கௌரவ பட்டங்கள் அமைகின்றன. சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், தர்மாசிரியர் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளவர். தற்பொழுது அவர் சைவசமயத்துறை சார்ந்த சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகப் பணியாற்றி வருபவர். அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கச் செயலாளராகவும் இளம் சைவப்புலவர்களை பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபாடு கொண்டவராகவும் விளங்குபவர். இத்தகைய பல்துறை

சார்ந்த அனுபவத்தின் வெளிப்பாடாகவே அவரது இந்நூல் அமைகின்றது.

அவரது அயராத முயற்சியின் பெறுபேறாக அமையும் இந்நூல் சைவப்புலவர் சங்கத்தின் பெருமைகளை உலகறியச் செய்யும் நோக்கில் வெளிவருவதோடு ஏனைய சைவ சமய அமைப்புக்களின் அர்ப்பணிப்புள்ள பணிகளுக்கு முன் மாதிரியாகவும் இளந்தலை முறையினர்க்கு வழிகாட்டியாகவும் அமைகின்றமை குறிப்பிடற்பாலது. நூலாசிரியர் சைவப்புலவர் திரு. செ. கந்த சத்தியதாசனை மனதாரப் பாராட்டுகின்றேன். அவரது இந்நூலை சைவ உலகம் உவந்து வரவேற்கும் என்பது எனது நம்பிக்கை.

நூலாசிரியர் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன், அவர்களது இவ்வரிய முயற்சி தொடரவும் சிறந்த சைவ சமயப்பணியாற்றவும் எல்லா நலன்களும் கிட்டும் வண்ணம் ஸ்ரீபார்வதி சமேத பரமேஸ்வரனின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துகின்றேன்.

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்!'

ப. கோபாலகிருஷ்ணஐயர்

யாழ்ப்பாணம் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
01-01-2011

ஓஓஓ

அலுவலகம் : 021 222 2308
இல்லம் : 0213214977

உ
சிவமயம்


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


திருநெல்வேலி, யாழ்ப்பாணம், இலங்கை


பேராசிரியர், டாக்டர்
**மா. வேதநாதன்**
B.A. (Hons)., M.A., Ph.D.,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
இணைப்பாளர், சைவசித்தாந்த முதுகலைமாணி.

தேதி : 1.1.2011

நயினாதீவு
யாழ்ப்பாணம்


தேதி : 1.1.2011

# வாழ்த்துரை



சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்வது சைவநெறிக் கேயுரிய தனிச்சிறப்பாகும். இச் சைவ சமய நெறியின் கல்விப் பாரம்பரியம் மிகவும் தொன்மை வாய்ந்தது. சைவக் கல்வியின் முதல் ஆசிரியர் சிவபெரு மானே என்பது சைவ சமயிகளின் உறுதியான நம்பிக்கையாகும். வேதம், ஆகமம், திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள் என்பன சைவநெறியை வளப்படுத்தும் சைவப் பண்பாட்டு இலக்கியங்களாக விளங்குகின்றன.

'சிவபூமி' என்று திருமூலரால் சிறப்பிக்கப்படும் இலங்கையில் உள்ள சைவாலயங்களும், சைவ சமய நிறுவனங்களும், சைவச் சான்றோர்களும், இலங்கையில்

சைவநெறியை மென்மேலும் வளர்த்தெடுத்து வருகின்றனர். கந்தபுராண கலாசாரம் சிறப்புற்று விளங்கும் யாழ்ப்பாணத்தில் சைவ ஒளி நன்கு பிரகாசித்து விளங்குகின்றது.

இலங்கையில் சித்தாந்த சைவக்கல்வியை வளர்த்தெடுத்தவர்களுள் திருநெல்வேலி சுவாமி ஞானப் பிரகாச முனிவர், நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர் பொன் இராமநாதன், இந்து போர்ட் இராசரெத்தினம், சைவப் பெரியார் சு. சிவபாத சுந்தரனார், அச்சுவேலி சு. குமாரசுவாமிக் குருக்கள் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். நாவலர் வளர்த்த சைவக்கல்வி மரபு இன்றும் தொடர்கின்றது.

இலங்கையில் சித்தாந்த சைவக் கல்வியை வளர்த்தெடுத்த சான்றோர்களின் கல்விப் பணிகளைப் புலப்படுத்தும் நோக்கில் எனது அன்புக்குரிய மாணவரும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் கௌரவ செயலாளராகவும் விளங்கும் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் அவர்கள், ''சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப் புலவர்களின் பங்களிப்பும்'' என்னும் நூலை வெளியிடுவது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அவரை மனதாரப் பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன்.


பொன்விழாக் கண்டுகொண்டிருக்கும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் அரும்பணிகளை நன்கு அறிவேன். சைவ சித்தாந்தக் கல்வியைப் பரப்புரை செய்வதில் சைவப்புலவர்கள் பெரிதும் ஈடுபட்டு வருகின்றனர்.

சைவநெறியைப் பரப்புரை செய்யும் பணியில் ஈடுபட்டு வரும் எமது அன்பு மாணவர் செ. கந்த சத்திய தாசன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்த

முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர். சைவ சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம், புராண படனம் செய்தல், வானொலி, தொலைக்காட்சி மூலம் ஆலய விழாக்களை நேர்முக வர்ணனை செய்தல் ஆகியவற்றில் தன்னைப் பெரிதும் ஈடுபடுத்தி வருகின்றார். ஆசிரிய ஆலோசகராக, சைவசித்தாந்த பண்டிதராக விளங்கும் இந்நூலாசிரியர் மென்மேலும் இதுபோன்ற நூல்களை வெளியிடுவதற்கு எமது குலதெய்வமாகிய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்''

மா. வேதநாதன்




நூலாசிரியர் சைவப்புலவர்
செ. கந்த சத்தியதாசன்
இலங்கைப் பல்கலைக்
கழகங்களின் வேந்தர்
பேராசிரியர் எம். சிவசூரியர்
அவர்களிடம் பட்டம்
பெறுகிறார்.

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
பொன்விழா ஆண்டு 1960 - 2010
HA/4/3/25 - 30.09.1960
T.P +94212223458
T.P +94112738238

# வாழ்த்துரை



"சைவக்கல்விப் பாரம்பரியமும் சைவப் புலவர்களின் பங்களிப்பும்" என்னும் நூலினைச் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் அவர்கள் வெளியிடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதோடு அவரின் முயற்சியையும் முதற்கண் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணம் நல்லூரில் தோன்றி அன்றிருந்த விதேசிகளினால் அழுத்தந் தரப்பட்டுப் பல்வேறு வழிகளாலும் புகுத்தப்பட்ட புறச் சமய நெறி மீதூர்ந்து மக்களை நெறியல்லா நெறியில் ஒழுகச் செய்ய முற்பட்டபோது, தமிழ்மொழியையும் சுருதி நெறியினையும் சைவ ஒழுக்கத்தினையும் நிலைநிறுத்தப் பல்வேறு வகைத் தொண்டாற்றி சைவ சமய நெறி இதுவெனத் தெளிவுறுத்தி இன்றும் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் செந்நெறியாகிய சிவநெறி நிலை பெற்றிருக்க வழிகாட்டினார்.

நாவலர் பெருமான் வழியில் அவர்தம் மாணவர் பரம்பரை அன்று தொட்டு இன்றுவரை செந்தமிழாம் மொழி ஓங்கவும், சிவநெறியாம் திருநெறி செழிப்புறவும் ஒல்லும் வகையெல்லாம் ஓயாது பணியாற்றி வருகின்றனர்.

வேதாகம வழிபாட்டு முறைகள் ஆலய புனருத் தாரணம், தொன்மைத் தமிழ் சமய நூல்களை ஏற்றவாறு மக்களிடையே அறிமுகப்படுத்தி அறிவாற்றலை மேம்படுத்தல், பிரசங்கங்கள் சொற்பொழிவுகள் மூலம் புராண இதிகாச உண்மைகளை தக்கவாறு ஆலயங்கள், பாடசாலைகள், பட்டிமன்றங்கள், பொது நிகழ்வுகள் என்றின்னோரன்ன வழிகள் மூலம் வெளிப்படுத்தி அவற்றினை சாதாரண மக்களும் உய்த்துணரத் தக்க முறையில் ஆற்றுப்படுத்தல் போன்ற பணிகளை முன்னெடுத்து வருகின்றமையை யாவரும் அறிவர்.

இச்சைவபரம்பரையினரில் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் ஈர்க்கப்பட்ட சைவப்புலவர்கள் விசேடமாக பண்டைத் தமிழ் இலக்கண இலக்கிய நூல்களையும் சைவத் திருமுறைகள் சைவ சித்தாந்த சாத்திர நூல்களையும் நன்கு கற்று, உரிய தேர்வில் சித்தியடைந்து ஈழத் திருநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கு சைவ சமய நிறுவனங்களுடனும், சமூகத்துடனும் ஒருமித்தும் தனித்தும் சைவப் பணியும், தமிழ்ப்பணியும் ஆற்றி வருகின்றனர். அறிவார்ந்த சைவப்புலவர்களின் பணி பல்லோராலும் பாராட்டப் படுகின்றது.

சைவப் புலவர்களின் ஆழ்ந்த புலமையையும், அறிவுசார் செயற்பாடுகளையும் ஆராய்ந்து அளவிட்டு

ஏற்றுக்கணித்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழக உயர்கல்விப்பீடம் ''சைவ சித்தாந்த முதுகலைமாணி பட்டப் பின்படிப்பு'' துறைக்கு ''சைவப் புலவர்'' பட்டம் பெற்றவர்களையும் உள்வாங்கி உயர் பட்டத்தினை வழங்கும் நடைமுறையையும் கடந்த ஆண்டில் இருந்து செயற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் இலங்கையில் 1960ம் ஆண்டில் நிறுவப்பட்டு தகைமைசால் சைவப் புலவர்களை ஆண்டுதோறும் தேர்வு மூலம் தகுதி கண்டு வெளிப்படுத்தி சமூகத்தில் சைவத் தமிழ்ப்பணி செய்ய வழிப்படுத்துகின்றது.

இத்தகையோரின் பங்களிப்பைப் பல்வேறு கோணங்களிலும் நின்று ஆராய்ந்து முன் வைக்கின்ற சங்கத்தின் செயலாளராக தற்போது கடமையாற்றுகின்ற சைவப் புலவர் செ. கந்த சத்தியதாசன் எம்.ஏ., [சைவசித்தாந்தம் - யாழ் பல்கலைக்கழகம்] அவர்களின் கலை பணி போற்றுதற்குரியது. வாழ்த்துதற்குரியது. மேன்மேலும் இத்துறையில் அவர் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

சைவப்புலவர்
**மு. திருஞான சம்பந்தபிள்ளை**
ஓய்வு பெற்ற அதிபர்

தலைவர்,
அகில இலங்கை சைவப் புலவர் சங்கம்,
காங்கேசன் துறை வீதி,
கொக்குவில்.

௳௳௳

உ

சிவமயம்

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் தேர்வுச் செயலாளர்,
சைவப் புலவர் கலாபூசணம் சு. செல்லத்துரை அவர்கள் வழங்கிய

# அணிந்துரை



"சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும்'' என்னும் இந்த ஆய்வு நூலில் சைவக்கல்வி வளர்ச்சியில் சைவப்புலவர் சங்கம் செய்துவரும் தனித்துவமான பணிகள் நன்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் கல்வி வரலாற்றில் முற்காலம், 19ஆம் நூற்றாண்டு, 20 ஆம் நூற்றாண்டு எனும் மூன்று தலைப்புகளில் தகவல்கள் தரப்பட்டுள்ளன. ஆதிகாலத்திலே இங்கு சைவ சமயமே இருந்துள்ளது என்பதை ஆசிரியரின் பின்வரும் கூற்று மெய்ப்பிக்கின்றது.

**"வரலாற்று நோக்கைச் சுருக்கமாக நோக்கின் இலங்கைக்குப் பௌத்த மதம் வருவதற்கு முன் வழக்கில் இருந்த கல்வி மரபு சைவக்கல்வி என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில் இலங்கையை திருமூலர் சிவபூமி என்று அழைத்தமையும், ஆதி இலங்கையில் சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் இலங்கையை ஆண்டமையும், சிவ வழிபாடு செய்தமையும் மட்டுமன்றி இலங்கைக்கு விஜயன் வருகின்ற வேளையிலே இலங்கையின்**

நான்கு திக்கிலும் நான்கு சிவாலயங்கள் காணப்பட்டமையும் இலங்கையில் வாழ்ந்தவர்கள் சைவர்களே என்பது மறைக்க முடியாத உண்மை.'' என்பதை யாழ்ப்பாண வைபவ மாலையைச் சான்றாகக் காட்டியுள்ளமை வரலாற்றுச் சான்றாகக் கொள்ளத்தக்கது.

20ஆம் நூற்றாண்டில் இச்சைவக் கல்விப் பாரம்பரியத்தில் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தை எடுத்துக் கொண்டு அதனை வளர்த்தெடுத்த நாவலர் வழிவந்த பெரியார்களையும் அவர்களால் உருவாக்கப்பட்ட சைவ நிறுவனங்களையும் சிறப்பாக யாழ் சைவ பரிபாலன சபை, இந்துக்கல்லூரி அதிகார சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், நல்லையாதீனம் என்பவை செய்த சைவக்கல்விப் பணிகளைச் சுருக்கமாகவும் சைவப்புலவர் சங்கச் சைவக் கல்விப் பணியை விபரமாகவும் ஆய்வு செய்துள்ளார்.

ஏனைய நிறுவனங்களில் இல்லாத ஒரு தனித்துவம் சைவப்புலவர் சங்கத்திற்கு உள்ளது. அது, சைவக் கல்வியில் புலமையும் சைவ ஆசார அனுட்டானமும் உள்ள சைவப்புலவர்களை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்டு பணி செய்வதும், இத்தகுதியுடைய சைவப் புலவர்களை உருவாக்குவதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளமையுமாகும்.

இதனை மேலும் உறுதி செய்யுமுகமாகச் சைவப் புலவர் சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும், சங்கக்கல்விச் செயற்பாடு, சைவப்புலவர் கல்விக்குரிய பாடத்திட்டம், தேர்வு முறைமை, இணைப்பாடவிதானமாக பண்ணிசை, புராணபடனம், சைவ நாடகம், நூல் வெளியீடுகள், மாநாடுகள், சைவ நிறுவனங்களுடன் இணைந்த செயற்பாடுகள், சைவப் புலவர்களின் கல்விச் செயற்பாடுகள் என்பன பற்றி மிக விரிவாக ஆராயப்பட்டுத் தேவையான விவரங்கள் பட்டியல் படுத்தப்பட்டும், நிழற்படங்கள் மூலம் காட்சிப்படுத்தப்பட்டும் உள்ளன.

இவ்விபரங்கள், 1960 இல் சைவப்புலவர் சங்கம் உருவாக்கப்பட்ட காலம் முதல் 2010இல் பொன்விழாக் கண்ட காலம் வரை புள்ளி விபரங்களுடன் தரப் பட்டுள்ளன.

சங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய தகவலில் சைவப்பிரசாரகர்களை உருவாக்குதல், சைவப்புலவர் களுக்கு ஆசிரிய நியமனம் பெற்றுக் கொடுத்தல், சங்கத்தை மூன்றாம்நிலைக் கல்வி நிறுவனமாகத் தரமுயர்த்தல், நூலகம் உருவாக்குதல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதையும் காண முடிகின்றது.

இந்நூல் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தையும் அதற்குச் சைவப்புலவர் சங்கம் எந்தளவுக்குப் பங்களிப்புச் செய்து வருகின்றது என்பதையும் அறிவதற்குத் தக்க உண்மையான ஆவணமாகக் கருதத்தக்கது என்பதில் சந்தேகமில்லை.

சைவப்பிரசங்கம், கதாப் பிரசங்கம் செய்தல், புராண படனம், திருமுறை ஓதல், ஆசிரியர்களை வழிகாட்டல், ஆசிரியர்களுக்கு விரிவுரைகள், கருத்தரங்குகள் நடத்துதல் என பல சைவப் பணிகளை ஆற்றிவரும் நூலாசிரியர் சைவ சித்தாந்தத்தில் புலமை பெற்றவர். பல பட்டங்களையும் பாராட்டுதல்களையும் பெற்று பல்துறை ஆற்றலுடன் பன்முகப் பணி செய்துவரும் இந்நூலாசிரியர் சைவப்புலவர், செ. கந்த சத்தியதாசன் அவர்களுடைய முயற்சி போற்றுதலுக்குரியது.

கலாபூஷணம், சைவப்புலவர்

[ஓய்வுநிலை முதலாந்தர அதிபர்]

ஓஓஓ

உ

சிவமயம்

# நன்றியுரை

பட்டப் பின் கல்வி [படிப்பு] டிப்ளோமா பயிற்சி நெறியை பகுதி நேரமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கச் சென்ற வேளையில் அவர்களது பாடத்திட்டத்தில் ஆய்வுக்கட்டுரை என்ற பகுதியைப் பார்த்ததும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டும்; அவர்களது பணிகளை வெளியுலகிற்குக் கொண்டு வர வேண்டும் என எண்ணி என் மனதில் சைவச்சிந்தனையை ஏற்படுத்திய தில்லை நடராஜப் பெருமானின் பாதக் கமலங்களை இறைஞ்சுகின்றேன்.

இக்கல்வி மூன்றாம் நிலைக் கல்வியாகாதா என்ற வினா என் மனதைத் தொட்ட வேளையில் **கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் க. சின்னத்தம்பி அவர்கள்** விளக்கங்கள் கூறி **சைவக்கல்விப் பாரம்பரியமும் சைவப்புலவர்களின் பங்களிப்பும்** என்ற தலைப்பில் ஆய்வுப்பணியை மேற்கொள்ள அனுமதியளித்தார். அந்த வகையில் பேராசிரியர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

சைவப்புலவர் சங்கத்தின் கல்விச் செயற்பாடானது இடைநிலைக் கல்வியைக் கடந்து, 20 வயதிற்குப் பின்பு படித்துக் கொள்ளும் கல்வி என்பதால் மூன்றாம் நிலைக்கல்வியை கற்பிக்கும் விரிவுரையாளர் **திருமதி. அ. சத்தியசீலன் அவர்கள்** என்னுடைய இவ்வாய்வை மேற்கொள்வதற்கு மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஏற்று, அவ்வப்போது வழிப்படுத்தி, இவ்வாய்வு நிறைவுற நல்லுதவிகளை நல்கினார். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இவ்வாய்வை ஆரம்பித்த வேளையில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் வரலாறுகள் மற்றும் தரவுகள் நூல்களாக வெளிவரவில்லை. எனவே இச்சங்கத் தினுடைய சைவக்கல்விப்பணி பற்றி ஆய்வு செய்வதற்கு **சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களிடம்** சென்ற வேளையில் தன் வசமுள்ள குறிப்புக்களைத் தந்ததோடு என்னுடைய வினாக்களுக்கும் பதில் கூறி என்னை சைவப்புலவர் இ. செல்லத்துரை, சைவப்புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை, சைப்புலவர் வ. செல்லையா, சைவப்புலவர் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சைவப்புலவர் சு. செல்லத்துரை ஆகியோருடன் தொடர்பு கொள்ளுமாறும் பணித்தார். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர் களிடம் சென்றபோது இன்முகத்தோடு வரவேற்று விடயங்களைத் தந்து எனது வினாக்களுக்குப் பதிலும் தந்தார். இதே போல் சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்களை நாடிய வேளையில் என்னை வாழ்த்தி தேவையான செய்திகளைத் தந்து சில நூல்களையும்

தந்துதவினார். கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை நாடிய போது என்னை ஆசீர்வதித்து சில விடயங்களைத் தந்துதவினார். இதே போல் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும் வேண்டிய உதவிகளை இன்முகத்தோடு செய்து இவ்வாய்வை மேற்கொள்ள உதவினார். இவர்களுக்கும் என் உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இத்தோடு, சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவராக விளங்கிய வித்துவான் சைவப்புலவர் வ. செல்லையா அவர்கள் வவுனியாவில் வாழ்ந்தபோது அவர்களிடமும் சைவப்புலவர் சங்கச் செயற்பாடுகள் பற்றித் தகவல்களைப் பெற வேண்டுமே என நின்ற வேளையில் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் வித்துவான் வ. செல்லையா அவர்களிடம் தொடர்பு கொண்டு கடிதம் மூலம் பல தகவல்களைப் பெற்றுத் தந்தார்கள். அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.


இவற்றோடு திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றிய தகவல் களைப் பெறச் சென்ற வேளையில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களும் அவர்கள் பிரியபத்தினி திருமதி. மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் இன்முகத்தோடு வரவேற்று சில தகவல்களைத் தந்துதவி னார்கள். அவர்களோடு அங்கு வாழும் இல்லச் சிறார் களுக்கு கல்வி போதிக்கும் ஆசிரியர் திரு. வே. செல்வ குமார் அவர்களும் சில தகவல்களைத் தந்து உதவினார்கள். இவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இம்மலரை அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழா ஆண்டில் வெளியிட வேண்டும் என்ற வேளையில் ஆசியுரை வழங்கிய திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகா சந்நிதானம் சீர்வளர் சீர் சுவாமிகள் அவர்களுக்கும், இலங்கை நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன 2வது குரு மகா சந்நிதானம் அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றிகள். மேலும், வாழ்த்துரைகள் வழங்கிய பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், பேராசிரியர் மா. வேதநாதன், ஆகியோருக்கும், அணிந்துரை வழங்கிய திரு. சு. செல்லத்துரை, சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள். இம்மலரை அழகுற அச்சிட்டு வெளியிட்ட மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும், தொடர்புகளை ஏற்படுத்தித் தந்த இணுவையூர் குகானந்தன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

சுபம்

சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்
செயலாளர்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

முருகன் திடல், புத்தூர் கிழக்கு,
புத்தூர், யாழ்ப்பாணம், இலங்கை,
தொ.பே.இ : 0776132176
24.08.2010



# சைவக் கல்விப் பாரம்பரியமும் சைவப் புலவர்களின் பங்களிப்பும்

உ

சிவமயம்

## அத்தியாயம் - 01

# நோக்கமும் வரையறையும்

சைவசமயமானது அனாதியானது. என்றைக்கு, யாரால் தோற்றுவிக்கப்பட்டது எனத் தெரியாத வகையில் மிகப் பழமையான சமயமாக விளங்குகின்றது. இப்படியான சைவ சமயமானது போற்றக்கூடிய வகையிலே தனக்கெனத் தனியான சிறப்பான நாகரிகங்களைக் கொண்டமைந்தது. இவற்றில் ஓரம்சமாக தன்னகத்தே மிகப்பழமையான இலக்கியங்களைக் கொண்டு அறிவியலை வளர்த்த ஒரு சமயமாகவும் காணப்படுகின்றது.

இந்த வகையில் சிவனாலேயே வேதம் என்ற பொது நூலும் ஆகமம் என்ற சிறப்பு நூலும் ஆக்கப்பட்டுள்ளது. இதனையே திருமூலர் தனது திருமந்திரத்தில் பின் வருமாறு கூறுகிறார்.

''வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுன்னுக நாதனு
ரையிவை...''

மேலும் புராணங்கள், இதிகாசங்கள், தர்ம சாஸ்திரங்கள் என்பனவும் 12 திருமுறைகள், 14 மெய்கண்ட சாஸ்திரங்கள், கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருவிளையாடற் புராணம் என ஏராளமான தமிழ்ப் புராணங்களும் திருப்புகழ், கந்தரனுபூதி..... போன்ற தோத்திரப்பாடல்கள் என இவ்வளவு தான் என வரையறுக்கமுடியாது இலட்சக்கணக்கிலே இலக்கியங்கள் தோன்றி கல்வியை வளர்ப்பதிலும் பெரும் பங்களிப்பாற்றியது.

பாரம்பரியமாக குருசீடமுறை என்கின்ற குருகுலக் கல்வி முறை அல்லது பிராமணக்கல்வி முறை மிக நீண்ட காலமாக இந்தியாவிலும் அதையொட்டி இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் நிலவி வந்தாலும் பௌத்த வருகையோடு சற்றுப் பாதிப்புப் பெற்ற பிராமணக் கல்வி முறை 16ஆம் நூற்றாண்டில் அன்னியர்களாகிய கிறீஸ்தவர்களின் வருகையுடன் அற்றுப்போனதென்றே கூறலாம்.

ஆனால், 19ம் நூற்றாண்டில் மீண்டும் சைவக்கல்விப் பாரம்பரியமானது ஆரம்பிக்கப்பட்டு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரது முயற்சியினால் சைவக்கல்வி குருகுலக்கல்வியில் இருந்து நிறுவனமயப்படுத்தப்பட்டது. சைவப்பாடசாலை களை நிறுவி சைவக்கல்வியை வழங்கத் தொடங்கினார். 1948ம் ஆண்டு வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை தொடக்கத்தோடும் நாவலர் பெருமானின் அனுசரணையோடும் பல பாடசாலைகள் யாழ்குடாநாடு எங்கும் ஆரம்பிக்கப்பட்டது.

திண்ணைப்பள்ளிகள் வளர்ச்சி பெற்றன. பிரசங்க முறையிலும் நூல்கள் வெளியிட்டும் நாவலர் பெருமான் கல்வியை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் உந்துதலில் ஆரம்பிக்கப்பட்ட சைவ பரிபாலன சபை இந்துக் கல்லூரிகளை யாழ்ப்பாணத்தில் நிறுவி கல்வியை வளர்க்கத் தொடங்கியது. இதே போல் திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்கம் (Hindu Bord) ஆரம்பமாகி யாழ் மண்ணிலும் இலங்கை எங்கும் பல பாடசாலைகளை நிறுவிப் பரிபாலனம் செய்து வந்தது.

இவை மட்டுமன்றி ஊர்கள் தோறும் சைவப் பிரமுகர்கள் சைவ சமயச்சூழலில் தங்கள் பிள்ளைகள் கல்வி பெறவேண்டும் என்ற வகையில் பல பாடசாலை களை நிறுவி சைவக்கல்வியை வழங்கி வந்தார்கள். மேலும் சைவர்கள், ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கத்தை உருவாக்கி சைவக்கல்விப் பாரம்பரியத்தை வளர்க்கும் ஆசான்களாகிய பண்டிதர்களை உருவாக்கி வந்தார்கள். சைவ ஆசிரிய கலாசாலைகள் நல்லூர், கொழும்புத்துறை, திருநெல்வேலி, கோப்பாய், மாதகல் எனப்பல இடங்களிலும் தோற்றுவித்து ஆசிரியர்களை உருவாக்கி வந்தார்கள்.

ஆனால், *1948*ல் சுதந்திரம் அடைந்த பின்னர் கல்வியிலும் மறுமலர்ச்சி பெற வேண்டும் என்ற சிந்தனை உருவாகி இலவசக் கல்வித்திட்டத்தை அரசு நடை முறைக்குக் கொண்டு வந்தது. பாடசாலைகள் எல்லா வற்றையும் அரசாங்கமே சுவீகரித்து அரசமயமாக்கியது. ஆசிரிய கலாசாலைகளும் அரசினாலேயே நடாத்தப்படத் தொடங்கியது.

அரசாங்கத்தின் இந்த நடைமுறையினால் சைவக் கல்விப் பாரம்பரியம் பெருமளவு தடைப்பட்டு விட்டது என்றே கூற முடியும். என்றாலும் ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கம், சைவபரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச்சங்கம் என்பன சிறிய அளவிலேயே சைவக்

கல்வியை காக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கிய இதே காலகட்டத்திலேயே இலங்கையில் உள்ள சைவப்புலவர் களை ஒன்று திரட்டி "அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்" 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, பெயருக்கேற்ற வகையில் சைவத்தில் புலமையுடையவர்களை உருவாக்கி பல்கலைக்கழகங்கள் போல் பட்ட மளித்தும் வரத்தொடங்கியது.

இந்தியாவின் சைவசித்தாந்த மகாசமாஜத்தினை தாய்ச்சங்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இச்சங்கமானது, சைவக்கல்விப் பாரம்பரியத்தை பல்வேறு வழிமுறைகளில் செயற்படுத்தி வந்தது. பாரம்பரிய முறையில் சைவசமயத் திருநூல்களான சைவசித்தாந்த சாஸ்திரம், திருமுறைகள், பழைய செழுமையான இலக்கியங்கள், தமிழ் இலக்கணங்கள் என்பவற்றை மிக ஆழமான முறையில் போதித்துத் தேர்வுகளை நடத்திப் பட்டங்கள் வழங்கி வருகின்றது. இத்தோடு நமது கலாசாரத்தின் அடிநாதமாக இருக்கின்ற புராணபடனம், பண்ணிசை என்பவற்றை வளர்த்துக் கொள்வதும் நாடகங்கள், நாட்டியங்கள் நடாத்துபவர்களை ஊக்குவித்தலும் சைவப்பெரியார்களை கௌரவித்து அவர்களது சேவைகளை மேலும் ஊக்குவித்தலும், நூல்களை இலகுமொழிநடையில் எழுதி வெளியிட்டு கல்விப்புலமையை வளர்த்தலும் என இன்னோரன்ன பணிகளைச் செய்து வருகின்றது.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பணியானது யாழ்குடாநாடு மட்டுமன்றி கண்டி, மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, கொழும்பு என இலங்கையின் பல பாகங்களிலும் விரிவடைந்து சென்று தேர்வுகளை நடாத்துகின்றது. இவ்வாறு சைவக் கல்விப் பாரம்பரியம் குன்றிப்போகும் காலத்தில்

சைவக்கல்விப் பாரம்பரியத்தைப் பேணி வருகின்ற இந்த நிறுவனத்தை இன்று பேணி வருவதற்கு பலர் முன் வருகின்றார்கள் என்றாலும் இன்று கல்வி என்பது ஒரு பொருளாதார வளத்தை சம்பாதிக்கும், வேலை வாய்ப்பைப் பெறும் ஒரு கருவியாக இருக்கின்றது யாவரும் அறிந்ததே. எனவே இன்று பல்கலைக்கழகப் பட்டங்களைப் போன்று இரு அமர்வுகளில் தகுதியுடைய மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வருடமொன்றுக்கு ஐந்து பாடங்களாக 10 பாடங்களில் தேர்வுகள் நடாத்தப்பட்டு 1, 2, 3 பிரிவுகளில் சித்திப்புள்ளிகள் கணிக்கப்பட்டு முறைப்படி பட்டங்களை வழங்கிவருகின்றது. ஆனால் இந்தப் பட்டங்களை இலங்கை அரசாங்கம் பெரும் மதிப்புக் கொடுத்து வேலைவாய்ப்பு வழங்காமை ஓர் குறையாகவே அவர்களுக்குக் காணப்படுகின்றது.

இன்று சைவப்புலவர் பட்டங்களைப் பெற்று போட்டிப் பரீட்சைகள் மூலம் ஆசிரியராக நியமனம்பெற்று கடமையாற்றுபவர்கள் அதிகம். மேலும், ஆசிரிய சேவையில் இருந்து கொண்டு சேவைக்காலப்பயிற்சி போல இவற்றைப் படித்துத் தேர்வுகளை எழுதிப் பட்டங்கள் பெற்று தொழிற்படுகின்ற ஆசிரியர்களும் இருக்கின்றார்கள். எனவேதான் இப்பட்டத்திற்கு ஏன் ஆசிரியர் நியமனம் வழங்கப் படக்கூடாது என்பதும், சைவ சமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களையாவது இப்பட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நியமனம் வழங்கவேண்டும் என்பதும் அவர்களது அவாவாகும். மேலும், தராதரப்பத்திரம் பெறாத ஆசிரியர்கள் சேவையில் இருந்து கொண்டு ஓர் பல்கலைக்கழகம் மூலம் பட்டம் பெற்றுக் கொடுக்கும் போது அப்பட்டத்திற்கேற்ப சம்பளத்திட்டம் வகுக்கப்பட்டு சம்பளம் வழங்கப் படுகின்றதே அதே போல், சைவப்புலவர் பட்டத்தையும் தகுதியாகக் கருத்திற் கொண்டு ஏன் சம்பள உயர்ச்சி

வழங்கப் படக்கூடாது என்பதும் இவர்களிடம் எழுந்துள்ள வினாக்களாகும்.

எனவே, பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பரீட்சைக்கு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற பொழுது என் அடி மனதிலிருந்த, சைவப்புலவர்கள் பற்றிய மேற்கூறிய சிந்தனைகளை ஆய்வு செய்ய வேண்டும், அச்சங்கத்தை வெளியுலகிற்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காக 'யாழ்ப்பாணச் சைவக்கல்விப் பாரம்பரியத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பங்களிப்பு என்ன?' என்கின்ற இந்த ஆய்வுப்பணி தொடங்கப்பட்டது.

இன்று யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பல்வேறு காரணங்களுக்காக கொழும்பு மட்டுமன்றி மேலை நாடுகளில் சென்று வாழ்வதனாலும் சைவக் கல்விப் பாரம்பரியம் அழிந்து கொண்டு செல்கின்றது. நவீன கல்விகளால் கவரப்பட்டவர்கள் பாரம்பரியக் கல்வியை உணருவதாகவும் இல்லை. அதன் சிறப்பம்சங்களை ஏற்றுக் கொள்வதாகவும் இல்லை. எனவே இந்த ஆய்வுப்பணி, எதிர்கால சமுதாயத்திற்கு நம்முடைய பாரம்பரியமான சைவக்கல்விப் பாரம்பரியத்தையும் அதன்வழி திகழ்கின்ற அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தையும் அறிந்து கொள்வதற்கு உதவியாகவிருக்கும். மேலும், எதிர்காலத்தில் பல சைவப்புலவர்கள் சைவமும் தமிழும் மிளிரும் இந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா, கொழும்பு ஆகிய சிவ பூமியில் தோன்றவும் வழிவகுக்கும் என்பது ஆய்வாளனின் நம்பிக்கையாகும்.

ஆய்வு என்று கூறும் போது இந்த ஆய்வு முறையானது பல்வேறு வகையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. நூல்கள் ஆய்வு, பேட்டிமுறை,

தொடர்பு சாதனங்கள், நேரடி ஆய்வுமுறை என்ற வகையிலேயே மேற்கொள்ள வேண்டியுள்ளது. அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் சைவப்புலவர் வ. செல்லையா, சைவப்புலவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, இச்சங்கத்தின் நீண்ட கால உறுப்பினராக விளங்கும் சைவப்புலவர் வ. கந்தசாமி, சைவப்புலவர் மு. திருஞான சம்பந்தபிள்ளை, சைவப்புலவர் சு. செல்லத் துரை போன்றோர்களை செவ்வி கண்டே மேற்படி சங்கம் பற்றிய தகவல்களைப் பெற முடிந்தது.

## ஆய்வின் உள்ளடக்கம்

இலங்கையின் யாழ்ப்பாணத்திலே இருந்து வந்த கல்விப்பாரம்பரியத்தில் சைவக்கல்வியை வளர்த்து வந்த நிறுவனங்களின் வகையில் சைவ பரிபாலன சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம் (Hindu Bord), இந்துக்கல்லூரி அதிகார சபை, தனியார் கல்விப்பாடசாலைகள் என்பவற்றின் தோற்றம், தனிப்பட்ட சைவப்பிரமுகர்களின் சைவப் பணிகள் என்பவையும் அவற்றின் விளைவுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இந்த வகையில் சைவக்கல்வியை வளர்த்த நிறுவனமாக பிற்காலத்தில் தோன்றிய அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பங்களிப்பு என்ன? என்ற வகையில் சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் வகுப்புக்கள், அவர்களுக்குரிய பாடத்திட்டம் என்பவை பற்றியும் வினாத்தாள்களின் பகுப்பாய்வு பற்றியும் ஆராயப் பட்டுள்ளது. மேலும் இணைப்பாடவிதானமாக புராண படனம் பற்றிய பயிற்சி, நாடகம் பற்றிய பயிற்சி, பிரசங்க மரபு, சொற்பொழிவாளர்களை உருவாக்குதல், இவற்றின் ஊடாக சைவ மகாநாடுகள் நடாத்துதல், நூல்களை எளிய

உரை நடையில் எழுதி வெளியிடும் பணிகள், சைவக்கல்வியை கற்றதன்படி வாழ்தல், சைவசமய ஆசாரங்களின்படி சமயதீட்சை பெறச் செய்தல் என்பனவற்றின் பங்களிப்புக்கள் பற்றிய ஆய்வுகளும் இடம் பெறுகின்றது.

## ஆய்வுப் பிரதேசம்

இலங்கைத்தீவின் வடபால் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் எனும் முழுப்பரப்பையும் உள்ளடக்கிய பிரதேசத்தில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவேதான் அரசாங்க அதிபர் எல்லையாக யாழ்மாவட்டம் எனக் குறிக்கப்படுகின்றது. ஏனெனில், அகில இலங்கை சைவப் புலவர் சங்கமானது இலங்கை எங்கணும் மட்டுமன்றி இலண்டன், ஜேர்மனி, சுவிற்சிலாந்து எனத் தொழிற்படுகின்ற நிறுவனமாகக் காணப்பட்டாலும் இந்த ஆய்வானது மேற்கூறிய யாழ் மாவட்ட எல்லைக்குள் இச்சங்கத்தின் பணி யாது, என்றே ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

சைவக் கல்விப் பாரம்பரியமானது இலங்கையிலே மிக நீண்ட காலமாக இருந்து வந்தாலும் இந்த ஆய்வானது 19ம் நூற்றாண்டு ஆரம்பத்திலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை அதாவது 2010ம் ஆண்டு வரை சென்றிருக்கின்றது.

உ

சிவமயம்

## அத்தியாயம் - 02

# யாழ்ப்பாணச் சைவக்கல்வி வரலாறு

## 2.1. யாழ்ப்பாணச் சைவக்கல்வி வரலாறு முற்காலம்

யாழ்ப்பாணத்தின் சைவக்கல்வி வரலாறு ஆனது புராதன காலத்திலிருந்தே இருந்து வந்ததொன்றாகும். குருகுலக் கல்வி முறை, பிராமணியக் கல்வி முறை என்ற பாரம்பரியக் கல்வி முறை இந்த யாழ் மண்ணினுடைய பரம்பரைச் சொத்து என்று கூறலாம். அந்த வகையில் இருந்து வந்த கல்வி மரபில் திண்ணைக் கல்விமுறை மிக முக்கியமானதொரு முறையாகும். குருவினுடைய வீட்டில் உயர்ந்து காணப்படும் நிலத்தையே திண்ணை என்று அழைப்பர். மாணவர்கள் அங்கு சென்று திண்ணைக்கு முன்புறம் சப்பாணி கொட்டியிருந்து குரு கூறுகின்றவற்றைக் கேட்டு மனனம் செய்யும் முறையில் இக்கல்விமுறை கூடுதலாகவிருந்து வந்தது.

அக்காலக் கல்வி முறையின் நோக்கங்கள் சமூகச் சார்பாகக் காணப்பட்டது. அது பின்வரும் அம்சங்களை உள்ளடக்குகின்றது.[1]

1. சமூகத்தோடு இசைவுபட்டு வாழ வைக்க கல்வி உதவுதல் வேண்டும்.

2. சமூக ஆசாரங்களைப் பின்பற்றும் திறன்கள் கல்வியினூடாக வளர்க்கப்படல் வேண்டும்.

3. பயிர்ச்செய்கை ஏனைய தொழில்களிலும் மேலானதாக எடுத்துக் கூறப்பட்டது.

4. தாம் செய்யும் குலத் தொழில்களைவிட்டு மாறாது இருத்தல் வலியுறுத்தப்பட்டது.

5. செய்யும் தொழிலே தெய்வம் எனப்பட்டது.

மேலும் கர்மம் - மறுபிறப்பு என்கின்ற சிந்தனை ஆழமாக வேரூன்றியிருந்தது. ஒருவர் முற்பிறப்பில் செய்த நல்வினை, தீவினை என்பவற்றுக்குரிய பலாபலன்களை இப்பிறவியில் அனுபவிக்கின்றனர் என்றும் இப்பிறவியில் செய்யும் நல்வினை, தீவினைகள் அடுத்த பிறவியிலும் தொடரும் என்பதாகும். இதனை சைவசித்தாந்தம் "ஆகாமிய வினை" என்கின்றது. இவை குருவினால் மிக இறுக்கமாக மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டது.

ஒருவர் தமது ஏற்றத்திற்கும் தாழ்விற்கும் கர்மத்தை எண்ணியே மகிழ்ச்சியும் கழிவிரக்கமும் கொள்ள வேண்டியுள்ளது. இதனால் சைவக் கல்விப் பாரம்பரியத்தில் பல புராண, இதிகாசக் கதைகள் அவரவர் அனுபவங்களுக்கு ஏற்ற வகையில் எடுத்துக் கூறப்பட்டன. இக்கோட்பாடானது தமக்குத்தாமே உளச்சாந்தியை ஏற்படுத்துவதற்கும் உதவியாகியது. அதாவது வலிமைமிக்க சீர்மியக் கருத்தியலாகவும் அமைந்தது என்றே கூறலாம்.[2]

மேலும் கல்வியில் நூற்கல்வியும் வழங்கப்பட்டது. தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவ சமயப்புராண

இதிகாசம், தத்துவம், தர்க்கம், வான சாஸ்திரம், சோதிடம் என்பன மரபு வழிக்கல்விமுறையில் போதிக்கப்பட்ட பாடங்களாகக் காணமுடிகின்றது. நூற்கல்வி பெறாதிருத்தல் வாழ்க்கையில் நிறைவெய்தாதிருத்தலாகக் கருதப்பட்டது. அறிவில் முழுமை பெற்றிருத்தல் "நிறை குடம்" என்ற எண்ணக்கருவினால் குறிக்கப்பட்டது. நூற்கல்வியைப் பெற்றவர்களிடமிருந்து பலர் நன்மை பெறுவதால் அவர்களை "காய்க்கும் மரம் போன்றோர்" என அழைத்தனர். இலக்கிய நடையில் கற்றோரை "சித்தமழகியார்" என்று கூறும் மரபும் காணப் பட்டது. அவர்கள் "அழகிய மாந்தர்" எனவும் அழைக்கப்பட்டனர்.

மேலும் வல்லவர், வல்லவராயர், மாப்பாணர், புலவர், நூலாசிரியர், ஞானியர், வாணர் போன்ற பல்வேறு அடைமொழிகள் நூற்கல்வி வல்லோருக்கு வழங்கப் பெற்றன. மக்கள் கூடும் சபைகளில் கற்றோருக்கு முதலிடம் வழங்கப்பெற்றது. எத்தகைய சமூக ஒன்று கூடலிலும் முதலிடம் அவர்களுக்கே வழங்கப்பட்டது. நூற்கல்வி பெற்றவர்களின் உரை "நல்வாக்கு" எனப்பட்டது. கற்றவர்களே சமூக ஒழுங்கைப் பாதுகாக்கும் காவலர்களாகவும் முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் நடுவர்களாகவும் விளங்கினர். "அக்கத்துக்கும் பக்கத்துக்கும் மல்லிகைப் பூ நடுவிலை ஓர் ஏட்டுடையார்" என்ற தொடர் முரண்படும் இரு சாராரையும் சமமாகவும் கௌரவமாகவும் நடத்தியமைக்குச் சான்றாகவுள்ளது.

ஒழுக்க நூல்களைக் கற்பவர்கள் ஒழுக்கமாகவே நடந்துகொள்வார்கள் என்ற கருத்து மக்கள் மத்தியிலே நிலவியது. இந்நிலையில் நூற்கல்வியும் நல்லொழுக்கமும் பிரிக்கப்பட முடியாதவையாக அமைந்தன. நூற்கல்வி கற்றவர் நல்லொழுக்கமுடையவர், தவறு செய்யாதவர், பிறர் மீது கருணையுடையவர், நீதி சொல்பவர்

என்றவாறான கருத்துக்கள் நிலவி வந்தன. கற்றல் தொடர்பான உயர்ந்த பெறுமானங்களைச் சமூகம் கொண்டிருந்தது.

சிந்தித்துப் பேசுதல், நிதானமாகப் பேசுதல், தளும்பலின்றிப் பேசுதல், பண்டைய நூல்களை மேற்கோள் காட்டிப் பேசுதல், அமைதியாகப் பேசுதல், உணர்ச்சி வசப்படாது பேசுதல், தெளிவுபெறப் பேசுதல் முதலியவை கற்றோருக்குரிய மொழி வெளிப்பாடுகளாகக் கருதப்பட்டன. உரத்த தொனியிலே சிரித்தல், வைதல், பிழைபடப் பேசுதல், அடக்கமின்றிப் பேசுதல், முரண் படப் பேசுதல் முதலியன கற்றோரால் தவிர்க்கப்பட்டன.

ஆழ்ந்த அறிவு பெற்ற சான்றோர் வரண்முறையான கல்வியை தொடக்கிவைக்கும் நிகழ்ச்சி 'ஏடு தொடக்கல்' (வித்தியாரம்பம்) எனப்படும். குழந்தைகளுக்குத் தாலாட்டும் பொழுது ஏட்டுக்கல்வி பற்றிய கருத்துக்களைத் தொடர்பு படுத்திப் பாடும் மரபும் காணப்பட்டது.[4]

> ''பாட்டன் படித்த ஓலை பாலனுக்குத் துணையாகும்
> அப்பன் படித்த ஓலை அரசனுக்குத் துணையாகும்''

> ''பூட்டன் எடுத்துரைத்த பொன் கூர் எழுத்தாணி
> ஏட்டுக்குள் இருக்குதையா என்மணியே கண்வளராய்.''

என்றவாறு எழுத்தறிவையும் தாலாட்டையும் தொடர்பு படுத்தும் பாடல்கள் உலகின் பல பண்பாடு களிலும் காணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பசுமாடு கட்டிய பனையின் ஓலைச் சார்புகளே படிப்பதற்குரிய ஏடுகள் செய்வதற்குத் தெரிந்தெடுக்கப் பட்டன. ஏடு பதனிடுவதற்கும் எழுதுவதற்கும் வளர்பிறை

நாட்களே பொருத்தமெனக் கருதப்பட்டன. எழுதத் தொடங்குவதற்கு முன்னர் ஏட்டில் மஞ்சள் பூசப்பட்டது. அகர வரிசை எழுதும்போது உயிரெழுத்துக்களின் நிறைவில் எழுதப்படும் ஆய்த எழுத்தாகிய அகேனம் (ஃ) அறிவின் முடிவிலியாகும் பண்பை மாணவருக்கு உணர்த்தியதென்ற கருத்தும் உண்டு. ஏடு தொடக்கிய நாளில் சிவபெருமானது அடிமுடிதேடிய கதையைச் சொல்லிக் கொடுக்கும் மரபும் காணப்பட்டது. கல்வி கரையிலது என்ற கருத்தைக் குறிப்பாக உணர்த்துவதற்கும் இந்தக் கதை பயன்பட்டது. ஏட்டுக்கல்வியின் நோக்கம் இனிமையாக இருக்க வேண்டும் என்பதற்காக அரிச்சுவடியைச் சொல்வதற்கு முன் குழந்தையின் வாயில் கற்கண்டை அல்லது தேனைக் கொடுக்கும் வழக்கமும் சைவக் கல்விப் பாரம்பரியத்தில் இருந்து வருகிறது.

கற்பித்தல் மனன (பாடமாக்கல்) முறைக்கே ஒப்பீட்டளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. தேடிக் கண்டுபிடித்துக் கற்கும் முறையியலும் வழக்கிலிருந்தது. உதாரணமாக செய்யுளில் இடம்பெறும் ஒரு மலர் அல்லது மரம் பற்றி விளக்கும் போது அதன் ப்ண்புகளைக் கூறி குறித்த இடத்திற்குப் போனால் அதனைப் பார்க்கலாம் என்று ஆசிரியர் குறிப்பிடுவார். அவ்விடத்திற்குச் சென்று அதனைத் தேடிக்கண்டுபிடித்து அதன் இலை, பூ, காய் முதலியனவற்றை எடுத்து வந்து மாணவர்கள் ஆசிரியருக்குச் சமர்ப்பிப்பர்.

பாவனை செய்து கற்கும் முறையியலும் பின்பற்றப் பட்டது. ஆசிரியரது உச்சரிப்பைப் பின்பற்றி உச்சரித்தல் ஆரம்பநிலைப் பாவனைக் கற்றலாக அமைந்தது. படிப்படியாக ஆசிரியரது இசையைப் பின்பற்றி, வெண்பா, கலிப்பா, விருத்தப்பா முதலியவற்றைப் பாடும் மரபு வழக்கிலிருந்தது. மறதி என்பது கற்றலுக்கு எதிரான

ஒரு விசையாகக் கருதப்பட்டது. செய்யுளுக்கு உரை சொல்லல் என்பது கற்றலின் வழியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டிய ஓர் அடிப்படைத்திறனாக முன்மொழியப் பட்டது. உரை சொல்லல் வாயிலாக உரைநடையாற்றல் வளர்க்கப்படலாம் என்ற நம்பிக்கை நிலவியது.

மேலும் உரைப்பொருளையும் இசையையும் பயன் படுத்துவதே புராண படனமாகும். யாழ்ப்பாணத்துக்குத் தனித்துவமான முறையில் காணப்படும் புராண படனம் என்பது செய்யுளுக்கு உரைகூறுவதும் அதனை இசையோடு சேர்த்துக் கூறுவதுமாகும். "யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம்" எனப் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை கூறுமளவிற்கு இக்கல்வி மரபும் சிறந்து விளங்கியது.

பேசும்பொழுது பேச்சின் உள்ளடக்கம் பற்றிய சிந்தனைக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. கருத்தாழம் குன்றிய பேச்சு வெட்டிப் பேச்சு, உப்பில்லாப் பேச்சு, வைக்கோல் மோதகம், பசப்பல் முதலிய தொடர்களாற் குறிக்கப்பட்டது. ஏட்டுக்கல்வியின் முன்னேற்றம் ஒருவரது கருத்தாழம் கொண்ட பேச்சிலிருந்து அறியப்பட்டது.

தற்காலத்திலே காணப்படுதல் போன்று திட்ட வட்டமாக வரையறுக்கப்பட்ட கலைத்திட்ட ஏற்பாடு மரபுவழிக் கல்வியில் காணப்படவில்லை. ஆசிரியரது இயல்புக்கும் மாணவரது தனியாள் வேறுபாடுகளுக்கு ஏற்பவும் கற்றல் உள்ளடக்கம் வேறுபட்டுக் காணப் பட்டது. கற்பிக்கப்படும் நேரம் ஆசிரியரது தேவைகளை அடியொற்றி மாற்றம் செய்யப்படத்தக்க நெகிழ்ச்சி கொண்டிருந்தது. விதைப்பு, அறுவடை, வேளாண்மை நிகழாத பருவங்களில் மாணவருக்குக் கூடுதலான ஒப்படைகளை ஆசிரியர் வழங்கினார். பழைய ஏடுகளைப்

படியெடுத்தல் ஒப்படைகளுள் முக்கியமானதாக விளங்கியது.

மெய்ப்பொருளைக் கண்டறிதல், ஒவ்வொரு செய்யுளிலும், வசனத்திலும், சொல்லிலும் மறைந்துள்ள உட்பொருளைக் கண்டறிதல் என்ற செயற்பாட்டில் மாணவரை ஈடுபடச் செய்தல் முதலியவை கற்பித்தலின் உன்னதங்களாகக் கருதப்பட்டன. அறிவறிந்து ஒழுகுதலே உயரிய நோக்கம். யாப்பு, அணி நயங்களைக் கற்றலிலும் அதிலிருந்து பெறப்படும் அறவொழுக்கப்படி ஒழுகுதலே சிறந்ததென்பதை ஆசிரியர்கள் மீள வலியுறுத்தினர்.

திண்ணைப்பள்ளிக் கூடங்கள், குருகுலப் பள்ளிக் கூடங்கள், இராப்பள்ளிக் கூடங்கள், நிலாப்பள்ளிக் கூடங்கள் என்றவாறு பலவிதமான பள்ளிக்கூட ஒழுங்கமைப்புக்கள் ஏட்டுக்கல்வியை வழங்கிவந்தன. இலக்கியக் கல்வி, மருத்துவக் கல்வி, சோதிடக் கல்வி என்றவாறும் ஏட்டுக்கல்வியிற் சிறப்பார்ந்த துறைகளை அவற்றுக்குரிய வல்லுனர்கள் கற்பித்துவரும் மரபும் இருந்து வந்தது.

## யாழ்ப்பாணத்துப் பெண் மரபு வழிக்கல்வி

யாழ்ப்பாணத்துச் சைவக் கல்விப் பாரம்பரியத்தில் பெண்கல்வி பற்றி நோக்கும் போது நேரடியான ஆவணங்கள் கிடைக்காத போதிலும் ஆய்வுப்புலங்களின் வழியாக ஓரளவு அறியமுற்படுகின்றேன். ஒழுங்குபடுத்தப் பட்ட நவீன கல்வி நிறுவன வடிவங்களை ஒத்த காட்டுருக்கள் யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண்கல்வியில் காணப்படாவிட்டாலும் அறிகைசார் கல்வி, எழுச்சிசார் கல்வி, உடலியக்கம் சார் கல்வி முதலியவற்றைப் பெண்களுக்கு வழங்குவதற்கான வினைத்திறன் பொருந்திய

செயலமைப்புத் தொகுதிகள் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தமைக்குப் பரவலான சான்றுகள் உள்ளன.

எந்த ஒரு பண்பாட்டிலும் மரபு வழிக்கல்வியை ஆராயும் போது சில அடிப்படை எண்ணக்கரு விளக்கங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதன் தொடர்பில் எழுத்தறிவு என்ற எண்ணக்கரு முதற்கண் முக்கியத்துவம் பெறுகின்றது. எழுத்தறிவு என்பது கல்விச் செயன்முறையின் ஒரு பிரதான பரிமாணம். ஆனால் எழுத்தறிவு இன்றியும் ஒருவர் கல்விச் செயன்முறையில் ஈடுபடமுடியும். இதையடிப்படையாகக் கொண்டு யாழ்ப்பாணத்து மரபுவழிப் பெண்கல்வி பற்றி ஆராயும் போது இந்த எண்ணக்கரு விளக்கம் முக்கியமானதாகும். "செவி வழியாக மனப்பாடம் செய்தலும், ஒப்புவித்தலும், பிரயோகித்தலும்" என்ற கல்விச் செயன்முறையானது எழுத்துத்திறன் சம்பந்தப்படாது யாழ்ப்பாணத்துப் பெண்களிடையே நிலவி வந்துள்ளது. யாழ்ப்பாண மரபில் "மனக்கணிதம்", "மனப்பாடம்", "நினைவோனல்" "வாய்ப்பாடம்", "வாயெழுத்து", "வாய்முறைப்பாடு", "ஞாபகப்பெட்டகம்" முதலிய பல தொடர்கள் எழுத்தறிவு சாராமொழி வாயிலாக நிகழும் கற்றல் செயன்முறையினைப் புலப்படுத்துகின்றன. யாழ்ப்பாணப் பெண்களின் சமூகப்பரிமாணம் ஒருபுறம் வலுவும், ஆற்றலும் பொருந்தியதாகக் காணப்பட்டது. மறுபுறம் நலிவுக்கும் அடக்குமுறைக்கும் உட்பட்டதாகக் காணப்பட்டது.[6]

பெண்கல்வி தொடர்பான கருத்தியல் முரண்பாடுகள் அராலியூர் இராமலிங்க முனிவரின் பாடல்களிலே (கி.பி. 1649) தெளிவாகக் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக

''பேதையர் தம்மை பெற்றனமென்று
பேதுறன் மிகப்பெரும் பிழையே''

என்ற வரியினைக் கூறலாம்.

பெண்களை ஒரே காலத்தில் புகழ்ந்துரைத்தலும், இகழ்ந்துரைத்தலும் அறிவுக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுதலும், அறியாமைக்கு எடுத்துக்காட்டாகச் சொல்லுதலும், எல்லாம் தெரிந்தவர்கள் என்று கூறுதலும், எதுவும் தெரியாதவர்கள் என்று கூறுவதும் முரண்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றது. எனினும் இல்லம்சார் பொருள் உற்பத்தி, இனப்பெருக்கம், குழந்தை வளர்ப்பு, அவர்களுக்கான கல்விக்கையளிப்பு முதலியன பெண்களுக்காகக் காணப்பட்டன என்றாலும் சாதிய முறைக்கேற்ப பெண்களின் கல்விச் செயற்பாடுகள் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தன என்றே கூறலாம்.

எது எவ்வாறு இருப்பினும் பெண்களுக்கான கல்வியை சமூகம் பல்வேறு கோணங்களில் வற்புறுத்தியது. கல்வி "வாக்கு" என்றும் சிறப்புமிக்கக் கல்வி "செல்வாக்கு" என்றும் குறிப்பிடப்பட்டது. உடல் அலங்காரத்திலும் கல்வி அழகே அழகு என்ற தொடர் வழக்கிலிருந்தது. யாழ்ப்பாணச் சைவக்கல்விப் பாரம்பரியத்தில் "கல்லாள் - கல்லாள்" அதாவது, படிக்காதவள் கல்லுப் போன்றவள் என்றும், "படியாள் - படியாள்" அதாவது, படிக்காதவள் கற்படி போன்று மிதிக்கப்படுவாள் என்றும் விளக்கப் பட்டது.[8] இதனால் பெண்களின் கல்வி. அந்தஸ்த்தைத் தீர்மானிப்பதில் சிறப்பான பண்புகளாக அமைந்தன.

இந்தவகையில் சொல்சார் அறிவு, சொல்சாரா அறிவு என்பவற்றை வளர்த்தல், உடலியக்கத் திறன்களை

வளர்த்தல், சமூக இசைவாக்கத்திறன்களை வளர்த்தல், விளங்காதவற்றை விளங்கவைத்தல், மனப்பதகளிப்பைத் தணித்து கட்டுப்பாடுகளை வளர்த்தல், பெண் என்ற வகையில் மேற்கொள்ளப்படும் சடங்குகளைத் திறம்படச் செய்வதற்குரிய பயிற்சிகளைத் தருதல், பெண்களுக்குரிய கலையாற்றல் திறன்களையும் கைவினைத் திறனையும் வளர்த்தல் என பெண் கல்வி பல்வேறு அலகுகளைக் கொண்டு காணப்பட்டது.

யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் பெண்கல்வி குழந்தை நிலையிலிருந்தே ஆரம்பமாவதைப் பின்வரும் பாடலடிகள் அறியத்தருகின்றன.

**''நாய்க்குப் படிப்பில்லை நரிக்குப் படிப்பில்லை**
**நான் பெத்த பெண்ணுக்குப் படிப்பு வா படிப்பு வா''**

**''தோள்வீசம்மா தோள் வீசு சுந்தரக்கிளியே தோள் வீசு**
**வானே பூவே தோள் வீசு வாக்குப் பொலியத் தோள் வீசு''**

பெண்கல்வியில் முக்கியமாக இசைக்கல்வி இருந்து வந்தது. "பெண்ணுக்குப் பாட்டு" என்ற தொடர், பெண் பாடலில் வல்லவளாக வரவேண்டும் என்று எதிர்பார்க்கப் பட்டதைக் கூறுகின்றது. முறைசாரா அமைப்பில் தாலாட்டிலிருந்து ஒப்பாரி வரை மனித வளர்ச்சி மட்டங்களில் வரும் பாடல்களில் பெண்களே கூடுதலாகப் பங்கு பற்றினர். பண் என்பது பெண்களுக்கே இயல்பாக அமைந்து வந்தமைக்குப் பின்வரும் பெயர்கள் சான்றாகிறது. அவற்றுள் பண்ணிச்சி, பண்ணாகத்தி, யாழி, துத்தி, இளிச்சி, விளரி, தாரம் என்பவற்றைக் குறிப்பிடலாம். இப்பெயர்களோடு ஏழிசை மரபும் பின்வருமாறு அமைகின்றது.[10]

குரல் - ச

துத்தம் - ரி

கைக்கிளை - க

உழை - ம

இளி - ப

விளரி - த

தாரம் - நி

தேவாரங்களாகிய திருமுறைகளைப் பண்ணோடு ஆலயங்களில் பாடினர். புராண படன மரபில் இசையோடு புராணம் பாடிப் பொருள் கூறப்பட்டது. யாழ்ப்பாணமே யாழ்பாடிக்குப் பரிசாகக் கொடுத்த ஊர் என்பது இடப் பெயராய்வில் உள்ள தகவல். அதற்கமையவே யாழ் எனும் இசைக்கருவி வாசிப்பதில் வல்லார்களாகிய பெண்களை யாழி எனவும் அழைத்தனர். பேரியாழ், மகரயாழ், சகோட யாழ், செங்கோட்டியாழ், நாரதயாழ், தும்புரியாழ் என்று யாழ் வகைகளைப் பாகுபடுத்தினாலும் மருத்துவயாழ், தும்புருயாழ், செங்கோட்டியாழ் முதலியவற்றையே பெண்கள் பயன்படுத்தினர்.[11]

மேலும் பெண்கல்வியில் இன்று ஆடற்கல்வியாகிய நடனக்கலை காணப்படுவதுபோல முன்பும் காணப் பட்டது. பொதுவாகவே தாலாட்டும்போதே இந்த ஆடற்கலை ஆரம்பிக்கின்றது. யாழ்ப்பாணக் கூத்துப்பாரம்பரியத்தில் ஆண்கள் ஆடியகூத்து "மல்லுக்கூத்து" எனவும் பெண்கள் ஆடிய கூத்து "பண்டக்கூத்து" எனவும் அழைக்கப்பட்டது. பண்டக் கூத்தின் இன்னொரு பரிமாணம் பண்டங்களைக் கையில்

அல்லது தலையில் ஏந்தியவாறு ஆடுதலாகும். பாற்செம்பு, கடகம், கூடை, வைக்கோற்கட்டு, தானியக் கதிர்க்கட்டு, சுரைக்காய் முதலியவற்றை தலையில் ஏந்தி ஆடுவர்.[12] இன்றும் காவடியோடு கரகம் எனும் வகையில் பெண்கள் பாற்செம்பை தலையில் ஏந்திவருவது இக்கூத்தின் எச்சமாகும். இவ்வாறு பெண்கள் நான்குவகையான ஆடல் ஆற்றுகைகள் மேற்கொண்டனர். அவையாவன,

1. உறுப்பாடல் - உறுப்புக்கள் சார்ந்தது
2. சொல்லாடல் - மொழி நிலைப் பிரயோகம்
3. அணியாடல் - பொருத்தமான ஆடை, அணிகலன் களைப் பயன்படுத்துதல்
4. மெய்ப்பாடு - ஆடலையும் மனவெழுச்சிகளையும் இணைத்தல்.

இவ்வாறு இருந்த ஆடற்கலை ஐரோப்பியர் வருகையைத் தொடர்ந்து நிகழ்ந்த சமூக ஒழுங்கமைப்புக் குலைவும் (Social Disorganisation) உள்நாட்டுப் போர்களும் பெண்களை வீட்டுக்குள் முடக்கி வைக்கவேண்டிய தேவையை வலியுறுத்தியது.

பெண்களிடத்தே அழகுக் கலையும் அக்காலந் தொட்டே இருந்து வந்தது. வீட்டு முற்றத்தில் மாக்கோலமிடுதல், மண்சுவர்களில் சுண்ணத்தினாற் கோலம் வரைதல், சுவர், நிலம் சாணி கொண்டு மெழுகுதல், பனை ஓலைகளில் வண்ணப் பெட்டி, வண்ணப் பாய், வண்ணப் பணப்பை (கொட்டப் பெட்டி) இழைத்தல், கிலுகிலுப்பை செய்தல், தோரணம் செய்தல், கிளி செய்தல், பன்னாங்கிழைத்தல் எனப் பல்வேறு கலை வளர்ச்சி காணப்பட்டது. மேலும், மண்ணிலே பொம்மை செய்தல், பூக்களிலிருந்து மாலைகட்டல் சடைநாகம்

செய்தல் ஆகிய திறன்களும் வளர்ந்து வந்தது. அக்காலத்தில் பூக்களிலிருந்து எண்பதுக்கும் மேற்பட்ட மாலை வகைகளை ஆக்கும் திறன் பெண்களிடம் காணப்பட்டது.[13]

மணிகளால் அணி வண்ணங்கள் செய்யும் கைவினையும் கிராமப் புறங்களிலே கற்பிக்கப்பட்டது. மணிகளால் சப்பறம் அமைத்தல், மணவறை அமைத்தல், திருவாசி செய்தல், திருத்தொங்கல் கட்டுதல் மணிமாலை பின்னல் முதலிய கலையாக்கங்கள் இன்றும் வீர சைவப் பெண்களிடம் காணப்படும் கல்விச் செயல் முறையாகவுள்ளது.[14]

பச்சைகுத்துதல் என்ற ஒருவித அழகுக்கலைச் செயற்பாடும் நிலவி வந்தது. பச்சைச் சாயத்தில் ஊசியை தோய்த்து மனிதனின் தோலில் குற்றி அழியாத வடிவங்களைப் பொறித்து வைத்தல். இக்கலையை பெண்கள் தம் இளம் சமுதாயத்திற்குப் பழக்கி வந்தனர்.[15]

இவற்றைவிட நூலாச்சியர் மரபும் இருந்து வந்தது. அறிவறிந்த பெண்களை நூலாச்சியர் என்றனர். இலக்கியம், நீதிநூல்கள், தேவாரதிருவாசகம் போன்ற பன்னிரு திருமுறைகள் முதலியவற்றை மனனம் செய்து வைத்திருந்தனர். தம்மிடம் பாடம் கேட்கச் செல்வோருக்கு மனப்பாடமாகக் கூறினர். உதாரணமாக கரவெட்டிக்கிராமத்திலே நூலாச்சியர் கிடுகு பின்னியவாறே தொல்காப்பியம் ஒப்பித்துக் கொண்டிருந்த காட்சியை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நேரில் கண்டு இன்புற்றார் என்பதும் அறியக்கூடியதாக உள்ளது.[16]

மேலும் மரநிழற் பள்ளிகளும் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அயல் அல்லது அயலட்டையில் வாழும் சிறுமிகள் அறிவறிந்த பெண்ணிடம் அவரின் வீட்டருகே

உள்ள மரநிழலில் பாடங்கேட்பதும் படிப்பதும் இயங்குதலும் மரநிழற் பள்ளியின் செயற்பாடாக அமைந்தன. திண்ணைப் பள்ளிகளில் பெண் சிறுமிகள் கற்றமையைக் காணச் சான்றில்லை. மேலும் வரி வடிவங்களை கைவிரலினால் மணலின் மீது எழுதிய எழுத்துக்கள் பற்றியும் இவ்வெழுத்துக்களை அழித்தல் அமங்கலமாகக் கூறும் மரபும் காணப்பட்டது. சிறுமியர் மணலிலே பூனை வீடு கட்டுதல், கைகளாலும் கால்களாலும் கோலமிடுதல், தாளமிட்டுக் கெந்துதல், மரத்தைச் சுற்றி வந்து கும்மியடித்தல் முதலிய உடலியக்கம் சார்ந்த கற்றல் தொழிற்பாடுகளும் நிகழ்ந்தன.[17]

இவற்றைவிட விழுமிய கல்வியும் அக்காலத்திலிருந்து இருந்து வந்தது. சமூக அடிக்கட்டுமானத்தை (Basic) கட்டிக் காக்கும் வகையில் விழுமியங்களும் அறவொழுக்கங்களும் கையளிக்கப்பட்டு வந்தன. இன்சொல் பேசல், இசைவுபட வாழ்தல், மூத்தோரை மதித்தல், வாய்மை, பகுத்துண்டு வாழ்தல், அன்புடமை, சாதிய ஒழுக்கங்கள் என்று வரையறுக்கப்பட்டவற்றை வழுவாது கடைப்பிடித்தல், எதிர்மொழி கூறாமை, வன்னடத்தைகளைக் கட்டுப்படுத்தல் முதலியற்றை மூத்தோர் வலியுறுத்தினர். "ஆசாரமறிந்த அருங்குலப்பெண்" என்ற தொடர் வழக்கிலிருந்தது.[18] பெண்களின் ஒழுக்கங்களை வலியுறுத்தும் பாடல்களும் காணப்படுகின்றன. அறம், ஒழுக்கம் என்பவற்றை வற்புறுத்தல் பெண்கள் மீதே மிகக் கூடுதலாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளது. பாரம்பரிய ஒழுக்கக் கல்வியின் சில சிறப்பியல்புகளை நோக்குவோம்.

1. ஒழுக்கத்தை வலியுறுத்துபவர் தாம் வாழ்ந்து காட்ட வேண்டியிருந்தது.

2. சிறுமிகள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவற்றை மனனஞ் செய்யும் வண்ணம் வற்புறுத்தப்பட்டனர்.

3. வளர்ந்த பெண்கள் நீதி வெண்பாக்களை மனனஞ் செய்ய வேண்டியிருந்தது

4. பெண்களின் ஒழுக்க வாழ்வுக்கு முன்னுதாரணமாகவும், காவற் பெண்ணாகவும் "ஔவை" என்ற குறியீடு சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது ஒழுக்கங்களைப் புறக்கணிக்கும் பெண்கள் ஔவை என்ற புனிதமான பெண்ணுக்கே முறையீடு செய்யப்பட்டார்கள். "ஔவையே காணாய்" "ஔவையே கேளாய்", "ஔவையே சொல்லாய்" என்ற முறையீடுகள் பெண்கள் மத்தியிலே காணப்பட்டன.[19]

கல்வி சார் அடைவுகளின் மதிப்பீடுகளும் இருந்தே வந்தது. மதிப்பீடுகள் மூத்தோராலும் முதியோராலும் சம வயதினராலும் மேற்கொள்ளப்பட்டன. மதிப்பீட்டில் உயர்நிலை அடையும் பெண்கள் சீமாட்டி, சீதேவி, சரஸ்வதி, தருமி, மகாலட்சுமி, ராசாத்தி என்ற அடைமொழிகளைப் பெற்றனர். சமூக நியமங்களிலிருந்து விலகும்போதும் மதிப்பீடுகள் இடம் பெற்றது. வீட்டில் உள்ள பாத்திரங்களைப் பார்த்தலும், வீட்டு அழகு, முற்றத்து அழகு போன்றவற்றோடு உணவின் சுவை என்பவற்றைப் பார்த்தும் மதிப்பீடுகள் இடம்பெற்றன என்பதை பின்வரும் அடிகள் காட்டி நிற்கின்றன.

> ''பானையைப் பார்த்ததும் பெண்ணைச் சொல்லலாம்
> அகப்பையைப் பார்த்ததும் அடுப்படியைச் சொல்லலாம்
> முத்தத்தைப் பார்த்ததும் முத்தம்மாவை அறியலாம்
> மெழுக்கைப் பார்த்ததும் மைச்சாளை அறியலாம்''.[20]

இவ்வாறாக யாழ்ப்பாணத்தில் கல்வி மரபு ஒன்று சமயத்தோடும் வாழ்க்கையோடும் இருந்து வந்தமையை அறியமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. கலாநிதி சபா ஜெயராசா, **யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி**, போஸ்கோ பதிப்பகம், நல்லூர், ப. 3.
2. மேற்படி, ப. 4.
3. மேற்படி, ப. 18.
4. மேற்படி, ப. 19
5. மேற்படி, ப. 19
6. மேற்படி, ப. 26
7. சதாசிவம், ஆ. (தொ. ஆ) **ஈழத்துக் கவிதை களஞ்சியம்**, சாகித்திய மண்டலம், கொழும்பு, 1966, ப. 107
8. மு.சு. சபா. ஜெயராசா, **யாழ்ப்பாணத்து மரபுவழிக் கல்வி**, ப. 28, 29
9. மேற்படி, ப. 33
10. மேற்படி, ப. 33
11. ஆபிரகாம் பண்டிதர் மு., **கர்ணாமிர்தசாகரம்**, கருணாநிதி வைத்தியசாலை, தஞ்சாவூர், 1917, ப. 43.
12. மு. சு. சபா ஜெயராசா ப. 35
13. மேற்படி, ப. 37
14. மேற்படி, ப. 37
15. மேற்படி, ப. 38
16. மேற்படி, ப. 39

*17. மேற்படி, ப. 40*

*18. மேற்படி, ப. 51*

*19. மேற்படி, ப. 52*

*20. மேற்படி, ப. 53*



கொழும்பு தமிழ்சங்கத்தில் நடைபெற்ற அகில இலங்கை சைவப்புலவர் சங்க பொன்விழா சைவ மகாநாட்டில் நூலாசிரியரும் கௌரவ செயலாளருமான சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் அவர்களுக்கு இந்தியா திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்கள்

உ

சிவமயம்

# 2.2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சைவக் கல்வி வரலாறு

**சை**வக் கல்விப் பாரம்பரியம் எனப் பேசும் போது அதற்கான வரைவிலக்கணத்தையும் அத்தொடர் குறிக்கும் எல்லைகளையும் வகுக்கவேண்டிய முதற் தேவை கருத்திற் கொள்ளப்பட்டேயாக வேண்டும். சைவக்கல்வி என்பது சைவ சமயம் பற்றிய கல்வி, சைவக்கல்விச் சூழலில் வழங்கப்படும் கல்வி, சைவ சமயத்தவன் மண்ணில் நல்ல வண்ணம், வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தின் பாதத்தில் சேர்க்கப்படுவதற்கான கல்வி எனப் பொருள் கொள்ளலாம். சுருங்கக்கூறின் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு புருஷார்த்தங்களைப் பெறும் வகையில் ஒவ்வோர் சைவ சமயத்தவனையும் ஆட்படுத்தலுக்காகப் போதிக்கப்படும் கல்வி எனலாம்.

அத்தகைய கல்விக்கிருந்த வரலாறும் அது போற்றிப் பேணிய விழுமியங்களும் அதன் பாரம்பரியத்தில் அடங்கும். பாரம்பரியத்தை பற்றிச் சிந்திக்கும் போது அதனைப் பேணிப் பாதுகாத்தவர்கள், அதற்கென தொண்டாற்றியவர்கள், தொண்டாற்றிய அமைப்புக்கள் என்பவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். இது

தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனவே இவை அனைத்தையும் கருத்தில் வைத்தே யாழ்ப்பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியம் அணுகப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

வரலாற்று நோக்கைச் சுருக்கமாக நோக்கின் இலங்கைக்கு பௌத்தமதம் வருவதற்கு முன் வழக்கில் இருந்த கல்விமரபு சைவக்கல்வி மரபு என்றே குறிப்பிட வேண்டும். ஏனெனில் இலங்கையை திருமூலர் சிவபூமி என்று அழைத்தமையும். ஆதி இலங்கையில் சிவ பக்தனாகிய இராவணேஸ்வரன் இலங்கையை ஆண்டமையும் சிவ வழிபாடு செய்தமையும் மட்டுமன்றி இலங்கைக்கு விஜயன் வருகின்ற வேளையிலேயே இலங்கையின் நான்கு திக்கிலும் நான்கு சிவதேவாலயங்கள்[1] காணப்பட்டன என்பதாலும் இலங்கையில் வாழ்ந்தவர்கள் சைவர்களே என்பது மறைக்க முடியாத மறுக்க முடியாத உண்மையாகும்.

எனினும் பௌத்தம் இலங்கையில் பரவிய வேளையில் சைவக்கல்வி மரபு பௌத்தக்கல்வி மரபோடு இணைந்து கொண்டதென்றே கூறமுடியும். இவை பிராமண மரபு அல்லது புரோகித மரபு என அன்று வழங்கப்பட்டு, குருகுலக் கல்விப் பாரம்பரியம் பேணப்பட்டமையை அறிய முடிகின்றது.

இவ்வாறு இரு கல்வி மரபுகளும் கலந்தொன்றாகக் காணப்பட்டாலும் யாழ்ப்பாணம் தனித்தமிழரின் வாழ்விடமாகக் காணப்பட்டமையால் யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியமானது. சைவத் தமிழ்க்கல்விப் பாரம்பரியமாகவே காணப்பட்டது என்பதும் நோக்கத்தக்கது. மேலும் யாழ்ப்பாணமானது தென்னிந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டமை காலம் காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

பல்லவர் காலத்தில் இலங்கையை பல்லவ மன்னர்கள் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தமையும் நாயன்மார்கள் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவத்தலங்களுக்கு தேவாரம் பாடியமையும் வரலாற்றுண்மைகள்.[2] அதற்கடுத்த ஆட்சிக்காலமாகிய பொலநறுவையாட்சிக் காலத்தில் சோழ மன்னர்கள் இலங்கையை ஒன்பதாவது சோழ மண்டலமாக வைத்து ஆட்சி நடாத்தியமையும் சிவாலயங்களைப் புதிதாக இலங்கையில் அமைத்தது மட்டுமன்றி பல பழைய சிவாலயங்களைப் புதுப்பித்தும் கட்டினர் என்பதும் சாசனங்கள் மூலம் அறியக் கிடக்கின்றது. இக்காலத்தில் கல்வி குருகுல அமைப்பிலிருந்து நிறுவன மயப்படுத்தப்பட்டமையையும் அறிகின்றோம். "சதுர்வேதி மங்கலம்" என கல்விச்சாலைகள் அழைக்கப்பட்டது. பொலநறுவையிலும் கந்தளாயிலும் சதுர்வேதி மங்கலங்கள் இருந்தமைக்குச் சான்றுகளுண்டு. பின்னர் தமிழையும் சைவத்தையும் போற்றி வளர்த்த யாழ்ப்பான அரசின் ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் சைவக்கல்விப் பாரம்பரியம் யாழ்ப்பாணத்தில் கால்கொண்டு விட்டது என்பதை வரலாற்றில் அறிகின்றோம்.[3] இக்காலகட்டத்திலேயே இந்தியாவின் காஞ்சிக் குமரகோட்டத்தில் கச்சியப்பசிவாசாரியரால் எழுதப்பட்ட கந்தபுராண ஏட்டுப்பிரதியொன்று யாழ்ப்பாணத்திற்கு வந்ததாகவும் முதன் முதலில் அரியாலை சித்தி விநாயகர் ஆலயத்தில் கச்சிக்கணேசையர் கந்தபுராணபடன மரபை ஆரம்பித்தமையும் வரலாற்று உண்மை. கந்தபுராண படன மரபு சைவக்கல்வி வரலாற்றில் மிக முக்கியமான பங்கை வகித்தமையை பின்னர் விரிவாக நோக்குவோம்.

இவ்வாறு காணப்பட்ட யாழ்ப்பாணச் சைவக் கல்விப் பாரம்பரியமானது பதினாறாம் நூற்றாண்டில்

போத்துக்கேயருடைய யாழ்ப்பாண வருகையுடன் நிலைகுலைந்தது. சமயப் பண்பாட்டுக்கு முற்றுமுழுதாகத் தடைவிதித்த அன்னியர்கள் தங்களது கலாசாரத்தைப் பரப்புவதற்காகக் கல்வியை ஊடகமாகப் பயன்படுத்தத் தொடங்கினர். தாமே பாடசாலைகளில் கட்டாயக் கல்வி பெற வேண்டும் என தமது சமயமாகிய கத்தோலிக்க மதத்தைப் போதிக்கும் நிலையில் அவர்கள் தீவிரமாக இருந்தமையால் சைவக்கல்வி மரபு மிகமிக அவலமான நிலைக்குச் சென்றது என்றுதான் கூறவேண்டும். இலங்கையில் தொடர்ந்து டச்சுக்காரருடைய வருகையும் இதே போன்றே அமைந்தது என்றாலும் 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வருகை தந்த ஆங்கிலேயர் கிறிஸ்தவமதப் பிரசாரத்தில் போத்துக்கேயருக்குச் சளைத்தவர்களல்ல என்று கூறலாம். அவர்களுடைய அணுகுமுறை வேறுவிதமாக இருந்தது என பேராசிரியர் வ. ஆறுமுகம் குறிப்பிடுகின்றார்.[4] சுருங்கக்கூறின் "ஒரு கையில் வாளும் மறுகையில் பைபிளும்" கொண்டு செயற்பட்டவர்களெனப் பிரசித்தி பெற்ற போத்துக்கேயர் போல் பலாத்கார முறையில் போகாவிட்டாலும் அவர்களும் தம் கலாசாரங்களை வளர்ப்பதாகவே யிருந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் மிஷனரிமார்கள் ஒழுங்கமைத்த திட்டமிட்ட, நிறுவனமயப்படுத்தப்பட்ட சமயப் பிரசாரத்திற்கு ஆட்சியாளர் அனுசரணையாக இருந்தனர். மறுபுறம் சுதேசிய சமயங்களை அவற்றின் சொந்த நாட்டிலேயே ஓரளவு கடைப்பிடிக்கவும் சுதந்திரம் கொடுத்தனர் என்றே கூறலாம்.

இவ்வேளையிலேயே போலிக் கிறீஸ்தவர்களாக வாழ்ந்து வந்த பல சைவர்கள் மீண்டும் சைவநெறியைக் கடைப்பிடிக்கத் தொடங்கினார்கள். சைவசமயத்தின்

நிலைக்களனாகவுள்ள ஆலயங்களை மீண்டும் புனரமைத்து கும்பாபிஷேகம் செய்யும் வேலைகளில் ஈடுபடத் தொடங்கினர். இக்காலத்திலேயே வண்ணை வைத்தீஸ்வரன் கோவில், நயினை நாகபூசணி அம்மன் கோவில், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், நல்லூர் கந்தசாமி கோவில் என்பன மீண்டும் உருப்பெற்றது.

எமது சமயப் பாரம்பரியத்தில் சமயத்தை வளர்ப்பதில் கோவில்களும் மடங்களும் தமக்கெனத் தனித்துவமான இடத்தை வகித்துள்ளன. சமய வளர்ச்சிக்கு நிலைக்களனாகக் கோயிலும் சமயஞ்சார்ந்த அறிவு வளர்ச்சிக்கு அடித்தளமாக மட்டும் இயங்கி வந்துள்ளன. இந்த இயக்கமே சைவக் கல்விப் பாரம்பரியத்தை அன்றும் அழிவிலிருந்து காப்பாற்றியது.

இக்காலத்தில் ஆங்கிலேயப் பாதிரிமார்கள் ஆங்காங்கே பாடசாலைகளை நடத்தி கல்வி போதித்து தம் கிறிஸ்தவ சமயத்திற்குத் தொண்டாற்றினர். ஆங்கிலக் கல்வியறிவு பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புக்களை நல்கி தமது சமயமாகிய கிறிஸ்தவத்திற்கு இழுத்துக் கொண்டனர். இவ்வாறு ஆங்கிலேயருடைய கல்வியும் சைவசமயத்தை இருள் நிலைக்கு இட்டுச் செல்வதாகவே இருந்து வந்தது. இவற்றோடு பல ஆங்கில நூல்களை அச்சிட்டு வெளியிட்டும் கற்றறிந்தவர்களைத் தம் சமயத்திற்குக் கவர்ந்திழுத்துக் கொண்டார்கள் என்றே கூற முடியும்.

இவ்வேளையிலேயே சைவச்சான்றோர்கள் சைவக் கல்வியின் அவல நிலை பற்றிச் சிந்தித்தார்கள். தாம் தாம் கற்றறிந்து கொண்டதற்கமைய தம்முடைய வீட்டுத் திண்ணைகளில் மாணவர்களை அழைத்துக் கல்வி போதித்து வந்தார்கள். தமிழ், சைவம், ஒழுக்கம், புராணம், இதிகாசம், திருமுறைகள் என வாழ்வியலுக்குத் தேவையான நூல்கள் போதிக்கப்பட்டன. சங்கீதம்

தெரிந்தவர்கள் திண்ணைகளில் திருமுறைப் பாக்களையும் வேறு தோத்திரப் பாக்களையும் இசையுடன் கற்பித்து வந்தார்கள். இவையே பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சைவக் கல்விப் பாரம்பரியத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்த விடிவெள்ளி போன்ற முயற்சி என்று குறிப்பிடலாம்.

இக் காலகட்டத்திலேயே சைவக்கல்விப் பாரம்பரியத்திற்கு மட்டுமன்றி சைவசமயத்துக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் எமது கலாசாரம் பண்பாட்டு வளர்ச்சிக்கும் தன்னையே அர்ப்பணித்து தொழிற்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் சைவத்தமிழ்க் கலாசாரம் சிறந்தோங்கியதும் பல சித்தர்கள் ஆன்மீக ஞானிகள் நடமாடிய பதியாகிய நல்லூரிலே கந்தப் பிள்ளைக்கும் சிவகாமியம்மைக்கும் மகனாக 18.12.1822ம் நாள் அவிட்ட நட்சத்திரத்தில் சைவத்தின் ஒளிபரப்ப எழுந்த சூரியன் போல திருவவதாரம் செய்தார்.

இவர் பிறந்த காலத்தின் சைவக் கல்வியை திண்ணைப் பள்ளிகளே நடாத்திக் கொண்டிருந்தன. அந்த வகையில் நல்லூர் சுப்பிரமணிய உபாத்தியாயரிடமும் வேலாயுதபிள்ளை முதலியாரிடமும் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். பின்னர் சரவணமுத்து உபாத்தியாயரிடமும் சேனாதிராய முதலியாரிடமும் கற்றுக் கொண்டாலும், ஆங்கிலக் கல்வியைப் பெற 1843ல் பீற்றர் பார்சிவல் பாதிரியார் நடாத்திய யாழ் வெஸ்லியன் மிஷன் கல்லூரிக்கு (தற்போதைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆங்கிலம் கற்கச் சென்று 7 வருடம் கற்றுக் கொண்டாரென்றால் அக்காலச் சைவக்கல்விப் பாரம்பரியம் பற்றி அறிய முடிகின்றதல்லவா?

மேலும் இங்கு 7 வருடங்கள் கற்ற வேளையில் ஆறுமுகநாவலரின் பெருமையை உணர்ந்து அங்கேயே

தமிழ் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார் என்றால் அக்காலம் கற்றவர்களை தங்கள் பாடசாலையிலேயே அமர்த்தி தம் மதம் சார்ந்த கல்வியை வழங்க எத்தனித்தார்கள் என்பது தெரிகின்றது. இவ்வாறு சைவச் சான்றோர்கள் கூட அன்னியரின் வசமிழந்து கிறிஸ்தவமத சம்பந்தமான பாடசாலைகளை வளர்த்தார்களன்றி சைவப்பாடசாலைகளை நிறுவனமாகத் தொடக்கி நடாத்தவில்லையென்றே கூற வேண்டும்.

இவ்வாறு இருந்த காலமாகியது பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறு என்று கூறலாம். அதாவது 1842ம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் சைவக் கல்விப் பாரம்பரியத்தின் புத்தெழுச்சிக் காலம் எனலாம். அக்காலத்தில் சைவசமயத்தின் இழிநிலை யாழ்ப்பாணத்தில் சமூக மேல் மட்டத்தினரிடையே விழிப்பினை ஏற்படுத்தியது. அவர்களை இருவகைப் பட்ட பணிகள் எதிர்பார்த்திருந்தன எனக் கூறலாம்.[5]

1. கிறிஸ்தவ மதப் பிரசாரத்தினால் இடம்பெற்ற மதமாற்றத்தைத் தடுத்து நிறுத்துவது.
2. சைவசமயக் கருத்துக்களையும் அவற்றின் மேம்பாட்டையும் மக்கள் மத்தியில் நிலை நாட்டுவது.

இதனடிப்படையில் சைவப்பிள்ளைகளுக்கு சைவசமயச் சூழலில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்ற இயக்கம் 1842ல் ஆரம்பமானது. வைத்திலிங்கச் செட்டியார், சிறாப்பர் குரு, இரகுநாத முதலியார் ஆகிய உயர்குடிப் பிறப்பாளர்கள் ஒன்று சேர்ந்து கிறிஸ்தவமதப் பரப்பலைத் தடுத்து சைவசமயத்தை வளர்க்க வேண்டும் என்றால் நாம் சைவப் பிள்ளைகளுக்கு சிறு வயதிலேயே சைவக்கல்வியை ஊட்ட வேண்டும் என்ற சிந்தனையில் ஒரு பாடசாலையை 30.09.1842ல் நிறுவினார்கள்.

இவ்வாறு இருந்த காலம்தான் நாவலர் பெருமான் மத்திய கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருந்த காலம். " 7 வருடங்கள் கல்வி கற்றதனாலும் 7 வருடங்கள் கல்வி கற்பித்ததனாலும் 14 வருட காலம் கிறிஸ்தவ மதச் சூழலையும் கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தைப் பரப்ப, வளர்க்க எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களையும் நன்கு அறிந்து கொண்டார்" என பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை அவர்கள் கூறினார்.

அதற்கேற்ப சைவத்தின் நிலை கண்டு கொதித் தெழுந்தார். எப்படியாயினும் சைவநெறியைக் காப்பாற்ற வேண்டும் எனும் வகையில் உத்தியோகத்தையும் தூக்கி எறிந்துவிட்டு 1946ம் ஆண்டு சைவசமயப் பிள்ளைகளுக்கு இலவசமாகப் பாடம் படிப்பிக்கத் தொடங்கினார்கள். "பகலில் மட்டுமன்றி இரவிலும் இவரது கற்பித்தற்பணி தொடர்ந்தது" என்கிறார் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளையவர்கள், வளர்ந்தவர்களுக்கு மட்டுமன்றி இளம் பிள்ளைகளுக்கும் சமயச்சூழலிலே தேவையான கல்வியைப் பயிற்றுவிக்க வேண்டும் என்ற வேட்கை நாவலருக்கு இருந்தது.

இவற்றையெல்லாம் செயற்படுத்த வேண்டி திருவாளர் அம்பலவாண முதலியாருடன் சென்னையிலுள்ள வித்தியா சாலைகளையும் வித்துவான்களையும் காண்பதற்காக இந்தியா சென்றார். தாய் நாடாகிய இந்தியாவில் சைவசமயத்தை வளர்க்கும் முயற்சிகளைப் பெற்றுவந்த நாவலர் பெருமான் பின்வரும் அறை கூவல்களைச் சந்திக்க வேண்டியதாகியது. அவையாவன.

1. யாழ்ப்பாணத்தில் பரவிக் கொண்டிருந்த கிறிஸ்தவ மதமாற்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தல்

2. சைவ சமயிகளிடையே அவர்களது சமயம் பற்றிய விழிப்பினை ஏற்படுத்திச் சைவசமயத்தில் பற்றினை உறுதிப்படுத்தல்

3. சைவர்களிடையே சைவசமய அறிவினைப் பெருக்குதல்

4. சிறுவர்களுக்கு சைவச் சூழலில் சைவக் கல்வி வழங்க வித்திடல்

இவற்றையெல்லாம் தீர்க்க வேண்டும் எனின் கல்வி என்ற ஊடகம் தான் அவசியம் என்பதை உணர்ந்த நாவலர் அவர்கள் 1847 மார்கழி மாதம் 31ம் நாள் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் முதன்முதலாக கிறிஸ்தவமதப் பிரசாரத்தை எதிர்த்து (கண்டித்து) சைவப்பிரசங்கப் பணியை ஆரம்பித்தார்[6]. பிரதி வெள்ளி தோறும் இரவு 9.00 மணிக்கு இவரது சைவசமயப் பிரசங்கம் நிகழ்ந்தது. இப்பிரசங்கம் பற்றி அக்காலத்தில் வெளிவந்த உதயதாரகை எனும் பத்திரிகையில் 1848 தை 13ம் திகதி பின்வருமாறு ஓர் செய்தி வந்தது.

"சைவ சமயம் உண்மை என்பதைத் திருட்டாந்தப்படுத்தும் பொருட்டு வண்ணார் பண்ணையில் சிவன்கோவில் வசந்த மண்டபத்தில் குருக்கள், பிராமணர்கள் மற்றும் பிரபுக்கள் முன்பாகச் சைவசமயப் பிரபல்யப் பிரசங்கம் பண்ணும் பொருட்டு அவ்விடத்திலுள்ள சில வித்துவாமிசர்கள் ஆரம்பித்திருக் கிறார்கள் என்று கேள்வியானோம். மேலும், அதில் முதல் பிரசங்கம் போன முப்பத்தோராந்திகதி வெள்ளிக்கிழமை இரவு ஒன்பது மணிபோலக் "கந்தர் குமாரர் ஆறுமுகத்தால் செய்யப்பட்டதென்று" ஓர் மாணாக்கன் என்பவரெழுதி வரவிட்ட கடிதத்தாற் தெரிய வந்தது"

இவ்வாறு பிரசங்க மரபு மூலம் கற்றறிந்த மக்களிடையே சைவ உணர்வையூட்டி சைவ வாழ்வு வாழச் செய்யவும் கற்காத சமுதாயத்திற்கு செவிச் செல்வத்தின் மூலம் நல்ல கல்வியறிவை ஊட்டவும் இப் பிரசங்கம் பயன்பட்டது. தொடர்ந்து வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் மட்டுமன்றி யாழ்குடா நாடெங்கும் இப்பிரசங்கப் பணி தொடர்ந்தது. இப்பணி சைவக் கல்வியை யாழ்ப்பாணமெங்கும் பரவச் செய்தது என்றே கூறலாம்.

இது மட்டுமன்றி 1948ம் ஆண்டு ஆவணிமாதம் 5ம் நாள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையை ஸ்தாபித்தார். இதைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் உந்துதலால் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் சைவக் கல்வியைப் பரப்புவதற்கு சைவப்பிரகாச வித்தியா சாலைகள் ஆரம்பமாயின. குறிப்பாக கந்தர்மடம், வேலணை இணுவில், மூளாய் சுழிபுரம், தெல்லிப்பழை, புலோலி, கோப்பாய் போன்ற இடங்களில் அமைக்கப்பெற்ற பாடசாலைகளைக் கூறலாம். மேலும் நாவலர் பெருமான் 1872 அக்டோபர் மாதமளவில் வண்ணார்பண்ணையில் சைவ ஆங்கில வித்தியா சாலையை நிறுவி சைவக் கல்வியோடு தமிழ்மொழியும் ஆங்கிலமொழியும் கற்பித்தார்கள். இதேயாண்டிலேயே மேலே குறிப்பிட்டதைப் போன்று கோப்பாயிலும் புலோலியிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் ஸ்தாபிக்கப் பெற்றது. தொடர்ந்தும் சைவக் கல்வியை வளர்க்க நாவலர் பெருமான் பாடுபட்டார் என்றே கூறலாம்.

இத்துடன் நாவலர் பெருமான் வளர்ந்தவர்களை தமது இருப்பிடத்திற்கு அழைத்து கல்வி போதித்தார்.

கோயில்களிலும் மடங்களிலும் புராண படன மரபை வளர்த்தெடுத்து அதன் மூலமும் நன்கு கற்றறிந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கினார். குறிப்பாக இசை, பொருள் காணல், இலக்கண அறிவு, வரலாற்று அறிவு என்பன சிறப்படைவதாகக் காணப்பட்டது.

இவை மட்டுமன்றி நாவலர் அவர்கள் சைவக் கல்வியை வளர்க்கும் பொருட்டு நூல்களை வெளியிட வேண்டும் என விரும்பினார். இதற்காக 1849ம் ஆண்டு யூலை மாதம் நல்லூர் சதாசிவம்பிள்ளையவர்களுடன் இந்தியா சென்று அங்கு ஓர் அச்சியந்திரம் பெற்று வந்து யாழ்ப்பாணம் வண்ணைவைத்தீஸ்வரன் கோவிலிற்குச் சமீபமாக "சைவப் பிரகாச வித்தியானுபாலன யந்திரசாலை" என்னும் பெயருடன் ஒரு அச்சுக்கூடத்தை ஸ்தாபித்தார். அதன் பிற்பாடு ஏராளமான நூல்களை எழுதியும், பழைய நூல்களை அச்சிட்டும் பழைய செய்யுள் நூல்களுக்கு உரை எழுதி, அச்சிட்டும் வெளியிட்டார்.

இந்த வகையில் சாதாரண நூலறிவே இல்லாதவர்களுக்கு அன்றாடம் நித்திரை விட்டெழுதல் முதல், நித்திரைக்குச் செல்லும் வரையுள்ள செயற்பாடுகளையும் சைவசமய உண்மை, சிவபெருமானின் கருணை, சிறப்பியல்புகள், ஆன்மாக்களின் இயல்புகள், ஆன்ம ஈடேற்றத்திற்காக செய்யும் வழிபாடுகள் என சைவசித்தாந்தம் கூறும் விடயங்களையும் மனித வாழ்வுக்கு இன்றியமையாதவற்றையும் வினாவிடை வடிவத்தில் எழுதி வெளியிட்டார். உதாரணமாக 1ம், 2ம் சைவ வினாவிடையினைக் குறிப்பிடலாம். முதலாம் சைவ வினாவிடையில் முதலாம் வினா "உலகத்துக்கு கருத்தா யாவர்?" எனக் கேட்டு, 'சிவபெருமான்' எனத் தானே அதற்கும் பதிலளித்தார்.

"திருநீறு எவ்வெப்போது அணியப்பட வேண்டும்?" என வினாவி அதற்கு விடையாக, "காலையிலே நித்திரைவிட்டெழும் போதும், நீராடிய பின்னும், இறை வழிபாட்டின் முன்னும் பின்னும், போசனத்தின் முன்னும் பின்னும், மலசல மோசனத்தின் பின் கை கால் கழுவியும், வெளியே புறப்படும்போதும், இரவில் தூக்கத்திற்குச் செல்லும் போதும்" எனக் கூறியிருப்பதன் மூலம் சைவசமய அறிவு அங்கே போதிக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு இந்நூல்கள் மிக ஆழமான விடயங்களையும் மிக இலகுபடுத்தி இருக்கின்றது.

இவ்வாறு பல அடிப்படை விடயங்கள் அடங்கிய சைவசமயநூலாக சைவ வினாவிடை இன்றுவரை பயன்படுகின்றதென்றால் 19ம் நூற்றாண்டின் பின் அரைப் பகுதிக்கு எவ்வாறு பயன்பட்டிருக்கும் என்பது மிக முக்கியமானதாகும்.

செய்யுள் இலக்கியங்களைக் கற்க முன்பு அவ் விலக்கியங்களில் தெளிவு இருக்க வேண்டும் என்று நூற் பயிற்சியே இல்லாத சிறியோருக்கும் வளர்ந்தோர்க்கும் பயன்படும் வண்ணம் புராண வசனங்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார். இந்த வகையில் பெரிய புராண வசனம், கந்தபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் நூற்பயிற்சி நிறைந்த கற்றறிவாளர்கள் மேன்மேலும் தம்மைச் சீர்திருத்திக் கொள்ள வாய்ப்பாக அரிய பழைய செந்தமிழ் நூல்களை வெளியிட்டார். உதாரணமாக முதலாம், இரண்டாம், நான்காம் பால பாடங்களைக் குறிப்பிடலாம்.

நான்காம் பால பாடத்தில் கல்வி எனும் தலைப்பிலே கூறிய விடயம் மிக மிக சிந்திக்கத்தக்கதொன்றாகும். மனிதர்களாலே தேடற்பாலனவாகிய பொருள்கள் கல்விப் பொருள் செல்வப்பொருள் என இரண்டாம். கல்வியாவது

கற்றற்குரிய நூல்களைக் கற்றல், கல்வியெனினும் வித்தையெனினும் பொருந்தும். கற்றற்குரிய நூல்களாவன அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள்களை அறிவிக்கும் நூல்களும் அந்நூல்களை அறிதற்குக் கருவிகளாகிய நிகண்டு, இலக்கணம், கணக்கு முதலிய நூல்களுமாம். அறமெனினும் தருமமெனினும் பொருந்தும். வீடெனினும் முத்தியெனினும் மோட்சமெனினும் பொருந்தும்.

செல்வப் பொருள் பங்காளிகள், கள்வர், வலியவர், அரசர் என்னும் இவர்களாலே கொள்ளப்படும்; கல்விப் பொருளோ ஒருவராலும் கொள்ளப்படமாட்டாது. செல்வப்பொருள் வெள்ளத்தாலாயினும் அக்கினியாலாயினும் அழியும்; கல்விப் பொருளோ ஒன்றாலும் அழிய மாட்டாது. செல்வப் பொருள் பிறருக்குக் கொடுக்குந் தோறும் குறைந்து கொண்டே வரும்; கல்விப் பொருளோ பிறருக்குக் கொடுக்குந்தோறும் வளர்ந்து கொண்டே வரும். செல்வப் பொருள் சம்பாதித்தல், காப்பாற்றல், இழத்தல் என்னும் இவைகளாலே துன்பஞ்செய்து பலரையும் பகையாக்கும்; கல்விப் பொருளுடையவர் இம்மையிலே சொற்சுவை, பொருட்சுவைகளை அனுபவித்தலாலும், புகழும் பொருளும் பூசையும் பெறுதலாலும், பின்னே தருமத்தையும் முத்தியையும் அடைதலாலும் இடையறாத இன்பத்தை அனுபவிப்பர். இப்பெரியவரைச் சேர்ந்து அறியாதவைகளையெல்லாம் அறிந்தோம் என்று உலகத்தார் பலரும் அவரிடத்து அன்புடையவராவர். ஆதலினாலே, செல்வப் பொருளிலும் கல்விப் பொருளே சிறப்புடையது.

உயர்குலமும் அழகும் செல்வாக்கும் உடையவராயினும், கல்வியில்லாதவர் முருக்கம் பூவுக்குச் சமமாவர். இராசாக்களுக்கு அவர் தேசத்தின் மாத்திரம் சிறப்புண்டாம்; கற்றறிந்தவருக்கு அவர் சென்ற தேசங்கள்

எல்லாம் சிறப்புண்டாம். ஆதலின், இராசாக்களினும் கற்றறிந்தவரே சிறப்புடையர். ஆதலின், யாவரும் கல்வியைச் சிறிதும் அவமதியாது வருந்திக் கற்றல் வேண்டும்.

அழுக்குப்படியாத சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்கும்; அழுக்குப் படிந்த சீலையிலே சாயம் நன்றாகப் பிடிக்க மாட்டாது. சிறு பிராயத்திலேயே கற்ற கல்வி புத்தியிலே நன்றாகப் பதியும். புத்தி சம்சாரத்திலே விழுந்து வருத்தத்தை அடைந்து கொண்டிருக்கின்ற முதிர்ந்த பிராயத்திலே கற்றாலும் கல்வி நன்றாகப் புத்தியிலே பதிய மாட்டாது. ஆதலினாலன்றோ ஔவையார் "இளமையிற் கல்" என்று அருளிச் செய்தார்.

கல்வியை நல்லாசிரியரிடத்தே சந்தேகமும் விபரீதமும் அறக் கற்கவேண்டும். சந்தேகமாவது இதுவோ அதுவோ என ஒன்றிலே துணிவு பிறவாது நிற்றல். விபரீதமானது ஒன்றை மற்றொன்றாகத் துணிதல். வியாதி, வறுமைகள் இல்லாமையும் பொருள், இளமை முதலியவைகளுடன் உண்மையும் கல்வி கற்பதற்குச் சிறந்த கருவிகள். மிகச் சிறந்த கருவி ஆசிரியருடைய உள்ளத்திலே அருள் உண்டாகும்படி நடத்தல். ஆகையினால், கல்வி கற்கும் மாணவர்கள் ஆசிரியரை விதிப்படி சிரத்தையோடு வழிபட்டே கற்றல் வேண்டும். வழிபாடாவது இன்சொல் சொல்லல், வணங்குதல், உற்றவிடத்துதவுதல் முதலாயின.

கல்வியிலே தேர்ச்சியடைய வேண்டுமாயின் இடைவிடாது கற்றல் வேண்டும். ஒரு நாள் ஊக்கமாகவும் மற்றொரு நாள் சோம்பலாகவும் இராமல் எப்பொழுதும் தங்கள் தங்கள் சக்திக்கேற்ப கல்வியைப் பயிலல் வேண்டும். சோர்வு அடையாமல் நாள்தோறும் கிரமமாகச் சிறிதாயினும் நன்றாகக் கற்கின்றவர் எப்படியும் அறிவுள்ளவராவார். தாம் அதிக சமத்தர் என்று நினைத்து

ஒவ்வொரு வேளையில் மாத்திரம் கற்கின்றவர் அதிகமாகத் தேர்ச்சியடைய மாட்டார். மணற் கேணியைத் தோண்டும் போது ஊற்றுநீர் சுரந்து பெருகிக் கொண்டே வருதல் போலக் கல்வியைக் கற்குந் தோறும் அறிவு வளர்ந்து கொண்டே வரும். ஆதலினால் கல்வியை சிறிது கற்றமாத்திரத்தால் அமையாது மேன்மேலும் கற்றல் வேண்டும்.

தாங்கேட்ட பாடல்களை நாள்தோறும் போற்றலும் தாங்கேட்ட பொருட்களைப் பலதரச் சிந்தித்தலும் ஆசிரியரை அடுத்து அவைகளைக் குறைதீரக் கேட்டலும் ஒரு சாலை மாணாக்கர் பலருடனும் பலதரமும் பழகுதலும் தாம் ஐயுற்ற பொருளை அவரிடத்து வினாவுதலும், அவர் வினாவியவைகளுக்கு உத்தரங் கொடுத்தலும் தாம் கேட்டறிந்தவற்றைப் பிறருக்கு அறிவித்தலும் ஆகிய இவைகளெல்லாம் கல்வி பயிலும் மாணாக்கருக்குக் கடமைகளாம்.

நூல்களிலே சிலநாட் பழகினால் விவேகிகளாயினும் சிலவற்றில் வல்லவராதலும் அரிது. பல நாட் பழகினால் மந்தர்களாயினும் பலவற்றிலும் வல்லவராவார். நூற் பொருளை விரைவினாலே பார்த்தால் விவேகிகளாயினும் ஒன்றும் தெரியாது. விரையாது அமைவுடனே பார்த்தால் மந்தர்களாயினும் கருகாது தெரியும்.

பெரும்பாலும் எல்லோர்க்கும் கற்பதில் கருத்திறங்கும். கற்றதிற் கருத்திறங்காது. அது நன்மையன்று. கருத்தைக் கற்பதிலே மட்டுப்படுத்தி கற்றதிலே சிந்தாமல் இறக்கல் வேண்டும். வருந்திக் கற்ற நூலை மறக்கவிட்டு வேறு நூலைக் கற்றல் கையிலே கிடைத்த பொருளை எறிந்து விட்டு வேறு பொருளைத் தேடல் போலும். பசி முதலிய வருத்தத்தாலாவது அன்னம் முதலியவற்றின் கண் அவாவினாலாவது யாதாயினும் வேறொரு நிமித்தத்

திலாவது கருத்து மயங்கினால் அப்பொழுது, கல்வியிற் பழகுதலொழிந்து அம்மயக்கந் தீர்ந்த பின்பு பழகல் வேண்டும்.

கல்வியுடையவர் தான் கற்றறிந்தபடி நல்வழியிலே ஒழுகுதலும் நன்மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பித்தலும் எல்லோர்க்கும் உறுதியைப் போதித்தலுமாகிய இம்மூன்றையும் எந்நாளும் தமக்குக் கடனாகக் கொள்ளல் வேண்டும். இவ்வியல்புடையவரே கல்வியினாலாகிய பயனை அடைந்தவர் ஆவார். இம்மூன்றுமில்லாத விடத்து கல்வியினால் பயனில்லை.

சரீர சுகத்திற்கு ஏதுவாகிய அன்ன வஸ்த்திரம் முதலியவற்றையும் ஆன்மசுகத்திற்கு ஏதுவாகிய ஞானத்தையும் கொடுப்பது வித்தையே யாதலினால் எல்லாத் தானங்களிலும் வித்தியாதானமே சிறந்தது. ஒருவருக்கு அன்ன வஸ்த்திரம் கொடுத்தால் அவை அவருக்கு மாத்திரமே பயன்படும். பயன்படுவதும் சிறிது காலம் மாத்திரமே. ஒரு விளக்கேற்றுதல் அவ்வொரு விளக்கிலே பல விளக்கும் அப்பல விளக்கினுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பல விளக்கும் அப்பல விளக்குகளுள்ளும் ஒவ்வொரு விளக்கிலே பற்பல விளக்குமாக எண்ணில்லாத விளக்கு ஏற்றப்படுவதற்கு ஏதுவாதல் போல, ஒருவருக்குக் கல்வி கற்பித்தல் அவ்வொருவரிடத்திலே பலரும் அப்பலருள்ளும் ஒவ்வொருவரிடத்திலே பற்பலருமாக எண்ணில்லாதவர் கல்வி கற்றுக் கொள்வதற்கு ஏதுவாகும். அவர் கற்ற கல்வியோ அப்பிறப்பிலன்றி மற்றைப் பிறப்புக்களிலும் சென்று சென்று உதவும். ஆதலின், வித்தியாதானத்திற்குச் சமமாகிய தருமம் யாதொன்றும் இல்லை. தாங்கற்ற கல்வியை நன் மாணாக்கர்களுக்கு கருணையோடு கற்பியாதவர் காட்டிலே நச்சு மரமாவார்."

இவ்வாறு நாவலர் பெருமான் கல்வி பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார் என்றால், அக்காலக் கல்வி வளர்ச்சியில், அவர் எவ்வளவு அக்கறை கொண்டிருந்தார் என்பது புலனாகும். முதலாம் புத்தகத்தை விட நான்காம் புத்தகம் விரிவடைந்து வளர்ந்து செல்வது உளவியல் விருத்தி நிலைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடிகின்றது.

இவை மட்டுமன்றி ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஆற்றிய பணிகளில், மாணவர்களுக்கேற்ற சைவ சமய நூல்களை ஆக்கி வெளியிடுதல், மக்கள் மத்தியில் காணப்பட்ட சைவம் பற்றிய தவறான கருத்துக்கள், வழக்கங்கள் என்பவற்றைப் போக்குவதற்குக் கண்டனப் பிரசுரங்கள் வெளியிடுதல், வயதில் முதிந்தவர்களுக்கு தமது இல்லத்தில் கல்வி வழங்குதல் என்பன அடங்கும்.

முதியோர் கல்வி பற்றிக் குறிப்பிடும்போது தமிழ் மறையாகிய திருவள்ளுவர் சாந்துணையும் கல்வி அல்லது வாழ்நாள் முழுவதும் கல்வி என்ற கருத்தை நாவலர் பெருமான் நடைமுறைப்படுத்தினார். எந்தவோர் அறிவுத்துறையிலும் புதுப்புது முன்னேற்றங்கள் வெகு விரைவாக நடந்தேறிச் செல்கின்றன. எனவே, ஒருவன் முன்பு கற்ற கல்வி பழையதாகி வழக்கொழிந்து போகிறது. ஆகவே, ஒருவன் பின் தங்கி விடாமல் காலத்தோடு ஒட்டிச் சேர்ந்து செல்வதற்கு அவனுக்கு வாழ்நாள் முழுவதும் கல்வி அவசியம் தேவைப்படுகிறது அல்லவா? இதையே இன்றைய நவீன உலகிலும் காணமுடிகின்றது.

தமிழ் மொழியைச் சரியான முறையில் கற்றாலேயே ஏனைய பழைய நூல்களை வாசிக்க முடியும், பொருள் விளங்க முடியும் எனக் கருதி இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை என்ற நூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

மேலும் யாழ்ப்பாணச் சமயநிலை, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் போன்ற தலைப்புக்களில் வெளிவந்த துண்டுப் பிரசுரங்கள் சைவக் கல்வி பற்றிச் சிந்திக்க வேண்டும், அறியாமையை நீக்க வேண்டும் என்ற பாண்மையில் எழுந்திருப்பதைக் காணலாம். அதாவது கல்வி ஏட்டுடன் நிற்காது நடைமுறை வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும் என்ற நிலையையும் நாவலர் பெருமான் ஏற்படுத்தியிருந்தார்.

இவ்வாறு நாவலரது சைவக் கல்வி வளர்ச்சியும் பிரசங்கமும் பலரையும் தூண்டியது. சைவ அபிமானிகள் பலரது முயற்சியினால் கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, மாதகல், உடுவில், வேலணை போன்ற இடங்களில் சைவப் பாடசாலைகள் தோன்றலாயின.[11]

இவ்வாறு சைவக்கல்வியை வளர்த்த நாவலர் பெருமான், 1879 டிசம்பர் 5ம் நாள் இப்பூவுலகைவிட்டு இறைவனடி சேர்ந்தாலும் அவருடைய வாரிசுகளாகச் செயலாற்றிய இயக்கங்களும் நிறுவனங்களும் அவருடைய அனுதாபிகளும் தொடர்ந்து செயற்படலாயினர். 16.08.1880ல் "சைவப் பிரகாச சமாஜீயம்" என்ற ஒரு சங்கத்தையும் "உதயபானு" என்ற தமிழ்ப் பத்திரிகையையும் ஸ்தாபித்தனர்[12]. நாவலர் பெருமான் தூண்டிவிட்ட சைவ உணர்வு நன்கு வளர்ந்தது என்றே கூற வேண்டும்.

நாவலரின் எண்ணங்களை நிவைவேற்ற வேண்டும் என்கின்ற வகையிலே, நாவலரின் மருமகனாகிய வித்துவ சிரோமணி பொன்னம்பலப்பிள்ளை போன்ற சில சைவப் பெரியாருடைய முயற்சியினால் 29.4.1888ல் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தாபிக்கப்பட்டது. இதன் ஆரம்ப காலத்தில் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையுடன் நாவலரது நன் மாணாக்கர்களில் ஒருவராகிய த. கைலாய

பிள்ளையும் அவர்களையடுத்து இளைப்பாறிய நீதிபதி திரு. செல்லப்பாபிள்ளை, நியாயவாதி எஸ். நாகலிங்கம், நியாயதுரந்தர் வீ. காசிப்பிள்ளை, திரு. சி.த.மு. பசுபதிச் செட்டியார் ஆகியோரும் சைவபரிபாலன சபையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவினார்கள்.

சைவ சமயத்தைப் பாதுகாப்பதற்கென ஒரு சபையையும் ஸ்தாபிக்க வேண்டும் என்பது நாவலருடைய இலட்சியங்களில் ஒன்றாக இருந்தது. அவருடைய வாழ் நாளில் கைகூடாத அவ்விலட்சியம், அவரது சீடர்களாலும் அபிமானிகளாலும் சைவ பரிபாலன சபையின் மூலம் நிறைவேற்றப்பட்டது. சைவபரிபாலன சபையானது பெயருக்கேற்ற வகையில் "மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற இலட்சிய வாசகத்தோடு செயற்பட்டது. அதைக் கொண்டு சிந்தித்துப்பார்க்கும் போது சபையின் பணியில் சைவ சமய சேவைக்கே முதலிடம் கொடுக்கப்பட்டது என்று எண்ணத் தோன்றும். எனினும், காலப்போக்கில் சபை கல்விப்பணிக்கும் கூடிய கவனம் செலுத்தியது என்பதும், ஆரம்பத்திலிருந்தே அந்தக் கல்விச் சேவை தமிழும் சைவமும் பிணைந்த பின்னணியிலேயே செய்யப்பட்டது என்பதும் சபையின் நோக்கங்களிலிருந்து காணக்கிடக்கின்றது.

சபையின் சைவப் பிரசாரப் பணியைச் செவ்வனே செய்வதற்காக "இந்து சாதனம்" என்று தமிழிலும் "Hindu Organ" என்று ஆங்கிலத்திலும் இரண்டு பத்திரிகைகள் 1889ல் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் மகாநாடுகள், பிரசங்கங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றின் மூலமும் பாடநூல்கள், துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டும் சைவத்தையும் சைவக் கல்வியையும் வளர்த்தது.

சைவ பரிபாலன சபையின் கல்விப் பணியின் கலங்கரை விளக்கமாக இன்றும் திகழ்ந்து வருவது

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாகும். அதன் தோற்றத்திலும் நாவலரது முன் மாதிரியை நாம் காணலாம். 1872 ஆம் ஆண்டில் வண்ணார் பண்ணையில் நாவலர் ஆரம்பித்த சைவ ஆங்கிலப் பாடசாலையே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு முன்மாதிரியாக இருந்தது என்று கூறப்படுவது ஏற்புடையதாகும். இன்றைய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வளர்ச்சியை நோக்கும் போது அதன் ஆரம்பச் சுவட்டினை 1886ல் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் திரு. வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை ஆரம்பித்த Nature Town High School - சுதேச நகர்ப்புற உயர் பாடசாலையில் காணலாம். அப் பாடசாலையின் பொறுப்பு 1889ல் திரு. நாகலிங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அவருடைய பொறுப்பில் Nature Town High School என்ற பெயரில் நடைபெற்றது. பின்னர் சைவபரிபாலன சபை பொறுப்பேற்ற போது இந்து உயர்நிலைப் பாடசாலை - Hindu High School என்ற பெயருடன் நடாத்தப்பட்டு 1895ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாக வளர்ந்தது. சைவப் பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வியை அளித்த முதற் சைவப் பாடசாலை இதுவேயாகும். ஆண் - பெண் இருபாலாரையும் ஆரம்பத்தில் அனுமதித்த சபை காலப்போக்கில் பெண்களுக்கெனத் தனி நிறுவனம் ஒன்றைத் தோற்றுவித்தது. அங்ஙனம் 1943 ஆம் ஆண்டில் தொடங்கிய பெண்கள் கல்லூரியே இன்றைய யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆகும்.[13]

இவ்வாறு சபையின் செயற்பாடுகள் இருக்க ஊர்கள் தோறும் சைவாபிமானிகள் சைவக்கல்வியை வளர்க்க வேண்டும் என்று பல சிறிய பாடசாலைகளை நிறுவிக் கொண்டார்கள்.

இந்த வகையில் 1889ல் காரைநகரில் நல்லூரைப் பிறப்பிடமாகவும் காரைநகர் மாப்பாணவூரியை

வதிவிடமாகவும் கொண்ட திரு. மு. சயம்பு என்பவரை ஆசிரியராகக் கொண்டு திரு. கோவிந்தபிள்ளை அவர்கள் பாடசாலையை ஆரம்பித்தார்.[14] இது திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் வித்தியாலயம் என்ற பெயரோடு விளங்கியது. பின்னர் English High School என்ற பெயரில் இயங்கி, பின்னர் Hindu Bord காரைநகர் இந்துக் கல்லூரி எனும் பெயருடன் இயக்கி வந்தாலும், 1970 வரை 27 வருடம் அதிபராக இந்துக் கல்லூரியை வளர்த்த கலாநிதி. ஆ. தியாகராசா அவர்களது சேவையைக் கௌரவித்து கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரோடு தற்போது இயங்கி வருகின்றது.

திரு. ச. அருணாசலம் அவர்கள் வியாவில் என்ற இடத்தில் பிரம்மஸ்ரீ கா. வேதக்குட்டி ஐயரவர்கள் ஆலோசனையோடும் உதவியோடும் சைவபரிபாலன வித்தியாசாலை என்ற பெயரில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தார். (ஐயரின் பாடசாலை) இன்று வியாவில் சைவ வித்தியாசாலை என்ற பெயருடன் விளங்குகிறது.

இவ்வாறு திரு. ச. அருணாசலம் அவர்கள் வெளியூர்களிலும் சென்று பிரமுகர்களைக் கொண்டு பல சைவப் பாடசாலைகளை ஆரம்பித்து சைவக்கல்வியை வளர்க்கலாயினார். அவற்றில் சில வருமாறு:

கரம்பன் முருகமூர்த்தி கோவிலுக்கண்மையில் சுவாமி மகாதேவா சுவாமிகள் மூலம் சண்முகநாத வித்தியாசாலை.

மட்டுவில் வித்துவான் இராமலிங்கம் மூலம் மட்டுவில் கமலாசினி வித்தியாசாலை.

கரணவாய் கிராய்ப்பிள்ளையார் கோவிலுக்கண்மையில் திருச்சிற்றம்பலமணியம் மூலம் மாணிக்க வித்தியாசாலை.

அல்வாய் வரதராசப் பிள்ளையார் கோவில் அருகில் புலவர் சிரோமணி சின்னத்தம்பி உபாத்தியாயர் மூலம் சைவப்பிரகாச வித்தியாசாலை. உடுப்பிட்டி நியாயதுரந்தர் பேரறிவளாரும் பெருஞ் செல்வருமாகிய திரு. வீரகத்திப் பிள்ளை மூலம் சைவப்பிரகாச வித்தியாசாலை.

வல்வை. சிதம்பரக் கல்லூரி மனேஜர். ஞா. தையல் பாகர் மூலம் சிவகுரு வித்தியாசாலை.

அனலதீவு சின்னப்பா உபாத்தியாயர் மூலம் சதாசிவ வித்தியாசாலை.

இவற்றை விட தனிப்பட்ட சைவப்பிரமுகர்களும் பல பாடசாலைகளை அமைத்துக் கொண்டார்கள். அந்த வகையில்தான் சுன்னாகம் கந்தரோடைப் பகுதியிலே திரு. அ. கந்தையா என்பவரால் 1893ல் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையும் திரு. சி. கந்தையா என்பவரால் 1894ல் கந்தரோடை ஆங்கில வித்தியாசாலையும் அதாவது, இன்றைய ஸ்கந்தவரோதயாக் கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டது.[15]

உ
சிவமயம்

# 2.3. இருபதாம் நூற்றாண்டில் சைவக் கல்வி

இருபதாம் நூற்றாண்டு எனும் போது ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுடன் ஆரம்பித்து இரண்டாயிரமாம் ஆண்டுடன் முடிவடையும் நூறு ஆண்டுகளைக் குறிக்கின்றது. இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சைவக் கல்விப் பாரம்பரியம் பற்றி நோக்கும்போது பத்தொன்பதாம் நூற்றாண்டின் சைவக்கல்வி வளர்ச்சிகள், சைவக்கல்வி வளர்க்கப்பட வேண்டும் என்ற ஆதங்கம், சைவக்கல்வி பற்றிய விழிப்புணர்வு ஆகியவை இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களைச் சிந்திக்க வைத்தது. குறிப்பாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது சீரிய பணியும் சிந்தனையும் மட்டுமன்றி அவரது அறைகூவல்களும் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவர்களைச் சிந்திக்கத் தூண்டியது. இந்த வகையில் இருபதாம் நூற்றாண்டில் சைவக்கல்வியை வளர்க்க வேண்டும் என்ற மனப்பாங்கு பலரிடம் ஏற்பட்டதைக் காண்கின்றோம்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் குறிப்பாக, பின் அரை நூற்றாண்டில் சைவக் கல்வி பற்றி சுதேசிகள் எவற்றைச் சிந்தித்தார்களோ அதைவிடப் பன்மடங்கு இருபதாம் நூற்றாண்டின் முன் அரைப்பகுதியில் சிந்தித்தார்கள் என்றுதான் கூறவேண்டும்.

இருபதாம் நூற்றாண்டில் சைவக் கல்விப் பாரம்பரிய மானது பல்வேறு வகையில் வளர்த்தெடுக்கப்பட்டமையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் சைவர்கள் நிறுவனம் அமைத்து சைவக் கல்வியை எவ்வாறு வளர்த்துக் கொண்டார்களோ அதாவது, 1888ல் சைவ பரிபாலன சபை உதயமாகி நாவலரின் கனவை நனவாக்கியதோ அதே போல, இருபதாம் நூற்றாண்டிலும் நிறுவனங்கள் தோற்றம் பெற்றது. பெரு நிறுவனங்களாக இந்துக் கல்லூரி அதிகார சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம் (Hindu Board) போன்றனவும் சிறு நிறுவனங்களாக நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம், கந்தர்மடம், ஸ்ரீவேதாந்த மடம், கீரிமலை சிவநெறிக் கழகம், சைவ மங்கையர் கழகம், அகில இலங்கைத் திருமுறை மன்றம், ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம், நல்லூர் திவ்விய ஜீவன சங்கம், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், சாந்தையர் மடம், கற்பக விநாயகர் சைவ சமய அபிவிருத்திக் கழகம், ஊர்கள் தோறும் இந்து இளைஞர் மன்றங்கள், சைவாலயங்கள் என்பனவும் சைவக் கல்வியை வளர்ப்பனவாயின. இத்தோடு 19ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட சைவ பரிபாலன சபையும் தொடர்ந்து தொழிற்பட்டது.

இவை மட்டுமன்றி இலங்கையின் பிறபாகங்களில் உள்ள சில நிறுவனங்களும் யாழ்ப்பாணச் சைவக் கல்வி மரபை வளர்க்கும் நிறுவனங்களாகத் தொழிற்பட்டன. அந்த வகையில் கொழும்பில் சுவாமி விவேகானந்தரது வருகையால் உருவாக்கப்பட்ட கொழும்பு விவேகானந்த சபை, இராமகிருஷ்ண மிஷன் அகில இலங்கை இந்து மாமன்றம் மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, மட்டக்களப்பு விபுலானந்தர் இசை, நடனக் கல்லூரி, திருக்கேதீஸ்வரம் சிவானந்த குருகுலம், இணுவில் தர்ம சாஸ்தா குருகுலம் போன்றவற்றையும்

குறிப்பிடலாம். இத்தோடு மட்டுமன்றி இந்தியாவில் உள்ள சில நிறுவனங்களும் இலங்கையில் குறிப்பாக, யாழ்ப் பாணத்தில் சைவக் கல்விப் பாரம்பரியங்களை வளர்க்கலாயின. சிறப்பாக, தென்னிந்திய சைவ சித்தாந்த மகாசமாஜம், தருமபுர ஆதீனம், திருவாவடுதுறை ஆதீனம், காஞ்சி காமகோடி சங்கராசாரிய பீடம் போன்றவற்றை மறந்துவிட முடியாது.

நிறுவனங்கள் மட்டுமன்றி ஆங்காங்கே ஊர்கள் தோறும் பல தனிப்பட்ட பிரமுகர்கள், சைவ அபிமானிகள் சைவக் கல்விப் பாரம்பரியத்தை வளர்க்க வேண்டும் என விரும்பித் தொழிற்பட்டனர்.

அந்த வகையில் பெயர் குறிப்பிடக் கூடியவர்களாக வித்துவான். சி. கணேஷையர், பண்டிதமணி, சி. கணபதிப் பிள்ளை, ஏழாலை ஞானப்பிரகாசர், அச்சுவேலி குமாரசாமிக்குருக்கள், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவதர்மவள்ளல் க. கனகராசா (மில்க்வைற்), காசிவாசி செந்திநாதையர், சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், த. கைலாசபிள்ளை, சேர் பொன் இராமநாதன், ச. சபாரத்தின முதலியார், க. சோமசுந்தரப் புலவர், சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்[1], ஏழாலை பண்டிதமணி மு. கந்தையா, ஏழாலை ஆத்மஜோதி நா. முத்தையா, நீர்வேலி சிவப்பிரகாச பண்டிதர், இணுவில் ஸ்ரீமத் நடராச ஐயர், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், சைவப்புலவர் வ. கந்தசாமி, சு. செல்லத்துரை, போன்றோர் களைக் கூறலாம். மேலும் சிறிய அளவில் பங்களிப்புச் செய்தோர் ஏராளம் என்றுதான் கூற வேண்டும்.

இந்த வகையில் நிறுவனங்களும், நிறுவனமல்லாத தனிப்பட்டவர்களும் சைவக்கல்வியை வளர்க்க வேண்டும் என்று ஊர்கள், கிராமங்கள் தோறும் சைவப்

பாடசாலைகளை நிறுவிக் கல்வி போதித்தார்கள். ஆலயங்களில் புராண படனங்கள் மூலமும் சைவசமயப் பிரசங்கங்கள் மூலமும் கல்வி போதித்தார்கள். பலர் சைவசமய நூல்களை எழுதி, அச்சிட்டு வெளியிட்டு உதவினார்கள். இளம் தலைமுறையினரைச் சைவக் கல்விக்கு ஆட்படுத்த வேண்டும் எனும் வகையில் சைவ சமய அறிவுப் போட்டி, செயல்முறைப் போட்டி என்பன நடாத்திப் பரிசில்கள் வழங்கினார்கள். சைவசமயத்தினை நன்கு அறிந்தவர்களையும், சைவத் தொண்டாற்று பவர்களையும் ஊக்குவிக்கு முகமாகப் பாராட்டிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்கள். என்று, இன்னோரன்ன பணிகளை ஆற்றிய காரணத்தால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சைவக் கல்வி மரபானது தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டிலும் நன்கு ஒளிவீசிப் பிரகாசித்தது என்றே கூறலாம்.

## 2.3.1. இருபதாம் நூற்றாண்டில் சைவக் கல்வி வளர்த்த நிறுவனங்கள்

நிறுவனம் எனும்போது ஒரு சீரிய குறிக்கோளிற்காக ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இணைந்து பணியாற்றுவதன் மூலம் தொழிற்படும் ஓர் அமைப்பு ஆகும். இந்த வகையில் யாழ்ப்பாணச் சைவக் கல்விப் பாரம்பரியத்தை வளர்த்த நிறுவனங்களை இரண்டு வகையில் நோக்கலாம்.

1. யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் பணிசெய்த நிறுவனங்கள் (இலங்கை முழுவதும் பணி செய்த நிறுவனங்களும் இதனுள் அடங்குகின்றது)

2. ஊர்கள், கிராமங்கள் என குறுகிய பிரதேசத்தில் பணிசெய்த நிறுவனங்கள்.

இந்த வகையிலே யாழ்ப்பாணச் சைவக் கல்விப் பாரம்பரியத்தில் பங்களிப்புச் செய்து சைவக்கல்வி மரபை

வளர்த்த நிறுவனங்களாக இந்துக் கல்லூரி அதிகார சபை, சைவ வித்தியா விருத்திச் சங்கம், (Hindu Board) சைவ பரிபாலன சபை, பிற்காலத்தில் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம், கொழும்பு விவேகானந்த சபை, இராமகிருஷ்ண மிஷன், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் போன்ற வற்றையும் குறிப்பிடலாம். இவற்றைத் தனித்தனியே சுருக்கமாக நோக்குவோம்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் (Hindu Board)

சைவ வித்தியா விருத்திச் சங்கமானது யாழ்ப்பாணத் திற்கு வடக்கே 3 கி.மீ. தொலைவில் திருநெல்வேலியில் கலாசாலை வீதியில் அமைவு பெற்றுள்ளது. இலங்கை நாடெங்கும் சைவத் தமிழ் பாரம்பரியத்தை மலரச் செய்ய வேண்டும், நம் சைவப் பிள்ளைகள் சைவசமயச் சூழலில் கல்விபெற வேண்டும், சைவப் பிள்ளைகள் சைவாசார சீலராய்த் தோன்றி சைவ சமயத்தை நாட்டில் பேணி வளர்க்க வேண்டும் என்ற நோக்கம் மட்டுமன்றி நம்மவர்கள் கிறிஸ்தவச் சூழலில் நம் சைவக் கலாசாரத்தைக் களைந்து கல்வி கற்பதையும், அவர்கள் தம் மதத்திற்கு இழுத்துக் கொள்வதையும் தடுக்கும் முகமாக இச்சங்கமானது ஆரம்பிக்கப்பட்டது.

மேற்படி ஸ்தாபனமானது 24.10.1923ம் நாளிற் கூடியது. காரிய நிர்வாக சபையில் பொன்னம்பலம் இராமநாதன் தலைவராகவும், சைவமணி வட்டுக் கோட்டையூர் மு. சி. இராசரத்தினம் காரியதரிசியாகவும் திருவாளர் வைத்திலிங்கம் துரைச்சாமி, சுப்பிரமணியம் இராசரத்தினம், கௌரவ அ. சபாபதி, மானிப்பாய் வி. வீரசிங்கம், சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், கோப்பாய் முருகேசு சுவாமி நாதன் ஆகியோர் சபை அங்கத்தவர் களானார்கள்.

இவர்கள் சைவப் பாடசாலைகளை நிறுவுதல், முன்னுள்ள சைவப் பாடசாலைகளைப் பலப்படுத்துதல், பிறமதஸ்தாபனங்களின் தாக்கத்தினை தடுத்தல் முதலிய நற்கருமங்களை ஆற்றவேண்டும் என உருவாக்கப்பட்டதே சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆகும்.

“வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும் பூதபரம்பரை பொலியவும், புனித வாய் மலர்ந்து” தேவாரம் பாடிய திருஞான சம்பந்தக் குழந்தையின் திருவுருவத்தை இலச்சினையாகக் கொண்டும் “மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்” எனும் வாசகத்தை இலட்சியமாகவும் கொண்டது இந்த சைவ வித்தியா விருத்திச் சங்கமாகும்.

இவர்களின் நோக்கத்திற்கமைய மாதகல், கிழக்கிலே 1918ம் ஆண்டு கல்வீட்டுப் பொன்னு என்பவர் இல்லத்தில் சைவக் கல்வியை வளர்க்கும் முகமாக திண்ணைப் பள்ளி ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. பின் இக் கிராமத்தில் வாழ்ந்த சைவப் பிரமுகர்கள் ஒன்றுகூடி மாதகல் அரசடிப் பிள்ளையார் கோயிலின் மேற்கு வீதியில் (தற்போதுள்ள இடத்தில்) ஓர் கட்டிடத்தை 1924ல் அமைத்து விக்கினேஸ்வர வித்தியாலயம் எனப் பெயர் சூட்டினர்.[2] இப் பாடசாலை நிர்வாகத்தை, சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆரம்பிக்கப் பட்டமையால் அவர்களிடம் ஒப்படைத்தனர். இதுவே சங்கத்தின் முதற்பாடசாலை ஆகும்.[3]

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட சைவக் கல்வி மரபில் பல பாடசாலைகளை ஊர்கள் தோறும் நிறுவியும் ஊர்ப்பிரமுகர்கள் நிறுவிய பாடசாலைகளை நிர்வகித்தும் வந்தது. சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிர்வகித்த பாடசாலைகள் ஆண்டு தோறும் அதிகரித்து வரலாயின. அந்த வகையில் ஆரம்பத்திலிருந்த பாடசாலைகளின்

தொகையை நோக்கும் போது அங்கு கற்ற பிள்ளைகளின் தொகையும் அதிகரித்தது. அதனால் கற்பித்த ஆசிரியர் தொகையும் அதிகரித்தது. அவை பற்றிய விபரம் வருமாறு.

| ஆண்டு | உதவி நன்கொடை பெறும் பாடசாலை | உதவி நன்கொடை பெறாத பாடசாலை | மொத்தப் பாடசாலை | ஆசிரியர் தொகை | மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|
| 1925 | 8 | 14 | 22 | 90 | 2250 |
| 1926 | 19 | 13 | 32 | 120 | 4000 |
| 1928 | 41 | 14 | 55 | 256 | 6915 |
| 1929 | 51 | 08 | 59 | 256 | 7277 |
| 1930 | 55 | 04 | 59 | 257 | 7507 |

(மூலம் - குலரத்தினம் க.சி. வாரமுரசொலி)

*1930* முதல் *1940* வரை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வரலாற்றில் முக்கியமானதொரு காலமாகும். இக்காலத்திலேயே திரு. சு. இராசரத்தினம் அவர்கள் பெரும்பங்கு கொண்டு சைவப் பாடசாலைகளை மேலும் அதிகரிக்கச் செய்தார். சைவக் கல்வியை வளர்ப்பதற்கு அவர் பகீரதப் பிரயத்தனம் செய்தார் என்றுதான் கூறவேண்டும்.[4] இவ்வகையில், இக்கால கட்டத்தில் வளர்ச்சியடைந்த பாடசாலைகளையும் மாணவர் தொகையையும் கற்பித்த ஆசிரியர் தொகையையும் பின்வரும் அட்டவணையிலிருந்து நோக்கும் போது இவரது முயற்சி புலப்படுகிறது.

| ஆண்டு | உதவி நன்கொடை பெறும் பாடசாலை | உதவி நன்கொடை பெறாத பாடசாலை | மொத்தப் பாடசாலை | ஆசிரியர் தொகை | மாணவர் தொகை |
|---|---|---|---|---|---|
| 1931 | 59 | - | 59 | 282 | 7833 |
| 1932 | 59 | 2 | 61 | 320 | 8440 |
| 1933 | 59 | 3 | 62 | 348 | 9815 |
| 1934 | 67 | 4 | 71 | 405 | 10509 |
| 1935 | 74 | 8 | 82 | 460 | 12250 |
| 1936 | 76 | 11 | 87 | 481 | 12500 |
| 1937 | 81 | 9 | 90 | 456 | 13600 |
| 1938 | 89 | 4 | 93 | 475 | 14885 |
| 1939 | 92 | 7 | 99 | 500 | 16000 |
| 1940 | 96 | 12 | 108 | 500 | 16000 |

*(மூலம் - குலரத்தினம் க.சி. வாரமுரசொலி)*

*இவ்வாறு பாடசாலைகளும் மாணவர் எண்ணிக்கையும் ஆசிரியர் எண்ணிக்கையும் வளர்ச்சி பெற்றாலும் மேலே குறிப்பிட்ட புள்ளி விபர அட்டவணை இலங்கையின் பல பாகங்களிலும் வளர்ந்த சைவக் கல்விப் பாடசாலைகளின் எண்ணிக்கையாகும். ஆய்வில் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குரிய பாடசாலை களையும் கல்வி கற்ற மாணவர்களையும் நோக்கும் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் கற்ற பிள்ளைகளின்*

எண்ணிக்கையைப் பெறமுடியவில்லை. ஆசிரியர் விபரமும் பெறமுடியவில்லை.

என்றாலும், உதவி அரசாங்க அதிபர் பிரிவாக நிறுவி, இயங்கி வந்த பாடசாலைகள் விபரங்களைப் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

| ஆண்டு | 1928 | 1930 | 1932 | 1934 | 1936 | 1937 | 1938 | 1939 | 1940 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தீவகம் | 10 | 10 | 14 | 14 | 23 | 24 | 26 | 26 | 26 |
| தென்மராட்சி | 6 | 6 | 12 | 12 | 7 | 17 | 17 | 17 | 19 |
| வடமராட்சி | 3 | 3 | 6 | 6 | 4 | 5 | 6 | 6 | 7 |
| யாழ்ப்பாணம் | 4 | 4 | 5 | 5 | 12 | 12 | 15 | 15 | 17 |
| வலிகாமம் தெற்கு | 12 | 12 | 8 | 18 | 19 | 26 | 24 | 24 | 26 |
| வலிகாமம் வடக்கு | | | | | 6 | 6 | 7 | 7 | 9 |
| வலிகாமம் கிழக்கு | | | | | 3 | 3 | 4 | 4 | 4 |
| வலிகாமம் மேற்கு | | | | | 12 | 12 | 13 | 13 | 13 |
| மொத்தம் | 35 | 35 | 45 | 55 | 86 | 105 | 112 | 112 | 121 |

(மூலம் - குலரத்தினம் க.சி. ஈழநாடு)

இத் தகவலின்படி கிட்டத்தட்ட 1940ஆம் ஆண்டில் 121 பாடசாலைகள் சைவ வித்தியா விருத்திச் சங்க நிறுவனத்தின் கீழ் முகாமைத்துவம் செய்த பாடசாலை களாகும். இந்த வகையில் இக்காலம் யாழ் மாவட்டத்தில் நிர்வகித்த சில பாடசாலைகளை நோக்குவோம்.

1. யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம் - சைவ வித்தியா விருத்திச்சங்க சைவாசிரிய கலாசாலையின் சாதனா பாடசாலையாக அமைந்தது.

2. யா/பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் - 1905ஆம் ஆண்டு சைவச் சான்றோர்களால் தகனாரோடைப் பிள்ளையார் ஆலயத்தருகில் பொன்னம்பலம் கயிலாசபிள்ளை காணி அன்பளிப்புச் செய்ய, பாடசாலையை நிறுவி சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.[5]

3. இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் - 1922ல் திரு. அம்பலவாணரின் வளவில் ஒரு சைவப் பாடசாலை உதயமானது. பின்னர் திரு. ஏழூர் இராசரத்தினம் இப்பாடசாலையைத் தனது சொந்தக் காணிக்குக் கொண்டு வந்து நல்லதொரு மண்டபத்தையும் அமைத்துக் கொடுத்தார். கி.பி. 1929ல் சைவ வித்தியா விருத்திச் சங்கம் கையேற்றது.[6]

4. மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம் - 1922ல் வர்த்தகர் திரு. க. கந்தையா அவர்களின் துணையோடு பாலர் ஞானோதய சங்கம் ஆகியன சைவமும் தமிழும் தளைப்பதற்காக ஆரம்பிக்கப் பட்டன. இதுவே பின்னர் பாடசாலையானது. 1927.07.11ல் சைவ வித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து 36 வருடங்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிர்வகித்தது.[7]

5. மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை - சைவமும் தமிழும் சுடர்விட்டு ஒளிர வேண்டு மென்று சைவப் பெரியார்கள் ஒன்றுகூடி மாரீசன் கூடல் மத்தியில் வீடொன்றில் திண்ணைப் பள்ளி யாக ஆரம்பித்தனர். கி.பி. 1930ல் திரு. த. வீரசிங்கம் கலப்பிராகிரி எனும் காணியில் சைவர்கள் பாட சாலையை அமைத்தனர். ஆரம்பத்தில் இதன் முகாமையாளராக கந்தரோடை கந்தையா உபாத்தி யாயர் இருந்தாலும் அவருக்குப் பின் சைவ வித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்று நிர்வகித்தது.[8]

6. தையிட்டி சிவகுருநாதர் வித்தியாலயம் - 1935.10.7ல் திரு. வல்லிபுரம் கந்தவனம் என்பவரால் நிறுவப் பட்டது. சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிர்வாக முகாமைத்துவத்தை ஏற்றுக் கொண்டது.[9]

7. கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் - கரு கம்பனை வ. கந்தையா, க. கனகசபை ஆகியோரால் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்கு ½ கி.மீ. தெற்கே திரு. க. கனகசபையின் காணியில் அமைக்கப்பட்டது. 1955ம் ஆண்டு முதல் சைவ வித்தியா விருத்திச் சங்கம் முகாமைத்துவத்தை ஏற்று நடாத்தியது.[10]

8. மாதகல் நுணசை முருகமூர்த்தி வித்தியாலயம் - 1957 முதல் சைவவித்தியா விருத்திச் சங்கம் பொறுப்பேற்று நிர்வகித்தது.

9. 1928ல் சரவணமுத்து சிவசம்பு சங்கானையில் சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தை ஆரம்பித்து பின் சைவவித்தியா விருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்தார்.

10. 1930ல் முருகேசு கனகசபை தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்தை ஆரம்பித்து சைவ வித்தியா விருத்திச் சங்கம் நிர்வகித்தது.

11. பொன்னாலை வரதராசப் பெருமாள் வித்தியாலயம்.

12. வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவச் சிறார் அநாதை விடுதி

சைவ வித்தியா விருத்திச் சங்கமானது சைவக் கல்வி மரபை வளர்க்க வேண்டும் எனப் பாடசாலைகளை நிறுவி கல்விப் பணிபுரிந்து வந்ததோடு நிற்கவில்லை. சிறு பிள்ளைகள் வறுமை காரணமாகவும் தாய் தந்தையரை இழந்த காரணத்தினாலும் கல்வி கற்க வசதியின்றி கிறிஸ்தவர்களின் மத வலைக்குள் விழுகின்றார்களே, இதைத் தடுத்து நிறுத்த எண்ணி 1928ம் ஆண்டில் திரு. சு. இராசரத்தினம் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைப் பொறுப்பேற்ற அதே ஆண்டில், சைவச் சிறார் அநாதை விடுதி ஒன்றை நிறுவினார். இதனால் சைவச் சிறுவர்களது எழுத்தறிவின்மை மிக வேகமாக ஒழிக்கப்பட்டது. இச்செயற்பாடும் சைவக் கல்வியை வளர்ப்பதாயின.

சைவக் குடும்பத்தில் உள்ள பெண் பிள்ளைகள் வறுமையின் நிமித்தம் கிறிஸ்தவ அநாதை மகளிர் விடுதிகளில் சேர்க்கப்பட்டு கிறிஸ்தவர்களாக மாற்றப் படுவதைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் கி.பி. 1936ம் ஆண்டு வைத்தியர் அ. செல்லையாவின் சபாகிரி என்னும் வீட்டில் பெண்கள் விடுதி ஒன்றை ஆரம்பித்து வைத்தார். இவர்களுக்கு நூற்கல்வியோடு நெசவும் போதிக்கப்பட்டு தொழிற் கல்வியும் வழங்கப் பட்டது.[11] இவ்வாறு அநாதை விடுதிகள் அமைக்கப்பட்டதால் சைவக் கல்வி மரபானது மேலும் நன்கு வளர்க்கப் பட்டதென்றே கூறமுடிகின்றது.

## சைவாசிரியர் கலாசாலை

பாடசாலைகள் நிறுவி கல்வியைப் போதிக்கும் போது கல்வி கற்பிக்க ஆசிரியர்கள் தேவைப்பட்டனர். எனவே ஆசிரியரை உருவாக்கும் ஆசிரிய கலாசாலைகள் தேவைப் பட்டது. திரு. ச. அருணாசலம் என்பவரால் காரைநகரில் சுப்பிரமணிய வித்தியாசாலை அருகே சைவாசிரியர் கலாசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி மாதகல் பிரம்மஸ்ரீ ஏரம்பையர் என்பவர் கீரிமலை சிவன்கோவில் மேற்கு வீதியில் கிருஷ்ணபிள்ளை மடத்திற்கு வடபால் அமைந்ததோர் வீட்டில் ஓர் சைவாசிரியர் கலாசாலையை நிறுவி சிலகாலம் நடாத்தி வந்தார். 1915ம் ஆண்டு இக்கலாசாலை வண்ணார் பண்ணைக்கு இடம் பெயர்ந்தது. நாவலரின் சைவப்பிரகாச வித்தியா சாலையில் இயங்கத் தொடங்கி ஒரு வருடம் தொழிற்பட்டது. இதன் பின்னர் கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலை 1916ம் ஆண்டு ஆரம்பித்து நடந்தது. திரு. ச. அருணாசலம் முழுமூச்சுடன் செயற்பட்டார். திரு. வை. ஆறுமுகம்பிள்ளை உணவு கொடுத்து உதவியமை யால் அதிக சைவாசிரியர்கள் கற்பதற்கு வருகை தந்தனர்.

1918ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதன் முதல் சைவப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தோன்றினார்கள் என்றாலும் திரு. ச. அருணாசலம் என்பவர் 1923ல் இறக்க இக்கலா சாலை மூடப்பட்டு இருபாலைக்கு மாறியது.

இவ்வாறு சைவாசிரிய கலாசாலைகள் தள்ளாடித் தள்ளாடி இயங்கிய வேளையில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் மாதகல் கிழக்கு விக்கினேஸ்வர வித்தியாலயத்திற்கு அருகில் 1923ம் ஆண்டு திரு. விநாயகமூர்த்தி உடையார் அவர்களின் ஒத்துழைப்புடன் ஓர் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்தனர்.

என்றாலும், இக்கலாசாலை ஒரு வருடமே இயங்கியது என்று அறிய முடிகின்றது.[12]

இவ்வாறு சைவாசிரிய கலாசாலை இயங்காது இருந்த வேளையில் 1928ம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி அன்று திருநெல்வேலியில் சைவாசிரியர் கலாசாலையை திருவாளர். சு. இராசரத்தினம் ஆரம்பித்து வைத்தார். இக்கலாசாலையில் ஆண்கள் மட்டுமே பயிற்றப்பட்டனர். காலப்போக்கில் பெண்களும் கல்வி கற்கத் தொடங்கியமையால் பெண்களும் ஆசிரியராக வரமுடிந்தது. எனவே பெண்களுக்கும் ஓர் சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து 35 வருடங்களாக நன்கு இயங்கி வந்த திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையானது 1963ம் ஆண்டு தை மாதம் தைப் பொங்கலையடுத்து வரும் நாளில் மூடுமாறு கல்விப் பணிப்பாளர் கட்டளை யனுப்பினார். அங்கே பயிற்சி பெற்று வந்த பெண்களைக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அனுப்பு மாறும் ஆண்களை கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அனுப்புமாறும் கட்டளை அறிவித்தது. சைவாசிரியர் கலாசாலையை மூடாமற் செய்வதற்கு திரு. சு. இராசரத்தினம் பல்வேறு வழிகளிலும் தொழிற் பட்டார். இலங்கை அரசு தமது கருத்துக்களை மறுக்க மாற்றுத் திட்டத்தினை ஏற்பாடு செய்தாலும் அவருக்கு வயது அப்போது எண்பதாக இருந்த காரணத்தால் அவரது எண்ணம் நிறைவேறாது போகவே சைவாசிரிய கலாசாலை மூடப்பட்டது.

இதே போல சைவ வித்தியா விருத்திச் சங்கம் நடாத்தி வந்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்கத் தொடங்கியது. இதனால் 1960ம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி இச் சங்கத்தின் கீழ் இயங்கிய

182 பாடசாலைகளும் அரசினால் பொறுப்பேற்கப் பட்டது.[13]

## இந்துக் கல்லூரி அதிகார சபை

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவக்கல்வி கற்பிப்பதில் யாழ்ப்பாணத்தில் சமூக மேல் மட்டத்தினரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. கி.பி. 1902 ஆம் ஆண்டில் இந்துக் கல்லூரி அதிகார சபை நிறுவப்பட்டது. இச்சபையானது ஏற்கெனவே ஆரம்பத்தில் நிறுவப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அபிவிருத்தியையே குறிக்கோளாகக் கொண்டிருந்தது. இதன் செயற்றிறமை பலராலும் பாராட்டப்பட்டமையால் மதிப்புக்குள்ளாகி வளர்ந்தது என்றே கூறலாம். இதனால் கொக்குவில், உரும்பிராய், வட்டுக்கோட்டை, காரைநகர், சாவகச்சேரி, தொண்டமனாறு ஆகிய இடங்களிலும் இந்து ஆங்கிலப் பள்ளிக் கூடங்கள் அமைக்கப்பட்டு இதனுடன் இணைந்து இயங்கும் நிலைமை ஏற்பட்டது.[14]

இவ்வாறு இந்துக் கல்லூரிகள் இணைக்கப்பட்டமை யால் சைவக்கல்வியானது வளர்ச்சியடையப் பெரிதும் உதவியது. ஆசிரியர், அதிபர்களுக்கிடையே பரஸ்பரம் நிறுவியதோடு பொதுப் பரீட்சைகளையும் மேற்படி கல்லூரிகளுக்கிடையே நடாத்தினர். இதன் மூலம் கிறிஸ்தவப் பாடசாலைகளின் வளர்ச்சி தடைப்பட்டது பதிலாக சைவக்கல்வி நிலையங்களும் அதாவது, பள்ளிகளும் சைவக் கல்வியும் வளர்ச்சியடைந்தது. அனேக சைவப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இந்த இந்துக் கல்லூரிகளுக்கு கல்வி கற்க அனுப்பினார்கள். இதனால் யாழ்ப்பாணச் சைவக் கல்வியானது வளர்ச்சி கண்டது. இன்றும் இவ் இந்துக் கல்லூரிகள் தனிச் சிறப்பு வாய்ந்த பாடசாலைகளாக இயங்குகிறது.

## *சைவ பரிபாலன சபை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சைவமூச்சிலே யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆரம்பமானது.

இச் சபையானது நாவலரை அடியொற்றி சைவசமயக் கல்வியையும், கலாசாரத்தையும் பேணுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. ஏனெனில், இச்சபையின் மகுடவாசகமாக "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என இருப்பதும் நோக்கத்தக்கது. சபையின் பிரசாரப் பணியைச் செவ்வனே செய்வதற்காக "இந்து சாதனம்" என்று தமிழிலும் "Hindu Organ" என ஆங்கிலத்திலும் இரண்டு பத்திரிகைகள் 1889இல் ஆரம்பிக்கப்பட்டன. மகா நாடுகள், பிரசங்கங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றின் மூலமும் துண்டுப் பிரசுரங்கள், பாடசாலைகளுக்கான பாடநூல்கள் முதலியவற்றை வெளியிடுவதன் மூலமும் கல்விப் பணியை வளர்த்ததோடு போட்டிப் பரீட்சைகளை ஆண்டு தோறும் நடாத்தி தங்கப்பதக்கங்கள் முதல் பலவகையான பரிசில்களை ஆண்டு தோறும் வழங்கி வருகின்றது. இதனால் மாணவர்கள் சைவ சமயத்தை நன்கு விரும்பிக் கற்றுக் கொண்டனர். இப்பணியானது இன்று வரை சிறப்பாக நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். சைவ பரிபாலன சபையின் தலைவராகவும் தேர்வுச் செயலாளராகவும் கடமையாற்றிய சைவபூஷணம் சைவப் புலவர் வ. கந்தசாமி அவர்கள் தம்மை சபைக்கே அர்ப்பணித்ததும், அவ்வாறே அ.இ.சை.பு.சங்கத்துக்கும் பெரும்பணியாற்றியதும் போற்றுவதற்குரியதாகும்.

மேலும் சைவபரிபாலன சபையானது தன் பெயருக்கேற்ற வகையிலே நியமமற்ற கல்வியாக சைவப் பிரசங்கங்களைப் பயன்படுத்தி வந்தது. யாழ்ப்பாண

நகர்ப்புறத்தில் மட்டுமல்லாது யாழ்ப்பாணக்குடா நாட்டின் கிராமங்கள் தோறும் பிரசங்கம் மூலம் சைவக்கல்வியை வளர்த்தது. யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் நீராவியடியில் நாவலர் ஆச்சிரம மண்டபம் நிரந்தர பிரசங்க மண்டபமாயிற்று. நாவலர் விரும்பியபடி சைவப்பிரசாரகர்களை உருவாக்கிப் பயன்படுத்திய சாதனை சைவபரிபாலன சபைக்கேயுரியது. மாதகல் பிரம்மஸ்ரீ ஏரம்பையர், பிரம்மஸ்ரீ சங்கர் சுப்பையர், கோப்பாய் வேலுப்பிள்ளை உபாத்தியாயர், தாவடி சோமஸ்கந்த பண்டிதர், புலோலி திரு. வ. குமாரசுவாமிப் புலவர் முதலானோர் அவர்களுட் சிலராவார்.[17] காலத்தின் சுழற்சியில் நாவலரது முதன்மை முயற்சிகளும் சைவபரிபாலன சபையின் தொடர்ச்சிப் பணியும் வரலாற்றில் கலந்து விட்டன என்றே கூறமுடியும்.

மேலும் இச்சபையானது சைவ மரபுக் கல்விக்கேற்ற வகையில் சைவசித்தாந்த பண்டிதர்களை உருவாக்கி வரும் பணி மிக முக்கியமானதொன்றாகும். இக்கல்வியானது பாடசாலைக் கல்விக்குப் புறம்பாகப் பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள சைவத்தில் புலமை பெறும் படியாக சைவசமய வரலாற்று நூல்களை மட்டுமன்றி சைவ தத்துவமாகிய முடிந்த முடிபாகிய சைவசித்தாந்த தத்துவத்தை சைவர்களிடையே மிளிரச் செய்ய வேண்டும் என்ற வகையில் சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், சைவ சித்தாந்த பால பண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் என மூன்று தேர்வுகளை மையமாகக் கொண்டமைந்தது.[18]

இத்தேர்விலே சைவ இலக்கியங்கள், தமிழ் இலக்கணம், பன்னிரு திருமுறைகள், சைவசித்தாந்த சாஸ்திரம், சைவச் சான்றோருடைய உரைநடை இலக்கியங்கள் என ஐந்து பிரிவாகப் பல நூல்களை உள்ளடக்கியுள்ளது. நீராவியடி நாவலர் ஆச்சிரம

மண்டபம், வண்ணை நாவலர் மகாவித்தியாலயம் எனுமிடங்களை மையமாகக் கொண்டு தகுதிவாய்ந்த சைவச் சான்றோர்களால் நூல்கள் கற்பிக்கப்பட்டு சைவப் புலவர்கள், கல்வியானது வளர்த்து வரப்படுவது மிக முக்கியமானது இவர்கள் சைவாசிரியர்களாகப் பணியாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவற்றிற்கும் மேலாக சபையானது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார், அச்சுவேலி சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் போன்ற சைவ அறிஞர்களுடைய நூல்களையும் ஏனைய பல சைவ நூல்களையும் அச்சிட்டு காலந்தோறும் வெளியிட்டு வருவதும் மாணவர், ஆசிரியர்களின் கல்வியின் அக்கறையினைக் காட்டுகின்றது. பின்வரும் நூல்கள் வெளியிட்டுள்ளமையை இந்து சாதனம் பின்வருமாறு கூறுகிறது.[19]

| | |
|---|---|
| சைவக்கிரியை விளக்கம் | முதலாம் சைவ வினாவிடை |
| சைவ சமயசாரம் | நாவலர் நீதி வாக்கியங்கள் |
| சிவாலய தரிசனவிதி | ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மகோற்சவ விளக்கம் |

இவ்வாறு இவர்கள் பணி, காலஞ்சுழன்றும் இன்னும் சைவக் கல்விப் பாரம்பரியம் தலைதூக்கிய வண்ணமே நிலைபெற்றுள்ளது. சைவத்தின் உயிர் நாடியான பன்னிரு திருமுறைகளைப் பாராயணம் செய்ய சிறந்த பண்ணிசை வளர்க்கப்பட வேண்டியதால் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சனி, ஞாயிறு ஆகிய தினங்களிலே பண்ணிசை வகுப்புக்களை நடாத்தி வருகின்றது.

மேலும் பண்ணிசைப் போட்டியைக் கீழ்ப்பிரிவு, மத்தியப் பிரிவு, மேற்பிரிவு என 3 பிரிவாகப் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தி வருகின்றனர். ஆண்டு

தோறும் மாசி மாதத்திலே வரும் 19ம் நாள் புண்ணியநாச்சியார் குருபூசைத் தினத்திலே தங்கப் பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கம் என ஏராளமான பரிசில்களை வழங்கி பண்ணிசையை இன்றும் ஊக்குவித்து வருவதைக் காண முடிகின்றது.

நாவலரின் அபிலாசைகளில் ஒன்றான சைவசமயப் பிரசாரகர்கள் உருவாக்கத்தை சைவ பரிபாலனசபை ஓரளவேனும் ஆக்கி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். பாடசாலை மாணவப் பருவத்திலேயே நல்ல விதைகளை விதைக்க எண்ணி நாவலர் பெருமானது குருபூசைத் தினமாகிய கார்த்திகை மக நட்சத்திரத்தை மையமாக வைத்து பேச்சுப் போட்டிகள் நடாத்தி வருகிறது. பாடசாலை மாணவரிடையே கீழ்ப்பிரிவு, மத்தியப் பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவாகப் பேச்சுப் போட்டிகளை நடாத்தி பெறுமதி வாய்ந்த தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கம் என்பன பரிசாக வழங்கி வருகிறது.

## நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்

மேன்மை கொள் சைவநீதி விளங்க திருஞான சம்பந்தக் குழந்தை தங்கியிருந்த மடத்தில் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் நிறுவப்பட்டு சமயப் பணி, சமூகப் பணி, கல்விப் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆதீனத்தில் 291வது குரு மகா சந்நிதானமாக திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அருளாட்சி செய்த வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற மணிபாகவதருக்கு முறைப்படி தீட்சை வழங்கி, 1966ம் ஆண்டு ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாத தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் மூலமாக நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்

நல்லூரில் ஆரம்பிக்கப்பட்டது.[20] இந்த ஆதீனக் குருமணி அவர்கள் நாவலர் மரபை அடியொற்றி இசையோடு கூடிய கதாப்பிரசங்கத்தினை யாழ்ப்பாணக் குடாநாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் உள்ள கோயில்களிலும் இலங்கை முழுவதிலும் நிகழ்த்தினார்.

குறிப்பாக மகாபாரதம், இராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், சைவ வாழ்க்கை முறை, ஆலய வழிபாட்டுமுறை என்பவற்றைத் தலைப்பாகக் கொண்டு சாதாரண எழுத்தறிவில்லாத பாமரரும் விளங்கிக் கொள்ள கூடிய வகையில் கதாப்பிரசங்கத்தினைச் செய்து வந்தார். இதனால் பலர் இவரை விரும்பியழைத்துப் பிரசங்கம் வைப்பதும் விரும்பிக் கேட்பதுமாக இருந்தனர். கடல் கடந்து இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்று சிறப்புப் பெற்றார் என்றால் இவருடைய சிறப்பான சைவக்கல்வியூட்டிய முறையை மறந்துவிட முடியாது. மேலும் இக்குருமணி தனக்குப் பின் கதாப்பிரசங்கம் செய்வதற்காகப் பல சீடர்களை உருவாக்கினார். கந்தர்மடம் சி.வை. நித்தியானந்த சர்மா, மாவை சைவப்புலவர் செ. கந்த சத்திய தாசன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இத்தோடு ஆதீனத்தில் பண்ணிசைவகுப்பு, பாலர் பாடசலை, நடனவகுப்பு, அறநெறி வகுப்பு, கந்தபுராண படனம் என்பனவற்றோடு சைவசித்தாந்த வகுப்புக்களும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.[21] ஈழத்துச் சித்தாந்த சைவவித்தியா பீட ஆசிரியர்கள், பண்டிதமணி கலாநிதி மு. கந்தையா, சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை போன்றோர் சைவசித்தாந்த வகுப்புக்களை நடாத்தி வருகின்றார்கள்.[22] பண்டிதர். வ. பேரின்பநாயகம், பண்டிதர் இலக்கண வித்தகர் நமசிவாயம் ஆகியோர்

இலக்கண இலக்கிய வகுப்புக்களோடு பண்ணிசை வகுப்புக்களையும் நடாத்தி வருகின்றனர். இந்த வகையில் கல்வி பெற்றவர்களில் வட்டுக்கோட்டை ஓதுவார் சி. தில்லைமணி என்போரைக் குறிப்பிட்டுக் கூறலாம்.[23]

மேலும் மாலை கட்டுதல், கோலம் போடுதல், தோரணம் பின்னுதல் போன்ற பயிற்சி நெறிகளும் இங்கு நடாத்தப்பட்டு வருவதோடு செய்முறையாகப் பழக்கப்படுவதனையும் அறிய முடிகின்றது. இவ்வகுப்புக்களில் திருமதி நா. சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். இத்தோடு செய்முறைக் கல்வியாக யோகாசன வகுப்புக்கள் தினமும் காலை வேளையில் நடைபெற்று வருகிறது. விரிவுரையை விட செய்முறைக்கே முக்கியத்துவம் கொடுத்து இவ்வகுப்பு நடைபெறுகிறது. தினமும் முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் வந்து கற்றுச் செல்கின்றனர். மேலை நாட்டவர்கள் கூட இவ்வகுப்புக்களில் கலந்து பயன்பெற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.[24]

இவ்வாதீனத்தில் வருடந்தோறும் சித்திரை மாதத்தில் ஞானசம்பந்தர் விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. சித்திரையில் ஞானப்பால் உண்டமை, பொற்றாளம் பெற்றமை, முத்துப்பல்லக்கு, முத்துக்குடை, முத்துச்சின்னம் பெற்றமை என்பன நாடகப் பாணியில் விழாவாகச் செய்யப்படுவதால் உண்மைச் சைவப் பாரம்பரியம் என்ன என்பது மீள நினைவுக்கு கொண்டு வரப்படுகின்றது.[25]

நல்லை ஆதீனத்தினுடைய இருபது அம்சச் செயற்றிட்டத்தில் சைவக் கல்வி வளர்ச்சிக்கு திருமுறை பயிற்றுதல், சைவசமயப் பிரசாரம் செய்ய இளைஞர் யுவதிகளை கல்வி, இசை கற்பித்து உருவாக்குதல் என்பவற்றோடு திருநெறிய தெய்வீக மகாநாடு என்று

ஒன்றினை வருடந்தோறும் கூட்டி பல்வேறு சைவசமயத் திருநூல்களை ஆய்வு செய்து வருகின்றனர். மேலும் ஆண்டுதோறும் சித்திரை, ஆவணி, மார்கழி மாதத்தில் வரும் விடுமுறைக் காலங்களில் 10 நாட்களுக்கு சமயப்பயிற்சி வகுப்பு கல்வித்திணைக்கள ஆதரவுடன் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நடாத்தப்பட்டு ஆவணி மாதப் பீடாரோகண விழாவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது.[26]

இவ்வாறு சிறந்த வகையில் சைவப்பணியாற்றும் திருஞானசம்பந்தர் ஆதீனம் சைவக் கல்விக்கும் மிக முக்கியப் பங்கு வகித்து வருகின்றது. மகா மகோ உபாத்தியாயர் இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் "சைவப் பாரம்பரியத்தில் ஆதீனம்[27]" எனும் கட்டுரையில் "சைவப் பாரம்பரியத்தை சைவ சமூகத்தில் தளர்ச்சியுறாது நிலவ வைத்துக் கொள்ளும் தகுதியும் உத்தரவாதமுமுள்ள ஒரே ஸ்தாபனம் சைவாதீனம். இப்பண்பாட்டு நோக்கில் நமது நல்லையாதீனம் யாழ்ப்பாணத்துச் சைவ மலர்ச்சிக்கு கிரிதீபம் (குன்றிலிட்ட தீபம்) என வாய்த்திருக்கின்றது. இந்நிலத்துச் சைவ மக்கள் என்ற முறையில் நாம் அனைவரும் பெருமையுறுதற் கேதுவாயுள்ளது இந்த ஆதீனம்" என்று கூறியிருப்பதன் மூலம் சைவக்கல்விப் பாரம்பரியத்தை இவ்வாதீனம் எந்தளவிற்கு வளர்த்து வருகின்றது என்பதை அறிய முடிகின்றது.

இவ்வாதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் அவர்கள் 1977ம் ஆண்டு ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் இளவரசப்பட்டம் பெற்றார்கள். 1981ம் ஆண்டு பங்குனித் திருவாதிரையில் நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சமாதியடைந்தார். 12 நாட்களின் பின் அக்காலத்தில்

தம்பிரானாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானமாகப் பட்டமேற்றார்.[28]

இச்சுவாமிகளும் ஆதீன சம்பிரதாயங்களை நடாத்துவதோடு மகாகும்பாபிஷேகங்கள், மற்றும் சைவசமய விழாக்களில் கலந்து கொண்டு இரத்தினச் சுருக்கமாக சைவ சமய அடிப்படைப் பண்புகளை எடுத்துக்கூறி அருளாசி வழங்கி வருதலாலும் சைவக் கல்வி வளர்ச்சி பெறுகின்றது. மேலும் அருளமுதம் என்கின்ற ஓர் மலரை வெளியிட்டும் கல்விப் பணிக்கு உதவி வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சிவகுருநாத பீடம் (வேதாந்தமடம்)

கடையிற் சுவாமிகளுடன் இந்தியாவிலிருந்து வந்த சின்மயானந்தரின் சீடர் சார்ஜன் சுவாமிகள், இவரின் சீடர் கனகரத்தினம் சுவாமிகள். இவரின் சீடர் மகாதேவசுவாமிகள். இவர் கரம்பனில் இராமநாதருக்கும் அன்னபூரணிக்கும் 5.9.1874ல் திருவாதிரை நட்சத்திரத்தில் அவதரித்தார். இவர் குமாரசாமி வீதி கந்தர்மடத்தில் சிவகுருநாதபீடம் அமைத்து கனகரத்தினம் சுவாமிகளை குருவாக அமர்த்தி வேதாந்த சித்தாந்த வகுப்புக்களை நடாத்தி வந்தார். பல பாடசாலைகள் நிறுவுவதற்கு காரண கர்த்தாவாகவிருந்தார். இன்றும் இக்கல்வி மரபு தொடர்வதைக் காணலாம்.[29]

## பிற்காலத்தில் சைவக்கல்வியை வளர்த்த நிறுவனங்கள்

பிற்காலத்தில் பல நிறுவனங்கள் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகி சைவக்கல்வியை வளர்த்தன. அந்த

நிறுவனங்களின் விபரம் வருமாறு

1. கீரிமலை சிவநெறிக் கழகம்
2. சைவ மங்கையர் கழகம்
3. கொழும்பு விவேகானந்த சபை
4. அகில இலங்கை இந்துமா மன்றம்
5. அகில இலங்கைத் திருமுறை மன்றம், யாழ்ப்பாணம்
6. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை, யாழ்ப்பாணம்
7. சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் சைவசமய அபிவிருத்திக் கழகம்
8. சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை - தொண்டமனாறு
9. அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
10. இந்து இளைஞர் மன்றங்கள்
11. பாடசாலைகளில் உள்ள சைவ மாணவர் மன்றங்கள்
12. இராமநாதன் நுண்கலைக் கல்லூரி, மருதனார் மடம்
13. விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி, மட்டக்களப்பு
14. சிவானந்த குருகுலம், திருக்கேதீஸ்வரம்
15. தர்மசாஸ்தா குருகுலம் - இணுவில்

இச்சங்கங்களும் மன்றங்களும் மாணவர்கள் மத்தியில் சைவக்கல்வியை வளர்க்கும் முகமாகப் பல வகையான சமய அறிவுப் போட்டிகளைக் காலந்தோறும் நடாத்துதலும், பண்ணிசை வகுப்புக்களை நடாத்துதலும், போட்டிகள் வைத்தலும், சொற்பொழிவுகள் விரிவுரைகளை நடாத்தி சைவ அறிவை வளர்த்தலும், பல வகையான சைவ சமய நூல்களை வெளியிடுவதும், மாதந்தோறும், ஆண்டுதோறும் சஞ்சிகைகளை வெளியிடுவதும் தமது முக்கியப் பணிகளாகச் செயற்படுத்தி வருகின்றன.

இந்நிறுவனங்கள் பொதுவாகத் தங்கள் தங்கள் பிரதேசம் சார்ந்தும் அத்தோடு சற்று விஸ்தரித்துமே செயற்படுவதும் நோக்கத்தக்கதாகும். என்றாலும், சைவக் கல்வியை வளர்க்கும் நிறுவனங்களில் இவற்றின் பங்கினையும் ஒதுக்கி வைக்க முடியாது.

## அடிக்குறிப்புகள்

1. **நாவலர் நூற்றாண்டு மலர்**, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை வெளியீடு, 1979 மார்கழி, ப. 121
2. **காங்கேயன் கல்வி மலர்**, காங்கேசன் துறை கல்வி வட்டார அதிபர்கள் சங்கம், 1985, ப. 95
3. குலரத்தினம் க.சி., "இந்துபோட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்" தொடர்கட்டுரை, **வாரமுரசொலி** வெளியீடு, 30.10.1988 ப.8
4. குலரத்தினம் க.சி. **ஈழநாடு** 4.7.1982 ப.5
5. மு.சு. காங்கேயன் கல்விமலர், ப. 102
6. பஞ்சாட்சரம் அ. ஆசிரியமணி "இலங்கையின் சைவப்பாடசாலைகளின் பணி", இளவாலை மெய்கண்டான் ம.வி. ஸ்தாபகர் **திரு. ச. ஏழூர் இராசரத்தினம் நினைவுப் பேருரை**, 1997 ப - 10, 11
7. மு.சு. காங்கேயன் கல்விமலர் ப - 102
8. மேற்படி ப. 108
9. மேற்படி ப. 110
10. மேற்படி ப. 115
11. **ஆண்டுப் பொதுக்கூட்டறிக்கை**, சைவ வித்தியா விருத்திச் சங்க வெளியீடு, 1939 ப. 20
12. மு.சு. காங்கேயன் கல்விமலர் ப. 95

13. மு.சு. முரசொலிப் பத்திரிகை 16.07.1989 ப. 8
14. ஆறுமுகம் வ. கலைஞானம் யாழ்பல்கலைக்கழக கல்விக்கழக வெளியீடு 1983 ப.5
15. மேற்படி ப. 4
16. மேற்படி ப. 5
17. மேற்படி ப. 6
18. **சித்தாந்த தேர்வுகள்,** சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம் 1996 - 2000
19. **இந்து சாதனம்,** சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்
20. **நாயன்மார்களும் சைவ நெறி வளர்த்த ஆதீனங்களும்,** ஆசிரியர் கல்விப் பாடநெறி, தொலைக்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவகம் ப.21
21. **சைவநீதி,** சைவநீதி நிறுவனம், கொழும்பு ப.3
22. மேற்படி ப. 13
23. மேற்படி ப. 7
24. செவ்வி, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிகபரமாசாரிய சுவாமிகள், நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம், நல்லூர் யாழ்ப்பாணம்
25. மு.சு. சைவநீதி ப. 5
26. மு.சு. சைவநீதி ப. 13
27. மு.சு. சைவநீதி ப. 5
28. மு.சு. சைவநீதி ப. 3
29. ஆத்மஜோதி நா. முத்தையா, **ஈழத்துச்சித்தர்கள்,** ஆத்மஜோதி நிலையம் நாவலப்பிட்டி. ப. 49

## 2.3.2. இருபதாம் நூற்றாண்டில் தனிப்பட்ட சைவப்பிரமுகர்களின் சைவக்கல்விப்பணி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் தொடர்பணியாக 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் பல சைவப் பெரியார்கள் தாம் தாம் வாழ்ந்த பிரதேசங்களில் சிறு சிறு பாடசாலைகளை நிறுவி சைவக் கல்வியை வளர்த்தனர். இப்பணியானது இருபதாம் நூற்றாண்டிலும் குறிப்பாக, முன் அரை நூற்றாண்டில் நன்கு பிரகாசிக்கத் தொடங்கியது.

சைவப் பிள்ளைகள் திருநீற்றுக்குறியோடு சென்று தேவாரப் பாராயணத்துடன் சிவனை வணங்கிக் கல்வி பெற வேண்டும் என்றும் கிறிஸ்தவர்கள் கல்வியைக் காட்டித் தம் மத வலைக்குள் விழுத்தும் தீச்செயலைத் தடுக்க வேண்டும் என்ற நிலையிலும் தாம் தாம் வசித்த பகுதியில் செல்வந்தரின் துணைகொண்டு சைவப்பாட சாலைகளை தங்கள் தங்கள் ஊர்கள் தோறும் அமைத்து சைவக்கல்வியை வழங்கினர். சைவாசிரியர்களை அப்பாடசாலைகளில் நியமித்து சைவச் சூழலில் சைவக் கல்வியைப் பெறுவதற்கு துணை நின்றனர். இது சைவக் கல்வியை வளர்ப்பதற்குப் பெரிதும் உதவியாயிருந்தது. அந்த வகையில் சில பாடசாலைகளையும் அவை நிறுவப் பட்ட இடங்களையும் காலங்களையும் நிறுவியவர்கள் யாவர் என்பதையும் முகாமைத்துவம் செய்தவர்கள் யாவர் என்பதையும் சுருக்கமாக நோக்குவோம்.

இங்கு பாடசாலையை நிறுவிய நோக்கம் பொதுவாக எல்லோரிடமும் ஒன்றாகவே காணப்பட்டுள்ளது. அதாவது சைவப்பிள்ளைகள் சைவச் சூழலில் கல்வி பெற வேண்டும்

என்பதுவும் கல்விக்காக கிறிஸ்தவ மதம் புகுவதைத் தடுக்க வேண்டும் என்பதுமாகும்.

மேற்படி பணியில் பெரும்பங்காற்றியவர்களில், சேர். பொன். இராமநாதன் அவர்கள் மணிமுடியாகத் திகழ்கின்றார். தனியாளாக நின்று 1913ம் ஆண்டு ஜனவரித் திங்களிலே இருபதாம் நாள் சுன்னாகம் மருதனார் மடத்தில் இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியை நிறுவினார். இது பெண்களுக்கு உரிய ஒரு பாடசாலையாக மட்டும் அமைந்தது. இக்கல்லூரி உடுவிலில் அமைந்த மிஷனறிமாரின் பெண்கள் (தற்போதைய உடுவில் மகளிர் கல்லூரி) கல்லூரிக்குப் பெரும் சவாலாக இருந்தது.

சைவப் பெண் பிள்ளைகள் சைவக் கலாசாரத்தில் பாடசாலைக்குச் சென்றனர். சிறு பெண்கள் கால் முட்ட அணியும் நீளப்பாவாடையும் சட்டையும், கன்னிப் பெண்கள் அரைத் தாவணியும், உயர் வகுப்பில் கல்வி கற்கும் பெண்கள் சேலையணிந்தும் திருநீற்றுக் குறியோடு பாடசலைக்கு வந்து சிவகாமசுந்தரி உடன் உறையும் தில்லை நடராஜப் பெருமானையும் சமய குரவர்கள் நால்வரையும் வணங்கி தோத்திரம் பாடி வழிபட்ட பின்னரே கல்வி கற்கும் பணி ஆரம்பமானது. இங்கு சிறப்பான ஆங்கிலக் கல்வி வழங்கியமையும் சைவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தம்முடைய பெண் பிள்ளைகளை இராமநாதன் கல்லூரிக்கு அனுப்பி கல்வி பெறச் செய்தனர். தூர இடத்திலிருந்து வரும் பெண் பிள்ளைகள் தங்கியிருந்து கல்வி பெறுவதற்கு சேர். பொன். இராமநாதன் அவர்கள் விடுதி வசதியையும் ஏற்படுத்தினார்.

இத்தோடு நின்றுவிடாது திருநெல்வேலியில் 1921ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் 22ம் நாள் பரமேஸ்வராக் கல்லூரியை (தற்போதைய யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

ஆண்களுக்காக நிறுவினார். அங்கும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானுக்கு கோயில் ஒன்றையும் நிறுவி சைவச் சூழலில் சைவக்கல்வியைப் பெற வாய்ப்பளித்தார். இவை அக்காலத் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இருந்தது. இந்தியாவிலிருந்தும் ஆசிரியர்களை அழைத்து இக்கல்லூரிகளில் கல்வி போதிக்கச் செய்தார். கிறிஸ்தவக் கல்லூரிகளிலும் மிகையாக இக் கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வி சிறப்பாக வழங்கப்பட்டு வந்தது.

இவ்விரு கல்லூரிகளும் சைவப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிய அதே வேளையில் ஆங்கிலக் கல்வியும், மேற்கத்தைய அறிவியற் கருத்துக்களையும் பெறும் வாய்ப்புக்களையும் மாணவர்களுக்கு நல்கின. பழமை மரபுகள் பேணப்பட்டாலும் புதிய கருத்துக்கள், இலட்சியங்கள் என்பவற்றை இளைஞர் கூட்டம் ஏற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை சேர் பொன். இராமநாதன் உணர்ந்தார். ஆனால் அத்தகைய கருத்துக்கள் எமது சிறப்புப் பொலிந்த பாரம்பரிய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் மாசுபடுத்தாமற் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கையையும் விடுத்தார்.[1]

இவரது வரிசையிலே தெல்லிப்பழை தெ. ஆ. துரையப்பா பிள்ளையும் (பாவலர் துரையப்பா பிள்ளை) மகாஜன ஆங்கில உயர்தரப் பாடசாலையை (இன்றைய மகாஜனக் கல்லூரி) 1910ம் ஆண்டில் ஸ்தாபித்தார். இக் கல்லூரி வலிகாமம் வடக்குப் பிரதேச மக்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் பங்களிப்புச் செய்தது.[2]

1869ல் திரு. ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியாயரின் பெருமுயற்சியில் கொல்லங்கலட்டி விநாயகர் ஆலய முன்றலில் விநாயகரது அருட்பார்வை பட சைவ வித்தியாசாலை ஒன்று 40 மாணவர்களுடன்

ஆரம்பிக்கப்பட்டது. 1872ல் இருமொழிப் பாடசாலையாக விளங்கியது. 1930 முதல் கொல்லங்கலட்டி சைவ வித்தியா சாலையை திரு. ஆ. வே. சிற்றம்பலம் முகாமையாளராக நிர்வகித்தார்.[3]

1891ல் சுப்பிரமணியவரோதய வித்தியாசாலையை வீமன்காமம் குருநாத உடையார் மகன் சின்னத்தம்பி உடையார் ஆரம்பித்தார். 1930ல் மகன் சி. சுப்பிரமணியம் மாவைக்கந்தன் ஆலய வாசலுக்கு அண்மையில் மாற்றி வீமன் காமம் தமிழ்க்கலவன் பாடசாலையாக்கினார். 1936ல் இருமொழிப் பாடசாலையானது 1954 - 1962 வரை சுப்பிரமணியத்தின் 2வது மகன் கலாநிதி சு. வித்தியானந்தன் (முன்னாள் யாழ்பல்கலைக்கழக துணை வேந்தர்) முகாமையாளராக இருந்தார்.[4]

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயமானது 1893ல் சுன்னாகம் செவ்வந்தி நாதர் சின்னப்பா என்பவரால் திண்ணைப் பள்ளியாக இயங்கி வந்தது. இங்கு வித்துவான் சி. கணேசையர் ஆசானாக இருந்து சைவத்தையும், தமிழையும் கற்பித்து வந்தார். 1915ல் வன்னித்தம்பி செல்லப்பா என்பவர் காங்கேசன்துறை வீதியில் மல்லாகத்திற்கு இடமாற்றி மனைவி விசாலாட்சியின் பேரில் பாடசாலையை நிறுவி முகாமையாளராகவும் இருந்தார்.[5]

அளவெட்டி அருணோதயக் கல்லூரியை அளவெட்டி சைப்பெரியார் கொடைவள்ளல் திரு. நாகமுத்து அருணாசல உடையார் 1894ல் ஆரம்பித்தார். தமிழ் - ஆங்கிலப் பாடசாலையாக விளங்கியது. 1919ல் அருணாசல உடையாரின் மகன் நா. சுப்பையா நிர்வாகத்தைக் கையேற்றார்.[6]

குரும்பசிட்டி பொன் பரமானந்த மகா வித்தியாலயம் 1900ல் குரும்பசிட்டி பொன் பரமானந்தர் என்பவரால் சைவப் பாடசாலையாக நிறுவப்பட்டது.[7]

தெல்லிப்பழை கிழக்கு சைவப்பிரகாச வித்தியா சாலையை சைவசித்தாந்தம், வடமொழியில் பேரறிஞராக விளங்கிய ச. கதிர்காமையரின் புதல்வர் க. சுந்தரமூர்த்தி ஐயர் 1900ல் தன் வீட்டருகே மண்டபம் அமைத்து ஆரம்பித்தார். தந்தையார் முகாமையாளராக இருந்தார். அதன் பின்னரும் ஐயர்மாரே முகாமையாளராக இருந்தமையால் "ஐயர் பாடசாலை" என்றழைத்தனர்.[8]

இதே காலத்திலேயே புன்னாலைக்கட்டுவனிலும் ஒரு பாடசாலையை ச. கதிர்காமையர் நிறுவி இரு பாடசாலைகளையும் முகாமைத்துவம் செய்து வந்தார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி, 1901ல் கல்லூரி வீதியில் நரசிங்க வைரவர் ஆலயத்தினருகே தையிட்டி ஆறுமுக உடையார் ஆங்கில சுதேச மொழிப் பாடசாலையை உருவாக்கினார். இதே காலத்தில் வீமன் காமம் திரு. க. தம்பிப்பிள்ளை தற்போது கனிஷ்ட வித்தியாலயம் உள்ள இடத்தில் சைவத்தமிழ் வித்தியாலயம் ஒன்றை ஆரம்பித்து முகாமையாளராகவும் இருந்து வந்தார்.[9]

தையிட்டி கணேஷ வித்தியாலயம், 1900ல் பிரம்மஸ்ரீ யோகவனஐயர் அவர்கள் ஆரம்பித்து மகாவித்துவான் கணேஷையரை கற்பிக்கவும் கொடுத்தார். யோகவன ஐயரே நிர்வாகத்தையும் நடாத்தினார்.[10]

அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயம், வைத்தியர் தாமோதரம்பிள்ளை யவர்களின் காணியில் சரவண முத்து செல்லையா, அப்பாச்சாமி

கணபதிப்பிள்ளை இணைந்து ஓர் வாசிகசாலை யமைத்தனர். இதில் பாடசாலை ஆரம்பமானது. பின், 1907ல் பாடசாலை வளர்ச்சியடைய சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் B.A ஆசிரியராகவும் முகாமையாள ராகவும் இருந்தார். இங்கு பண்டிதர், பால பண்டிதர், பிரவேச பண்டிதர் வகுப்புக்களும் நடைபெற்றதோடு உபாத்தியாயர் வகுப்பும் நடாத்தப்பட்டது.[11]

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம், 1910ல் அருணாசல உடையார் சைவமும் தமிழும் வளரவேண்டி நாகபூஷணி வித்தியாலயம் ஒன்றை நிலம் வழங்கி, கட்டிடம் அமைத்துத்தந்த குமார வேலுப்பிள்ளையின் புதல்வி கு. நாகபூஷணி நினைவாக அமைக்கப்பட்டது.[12]

குரும்பசிட்டியில் சைவப் பள்ளிக்கூடமாக மகாதேவி பாடசாலைக் கட்டடம் ஒன்று இருந்ததாக இரசிகமணி கனகசெந்தில்நாதன் குறிப்பிடுகின்றார்.[13]

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமானது 1922ல் அம்பலவரின் வளவில் ஒரு சைவப் பாடசாலை உதயமானது. ஏழூர் இராசரத்தினம் அவர்கள் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் உதவியோடு உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதியப்பட்டது.[14]

அளவெட்டி சதாநந்த வித்தியாலயம், 1930ல் திரு. செல்லையா நாகலிங்கம் அவர்கள் ஊர்ப்பெரியார்கள் ஒத்துழைப்போடு கட்டி முடித்தார்.[15]

இளவாலை மாரீசன்கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலை, 1930ல் திரு. த. வீரசிங்கம் அவர்களின் கலப்பிராகிரி எனும் காணியில் சைவர்கள் ஒன்றுகூடி அமைத்தனர். ஆரம்பத்தில் நிர்வாகத்தை கந்தரோடைக் கந்தையா உபாத்தியாயர் மேற்கொண்டார்கள்.[16]

தையிட்டி சிவகுருநாதன் வித்தியாலயம், 7.10.1935ல் திரு. வல்லிபுரம் கந்தவனம் என்பவரால் ஆரம்பிக்கப் பட்டது.[17] கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் 1935ம் ஆண்டு திரு. கனகசபையின் காணியில் கருகம்பனை வ. கந்தையா என்பவரால் கீரிமலை சிவன் கோயிலுக்குத் தெற்கே ஆரம்பிக்கப்பட்டது.[18]

சிறுவிளான் கனகசபை வித்தியாலயம், 20.05.1957ல் சிறாப்பர் திரு. சுப்பிரமணியம் கனகசபை என்பவரால் சிறுவிளானுக்கும் முள்ளானைக்கும் மத்தியில் நிறுவப் பட்டது. முகாமையாளராக பாராளுமன்ற உறுப்பினரும் தபால்தந்தி அமைச்சருமான சு. நடேசபிள்ளை அவர்கள் இருந்தார்கள்.[19]

கட்டுவன்புலம் மகாவித்தியாலயம், 1959ல் பொன் கந்தையாவின் உதவியோடு ஊர்மக்களால் ஆரம்பிக்கப் பட்டது.[20]

கோப்பாய் ஐக்கிய போதனா பாடசாலை, 1918ல் திரு. க. சின்னத்தம்பி உபாத்தியாயரால் ஆரம்பிக்கப் பட்டது.[21]

கொக்குவில் மேற்கில் சைவப்புலவர் மணி த. குமார சாமிப்புலவர் ஞானோதய வித்தியாசாலையை அமைத்தார்.[22]

நவாலி மகாவித்தியாலயம், 1910ல் பண்டிதர் தம்பையா என்பவரால் பார்வதி வித்தியாலயம் எனும் பெயரில் ஆரம்பிக்கப்பட்டது சோமசுந்தரப் புலவர் கற்பித்தார்.

புத்தூரில் கொடைவள்ளல் மழவராயர் கந்தையா என்பவர் புத்தூர் சிவன் கோயில் முன்னிலையில் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியை அமைத்தார்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, 1929ல் திரு. செகராஜசிங்கம் என்பவரால் ஆங்கிலப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது.

மேலே நோக்கியவாறு பல தனிப்பட்ட சைவ அபிமானிகள் பெரும் பணத்தைச் செலவு செய்து ஊர்கள் தோறும் பாடசாலைகளை நிறுவி சைவக் கல்வியை இலவசமாக வளர்த்தார்கள். இப்பாடசாலைகளிலே வேதனம் வாங்காது, சைவக் கல்வியை வளர்க்க வேண்டும் என கல்வி கற்பித்தவர்கள் பலர். இவர்களைப் பற்றிய தகவல்கள் நன்கு ஆராயப்பட வேண்டியவை. மேலும் வேதனம் பெற்று நம் சைவக் கல்விப் பாரம்பரியம் வளர்ச்சியடைய வேண்டும் எனக் கற்பித்தவர்கள் பலர். இவர்களையெல்லாம் சைவ உலகம் ஆய்வுசெய்து வெளிக் கொணர வேண்டும். இந்த வகையில் ஆசிரியர்களை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர்களை நாம் குறிப்பிடாமல் விட முடியாது.

சைவாசிரியர் கலாசாலை நிறுவி சைவ ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்று இருபதாம் நூற்றாண்டில் பலர் முனைந்து கொண்டார்கள். அந்த வகையில் காரைநகர் அருணாசலம் என்பவர் பல பாடசாலைகளை யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிறுவ முன்னின்று உழைத்தார் என்பதை முன்னர் கண்டோம். இப்பெரியார் முதன் முதலில் காரைநகரில் சுப்பிரமணிய வித்தியாசாலையருகே ஓர் சைவாசிரியர் கலாசாலையை உருவாக்கினார்.

சைவாசிரிய கலாசாலை ஒன்று நிறுவித்தரும்படி அக்கால அரசை வற்புறுத்தியும் அது பலனளிக்காத காரணத்தினால் திரு. அருணாசலம் அவர்கள் கீரிமலைச் சிவன் கோயில் மேற்கு வீதியில் கிருஸ்ணபிள்ளை மடத்திற்கு வடபால் அமைந்ததோர் வீட்டில் சைவாசிரியர்

பயிற்சிக் கலாசாலையை நிறுவினார். மாதகல் பிரம்மஸ்ரீ ஏம்பையர் கல்விப் போதனைகளை நடாத்தினார்.

எனினும் சைவப் பிள்ளைகளிற்கு கற்பிப்பதற்கு சைவாசாரம் உள்ள ஆசிரியர்கள் போதாமையினால் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஸ்தாபிக்கப் பட்டு 1926-ஆம் ஆண்டு வரை ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப் பட்டனர். தொடர்ந்து வழங்கிய பயிற்சி போதாமையினால் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் திருநெல்வேலியில் ஓர் சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலையை 1928ம் ஆண்டு விஜயதசமி அன்று ஆரம்பித்தனர்.[24] இச்சைவாசிரியர் கலாசாலை ஆரம்பிப்பதற்கு சட்டத்தரணி ரி. இராசேந்திரா அவர்களும் ச. இராசரத்தினம் அவர்களும் முன்னின்று உழைத்தனர்.

1935ம் ஆண்டு திருநெல்வேலிச் சைவாசிரியர் கலாசாலை மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர்களுக்கான வகுப்பினையும் பால பண்டிதர்களுக்கான வகுப்பினையும் நடாத்தியது. இவ் வகுப்புக்கள் அனைத்தும் இலவசமாகவே நடாத்தப்பட்டதோடு இலவச உணவு வசதியும் செய்து சைவக்கல்வியை வளர்க்க அரும்பணியாற்றினர்.

இதனால் சைவாசிரிய கலாசாலைச் சூழல் பண்டித, பாலபண்டித வகுப்புக்களில் படிக்க வந்தவர்களின் பெருக்கத்தாலே புகழ் பெறுவதாயிற்று. கலாசாலையில் பிராமணர்களின் சமஸ்கிருத மொழிக்கல்வியையும் பயிற்றுவித்தமை சைவசமயக் கல்வி வளர்ச்சியடையக் காரணமாயின. இக்கலாசாலையானது தொடர்ந்தும் 1962ம் ஆண்டளவில் அரசாங்கம் பொறுப்பேற்கும் வரை சிறப்பாக இயங்கியமையைக் காணலாம்.

இக்கலாசாலையில் திரு. பொ. கைலாசபதி, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆகியோரினது

கற்பித்தல்கள் மிகச் சிறப்பாக அமைந்தது. இக்கலாசாலை அமைந்த பாதையே கலாசாலை வீதி எனப் பெயர் பெற்றுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தின் சைவக்கல்விப் பாரம்பரியத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி. சிவசங்கர பண்டிதர், சி.வை. தாமோதரம்பிள்ளை, ந.ச. பொன்னம்பலபிள்ளை, காசிவாசி செந்திநாதையர், சதாவதானி கதிரைவேற்பிள்ளை, ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, ச. சபாரத்தின முதலியார், த. கைலாசபிள்ளை போன்ற பெரியார்கள் தனியே நின்று வளர்த்தது போல இருபதாம் நூற்றாண்டிலும் பல தனிப்பட்ட சைவப் பெரியார்கள் கல்வி போதித்தும், சைவ சமய நூல்களை எழுதி வெளியிட்டும் சைவசமயப் பிரசங்கங்கள் நடாத்தியும் சைவக் கல்விப் பாரம்பரியத்தை வளர்த்தெடுத்தனர். இவர்கள் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.

இருபதாம் நூற்றாண்டின் சைவக் கல்விப் பாரம்பரியத்தில் தனித்து நின்று உழைத்த பெரியார்கள் பலர். இவர்களில் பாடசாலை நிறுவி கல்வி போதித்தவர்களை மேலே பார்த்தோம். இனி முன்னர் கூறியது போல தம் தம் பிரதேசம் சார்ந்தளவிலும் பரந்துபட்ட வகையிலும் பலர் தொழிற்பட்டாலும் இவ்விடயம் மிக ஆழமானது, ஆராய வேண்டியது. எனவே மிகச் சுருக்கமான முறையில் சில பிரபலமானவர்களின் சைவப் பணிகளை இங்கு ஆராய்வோம்.

இந்த வகையில் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், அச்சுவேலி சு. குமாரசுவாமிக்குருக்கள், பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை, காசிவாசி செந்திநாதையர், சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள், நம. சிவப்பிரகாசம், க. குலரத்தினம், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா

அப்பாக்குட்டி, கந்தர்மடம் நித்தியானந்த சர்மா, ச. அம்பிகைபாகன், இலக்கண வித்தகர் இ. நமசிவாயம், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், செஞ்சொற் கொண்டல் ஆறு திருமுருகன் வரை பலரைக் கூறலாம். இவர்களின் முக்கியமான சிலரது பணியை மிகச் சுருக்கமாக நோக்குவோம்.

## சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (1878 - 1953)

புலோலி வாழ் வ. சுப்பிரமணிய பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் 1878ல் அவதரித்தார். இளமையில் தந்தையாரிடமும் வ. குமாரசாமிப்புலவர், வ. கணபதிப் பிள்ளை பார்வதி அம்மையாரிடமும் தமிழ்க் கல்வியைக் கற்றார். தென்னிந்தியாவிலே உயர்தர ஆங்கிலக் கல்வியைக் கற்று சென்னை சர்வகலாசாலையில் B.A., பட்டம் பெற்றார்.

யாழ்ப்பாணம் மீண்டு உபாத்திமைத் தொழிலை 33 ஆண்டுகள் நடாத்தினார். 1924 - 1933 வரை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றினார். பின் சில ஆண்டு திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியராக வேதனம் பெறாது கடையாற்றினார். 1939ல் இலங்கைக் கல்வி முறையை திருத்துவதற்காக இலங்கை அரசின் விசேஷ நிர்வாக சபையில் நியமிக்கப்பட்டார். C.W.W. கன்னங்கராவின் கல்வி அறிக்கையைத் தயாரித்தார். பின் கந்தவனக்கடவை யிலிருந்து பல மாணவருக்கு சைவ சித்தாந்தம் போதித்து வந்தார்.[25]

திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையிலிருந்து தொழிற்பட்டு அங்கு திருஞானசம்பந்தர் மடம்

கட்டுவித்தார். சிவகாமியம்பாள் சமேத சிதம்பரேஸ்வரப் பெருமான் விக்கிரகத்தை வடிவமைத்துக் கொடுத்தார். கிறிஸ்தவர்கள் சைவத்தை தூஷிப்பதைத் தடுத்து கிறிஸ்துமத கண்டனத்தை தம் பெரும் பங்காகக் கொண்டு திருவாசகப் பாடல்களைக் கொண்டு சைவ சமய உண்மைகளை நிரூபித்தார். இதற்காக சைவபோதம் 1ம் 2ம் நூல்களை எழுதி வெளியிட்டார்.

மேலும் பல சைவசமய நூல்களை (24) இலகுநடையில் எழுதி வெளியிட்டதோடு சைவசமய உண்மைகளை ஆங்கிலத்திலும் எழுதி சைவக் கல்வியை வளர்த்தார். இந்நூல்கள் அனைத்தையும் பதிக்கும் உரிமையை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, கொழும்பு விவேகானந்த சபை ஆகியவற்றுக்குக் கொடுத்தார்.[26]

## சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்கள் எழுதிய நூல்கள்[27]

1. சைவபோதம் 1ஆம் புத்தகம்
2. சைவபோதம் 2ஆம் புத்தகம்
3. திருவருட்பயன்
4. அகநூல்
5. அளவை நூல்
6. படிப்பித்தலின் முறைகளும் விதிகளும்
7. திருக்குறள் மணிகள்
8. திருவாசக மணிகள்
9. சைவசமயம்
10. சைவசமயத்தின் பெருமை
11. சைவக்கிரியை விளக்கம்
12. திருப்பெரு வடிவம்
13. கந்தபுராண விளக்கம்

14. The Saiva School of Hinduism
15. Glories of Shaivaism
16. An Outline of Sivagnanabotham
17. Essentials of Logic
18. Arumugha Navalar
19. தருக்க நூல்
20. தருக்க நூற்சாரம்

## சிறுபிரசுரங்கள்

1. சிவபெருமான் விரதம்
2. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
3. திருநாவுக்கரசு நாயனார்
4. சுந்தரமூர்த்தி நாயனார்
5. மாணிக்க வாசக சுவாமிகள்
6. சந்தானாசாரியார்

## பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை (1899 - 1986)

மட்டுவிலில் சின்னத்தம்பிக்கும் தனங்கிளப்பு வள்ளி யம்மையாருக்கும் 27.06.1899ல் பிறந்தார். மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாசாலையில் கல்வி பெற்று, பின் சாவகச்சேரி பொன்னையா உபாத்தியாயர், பொன்னம் பலப் புலவர், பொன்னையாபிள்ளை ஆகியோரிடம் பாடம் கற்றார்.

1917ல் நாவலரின் காவிய பாடசாலையில் சேர்ந்து சுன்னாகம் அ. குமாரசாமிப்புலவரிடம் கல்வி கற்றார். இங்கு பாடசாலை மனேஜராக இருந்த திரு. த. கைலாச பிள்ளை அவர்கள் தொடர்பு கல்வியில் மேலும்

வளர்ச்சியைக் கொடுத்தது. 1926ல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதரானார். இதனால் த. கைலாசபிள்ளையவர்கள் தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவித்தார்.[28]

1927ல் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்று 1929ல் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் விரிவுரையாளரானார். பண்டிதமணியவர்கள் முனைப்பாக நின்ற கூறுகளை மூன்று வகைப்படுத்தலாம். ஒன்று சமயமும் தத்துவமும், அடுத்தது சமூகமும் பண்பாடும், மூன்றாவது இலக்கிய இரசனை. இவற்றுள் சிறந்த முனைப்பு சமயமும் தத்துவமும். சித்தாந்தத்தின் பொருள் நுட்பங்களை மெய்கண்ட சாஸ்திரங்களிலே துருவித்துருவி ஆராய்ந்து அரிய கருத்துக்களை வெளிக் கொணர்ந்தார்.[29]

பண்டிதமணியின் சமயக்கட்டுரைகள் சமய தத்துவ சிந்தனைகளின் பிழிசாறு எனக்கூறும் வகையில் சிறப்பு வாய்ந்த அத்வைத சிந்தனை எனும் நூல் சைவசித்தாந்த உட்பொருள் விளக்கத்தை இலகுபடுத்தியது. மேலும் இவருடைய நூல்கள் ஒவ்வொன்றுமே சைவ சமயத்தை சிறப்பாக வளர்த்தெடுக்க முனைகின்ற நூல்கள் ஆகும். நாவலர் மரபில் வளர்ந்த கந்தபுராணக் கலாசாரச் சிறப்புக்களை நன்கு ஆராய்ந்து எழுதிய கந்தபுராணக் கலாசாரம் அன்று வாழ்ந்த சைவர்களைத் தூண்டியது. தட்சகாண்டத்திற்கு உரையெழுதிய பண்டிதமணியவர்கள் பல உபதேசங்களை மட்டுமன்றி யாழ்ப்பாணச் சைவர்களுக்கு சிவபரத்துவம் தெளிவாக விளங்க வைக்க வேண்டும் என்ற வகையில் எழுதியுள்ளார். இந்நூல் பேராதனை பல்கலைக்கழகத்தின் இந்து மாணவர் சங்கம் வெளியிட்டதென்றால் சைவம் யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி வரை சென்றமையை மிகத் துல்லியமாகக் காட்டுகின்றது.

இவ்வாறு சமய நூல்களோடு இலக்கிய இரசனையோடு பல இலக்கிய நூல்களையும் எழுதினார். இதனால் யாழ் மண்ணில் சைவக்கல்வி வளர்ந்ததென்றே கூறலாம். இத்தோடு மட்டும் நின்றுவிடாது பத்திரிகையிலும் வானொலியிலும் பல மேடைகளிலும் இவராற்றிய சொற்பொழிவுகள் பலரது சிந்தனையைத் தூண்டியது. இவரது நூற்பணி இன்றும் மங்காமல் ஒளிவீசிக் கொண்டிருப்பதைக் காணலாம். இதனாலன்றோ சைவத்திலும் தமிழிலும் தனி முத்திரை பதித்த பண்டிதமணியவர்களுக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் 1978ம் ஆண்டு இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தமையும் நூற்றாண்டு பிறந்த தினத்தில் இலங்கையரசாங்கம் முத்திரை வெளியிட்டுக் கௌரவித்தமையும் தக்க சான்றாகியது.

## பண்டிதமணியவர்கள் எழுதிய நூல்கள்

1. மட்டுவில் கண்ணகி அம்மை தோத்திரம்
2. கதிர்காம வேலவன் பவனி வருகின்றான்
3. இலக்கியவழி
4. சைவநற்சிந்தனைகள்
5. பாரத நவமணிகள்
6. கந்தபுராண கலாசாரம்
7. கந்தபுராண போதனை
8. கந்தபுராணம் தக்ஷகாண்டம் உரை
9. சிவராத்திரியிற் சிந்திக்கத்தக்கவை
10. இருவர் யாத்திரிகர்
11. சமயக் கட்டுரைகள்
12. கம்பராமாயணக் காட்சிகள்

13. நாவலர்
14. ஆறுமுக நாவலர்
15. நாவலரும் கோயிலும்
16. சிந்தனைச் செல்வம்
17. சிந்தனைக் களஞ்சியம்
18. செந்தமிழ்க் களஞ்சியம்
19. கோயில்
20. அத்வைத சிந்தனை
21. அன்பிணைந்திணை

## காசிவாசி செந்திநாதையர் (1848 - 1924)

காசிவாசி செந்திநாதையரவர்கள் நாவலரின் மாணவர் என்ற பெருமைக்குரியவர். நாவலரது சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் ஆசிரியராகப் பணியாற்றியவர். நாவலரின் சொற்பொழிவுகளைக் கேட்டுச் சுவைத்துக் குறிப்பெடுக்கும் வாய்ப்புப் பெற்றவர். அத்தகையவர் ஆற்றிய பணி, நாவலரின் நோக்கங்களில் ஒன்றான சைவத் தத்துவத்தைத் தெளிவுபடுத்தி நம்மவர்களுக்கு விளக்குதல் ஆகும். நாவலர் அவர்கள் சைவசமய தத்துவப் பொருளுண்மைகளைப் பொதுமக்களுக்குப் பிரசாரம் செய்யும் பணியில் ஈடுபட்டவர். செந்திநாதையர் சைவத் தத்துவங்களது மூலத்தை ஆராய்ந்து அரிய பல கருத்துக்களை வெளிக்கொணர்ந்தவர். இது யாழ்ப்பாண சைவ வரலாற்றில் மட்டுமன்றி ஈழத்துச் சைவ வரலாற்றில் நாவலர் காலத்தை அடுத்து ஏற்பட்ட ஒரு வளர்ச்சி நிலை எனலாம்.

செந்திநாதையருடைய ஆய்வுப்பணிகள் முக்கியமாக வேத நெறிக்கும் சைவசித்தாந்தத்திற்குமுள்ள தொடர்பை

தெளிவுபடுத்திக் காட்டுவதையே நோக்கமாகக் கொண்டவை. குறிப்பாக இவரது தேவாரம் - வேதசாரம், சைவவேதாந்தம் என்னும் நூல்கள் இந்நோக்கின் விளைவுகளாகும். மேலும் சைவ உண்மையை தெளிவு படுத்துவதற்காகப் பிரமசூத்திரத்திற்கு நீலகண்டர் செய்த பாஷ்ய என்னும் நீலகண்ட மாபாடியம் என்ற பேருரையை தமிழ் மொழி பெயர்த்தமையும் மேற்படி நோக்கின் பெறுபேறேயாகும்.

மேலும் செந்திநாதையருடைய பணிகளில் ஆறுமுக நாவலரைப் போன்று கிறிஸ்தவ சமயப் பிரசார முயற்சிகளுக்கு எதிரான கண்டனம் அமைந்து காணப் பட்டாலும் முக்கியமாக அவரது நோக்கு, வேதாந்த தத்துவ நெறிகளுக்கு எதிராக நின்று சைவத்தை வளர்த்தலாகும்.[31]

காசிவாசி செந்திநாதையர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் பணிசெய்த காலம் குறைவென்றாலும் அவரது ஆசிரியப் பணி மற்றும் அவரது நூல்கள் யாழ்ப்பாணச் சைவக்கல்விப் பாரம்பரியத்தை நன்கு மெருகூட்டியுள்ளது. ஐயரவர்கள் எழுதிய நூல்களில் பலவற்றை அறிய முடியாதுள்ளது என்றாலும், அறியக் கூடிய நூல்களை நோக்குவோம்.[32]

1. தேவாரம் - வேதசாரம்
2. சைவவேதாந்தம்
3. கந்தபுராண நவநீதம்
4. ஞானரத்தினாவளி
5. வஜ்ரடங்கம்
6. வச்சிரதண்டம்
7. வீரபத்திராஸ்திரம்
8. சிவஞான போத வசன அலங்கார தீபம்

9. தத்துவ விளக்கம் - மூலமும் உரையும்
10. சாண்சஷத்திரியப் பிரசண்டமாருதம்
11. ஞானபோத விளக்கச் சூறாவளி
12. சிவனுந்தேவனா என்னுந் தியநாவுக்கு ஆப்பு
13. விவிலிய குற்சித கண்டன திக்காரம்
14. விவிலிய குற்சிதக் குறிப்பு
15. தாந்திரிக துண்டகண்டன கண்டனம்
16. மகாவுக்கிர வீரபத்திர அஸ்திரம்
17. வைதீக சுத்தாத்துவித சைவசித்தாந்தப்படம்
18. வைதீக சுத்தாத்துவித சைவசித்தாந்த தத்துவப்பட வினாவிடை
19. ஸ்ரீ சீகாழிப் பெருவாழ்வின் ஜீவகாருண்யமாட்சி
20. நீலகண்டமா பாஷ்ய தமிழ் மொழிபெயர்ப்பு

## சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை (1874 - 1907)

புலோலியூர் நாகப்பிள்ளையின் மகனாக அவதரித்த இவர், அவ்வூர் சைவப்பாடசாலையில் ஆறாம் வகுப்புவரை கல்வி கற்று எழுது வினைஞராகக் கடமையாற்றினார். வறுமை காரணமாகப் பாடசாலை செல்லாது நல்லூர் தியாகராசபிள்ளையிடந் தமிழ், இலக்கணம், இலக்கியம், சைவ சித்தாந்தம், தருக்க சாத்திரம், சமஸ்கிருதம் என்பவற்றையும் கற்றார். 18ம் வயதில் வடிவாம்பிகையை திருமணம் செய்து 22ம் வயதில் இந்தியா சென்றார்.

இந்தியாவிலும் தொல்காப்பியம், இலக்கண விளக்கம் என்பன கற்று தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றார். இக்காலத்தில் ஆரணியின் அரச மன்றிலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலும் புலவராகப் பணி புரிந்தார்.

இக்காலத்தில் ஆரணி மன்னன் "அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்" எனும் பட்டமளித்தான்.

சென்னையில் வாழ்ந்த காலத்தில் மாயாவாதத்தை மறுத்தொதுக்கிப் பேசும் வல்லமை பெற்றமையால் காசிவாசி செந்திநாதையர் தலைமையில் "மாயாவாத தும்சகோளரி" எனும் பட்டமளித்தார்கள். மேலும், "சைவசித்தாந்த மகாசரபம்" எனும் பட்டமும் கிடைத்தது. அட்டாவதானம், சதாவதானம் செய்வதிலும் மிகுந்த ஆற்றல் பெற்றிருந்தார்.

"இராமலிங்கரின் அருட்பா அருட்பாவன்று மருட்பா" எனக் குற்றம் சாட்டி முறைமன்றேறி வழக்காடினார். இதனால் யாழ்ப்பாண சைவசித்தாந்த நெறியின் சிறப்பும் கட்டுக்கோப்பும் இந்திய தமிழகத்தவருக்கு நன்கு தெரிந்தது. இவருடைய மாணாக்கராக வி. உலகநாத முதலியார், வி. கலியாண சுந்தர முதலியார் ஆகியோர் விளங்கினர். வி. கலியாண சுந்தர முதலியாரே 1907ல் சதாவதானியின் வரலாற்றினை நூலுருச் செய்தார்.[33]

மேலும், கதிரைவேற் பிள்ளையவர்கள் சுப்பிரமணியர் மீது கொண்ட பக்தி சுப்பிரமணிய பராக்கிரமம் எனும் நூலை எழுதச் செய்ததோடு பல சைவப் பிரபந்தங்களும் பாடினார். இத்தோடு முதன் முதல் தமிழ் பேரகராதி ஒன்றையும் உருவாக்கினார்.

## சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையவர்களின் நூல்கள்[34]

1. சுப்பிரமணிய பராக்கிரமம்
2. கூர்ம புராண விரிவுரை
3. பழனித்தல புராணவுரை
6. சிவாலய மகோற்சவ விளக்கம்
7. புத்தமத கண்டனம்
8. மருட்பா மறுப்பு

4. சைவ சந்திரிகை
5. சைவசித்தாந்த சுருக்கம்
10. தமிழ்ப் பேரகராதி

## சைவப் புலவர். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

சிவத்தமிழ்ச் செல்வியவர்கள் தெல்லிப்பழையிலே துர்க்காதேவி தேவஸ்தானத்திற்குத் தென்புறமாக 7.1.1925ம் ஆண்டு அப்பாக்குட்டி என்பவருக்கு மகளாகப் பிறந்து, சிறுவயதில் பாடசாலைக் கல்வியை முடித்து தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சிறப்பாகக் கற்றுப் பண்டிதரானார். தென்னிந்திய சைவசித்தாந்த மகா சமாஜத்தினர் நடாத்தும் சைவப்புலவர் தேர்வில் சித்தி பெற்று சைவப்புலவராகி, ஆசிரியர் தொழிலை ஏற்று ஈழத்தின் பல பாகங்களிலும் கல்வி போதித்து இறுதியாக, பிறந்த ஊராகிய யூனியன் கல்லூரியில் கல்வி போதித்தார்.

ஆசிரியராகவிருந்த காலத்திலேயே சைவக்கல்வியை வளர்க்க வேண்டும் என்று எண்ணி நாவலர் வழியில் ஆலயமாலயமாகச் சென்று சிறந்த சொற்பொழிவுகள் ஆற்றினார். யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஆலயங்கள் எல்லாம் அம்மையாருடைய சொற்பொழிவைக் கேட்டிருக்கும் என்றே கூற வேண்டும். இதற்கப்பால் இலங்கையின் பல பாகங்களிற்கும் சென்று சொற்பொழி வாற்றினார். இந்தியாவில் சைவ மகாநாடுகளில் பங்கு பற்றி உரையாற்றினார்.

இச் சொற்பொழிவானது மலேசியா, சிங்கப்பூர் முதலாய கீழைத்தேசங்களிற்கும் பரந்தது. பல உயர் விருதுகள் பெற்றுக் கொண்டார். "நாவலருக்குப் பின் தங்கம்மா" என்று பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்டார்.[35] பத்திரிகையிலும் சைவசமயம் சம்பந்தமாகப் பல

கட்டுரைகளை எழுதினார். சைவநூல்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிடும் பணியிலே ஈடுபட்டார்.

நாவலர் பெருமான் கூறியதன் பிரகாரம் ஆலயங்கள் அறங்காவலர் சபையால் நிர்வகிக்கப்பட வேண்டும் எனும் தன்மையில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவ ஸ்தானத்தைப் பொறுப்பேற்று அதன் தலைவராகவிருந்து நல்ல முறையில் ஆலயத்தைப் பரிபாலிப்பதோடு, அறப்பணி செய்யவேண்டும் என்ற வகையில் அநாதையர் இல்லம், முதியோர் இல்லம், பசு ஓம்பல் என்பவற்றோடு சைவக் கல்வி வளர்ச்சியடையவும் பல பணிகளை ஆற்றி வந்தனர். குறிப்பாக சைவ சமயத்திரு நூல்களை அச்சிட்டு வெளியிடும் பணிக்காக சுன்னாகம் திருமகள் அச்சகத்தையே கொள்வனவு செய்திருக்கின்றார்கள். மேலும், தனது மணி விழாவிற்குக் கூட "புகழாரம் எனக்கு வேண்டாம். அதை ஒரு ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய நூலாக வெளியிடுங்கள்" என வழிகாட்டியமை சைவக்கல்வியை வளர்க்க வேண்டும் எனும் ஆர்வத்தைக் காட்டுகின்றது. சைவப்புலவர் சங்கத்தின் பொருளாளராக இருந்து சைவக்கல்வியை வளர்த்தார்.

மேலும் சைவசித்தாந்த மகாநாடுகள், இந்து இளைஞர் மகாநாடுகள் என்பவற்றோடு புராண படனம், இசை வகுப்புக்கள், வேதபாராயண வகுப்புக்கள் என்பவற்றையும் நடாத்தும் நிலையமாக துர்க்காதேவி தேவஸ்தானம் விளங்கி வருவதைக் காணலாம். இதனால் அன்றோ "ஈழத்தின் சைவ வரலாற்றின் அடுத்த கட்டத்திற்கான அடித்தளம் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் இடப்பட்டதென்பதை உணர முடிகின்றது" என துணைவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்கள் கூறினார்கள்.[36]

## புராண படம்

புராண படம் என்பது யாழ்ப்பாணத்தாரின் முதிசம் கல்வியின் அடிப்படை. அரியாலையில் கச்சிக் கணேசையரால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட புராண படனத்தை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்கள் வளர்த்தெடுத்தார்கள். இப்புராண படனமானது யாழ்ப்பாணத்திற்குரிய சிறப்பு முறையாகும். சிவசந்நிதி, சிந்தனை, வாக்கு, செயல் மூன்றும் இறைவனடி சென்று குவிவதற்கும் அவன் புகழ் இயம்புவதற்கும் உரிய இடம். எந்த நிகழ்ச்சியும் இறைவனைப் பாராமுகம் செய்வதற்கு உபகாரமாக இருக்காது. இவ்வுண்மைகளை நன்கு மனங் கொண்ட ஈழநாட்டவர் ஆலயங்களில் புராண படனங்களை ஆற்றி வருகின்றனர்.

"இந்தியாவிலோ, வித்துவான்கள், சைவசமயக் குருமார் முதலியோருள்ளும் கந்த புராணம் முதலியன அறிந்தோர் சிலர். இத்தேசத்திலோ, பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்."[37] பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் "கந்தபுராணம் யாழ்ப்பாணப் பெண்களின் உதிரத்தில் நன்கு ஊன்றியிருந்தது" என்கிறார்.[38] இந்த வகையில் சைவ தத்துவ உண்மைகளை எல்லாம் சிறப்பாகக் கூறும் இப்புராணபடன மரபை யாழ்மண்ணில் வளர்த்து சைவக் கல்வி வளர்ச்சியடைய உதவிய செம்மல்களாகப் பின்வருவோரை நோக்கலாம். இவர்கள் நாவலரின் மாணவப் பரம்பரையில் வந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.[39]

வித்துவசிரோன்மணி ந.ச. பொன்னம்பலப் பிள்ளை *(1813 - 1897)*

வண்ணை சி. பொன்னுத்துரை ஐயர்

குப்பிளான் காசிவாசி செந்திநாதையர் *(1848 - 1924)*

மா. வைத்திலிங்கம் பிள்ளை (1852 - ?)
சுழிபுரம் திருஞானசம்பந்த உபாத்தியாயர்
வேலணை வி. கந்தப்பிள்ளை (1840 - 1914)
ச. சதாசிவம் பிள்ளை (? - 1910)
விழிசிட்டி அம்பலவாணர் உபாத்தியாயர்
நல்லூர் திருஞானசம்பந்த பிள்ளை
இணுவில் அம்பிகை பாகர்
இணுவில் நடராசையர் (? - 1903)

இவர்களைத் தவிரவும் கவித்துவத்திலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கியவர்கள் பலர் இருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள்,

மானிப்பாய் சுப்பையர் (1820 - 1898)
பீதாம்பரப்புலவர் (- - 1819)
முத்துக்குமாரப்புலவர் (- - 1827)
மா.வை. பொன்னம்பல பிள்ளை (- - 1891)
புங்குடுத்தீவு இராமலிங்கச் சட்டம்பியார்
கொக்குவில் சபாரத்தின முதலியார் (1858 - 1922)
சதாசிவ பண்டிதர்
முருகேச பண்டிதர்
உடுப்பிட்டி சிவசம்புப் புலவர் (? - 1910)
வட்டுக்கோட்டை அம்பலவாணநாவலர் (1855 - 1932)
சுன்னாகம் குமாரசாமிப்புலவர் (1835 - 1952)
அச்சுவேலி மயில்வாகனப்புலவர் (1865 - 1912)
உடுப்பிட்டிச் சின்னத்தம்பி (1830 - 1878)
அளவெட்டி கனகசபைப்புலவர் (1829 - 1873)
நல்லூர் சந்திரசேகரபண்டிதர்
திருமலை ஆறுமுகம்

புலவர்களும் வித்துவான்களும் இலக்கிய இலக்கண உரையாற்றல் உள்ள ஏனைய புலவர்களும் பொது மக்களும் தம் திறமையை காட்டுவதற்கு புராணபடன முறை வாய்ப்பான கருவியாகவும் திறமையின் அளவீடாகவும் இருந்தது. எனவே புராண படனம் செய்தல் என்பது அக்காலப் புலவர்களுக்கு ஒரு பாடத்திட்டமாகவே அமைந்து விட்டது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் நடுக்கூற்றிலும் சைவக் கல்வியும் புராணபடன முறையும் காப்பாற்றப்பட்டு வந்தமையை அறிய முடிகிறது. இக்காலப்பகுதியில் புராண படனத்தில் ஈடுபட்டோர்களை நோக்குவோம்.

| | |
|---|---|
| சங்கானை குமாரசுவாமி | ஊரெழு சம்பந்தர் |
| வீ. சம்பந்தர் | அளவெட்டி சீ. விநாசித்தம்பி |
| நாவலித் தம்பையர் | அளவெட்டி கதிரேசர் பிள்ளை |
| ஏழாலைத் தம்பையா உபாத்தியாயர் | செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி |
| விழிசிட்டி ஆறுப்பிள்ளை | பண்டிதை திருமதி நா. பாக்கியம் |
| கொக்குவில் குமாரசாமிப்புலவர் | சி. இரத்தினம் |
| பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் | மல்லாகம் R.N. நமசிவாயம் |
| தெல்லிப்பழை நாகலிங்கம் | திருமதி வசந்தா வைத்தியநாதன் |
| சுன்னாகம் பண்டிதர் இ. நமசிவாயம் | திருமதி. சி. பாலநாதன் |
| ஏழாலை மு. கந்தையா | திருமதி. இராசையா |
| தாவடி. சே. சிவப்பிரகாசம் | செல்வி. புஸ்பா செல்வநாயகம் |
| ஏழாலை சச்சிதானந்த சிவம் | ஏழாலை மு. சிவப்பிரகாசம் |
| மாவிட்டபுரம் சங்கரப்பிள்ளை | அளவெட்டி விசுவநாதன் |
| ஏழாலை சின்னத்துரை உபாத்தியாயர் | கந்தப்பசேகரம் பிள்ளை |
| தெல்லிப்பழை வ. குகசர்மா | ஏழாலை சண்முகவடிவேல் |
| பண்டிதர் வ. பேரின்பநாயகம் | மாவிட்டபுரம் க. குகதாசன் ஐயா |

சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன்
சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்
சைவப்புலவர் க. நித்தியசுசீதரன்
சைவசித்தாந்த பண்டிதர்
செ. சிவபாதம்
மாவிட்டபுரம் சச்சிதானந்தம்
கந்தர்மடம் ஆறுமுகம்
நவாலி செல்லையா நாகலிங்கம்
பேராசிரியர் நா. சுப்பிரமணியன்
சைவப்புலவர் சு. செல்லத்துரை
செ. நவநீதகுமார்

## அடிக்குறிப்புகள்

1. **பவளவிழா மலர்,** *சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, 1990*
2. **பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழா மலர்,** *தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி, 1972*
3. **காங்கேயன் கல்வி மலர்,** *காங்கேசன் துறை கல்விவட்டார அதிபர்கள் சங்கம், 1985 ப. 36*
4. *மேற்படி ப. 47*
5 *மேற்படி ப. 49*
6. *மேற்படி ப. 51*
7. *மேற்படி ப. 66*
8. *மேற்படி ப. 68*
9. *மேற்படி ப. 74, 75*
10. *மேற்படி ப. 77*
11. *மேற்படி ப. 84*
12. *மேற்படி ப. 86*
13. *இரசிகமணி கனக செந்திநாதன்,* **என் கதை,** *முதலாம் பகுதி, பராசக்தி நிலையம் குரும்பசிட்டி, 1977, ப. 97*
14. *மு. சு. காங்கேயன் கல்வி மலர் ப. 97*
15. *மேற்படி ப. 106*
16. *மேற்படி ப. 108*
17. *மேற்படி ப. 110*

18. மேற்படி ப. 115
19. மேற்படி ப. 117
20. மேற்படி ப. 119
21. **சைவாசிரியர்களைத் தோற்றுவித்த திரு. சு. அருணாசலம் அவர்கள்,** காரைநகர் சைவமகாசபை வெளியீடு, ப. 15
22. திருஞானசம்பந்த பிள்ளை மு. செவ்வி, கொக்குவில்
23. மு.சு. **சைவாசிரியர்களைத் தோற்றுவித்த திரு. சு. அருணாசலம்,** ப. VXXii
24. குலரத்தினம் க.சி. **"இந்துபோட் இராசரத்தினம் காலமும் வாழ்வும்"** தொடர் கட்டுரை, **வார முரசொலி,** 1988 - 12 - 25 ப. 10
25. குலரத்தினம் க.சி. **"சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரம் B.A அவர்கள்"** யாழ்ப்பாணம் 2000
26. ஜம்புலிங்கம் செ.வே. "நூலாசிரியர் சரித்திரச்சுருக்கம்" **சைவசமய சாரம்** சைவ பரிபாலனசபை வெளியீடு, 2000
27. சிவபாதசுந்தரனார் **சு. சைவக்கிரியை விளக்கம்,** யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை வெளியீடு 2000
28. சாந்தி கேசவன், **இந்து நாகரிகம்,** ராஜன் புத்தக நிலையம், 111, பிரதான வீதி, மட்டக்களப்பு, ப. 26.
29. மேற்படி ப. 27
30. **பண்டிதமணி நினைவு மலர்,** அட்டைப்படம்
31. பேராசிரியர் வித்தியானந்தன் சு., "நுழைவாயில்" சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் மணிவிழாச் சபை வெளியீடு, துர்க்காபுரம், தெல்லிப்பழை, 6.3.1985 ப. XII
32. மு. சு. இந்து நாகரிகம் ப. 3
33. மேற்படி ப. 6
34. மேற்படி ப. 6

35. **மு.சு. சிவத்தமிழ் ஆராய்ச்சிக்கட்டுரைகள்** ப. XIV
36. மேற்படி ப. XV
37. கைலாசபிள்ளை த. **ஆறுமுக நாவலர் பிரபந்தத்திரட்டு,** சென்னை வித்தியாநு பாலன யந்திரசாலை, 1954
38. கணபதிப்பிள்ளை சி. **கந்தபுராணகலாசாரம்,** 1959 ப. 35
39. கனகரத்தினம் M.A. இரா.வை. **மு.சு.சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்** ப. 185
40. மேற்படி ப. 186



அகில இலங்கை சைவப்புலவர் சங்க பொன் விழா சைவ மாநாட்டில் யாழ் பல்கலைக்கழக சைவ சித்தாந்த முதுகலைமாணி இணைப்பாளர் பேராசிரியர் மா. வேதநாதன் அவர்களுக்கு சங்கம் சார்பாக திருவாவடுதுறை ஆதீன 23வது குரு முதல்வர் பொன்னாடை போர்த்தி விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றது - 2010

உ
சிவமயம்

## அத்தியாயம் - 03

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் சைவப்பணி

## 3.1. அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தோற்றம் - வளர்ச்சி

சென்னையில் சைவசித்தாந்தப் பேரறிஞர்களைக் கொண்ட சைவ சித்தாந்த சமாஜம் ஒன்று இயங்கி வருகின்றது. இச்சமாஜம் 1905ம் ஆண்டு 7ம் நாள் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் திருமடத்தில் தொடங்கியது. ஞானியார் சுவாமிகள், மறைமலை அடிகள் முதலிய பெரியார்களால் தொடங்கப்பெற்ற அச்சமாஜம் சைவசித்தாந்த சமயத்தின் உயர்ந்த தத்துவ உண்மைகளையும் சிவ வழிபாட்டின் சிறப்பினையும் இவ்வுலகில் நல்ல வண்ணம் வாழும் முறைமைகளையும் உட்கோளாகக் கொண்டு தென்னிந்தியா, மலேசியா, இலங்கை முதலான இடங்கள் தோறும் சைவ சித்தாந்த சமயப் பிரசாரம் செய்தும் சித்தாந்தம் எனும் தமிழ் - ஆங்கிலச் சஞ்சிகைகளும் சைவசித்தாந்தம், சைவத் திருமுறை, திருக்கோவில் அமைப்பு, கோவில் வழிபாட்டு முறை, நாயன்மார்வழி முதலியனவற்றை ஆராய்ந்து

தெளிவு படுத்தி நூல்களை வெளியிட்டும் சைவசித்தாந்த நெறி வகுப்புக்களையும் சைவப்புலவர் தேர்வுகளையும் நடாத்தி வருகின்றது. அத்துடன் மகாநாடுகளை நடாத்தியும் மகாநாட்டுப் பேரவையில் பட்டங்களும் பரிசுகளும் அளித்தும் திருவாவடுதுறை, தருமபுரம், மதுரை முதலான ஆதீனங்களில் தொடர்பு கொண்டும் சைவத் தமிழ்ச் சான்றோர் மூலம் சைவத்தையும் சைவக் கல்வியையும் வளர்த்துச் சைவர்களுக்குப் பயன்பட்டு வருவதை அறிந்து கொள்ளலாம்.[1]

மேலே காட்டிய நிலைமைகளை அறிந்த காலத்தில் 1960ம் ஆண்டு சித்திரைமாதம் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த நான்மாடக் கூடற்பதியாகிய மதுரையம்பதியில் அங்கையற் கண்ணி தன்னொடுமமர்ந்த ஆலவாய்ப் பெருமானின் திருவருள் கூட்ட, தமிழ் வித்துவான் தேர்வுக்குத் தோற்றச் சென்று இருந்த திருவாளர் வ. செல்லையா, ச. சச்சிதானந்த சிவம் ஆகிய ஆசிரிய அன்பர்கள் சந்தித்த வேளையில், அகில இலங்கையிலும் வாழும் சைவப் புலவர்களை ஒன்று சேர்த்து சங்கம் அமைத்து, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் வழிநின்று சைவப்பணி யாற்றுவதோடு சைவக்கல்வியை வளர்க்க வேண்டிய காலத்தின் தேவையை உணர்ந்து கொண்டார்கள்.[2]

சிவனருள் தூண்ட எழுந்த இச்சிந்தனை இலங்கைக்கு வந்து சேர்ந்ததும் செயற்பட ஆரம்பித்தது. சமயசமூகப் பணிகளில் முன்னின்று உழைக்கும் தினசரிப் பத்திரிகைகள் மூலம் சைவப்புலவர்களை தொடர்புறுமாறு வேண்டிய போது ஒன்பதின்மர் தொடர்பு கொண்டனர். இவர்களைக் கொண்டு சங்கம் ஆரம்பித்தது.

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் கரு (15)ஆம் நாள் (1960 - 09 - 30) வெள்ளிக்கிழமை விஜயதசமித் திதியில்,

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் சங்க அமைப்புக் கூட்டம் அக்காலத்தில் இருந்த இந்து சாதனப் பத்திராதிபர் சைவப் பேரறிஞர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களின் தலைமையில் ஆரம்பமாகியது. சைவப்புலவர் வித்துவான் வ. செல்லையா தலைவராகவும் சைவப்புலவர் வித்துவான் திரு. ச. சச்சிதானந்த சிவம் செயலாளர் ஆகவும் சைவப்புலவர் பண்டிதை சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள். சைவப்புலவர்களான திரு. சி. வல்லிபுரம், திரு. ஆ. பாலகிருஸ்ணர், திரு. ஐ. இராசரத்தினம், திரு. இ. திருநாவுக்கரசு, திரு. இ. செல்லத்துரை ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.[3]

காலப்போக்கில் அங்கத்தவர்கள் அதிகரித்தனர். சைவசித்தாந்த மகாசமாஜம் நடாத்தும் தேர்வுகளால் சைவப்புலவர்களின் எண்ணிக்கை அதிகரித்தது. சைவச் சான்றோரின் ஆசியோடு இச்சங்கமானது வளர்ச்சி யடைந்தது. இதற்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் எனப் பெயரும் சூட்டிக் கொள்ளப்பட்டது. 1960 - 09 - 30ல் இச்சங்கம் நிறுவப்பட்டபின் அவ்வருடம் மார்கழியில் சைவசித்தாந்த சமாஜத்தினர் சைவசித்தாந்த மகாநாடு ஒன்றை திருக்கேதீச்சரத்தில் சேர். கந்தையா, வைத்திய நாதனின் ஆதரவுடன் நடாத்தினர். அதில் தொடர்பு கொண்ட வித்துவான் சைவப்புலவர் வ. செல்லையா அவர்களும் வித்துவான் சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்த சிவம் அவர்களும் பங்கு பற்றினர். அம்மகாநாட்டுக்கு வந்து இருந்த திரு. இரா. முருகவேள் அவர்களிடம் இலங்கையில் சைவப்புலவர் பரீட்சையை இச்சங்கம் நடாத்திக் கொடுக்கும் உரிமையைப் பெற்றுக் கொண்டனர். அத்துடன் சைவப் புலவர் பரீட்சையின் பாடத்திட்டத்தை விரிவாக அமைக்கு மாறும் கேட்டுக்

கொண்டனர். அந்நிலையில் சிறுப்பிட்டி சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்களை பரீட்சைக் காரியதரிசியாக நியமித்துப் பணிபுரிய வைத்தனர்.[4]

இக்காலகட்டத்தில் தங்களின் விரிவான பாடத் திட்டத்திற்கு அமைய தேர்வை நடாத்தித் தருவதோடு பட்டமளிப்பையும் இச்சங்கமே நடாத்த அனுமதி கோரிய போது சேய்ச் சங்கமாக இருந்தாலும் சில காலம் அனு பவம் வேண்டும் என்று கூறியதாக அறிய முடிகின்றது. இதன்படி 1972ம் ஆண்டுக்குப் பின் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் முழுமையாக சுதந்திரத்தோடு தொழிற்படத் தொடங்கியது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தை மையமாக வைத்து அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமானது தொழிற்படத் தொடங்கியது. இவர்களது முக்கியப் பணி கல்விப்பணி. எனவே இளம் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வு களுக்குத் தோற்றுவோருக்குப் பாடத் திட்டத்திற்கமைய படநூல்களைக் கற்பித்து வந்தனர். குறிப்பாகச் சொல்லப்போனால் விரிவுரை முறையிலேயே இக்கல்விப் போதனை நடைபெற்றாலும், கல்வியைக் கற்பவர்களுக்கும் கற்பிப்பவர்களுக்கும் பழமையான கல்வி முறையைப் போன்று சைவ அனுட்டான ஆசாரங்களோடு சைவக் கலாசார உடையணிந்தும் இவ்விரிவுரை வகுப்புக்கள் நடத்தப்பட்டது.

வருடம் தோறும் சித்திரை மாதத்தில் வரும் மூன்றாம் வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் தேர்வுகள் நடைபெற்று வருகின்றன. தேர்வுக்குரிய விண்ணப்பங்கள் அதற்கு முந்திய வருடத்தில் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்குப் பிந்தாமல் ஏற்கப்பட்டு வருகின்றன. (தேர்வுக்குத் தோற்றுவோர் 0776132176

இலங்கை தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்)[5]

இச் சங்கமானது காலம் தோறும் திருமுறை மனனப் போட்டி, திருமுறை பண்ணிசைப்போட்டி, சைவசமய அறிவுப் போட்டி, சைவசமய நாடகப்போட்டி, புராண படனப் போட்டி, பேச்சுப் போட்டி என்பவற்றினை நடாத்தி பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கி வருகின்றது. இவற்றுக்காகக் காலப்போக்கில் கௌரவ செயலாளராக சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் திரு. மு. திருஞானசம்பந்தப்பிள்ளையும் பணியமைப்பாளர் களாக சைவப்புலவர்கள், திரு. வி.எஸ். சுந்தரலிங்கம் சைவப்புலவர் சைவசித்தாந்த பாலபண்டிதர் திரு. சு. செல்லத்துரை ஆகியோர்களையும் நியமித்துப் பணியாற்றியது.[6]

மேலும், ஊர்கள் தோறும் சங்கமானது சைவ மகாநாடுகளை நடாத்தி மக்கள் மத்தியில் சைவ உணர்வு ஏற்படச் செய்வது மட்டுமன்றி சைவக்கல்வியை வளர்த்தெடுக்க வேண்டும் என விரும்பியது. 1962ம் ஆண்டுகளில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற வேளையில் சைவக் கல்விக்கு யாது நிகழுமோ என உணர்ந்து சைவசமயக் கல்வியை வளர்க்கும் ஒரு நிறுவனமாகத் தொழிற்படத் தொடங்கியது. இதற்கமைய கண்டி, மட்டக்களப்பு, வவுனியா, திருகோணமலை, வேலணை, யாழ்ப்பாணம் எனப் பல இடங்களிலும் மகாநாடுகளை நடாத்தி வந்தது.

2010ம் ஆண்டு சங்கத்தின் பொன்விழா சைவ மாநாடு கொழும்பு தமிழ்ச் சங்கமண்டபத்தில் 3.10.2010 ஞாயிற்றுக்கிழமை சைவப்புலவர் வ. செல்லையா அரங்காக தலைவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்றது. இந்தியா திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச பரமாசாரிய சுவாமிகளும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன 2வது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளும் எழுந்தருளினார்கள். பல பிரமுகர்கள் கலந்து வாழ்த்துரைகள் வழங்கினார்கள். யாழ் பல்கலைக்கழக வாழ்நாட் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் பொன்விழா மலர் வெளியீட்டுரை நிகழ்த்தினார். பேராசிரியர் மா. வேதநாதன் பட்டமளிப்பு பேருரை நிகழ்த்தினார்கள். திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் 9 சைவப் புலவர்களுக்கும் 23 இளஞ்சைவப் புலவர்களுக்கும் பட்டம் வழங்கினார். யாழ் பல்கலைக் கழகத்தில் சைவசித்தாந்த முதுகலைமாணிப் படிப்பு ஆரம்பித்தமையையும் அவர்களது சைவசித்தாந்தப் பணியையும் கௌரவித்து பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர், பேராசிரியர் மா. வேதநாதன் ஆகியோருக்கு விருது வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. சைவசித்தாந்த முதுகலைமாணி (M.A.) பட்டம் பெற்ற சைவப்புலவர்களான செ. கந்த சத்தியதாசன், ந. புகன் ஸ்ரீந்திரன், வ.ஆ. தங்கமயில், கு.சுமுகலிங்கம், பொ. சந்திரவேல், கு. றஜீபன் ஆகியோருக்கும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மாலை மட்டக்களப்பு அருணாசல தேசிகமணி அரங்கு உபதலைவர் சா. தில்லைநாதன் தலைமையில் நடைபெற்றது. பல பிரமுகர்களுடைய ஆய்வுரைகளும் பொன்விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பேச்சு, புராண படனம், கதாப்பிரசங்கம், பண்ணிசை, நாடகம், அபிநயநடனம் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்களது நிகழ்வுகளுடன் இவர்களுக்கு பரிசில்களும் விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

*24.10.2010* ஞாயிறு ஜேர்மனியில் ஐரோப்பிய சிவநெறிக் கழகம் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அரங்காக சிவஸ்ரீ சந்திரசேகர ரவீந்திர நாதக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. பொன்விழாமலர் வெளியீடும் இலண்டன், ஜேர்மனியில் தேர்வில் சித்தி பெற்றவர்களுக்கு சைவப்புலவர் பட்டமும் வழங்கப்பட்டதோடு சிவநெறிக் தேர்வு சான்றிதழும் பொன்விழா கலைப்போட்டி பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.

*17.11.2010* புதன்கிழமை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் நாவலர் அமைத்த மகா வித்தியாலயத்தில் சச்சிதானந்தசிவம் அரங்கு சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தலைமையில் நடைபெற்றது. நல்லையாதீன குருமகா சந்நிதானம் எழுந்தருளி அருளாசி வழங்கினார். யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகவும் வலம்புரி பத்திரிகை நிர்வாக இயக்குனர் சி. வெற்றிவேலாயுதம், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், ஆறுதிருமுகன், ஏ. அனுசாந்தன் ஆகியோர் கலந்து ஆய்வுரை நிகழ்த்தினர். புராண வித்தகர் ஏழாலை சிவசண்முக வடிவேலுக்கு விருது வழங்கி கௌரவிக்கப் பட்டது. பொன்விழா சைவக்கலைப் போட்டி பரிசளிப்பும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு தொழிற்பட்டு வந்த சைவப்புலவர் சங்கமானது ஏராளமான சைவப்புலவர்களை உருவாக்கி சைவசமயக் கல்வி போதிப்பதிலும் ஆலயங்கள், மற்றும் பாடசாலைகளில் சொற்பொழிவுகளை ஆற்றுவதனாலும் சைவசமய அறிவை காலம் தோறும் வளர்த்து வந்தது. என்றாலும் இலங்கையில் ஏற்பட்ட இனப்பிரச்சினை, அதன் காரணமாக ஏற்பட்ட போர்க்காலச் சூழல்

சங்கத்தின் செயற்பாடுகளைப் பெரிதும் பாதித்தது என்றே கூறுகிறார்கள்.[7] 1987ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டு வரை சங்கம் செயற்பட முடியாது இருந்தது. எனினும் சைவப்புலவர் வ. கந்தசாமி இச்சங்கத்தை அழியவிடாது பேணி வந்தார். இது பற்றி 2001ம் ஆண்டு யூலை மாதம் 22ம் நாள் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்களுக்கு சைவபூஷணம் விருது கொடுத்து பாராட்டுரை வழங்கிய சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் பின்வருமாறு கூறினார். "தனிமரம் தோப்பாகாது" என்கின்ற பழமொழியை சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் பொய்யாக்கி விட்டார். தனித்து நின்று சைவப்புலவர் சங்கத்தை அழியவிடாது பாதுகாத்த பெருமை இவரையே சாரும்" என்றார்.

இவ்வாறு வளர்த்து வந்த சங்கமானது மீண்டும் 1999ம் ஆண்டிலிருந்து மறுமலர்ச்சியடையத் தொடங்கியது என்றே கூற வேண்டும். மீண்டும் அதிகப்படியான மாணவர்கள் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றினார்கள். அதிகப்படியான மாணவர்கள் சைவப்புலவர் பட்டம் பெற்று வெளியேறினார்கள்.

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| இளஞ்சைவப்புலவர் விண்ணப்பித்தோர் | 8 | 41 | 69 | 82 | 80 |
| சைவப்புலவர் விண்ணப்பித்தோர் | 11 | 18 | 38 | 43 | 75 |

| 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 67 | 87 | 72 | 85 | 20 | 47 | 42 | 40 | 46 | 150 |
| 11 | 12 | 15 | 12 | 1 | 4 | 5 | 5 | 18 | 27 |

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 |
|---|---|---|---|---|
| இளஞ்சைவப்புலவர் சித்தியடைந்தோர் | 6 | 18 | 22 | 34 |
| சைவப்புலவர் சித்தியடைந்தோர் | 4 | 6 | 19 | 18 |

| 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 71 | 43 | 41 | 29 | 32 | 17 | 33 | 39 | 27 | 23 |
| 20 | 7 | 15 | 5 | 6 | 6 | 7 | 5 | 3 | 6 |

(மூலம் - தேர்வு விபரப் பதிவுப் புத்தகம் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)

இவ்வாறு சங்கம் வளர்ச்சியடைவதற்கும் பட்டம் பெறுகின்ற மாணவர் தொகை அதிகரிப்பதற்கும் முக்கிய காரணம் 1999ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாக சபை என்றுதான் கூறவேண்டும். இதில் சைவப் புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை தலைவராகவும் சைவப்புலவர் சு. செல்லத்துரை, சைவப்புலவர் திரு. சி. திருநாவுக்கரசு உபதலைவர்களாகவும், சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன் கௌரவ செயலாளராகவும், சைவப்புலவர் மு. முரளிதரன் உப செயலாளராகவும், சைவப்புலவர். இராசையா ஸ்ரீதரன் பொருளாளராகவும், சைவப்புலவர் வ. கந்தசாமி தேர்வுச் செயலாளராகவும், உதவியாக சைவப்புலவர் கு. நித்தியானந்தமும் சைவப் பிரசாரகராக சைவப்புலவர் கா. கமலநாதனும் கடமை யாற்றினார்கள்.

இவர்களின் கூட்டு மொத்த முயற்சியால் சைவநெறி தழைத்தோங்க வேண்டும் எனச் சங்கத்தின் போசகர்களாக சிவத்தமிழ்ச் செல்வி சைவப்புலவர், பண்டிதை, கலாநிதி, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களையும், சைவப்புலவர், சைவப்புலவர்மணி, வித்துவான் திரு. வ. செல்லையா அவர்களையும் சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர் இ. செல்லத்துரை அவர்களையும் கொண்டு நல்ல ஆலோசனைகளைப் பெற்று தொழிற் பட்டு வந்தது.[8]

2000ம் ஆண்டு தொடக்கம் மீண்டும் இளஞ்சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகளிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களை அழைத்து யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தை மையமாகக் கொண்டு சனி, ஞாயிறு ஆகிய தினங்களில்

பாடத்திட்டத்தை அடிப்படை யாகக் கொண்டு விரிவுரைகள் நடாத்தப்படுகின்றன. காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை இவ்விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன. இவ்விரிவுரைகளை சைவத்திலும் சைவ சித்தாந்தத்திலும் புலமை வாய்ந்த சைவப்புலவர்கள், பண்டிதர்கள் நடாத்தி வருகின்றனர். இவ்விரிவுரைகள் யாவும் இலவசமாகவே நடாத்தப்படுவதைக் காண முடிகின்றது. இவ்விரிவுரைகளை நாவலர் பெருமான் போல சேவை அடிப்படையில் நிகழ்த்தி வருபவர்களின் விபரம் பின்வருமாறு[9]

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை
சைவப்புலவர் சு. செல்லத்துரை
சைவப்புலவர் இ. செல்லத்துரை
சைவப்புலவர் கலாவாணி ஜெயபாலன்
சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்
சைவப்புலவர் கா. கமலநாதன்
சைவப்புலவர் வ. கந்தசாமி
சைவப்புலவர் க. நித்திய தசீதரன்
சைவப்புலவர் சி. திருநாவுக்கரசு
பண்டிதர் - வ. பேரின்பநாயகம்
சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்
சைவப்புலவர் சா. தில்லைநாதன்
சைவப்புலவர் சு. துஷ்யந்

மேலும் இம்மாணவர்களின் கற்றல் வசதியை அதிகரிக்கும் முகமாக தேவையான புத்தகங்களை விரிவுரையாளர்கள் தங்களிடமிருந்து இரவல் வழங்கி சுழற்சி முறையில் கற்கச் செய்கின்றனர். கல்லூரி வீதியில் அமைந்த நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இயங்கும் சைவபரிபாலன சபை நூல் நிலையத்தில் தேவையான நூல்களைக் கற்கவும் வழிவகை செய்யப்பட்டு வருகின்றது.[10]

மேலும், சில முக்கிய விடயங்களை கட்டுரைகளாக எழுதி அச்சடித்து (Tude) வழங்குகின்றார்கள். அந்த வகையில் குரு வழிபாடு, சங்கம வழிபாடு, சைவ சித்தாந்தம் கூறும் பதி, நடராஜர், சைவநாற்பாதம், உருத்திராக்கம், புருடார்த்தங்கள், ஆகமமுறையிலமைந்த ஆலய அமைப்பு - தத்துவம், உமாபதி சிவாசாரியார் போன்வற்றைக் காணலாம். மேலும், சில முக்கிய நூல்களை அன்பர்களின் உதவியோடு சிறுநூல்களாக வெளியிட்டு உதவி வருகின்றார்கள். அந்த வகையில் திருவுந்தியார், திருமுருகாற்றுப்படை, திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே, திருவாசகம், உண்மை விளக்கம், உண்மை நெறி விளக்கம், திருக்களிற்றுப் படியார், கொடிக்கவி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

எப்படியாயினும் சைவமாணவர்கள் சைவக் கல்வியை கற்க வேண்டும் என்ற பெருவிருப்போடு இச் சங்கமானது தொழிற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது.

இது இவ்வாறிருக்க இம்மாணவர்கள் தேர்வுகளுக்குத் தோற்றுவது மட்டுமன்றி சைவசமயப் பிரசாரகர்களாக வரவேண்டும். சைவ சமய உண்மைகளை சாதாரண மானவர்களும் அறியும் வகையில் சொற்பொழிவாற்றும் திறமையும் பெற வேண்டும் என்ற காரணத்தால் சொற் பொழிவுக்காகப் பயிற்சி வழங்கப்பட்டு விரிவுரைகளின் இறுதியில் நடைபெறும் மாணவர்களின் ஒன்று கூடலில் "செவிக் குணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப் படும்" எனும் வாக்கிற்கிணங்க ஒவ்வொரு மாணவனும் 5 நிமிடங்கள் சொற்பொழிவாற்ற வேண்டும். தாம் தாம் விரும்பிய ஒரு விடயத்தைத் தலைப்பாகக் கொண்டு செயற் படலாம் எனக் கூறப்பட்டு அவ்வாறே ஒவ்வொருவரதும் சொற்திறமை, சொல்லாட்சி, வாக்குவசீகரம் மதிப்பிடப்படுவதையும் காணலாம்.

இதனால் யாழ்ப்பாணத்தில் பல சொற்பொழிவாளர்கள் உருவாகியுள்ளார்கள்.

ஏழு வகை தீட்சைகளிலே ஒன்று சாத்திர தீட்சை. சாத்திர தீட்சை என்பது சைவசித்தாந்த சாஸ்திரங்களை குருவானவர் சீடனுக்கு கற்பிப்பதன் மூலம் அவனிடத்தில் ஞானத்தை உதிக்கச் செய்து மலமாகிய பாசத்தைக் கெடுப்பதாகும். அதாவது இருள் இருக்கின்ற இடத்தில் ஒளியேற்ற வேண்டுமாயின் இருளை அகற்ற வேண்டுமே என நினைக்க வேண்டாம். ஒளியை வரச் செய்தால் இருள் தானாகவே அகலும். ஆகவே சைவப்புலவராகப் போகின்ற மாணவர்கள் ஞானநூல்களைக் கற்க வேண்டும். குறிப்பாக பன்னிரு திருமுறை, 14 மெய்கண்ட சாஸ்திர நூல்களைக் கற்பவன் சைவசமய தீட்சை பெற்றவனாதல் வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டுதான் இளஞ்சைவப்புலவர் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்கும்போது முதல் தகுதியாக “சைவசமய தீட்சை பெற்றிருக்க வேண்டும்” எனக் குறிக்கப்பட்டுள்ளது.[12]

சைவசமயத் தீட்சை பெற்றுள்ளீரா எனவும் அதன் விபரம் பற்றியும் தேர்வு விண்ணப்பத்தில் கேட்கப்பட்டுள்ளது. இதற்கமைய சைவசமயத்தீட்சை பெறாத தேர்வாளர்களுக்காக வருடாவருடம் தேர்வு நடைபெறும். சித்திரை மாதத்திற்கு முன்பாக சைவசமயத் தீட்சையை, முறைப்படி அக்கினி காரியம் செய்து ஓமத்தோடு கூடிய ஔத்திரி தீட்சையாக வழங்கப்படுகிறது.

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாணைப் படியும் சுவாமிகளின் ஆசியோடும் சைவக்குருமார்களினால் சைவ சமய தீட்சை வழங்கப்பட்டும் வருகின்றது. எடுத்துக்

காட்டாக அவர்களின் புள்ளி விபரப்படி 2000ம் ஆண்டு 22 மாணவர்களும் 2001ம் ஆண்டு 39 மாணவர்களும் சைவசமயத் தீட்சை பெற்றுள்ளார்கள் என கௌரவ செயலாளர் குறிப்பிடுகின்றார்.[13]

சைவசமயத்தைக் கற்றிருத்தல் மட்டுமன்றி அவற்றை செய்முறையாக, அதாவது நடைமுறையில் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே சைவப்புலவர் சங்கத்தின் நோக்காக உள்ளது. எனவே, சைவசமயி ஆனவன் சமயதீட்சை பெற வேண்டும் என்ற நியதியை விதியாக்கித் தீட்சை கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

## 3.2. அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் சைவக்கல்விச் செயற்பாடுகள்

### 3.2.1. இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வுகள்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமானது இலங்கை நாட்டில் உள்ள சைவப்புலவர்களையும் புலம் பெயர்ந்து வெளிநாட்டில் வாழ்கின்ற சைவப்புலவர் களையும் இணைத்தும் செயற்படுகின்றது. எனினும் யாழ்குடா நாட்டிலேயே அதிக சைவப்புலவர்கள் உருவாகி வருகின்றார்கள். இன்று இந்நிலை மாறி இலங்கை எங்கணும் விரிவுபடுவதோடு கடல் கடந்து இலண்டன், ஜேர்மனி, சுவிஸ் போன்ற நாடுகளிலும் சைவப்புலவர்கள் உருவாகி வருகின்றார்கள். பொன்விழா ஆண்டோடு மேலும் கனடா, அமெரிக்கா, நோர்வே எனப் பல நாடுகளுக்கும் விரிவடையவுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் இலங்கை நாட்டில் ஏற்பட்ட யுத்தம் இத்தேர்வுகளில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இளஞ்சைவப்புலவர்களை முதலில் நோக்கும்போது

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| விண்ணப்பித்தோர் மொத்தத் தொகை | 8 | 41 | 69 | 82 | 80 |
| யாழ்ப்பாணம் | 81 | 41 | 68 | 72 | 71 |
| திருகோணமலை | | | 1 | 7 | |
| மட்டக்களப்பு | | | | | 2 |
| கொழும்பு | | | | 2 | 1 |
| வவுனியா | | | | 1 | 3 |
| கண்டி | | | | | 3 |

| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 67 | 87 | 72 | 85 | 20 | 47 | 42 | 40 | 46 |
| யாழ்ப்பாணம் | 67 | 47 | 32 | 70 | 19 | 24 | 20 | 30 | 17 |
| திரிகோணமலை | | | | | | | 2 | | 3 |
| மட்டக்களப்பு | | 2 | 4 | 5 | | | 10 | 4 | 19 |
| கொழும்பு | | | 5 | 1 | | 18 | 2 | 3 | 4 |
| வவுனியா | | 38 | 29 | 9 | 1 | 1 | 2 | 2 | 1 |
| கண்டி | | | 2 | | | | | 1 | |
| ஜேர்மனி | | | | | | | 4 | | 1 |
| இலண்டன் | | | | | | 4 | 2 | | 1 |

## சைவப்புலவர்கள்

| ஆண்டு | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 |
|---|---|---|---|---|---|
| விண்ணப்பித்தோர் மொத்தத் தொகை | 11 | 18 | 38 | 43 | 75 |
| யாழ்ப்பாணம் | 10 | 18 | 38 | 43 | 72 |
| திருகோணமலை | | | | | |
| மட்டக்களப்பு | 1 | | | | |
| கொழும்பு | | | | | 1 |
| வவுனியா | | | | | 1 |
| கண்டி | | | | | |
| ஜேர்மனி | | | | | |
| இலண்டன் | | | | | |

| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தம் | 43 | 41 | 72 | 85 | 17 | 33 | 39 | 27 | 23 |
| யாழ்ப்பாணம் | 42 | 37 | 32 | 70 | 14 | 18 | 22 | 24 | 9 |
| திரிகோணமலை | | | | | | | | | |
| மட்டக்களப்பு | | 3 | 4 | 5 | 1 | | 1 | 1 | 8 |
| கொழும்பு | | | 5 | 1 | 2 | 9 | 6 | 2 | 3 |
| வவுனியா | 1 | 1 | 29 | 9 | | | | | |
| கண்டி | | | 2 | | | 1 | | | |
| ஜேர்மனி | | | | | | 3 | 3 | | 2 |
| இலண்டன் | | | | | | 3 | 6 | | 1 |

(மூலம் - தேர்வு விபரத்தின் புத்தகம், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)

இந்த விபரங்களின்படி இவர்கள் செயற்பாடானது சைவத்தில் புலமைபெற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கு வதோடு சைவப்பண்புள்ள, சைவாசாரமுள்ள சைவக் கலாசாரத்திற் கமைவாகத்தம் வாழ்க்கை வாழ்வோரை உருவாக்க வேண்டும் என்ற வகையில் தொழிற்பட்டு, சங்கத்தில் சைவப்புலவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கின்றது. மேலும், ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சைவப்புலவர்களை உருவாக்குவதன் மூலம் சைவத்தில் புலமை பெற்ற இவர்கள், அவ்வூரில் உள்ள ஆலயத்தை மையமாக வைத்து தொழிற்படலாம். அறநெறிப் பாடசாலைகளை சீராக இயக்கிக் கொள்ளலாம். பல சைவப் புலவர்கள் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களாக, அதிபர்களாக தொழிற்படுகின்றார்கள். இந்த சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அறநெறிப் பாடசாலை களுக்கு பொறுப்பாக உள்ள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் அவர்களும் ஒரு சைவப் புலவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இறுதித் தேர்வு, தர்மாசிரியர் தேர்வு என்ற அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் நடாத்துபவர்களும் சைவப் புலவர்களாகவே காணப்படு கின்றனர். அத்தோடு, சைவசமயத்தில் ஏற்படுகின்ற சந்தேகங்களை நீக்கிக் கொள்ள சங்கம் வாய்ப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் பாடசாலை ஆரம்பக் கல்வி, இடைநிலைக்கல்வி என்பவற்றை முடித்துக் கொண்டு மூன்றாம் நிலைக்கல்விக்குத் தகுதி பெற்றுப் பல்கலைக் கழகங்களிலும், கல்வியியற் கல்லூரிகளிலும் கற்க இருக்கும் மாணவர்களுக்கும் இவற்றில் கற்று முடித்தவர்களுக்கும்

சைவசமய அறிவை ஊட்டும் நிறுவனமாகத் தொழிற் படுகின்றது. இது மட்டுமன்றி மூன்றாம் நிலைக் கல்வித்தகுதி பெற்றும் நம் நாட்டின் வசதியின்மை காரணமாக கற்க அனுமதி மறுக்கும் மாணவர்களையும் சங்கம் இத்தேர்வுகளுக்கு அனுமதி அளிக்கின்றது.

## இளஞ்சைவப்புலவர் தேர்வில் தோற்றுவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள்

1. சைவசமயத் தீட்சை பெற்றவராக இருக்க வேண்டும். இத்தோடு பின்வரும் ஒரு தகுதியை உடையவராக இருத்தல் வேண்டும்.
2. சைவ பரிபாலன சபை சைவசித்தாந்த பிரவேச பண்டிதர் தேர்வில் சித்தி
3. சைவ சமயத்தினை ஒரு பாடமாகக் கொண்ட ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்க பிரவேச பண்டிதர் பரீட்சையில் சித்தி.
4. பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி, சைவ சமயம், தமிழ்.
5. கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் குறைந்தது 3 பாடங்களில் சித்தி.

## சைவப்புலவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள்

1. சைவ சமய தீட்சை பெற்றிருப்பதோடு பின்வரும் தேர்வு ஒன்றில் சித்தி பெற்றவராக இருத்தல் வேண்டும்.
2. இளஞ் சைவப்புலவர் தேர்வில் சித்தி

3. சைவசித்தாந்த, பண்டிதர், சைவசித்தாந்த பாலபண்டிதர் தேர்வுகளில் சித்தி

4. ஆரியதிராவிட பாஷா விருத்திச்சங்க பாலபண்டிதர், பண்டிதர் தேர்வுகளில் சித்தி

5. பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரம் சைவசமயம்.

6. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம்

மேற்கூறிய தகுதியை உடையவர்களை விண்ணப்பங் களின் அடிப்படையில் தெரிவு செய்து வார இறுதி முதல் நாட்களாகிய சனி ஞாயிறு ஆகிய தினங்களில் அவர்களுக் குரிய பாடங்களை விரிவுரை முறையில் போதித்து வருகின்றது. பொதுவாக இச்சங்கத்தில் போதிக்கும் விரிவுரையாளர்களை நோக்கும்போது அவர்கள் எல்லோரும் சைவப்புலவர்களாக இருப்பதோடு சைவ சித்தாந்த பண்டிதர் ஆக அல்லது பண்டிதராக இருப்பவர்களேயாம்.

இங்குள்ள பாடத்திட்டங்களில் கொடுக்கப்பட்ட விடயம் அனைத்தும் முழுமையாகக் கற்கப்பட வேண்டியவை ஆகும். குறிப்பாகச் சொல்லப் போனால் பாடல்கள் மனனம் செய்யப்பட வேண்டியவை.

அவற்றிற்குரிய பொருள் பதவுரையாகத் தெரிந்திருக்க வேண்டும் எனும் வகையிலே கற்றல், கற்பித்தல் செயற் பாடுகள் நடைபெறுகின்றமையைக் காணமுடிகின்றது. சிறப்பாகச் சொல்லப் போனால் சைவத்தில் புலமை பெற்றவருக்கான இப்பட்டத்தை பெறுபவர் பட்டத்திற்குரிய தகுதி இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. வெறுமனே பரீட்சையில் சித்தியடைதல் மட்டும் எண்ணாது தாம் தாம் பெற்ற கல்வியை, கல்விப்புலமையை நடுவூர் நல்மரம் பழுத்தாற்

போல அயலவர்களுக்கும் பயன்பட வைக்க வேண்டும் என்பது வேண்டப்படுகின்றது.

சைவசித்தாந்த நூல்கள் பதினான்கையும் இரண்டு தேர்வுகளுக்கும் பிரித்து அகலப்படிப்பு, ஆழப்படிப்பாக சாஸ்திரம் எனும் பாடத்தினுள் சேர்த்துள்ளார்கள். இதில் முக்கிய தத்துவ நூல்கள் ஆழமாகப் படிக்க வேண்டியவை யாகக் காணப்படுகின்றன. உதாரணமாக சைவசித்தாந்த நூல்களுள் மணிமுடியாகத்திகழும் மெய்கண்ட தேவர் எழுதிய "சிவஞானபோதம்" அமைப்பிலிருந்து அவற்றின் உள்ளடக்கம் வரை ஆழமாகப் படிக்க வேண்டியவையாகும்.

### 3.2.2 பாடத்திட்டங்கள்

எந்தவொரு கல்வி முயற்சிக்கும், கல்விச் செயற் பாட்டிற்கும் கலைத்திட்டம் அவசியமானது. கலைத்திட்டத்தினைக் கொண்டே கல்விச் செயற்பாடுகள் அமைகின்றது. கலைத்திட்டமே நோக்கம், குறிக்கோளை அடைய வைக்கும் பாதையாக உள்ளது. கலைத்திட்டம் இருந்தாலேயே கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் சிறப்பாக நடைபெறுவதோடு மதிப்பீடும் சரியாகச் செய்ய முடியும். எனவே சைவப்புலவர், இளஞ்சைவப்புல்வர் ஆகிய தேர்வுகளுக்கான பாடத்திட்டங்கள் பின்வருமாறு அமைகின்றன.[17]

இளஞ்சைவப் புலவர்களுக்கும் சைவப்புலவர்களுக்கும் பொதுவாக இலக்கணம், இலக்கியம், சாஸ்திரம், உரை நடை, வரலாறு எனும் 5 பகுதிகள் உள்ளடக்கப் பட்டுள்ளது. தேர்வும் இதன் அடிப்படையிலேயே ஐந்தாக நடைபெறும்.

**1. இலக்கணம் :** தமிழன் என்பவன் தமிழ் இலக்கணத்தை நன்கு கற்றுத் தேற வேண்டும். இது மட்டுமன்றி சைவத் தமிழ் இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா போன்ற பன்னிரு திருமுறைகளையும், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் போன்ற 14 மெய்கண்ட சாஸ்திர நூல்களையும் மற்றும் திருப்புகழ் போன்ற நூல்களையும் ஒருவன் பொருள் விளங்கி ஐயம் திரிபுறக் கற்க வேண்டுமானால் இலக்கண அமைப்பு நன்கு தெரிந்திருக்க வேண்டும். உதாரணமாக "கந்தபுராண அரங்கேற்றத்தின் போது "திகடசக்கர செம்முகமைந்துளான்" எனும் வரியைப் படித்து பொருள் கூறுகின்ற போது திகழ்கின்ற தசக் (10) கரம் என்று விரிக்கும் போது திகழ் + தச + கரம் என்பதை திகடசக்கரம் என்று புணர்த்த முடியாது. எந்த இலக்கணத்தில் உண்டு" என வினாவிய வரலாற்றைக் கூறி விளங்க வைத்தார், சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள்.[18]

எனவேதான் தமிழ் இலக்கணத்தில் நன்னூல் தொல்காப்பியம், யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங் காரம் எனும் நூல்களைப் பாடத்திட்டத்தில் சேர்த்திருக் கின்றார்கள். இவற்றில் மிக முக்கியமான பகுதிகளை இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைக்குரிய பாடத்திட்டமாக ஒதுக்கியுள்ளார்கள். அவை பற்றிய விபரம் பின்வருமாறு:

## இளஞ்சைவப்புலவர் - இலக்கணம்

1. நன்னூல் காண்டிகை - ஆறுமுக நாவலர்
2. யாப்பருங் கலக்காரிகை
3. தண்டியலங்காரம் - பொதுவியல், பொருளியல்

## சைவப்புலவர் - இலக்கணம்

1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர்
2. தொல்காப்பியம் சொல்லதிகாரம் - சேனாவரையர்
3. செந்தமிழ் இலக்கணம் 1, 2, 3 பண்டிதர் க. நாகலிங்கம்
4. நன்னூல் விருத்தி

**உ. இலக்கியம் :** இலக்கியம் எனும் பகுதிக்குள் அனேகமாக திருமுறைகள் காணப்படுகின்றது. சைவ சித்தாந்த பண்டித பரீட்சைக்கு இருப்பது போலவே திருமுறை என்ற பெயரை வைக்காது இருப்பதற்கு காரணம் இதற்குள் திருக்குறள், கந்தபுராணம் போன்ற பகுதிகள் முழுவதையுமே இணைத்திருக்கின்றார்கள். சைவக்கல்வியை கற்கின்றவர்கள் திருமுறைகளையும் கற்றிருக்க வேண்டிய அவசியத்தை விளக்குகின்றது. ஏனெனில் இவை தோத்திர நூல்களாக வாழ்க்கையிலே, வழிபாட்டிலே பயன்படும் நூலாக இருப்பதுவே காரணமாகும்.

## இளஞ்சைவப்புலவர் - இலக்கியம்

1. சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம் முழுவதும் (7ம் திருமுறை)
2. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முழுவதும் (9ம் திருமுறை)
3. திருமுருகாற்றுப்படை - ஆறுமுக நாவலர் உரை
4. கந்தபுராணம் தட்சகாண்டம் - பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையின் உரை
5. திருக்குறள் அறத்துப்பால் - பரிமேலழகர் உரை

சைவக்கல்வி வாழ்க்கைக்கு உதவுகின்ற காரணத்தால் திருக்குறள் அறத்துப்பால் மிக மிக இன்றியமையாதது. அத்தோடு தட்ச காண்டம் பல உபதேசங்களைக் கூறுவதாலும் கந்த விரதங்களைக் கடைப்பிடிக்கும் முறையைக் கூறுவதாலும் கந்தபுராணத்தின் சாரமாக இருப்பதாலும் தட்ச காண்டம் சேர்க்கப்பட்டுள்ளது.

## சைவப்புலவர் - இலக்கியம்

1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம் முழுவதும் (1ம், 2ம், 3ம் திருமுறை)
2. மாணிக்கவாசகரின் திருவாசகம் முழுவதும் (8ம் திருமுறை)
3. திருமூலரின் திருமந்திரம் முழுவதும் (10ம் திருமுறை)
4. பெரியபுராணம், திருநாவுக்கரசு நாயனார் புராணம் முழுவதும்

**3. சாத்திரம் :** சாத்திரம் எனும்போது இது சைவசித்தாந்த சாத்திரத்தையே குறிப்பிடுகின்றது. ஆகவே இதன் தலைப்பைப் பார்த்த மாத்திரத்திலேயே தொடர்ந்து இதற்கு கீழே என்ன உண்டு என ஆராயத் தூண்டுகின்றது. சைவர்கள் வாழ்வில் உயர்ந்த தத்துவ நூற் கல்வியாக விளங்குவது சைவசித்தாந்த சாஸ்திரம் ஆகும். இது சைவர்களின் பரம்பரைச் சொத்தாகும். எனவே பாட சாலையிலோ பல்கலைக்கழகத்திலோ இத்தத்துவ நூற்கல்வியை முழுமையாகக் கற்க முடியாது இருக்கின்றது. நமது சைவ தத்துவமாகிய சைவசித்தாந்தத்தை சைவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். அதன் கண் உள்ள அருமை பெருமைகளை அழியவிடாது இளைய தலைமுறையினர்க்குக் கொடுக்க வேண்டிய பொறுப்பு சைவப்புலவர்களுக்கும் சைவப்புலவர் சங்கத்திற்கும்

உண்டு. எனவேதான் இந்த சாத்திரம் என்ற ஒரு பகுதிக்குள் இரண்டு தேர்வுகளிலும் எல்லா சைவசித்தாந்த நூல்களையும் அடக்கியுள்ளார்கள்.[19] மேலும் இப் பரீட்சையில் உள்ள சிறப்பு யாதெனில், நூல்களைக் கற்கும்போதே அதனோடு தொடர்புபட்ட இலக்கணக் கருத்துக்களும் விளங்க வைக்கப்படுகின்றது. இவர்களுக்குரிய நூல்கள் எவையென நோக்குவோம்.

## இளஞ்சைவப்புலவர் - சாத்திரம்

1. திருவுந்தியார்
2. திருக்களிற்றுப்படியார்
3. உண்மைநெறி விளக்கம்
4. திருவருட்பயன்
5. கொடிக்கவி
6. வினாவெண்பா

இங்கு சிறிய, இலகுவில் கற்கக் கூடிய நூல்களை இளஞ்சைவப்புலவர் தேர்வில் அறிமுகம் செய்து மாணவர்களை ஆழமான தத்துவங்களைக் கூறும் நூல்களை அடுத்த தேர்வில் சைவப்புலவர் கற்பிக்கின்றனர்.

## சைவப்புலவர் - சாத்திரம்

1. சிவஞானபோத சிற்றுரை
2. சிவஞான சித்தியார் - சுபக்கம்
3. சிவப்பிரகாசம்
4. சங்கற்ப நிராகரணம்
5. உண்மைவிளக்கம்

**4. உரைநடை :** உரைநடை என்பது உரைநடையாக உள்ள இலக்கியங்களைக் குறிக்கின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், வசனநடையிலும் இலக்கியங்களை எழுதலாம் என கந்தபுராண வசனம், பெரியபுராண

வசனம், திருவிளையாடற் புராண வசனம் எனும் நூல்களை எழுதி வெளியிட்டார். இதனாலேயே "வசனநடை கைவந்த வல்லாளன்" எனப் பெருமை பெற்றுக் கொண்டார். இதனடிப்படையிலேயே 19ம், 20ம் நூற்றாண்டுகளில் வசனநடையில் அதாவது உரைநடையிலே பல இலக்கியங்கள் எழுச்சி பெற்றன. எனவே இவற்றையும் சைவக்கல்வியில் அறிமுகம் செய்துள்ளார்கள்.

மேலும், பாடத்திட்டத்தில் காணப்படும் உரைநடை நூல்கள் சாதாரண மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத 2ம் சைவ வினாவிடை 4ம் பாலபாடம் என்பவற்றோடு பெரிய புராண அடியார்களின் வாழ்க்கைச் சம்பவத்தில் வரும் உட்பொருள் தன்மைகள் என்பவற்றையும் எல்லோரும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக இவை சேர்க்கப் பட்டுள்ளது. இத்தோடு சைவத்தின் பெருமையை உணர்த்தும் முகமாக, திருக்குறளை சேர்த்துள்ளார்கள். பெயர் சுட்டிக் கடவுள் வாழ்த்துப்பாடாத காரணத்தால் இன்று எல்லோரும் தமக்குத் தமக்குச் சொந்தம் கொண்டாடுவது மட்டுமன்றி அதில் உள்ள தெய்வத்தை தம் தெய்வம் என்கிறார்கள். எனவே தமிழ் நாட்டில் வாழ்ந்த திருவள்ளுவர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர் என்பதும் அவர் எழுதிய திருக்குறள் சைவத்தின் சைவ சித்தாந்த தத்துவத்தையே கொண்டுள்ளது என்பதும் திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே எனும் நூலின் மூலம் சைவ உலகிற்கு தெளிவாக்கப்பட்டது. எனவே இந்நூலும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த யாழ்ப்பாண மண்ணிலே வாழ்ந்து 20ம் நூற்றாண்டில் சைவத்தையும் தமிழையும் வளர்த்த பெரியவர்களாகிய பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் போன்றோரின்

வாழ்வியலோடு சாதாரண மனிதர்கள் எல்லோரும் இம்மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதோடு மறுமை உலகிலும் இன்பம் துய்க்க வேண்டும் என்ற பெரும் கருணைத் திறத்தினால் எழுதிய உரைநடை நூல்களையும் இணைத்திருக்கின்றார்கள்.

## இளஞ்சைவப்புலவர் - உரைநடை

1. பெரியபுராண வசனம்
2. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம்
3. சிவாலய தரிசனவிதி - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
4. சைவக்கிரியை விளக்கம் - சைவப் பெரியார் சு. சிவபாத சுந்தரம்
5. சமயக்கட்டுரை - பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை

## சைவப்புலவர் - உரைநடை

1. பெரியபுராண சூசனம் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், பண்டிதர் மு. கந்தையா
2. சித்தாந்த விளக்கில் சைவக் கிரியையகள் பண்டிதர் மு. கந்தையா
3. நான்காம் பாலபாடம் - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
4. இரண்டாம் சைவவினாவிடை - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்
5. திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே - க. வச்சிரவேல் முதலியார்.

**5. வரலாறு :** வரலாறு என்பது எப்பொழுதும் யாவரும் தெரிந்திருக்க வேண்டிய முக்கியமான தொன்றாகும்.

சைவசமயத்தவரின் தற்கால அசமந்தப் போக்கினால் பல வரலாறுகள் அழிந்துவிட்டது. வேற்று மதத்தவர்கள் தமக்குச் சாதகமாக பலவற்றை மாற்றியமைக்கின்றனர். எமது பல வரலாறுகள் பேணப்படவில்லை, இன்னும் ஆராயப்பட வேண்டியவை. எனவே, வரலாற்றில் நாம் பின் நிற்கின்றோம் என்பதே தெளிவு. மேலும் ஒரு துறைக்குள் செல்ல முயல்பவன் அதன் வரலாற்றினை கட்டாயம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

சைவசமய வரலாறு எனும் போது இந்தியாவின் வடநாட்டிலே தோன்றி இந்தியா எங்கணும் பரந்தது மட்டுமன்றி கடல் கடந்த நாடுக்ளுக்கும் சைவம் பரவியது. குறிப்பாகச் சொல்லப்போனால் முன்னைய காலங்களில் இலங்கை, தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர், பர்மா, சம்பா போன்ற தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சைவம் பரவியது. தற்காலம் இன்னும் அதிகளவில் விரிவடைந்து மேலைத்தேய நாடுகளுக்கும் பரவியமையையும் அறிய முடிகின்றது. அந்த வகையிலேயே இந்திய வரலாறு மட்டுமன்றி அக்கால கட்டங்களில் மிக முக்கியமான இலக்கியங்களையும், இலங்கையின் இந்துசமய வரலாற்றினையும் இங்கு சேர்ந்திருத்தல் மிகப் பயனுடையது என்றுதான் கூறவேண்டும். மேலும் வரலாறு என்பது முன்னர் இருந்த சைவ சமய நிலைகளை இன்றைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கவும் உதவுகின்றது. அந்த வகையில் பாடத்திட்டத்தில் உள்ள வரலாற்றுப் பகுதிகளை நோக்குவோம்.

## இளஞ்சைவப்புலவர் - வரலாறு

1. இதிகாசங்கள்
2. புராணங்கள்
3. தர்மசாஸ்திரங்கள்

4. நான்கு புருடார்த்தங்கள்
5. சைவக்கிரியைகள்
6. சைவத் திருக்கோயில் அமைப்பு, திருவிழாக்கள்
7. இலங்கையில் சைவ சமய வளர்ச்சி

## சைவப்புலவர் - வரலாறு

1. நான்கு வேதங்கள்
2. சிவாகமங்கள்
3. சிவனின் திருவுருவங்கள்
4. கோயிற் கட்டடக்கலை சிற்பக்கலை வளர்ச்சி
5. இசைக்கலை வளர்ச்சி, நடனக்கலை வளர்ச்சி
6. இலங்கையில் சைவசமய வளர்ச்சி, சைவக்கோயில்கள் சைவம் வளர்க்கும் நிறுவனங்கள் - சைவ பரிபாலன சபை, சைவ வித்தியாவிருத்திச் சங்கம், விவேகானந்த சபை, அகில இலங்கை திருமுறை மன்றம், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம்.

## ஆய்வுக் கட்டுரை

சைவப்புலவர் தேர்வுகளுக்குத் தோற்றுவோருக்கு மேலதிகமாக ஒரு பாடமாக ஆய்வுக்கட்டுரை ஒன்றுண்டு. இந்த ஆய்வுக்கட்டுரையானது சைவப்புலவர் தேர்வில் ஐந்து பாடங்களிலும் சித்தி பெற்றவருக்கே உரியதாகும். பல்கலைக் கழகங்களிலோ மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிலைகளிலோ பாடங்களுடன் ஒன்றாகப் பரீட்சை இறுதிநாளன்று ஆய்வுக் கட்டுரையையும் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால் சைவப் புலவர் சங்கத்தின் இச்செயற் பாடு சற்று வித்தியாசமானது. கற்கும்போதே சுமை

ஏற்றாது, கற்று முடிந்ததும் சித்தியடைந்த மனத் திருப்தியுடன் வேறு சிந்தனையில்லாது ஆய்வுப்பணியில் ஈடுபடுதல் சிறப்பைத் தருகின்றது.

மேலும், ஆய்வுக்கட்டுரை பற்றிக் கூறும் போது அக்கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது. "நீங்கள் சைவப்புலவர் தேர்வில் சித்தியடைந்தமையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றோம். இப்பட்டம் அறிவுக்குரியது மட்டுமன்றி வாழ்வியலுக்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கும் உரியதாகும் என்பதை நீங்கள் அறிவீர்கள். சைவச் செந்நெறிக்குரிய அறிவு ஆசார அனுட்டான வழிபாட்டு முறைகள் தளர்வடைந்துள்ள இவ்வேளையில் நீங்கள் சைவப்புலவராகி சைவப் பண்பாட்டு வாழ்வு வாழ்ந்து மற்றவர்களையும் அவ்விதம் வாழ வழிகாட்டுவீர்கள் என எதிர்பார்க்கின்றோம்" என்பதிலிருந்தும், "ஆய்வுக்கட்டுரை ஒன்றை எழுதுவது உங்களுக்கு மிக நல்லது. உங்கள் அறிவை மேலும் விருத்தி செய்யவும், ஆற்றலை அதிகரிக்கச் செய்யவும் ஒரு ஊக்குவிப்பு முயற்சி" என்று குறிப்பிடுவதோடு அவர்களுக்கு வழிகாட்டல்களும் கொடுக்கப்படுகிறது.[20]

மேலும் இங்கு இரு தலைப்புக்கள் சைவ சமய தத்துவத்தோடு இணைந்து கொடுக்கப்படுகிறது. ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 100 பக்கங்களுள் எழுதுமாறு பணிக்கப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் கையெழுத்துப் பிரதியாகவும் எழுதிக் கொடுக்கலாம். தற்போது கணினி அச்சுப்பதிவு செய்து வழங்கவேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 3.2.3. தேர்வு வினாத்தாள்கள்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமானது நடாத்தும் முக்கியப் பணிகளில் ஒன்று சைவப்புலவர்களை

உருவாக்குதல் என்றறிந்தோம். இப்புலவர்களை உருவாக்க 2 ஆண்டுகள் கல்விச் செயற்பாடுகள் உண்டு. ஓராண்டு முடிவடைந்ததும் தேர்வுகள் உண்டு. முதலாம் ஆண்டு இளஞ் சைவப்புலவர், அதில் சித்தியடைந்த பின்னரே இரண்டாம் ஆண்டு சைவப்புலவர் தேர்விற்குத் தோற்ற முடியும். இந்த வகையில் இரு தேர்வுகளும் மிக முக்கியமானவை. இந்த இரண்டு தேர்வுகளுமே ஒவ்வொருவரையும் மதிப்பீடு செய்வதற்கும் அளவீடு செய்வதற்கும் பயன்படுகின்ற காரணத்தால் இத் தேர்வு களை நோக்கியே மாணவர்கள் செயற்பாடு அமைகின்றது.

தேர்வு வினாத்தாள்களைப் பற்றி நோக்கும் போது பாடத்திட்டத்தின்படி இளஞ்சைவப்புலவர்களுக்கும், சைவப் புலவர்களுக்குமான தேர்வுகள் ஐந்து ஐந்து வினாத்தாள்களை உள்ளடக்கி இருக்கும். அவையாவன இலக்கணம், இலக்கியம், சாத்திரம், உரைநடை, வரலாறு எனும் தலைப்புக்களில் அமைகின்றன.[21] வினாத்தாள்கள் எல்லாமே பொதுவாக 3 மணித்தியாலங்களைக் கொண்டது. இந்நேரத்தினுள் மாணவர்கள் விடையளிக்க வேண்டும்.

**இலக்கணம்** : இளஞ்சைவப்புலவர் இலக்கண வினாத்தாளை நோக்கும்போது நன்னூற் காண்டிகையுரை, யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம் என்ற 3 பாடத்திற்கேற்ற வகையில் வினாத்தாளையும் 3 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றிலும் இருந்து மூன்றிற்குக் குறையாத வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் 10 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். எல்லா வினாக்களுக்கும் சமமான மதிப்பெண்களே வழங்கப்படுகின்றது.

அனேகமாக இவ்வினாத்தாள் அறிவு, கிரகிப்பு வினாக்களாக இருந்த போதிலும் பிரயோகம், பகுப்பு,

தொகுப்பு வினாக்களும் காணப்படுகின்றன. வினாத் தாளைப் பகுப்பாய்வு செய்யும்போது இலக்கணத்தைக் கிரகித்தல் மட்டுமன்றி அவ்விலக்கணத்தைப் பிரயோகிக்க வேண்டும் எனும் நோக்கத்தையும் காண முடிகின்றது.

சைவப்புலவர் இலக்கண வினாத்தாளை நோக்கும் போது இங்கு பாடத்திற்குட்பட்ட நூல்களைப் பிரித்து சமஅளவில் வினாக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாகக் கூறின் 5 நூல்களும் குறைந்தது 3 வினாக்கள் வீதம் அமைவு பெற்றிருக்கின்றது. எனவே ஒருவர் இதற்குள் 10 வினாக்களைத் தெரிவு செய்யும் பட்சத்தில் ஒரு நூலைக் கற்காது விட்டு விட முடியாது.

மேலும், சித்தி கணிக்கும் போது இவ்விலக்கண வினாத்தாள் நன்கு பரிசீலிக்கப்பட்டு கட்டாயம் இலக்கணம் சித்தியடைய வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றது. விளங்கக் கூறின் மற்றைய பாடங்களில் 60க்கு மேற்பட்ட புள்ளிகள் எடுத்த போதிலும் தமிழ் இலக்கணம் 35க்கு குறையாமல் இருக்க வேண்டும். தமிழ் இலக்கணம் 35 மதிப்பெண்ணிற்குக் குறையும் பட்சத்தில் அப்பரீட்சார்த்தி மீண்டும் அடுத்த வருடத் தேர்வில் பங்கு பற்றும் போது 5 பாடங்களையும் மீண்டும் தோற்றுதல் வேண்டும். ஆனால், சங்கம் இந்நடைமுறையை மாற்றி அமைத்து 3 பாடங்களில் சித்தி பெறுபவர்களுக்கு மிகுதி 2 பாடத்தை மட்டும் அடுத்தாண்டில் தோற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கினால், பல சைவப்புலவர்கள் உருவாக வாய்ப்பாகும்.

மேலும், விடைத்தாள் மதிப்பீட்டில் குறிப்பிட்ட நூலாசிரியரின் விளக்கம், உதாரணம் என்பனவே கையாளப்படுவதும் சான்றோர் சிறப்புக்கருதி உள்ளடக்கிய விடயங்களை கட்டாயம் மாணவர் பெற்றிருக்க வேண்டும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு மேலாக பரீட்சார்த்திகளை நோக்கின் அவர்களது மனப்பாங்கிலே 5 வினாத்தாள்களிலும் தமக்கு இலக்கண வினாத்தாளே மிகக் கடினமாக உள்ளது, அதிக பிரயத்தனம் செய்ய வேண்டியுள்ளது என்று கூறுவதையும் காண முடிகின்றது. தமிழர்கள் தமிழிலக்கணத்தை முறையாகக் கற்காவிட்டால் வேறு யார்தான் கற்கப் போகின்றார்கள். எனவே, இவ்விலக்கணங்களை முறையாக கற்கவேண்டிய பொறுப்பு இளம் தலைமுறையினருக்குரியதாகும்.

**இலக்கியம் :** சைவ சமயத்தையும் சைவக் கல்வியையும் மேம்படுத்தும் நோக்கில், சைவசமய உண்மைகளை இளம் தலைமுறையினர்க்கு அறிய வைக்க வேண்டும் என்ற நோக்கில் தொழிற்பட்டு வரும் சைவப்புலவர் சங்கமானது இப்பகுதிக்குள் திருமுறைகளை கூடுதலாக கொடுத்திருக் கின்றார்கள். இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் என்ற இரு தேர்வுகளுக்குள்ளேயும் பன்னிரு திருமுறைகளையும் அடக்கியிருப்பது சிறந்ததாகும். அத்தோடு திருக்குறளில் வாழ்க்கைக்கு இன்றியமையாத பகுதிகள் இணைக்கப் பட்டதோடு, கந்தபுராணத்தில் முக்கியப்பகுதியும் இங்கு காணப்படுகின்றது.

இலக்கிய வினாத்தாளில் மொத்தம் 8 வினாக்களுக்கே விடையளிக்க வேண்டும். ஏனெனில் இலக்கியம் இரசனையோடு அதிகமாக எழுத வேண்டும் என்பது எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு வினாத்தாளில் வரும் வினாக்கள் சற்றுக் குறைவாக்கப்பட்டு, குறிப்பாகச் சொல்லப்போனால் 12 வினாக்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஏனெனில் மாணவர்கள் எல்லாப் பகுதியையும் படித்திருக்க வேண்டும் என்பதாகும். மேலும் இத்தாளில் உள்ள சிறந்த நம்பகம் யாதெனில் 3000 பாடலைக் கொண்ட இலக்கியத்தில் ஒரு பாடலை

எழுந்தமானமாக வினாவி பொருள், நயம் கூறுக எனும் போது மாணவர்கள் எல்லாப் பகுதிகளையும் கற்க வேண்டிய தேவை காட்டப்படுகின்றது. இத்தோடு இவ்வினாக்கள் கட்டாய வினாவாக இருப்பதால் மாணவர்களைச் சரியான முறையில் இனமறியவும் வசதியாக உள்ளது.

மேலும், இவ்வினாத்தாள் சைவ மரபோடு ஒட்டியதான விடயங்களுக்கும் நடைமுறை வாழ்க்கையில் விளங்கியிருக்க வேண்டிய சைவக் கலாசாரத்துக்கும் முன்னுரிமை அளிக்கப் படுவதனையும் காண முடிகின்றது. அத்துடன் திருமுறைப் பாக்களைச் சரியாகப்படிக்கும் சைவப்புலவர்களைக் காண முடிவதோடு ஆசிரியத் தொழிலிலுள்ளோர் தமது ஆளுமையையும் வாண்மை விருத்தியையும் வளர்க்க இது நல்ல சந்தர்ப்பமாகின்றது.

**சாத்திரம் :** இது, சைவக் கல்வியில் மிக ஆழமான அறிவியல் சித்தாந்தமாகும். எனவே இக்கல்வி மரபை மிகச்சிறப்பாகக் கற்றவர்களா என மதிப்பிடலே இவ்வினாத்தாளின் நோக்கமாகும். இவ்வினாத்தாளானது இளம் சைவப்புலவருக்கும், சைவப் புலவர்களுக்கும் 12 வினாக்களில் எட்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இங்கும் சாத்திர நூல்களை ஆழமாகக் கற்றுள்ளார்களா? எல்லா நூல்களையும் கற்றுள்ளார்களா என மதிப்பிடல் இலகுவானது.

மேலும், இவ்வினாத்தாள் மாணவரின் சாத்திர அறிவை ஆழமாக மதிப்பிடுவதற்கு ஏற்ற வகையில், குறிப்பாக சில பாடல்களை எழுதி அதற்கு பதவுரை, விளக்கம் தருமாறு கேட்கப்படுகின்றது. அத்தோடு சைவசித்தாந்த சாஸ்திரம் தேவாரத் திருமுறைகளில் எவ்வாறு அமைவு பெற்றுள்ளது எனும்

வகையில் பிரயோக வினாக்களையும் காண முடிகின்றது. இத்தோடு தொகுப்பு, பகுப்பு வகை வினாக்களையும் கண்டு கொள்ள முடிகிறது.

சைவசித்தாந்த சாஸ்திரம் மதிப்பிடும் பணியும் அதனது புள்ளிகளும் நன்கு பரிசீலிக்கப்பட்டு 35 புள்ளிகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஏனென்றால் சைவத் தத்துவத்தின் உண்மைக் கருத்துக்களைச் சரியான முறையில் அறிந்திருக்க வேண்டியதன் அவசியம் உணர்த்தப்படுகிறது.

**உரைநடை :** பெயருக்கேற்ற வகையில் வசனநடை இலக்கியங்களே இங்கும் பாடத்திட்டத்தில் உண்டு. சைவத்தின் அருங்கருத்துக்களைத் தொகுத்து 19ம், 20ம், நூற்றாண்டுகளில் வாழ்ந்த சைவ அறிஞர்கள் கருத்துக்களாக வெளிவந்தவை இவ்விலக்கியங்கள். இவ்வினாத்தாள் 12 வினாக்களைக் கொடுத்து, முதலாம் வினாவுடன் விரும்பிய 8 வினாக்களுக்கு விடையளிக்கு மாறு கேட்கப்படுகிறது. முதலாம் வினாவில் 10 சிறிய வினாக்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இங்கும் கூடுதலாக எழுத வேண்டியிருப்பதால் விடையளிக்கும் வினாக்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளார்கள். முன்னர் கூறியது போல கற்பவை எல்லாம் கற்க வேண்டும் என்பதால் வினாக்களின் மொத்த எண்ணிக்கையையும் குறைத்துள்ளார்கள் என்பதை அறிய முடிகின்றது.

மேலும் இவ்வினாத்தாள் அறிவே மட்டுமன்றி பிரயோக வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது. இத்தோடு செயன்முறையாக அவதானித்த விடயங்களையும் தேர்வு நாடியிலிருந்து அவதானிக்கக் கூடிய வகையில் வினாத்தாள்கள் அமைந்துள்ளது.

5. **வரலாறு :** சைவ சமய வரலாறுகளையே உள்ளடக்கியுள்ளது. இது ஒரு பெரும் பகுதியாக இருந்த போதிலும் முன்னர் பெற்றுள்ள அனுபவங்களோடு விடையளிக்க முடியும் எட்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். 12 வினாக்கள் வழங்கப்படும். பொதுவாக இவ்வினாத்தாள்களுக்கு எல்லோருமே நிறைந்த விடையளித்து வருகின்றமையை அறிய முடிகின்றது. 5 பாடங்களுக்குள்ளும் பொதுவாக அதிகப் புள்ளிகளைப் பெறுகின்ற பாடமாக வரலாறு அமைகின்றது.

விடைத்தாள் மதிப்பீடு நடைபெற்றதும் நிர்வாக சபையினர் ஒன்றுகூடியே புள்ளிகளை ஆராய்ந்து முதலாம் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம் சித்திப் புள்ளி என்பன தீர்மானிக்கப்படுகின்றது. சித்திப் புள்ளி என்பது ஒவ்வொரு பாடத்திலும் 35க்கு குறையாமல் இருக்க வேண்டும். மொத்தத்தில் 375 மதிப்பெண்ணுக்குக் குறையாமற் பெறுவோர் முதலாம் தரமாகக் கணிக்கப் படும். 250 மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவோர் 2ம் வகுப்பினராகவும், 175 மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறுவோர் 3ம் வகுப்பினராகவும் சித்தியடைந்ததாகக் கருதப்படுவர். எக்காரணம் கொண்டும் நூனசித்தியளிக்கப் படாது என்றும் விதிகளில் கூறப்பட்டுள்ளது.[22] ஆனால், நூனசித்தி வழங்கவேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. சங்கம் இந்த சந்தர்ப்பத்தை வழங்கினால் எல்லோரும் உவந்து ஏற்பார்கள்.

### 3.2.4. பட்டம் பெற்றோர் பட்டியல்

1960க்கு முன்னர் இந்தியா சைவசித்தாந்த மகாசமாஜத்தினர் சைவப்புலவர் தேர்வை நடாத்தி பட்டம் வழங்கினார்கள். அதன் பிற்பாடு ஆண்டு ரீதியாகப் பட்டம் பெற்றவர்களது பட்டியலை இங்கு தருகின்றோம்.

## பட்டச் சான்றிதழ்

இங்கு பட்டம் வழங்கியவரைக் குறிப்பிடுமுன் இவர்களது பட்டச்சான்றிதழையும் இவ்விடத்தில் நோக்க வேண்டியவர்களாகின்றோம். "உ" பிள்ளையார் சுழியை மரபிற்கமைய இட்டு எங்குமே சிவம் பிரகாசித்து உள்ளது என்ற சைவசித்தாந்த சர்வ வியாபகக் கருத்தைக் கொண்டு "சிவமயம்" இடப்பட்டு அதன் கீழ், சைவத்தின் உயர்ந்த ஸ்தானமாகவும் சைவர்களால் கோயில் எனப் போற்றப்படுவதும் இந்தியாவில் இருதய ஸ்தானமாகவும், திருமுறை ஏடுகள் பாதுகாத்து வைக்கப்படும் இடமாகவும் பன்னிரு திருமுறைகளிலும் போற்றிப் பாடப்படுவதும், பெரிய புராணம் எழுதப்பட்டும், அரங்கேற்றப்பட்டும் அனவரதமும் ஆனந்தத் தாண்டவமாடும் கனகசபையைக் கொண்டதும் எல்லா மன்னர்களாலும் திருப்பணி செய்யப் பெற்றதும் ஆகாய லிங்கமாகிய உயர் சிவலிங்கத்தை கொண்ட தலமாகிய அறிவு வெளி எனப் போற்றப் படுகின்ற கல்விக்கும், ஞானத்திற்கும் சிந்தனைக்கும் அரிய சிவமாக விளங்குகின்ற சிதம்பரத்தைப் போற்றி "திருச்சிற்றம்பலம்" எனவும் இடப்பட்டுள்ளது. ஏனெனில் திருச்சிற்றம்பலம் என்று அகக் கண்களால் சிதம்பரத்தை தரிசிக்க முத்தி கிடைக்கும் என்பதாகும்.

இதற்கடுத்து சங்கப் பெயர் பதிவெண்ணுடன் HA/4/J/25 பட்டப்பெயர் "சைவப்புலவர்" என வழங்கப்படுகின்றது என்றால் இவை பல கருத்துப்பட சைவத்தில் புலமை பெற்றவர் என்பது கருத்தாகும். அதாவது சைவசமய உண்மைகளை ஐயம் திரிபுற அறிந்து தெளிந்தவர் என்றும் அறிவுடையார் எனும் கருத்திலும் அமைந்துள்ளமையைக் காணலாம். இந்த வகையிலேயே தெய்வத் தன்மையான நல்ல வழியைக் கூறும் சைவ சமயத்தில் நல்ல இனிய தமிழை ஓதுகின்ற சைவன்

ஒருவனாக வாழ்ந்து, சைவ சமயத்தையே கடைப்பிடித்து உயர்ந்து வாழ்வர் என ஆசி கூறப்பட்டுள்ளது.

''திருநெறிய தீஞ்சொற் றமிழோதுஞ் சைவ
வொரு நெறிஞர் வாழ்வ ருயர்ந்து''

சைவ நன்மக்கள், சிவனருள் வழிபட்ட சான்றோர்களால் அமைந்துள்ள அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் இந்த ஆண்டில் சைவ நெறியில் நின்று, சைவத் தேர்வில் இத்தனையாம் தரத்தில் சித்தி பெற்றமைக்காக இவருக்கு (பெயர்) சைவப்புலவர் எனும் பட்டத்தை சைவச்சான்றோர்கள் மத்தியில் பெரியோர்களால் வழங்கப்படுகின்றது.

இதன் பிற்பாடு பட்டதாரி எவ்வழியில் வாழ வேண்டும் எனவும் விளங்க வைத்தமையை காண முடிகின்றது. இவர் சிவனருள் பேணலும் சிவனடியாரைப் போற்றிப் பணிபுரிதலும், கொலை, களவு, பொய் என்னும் பஞ்சமா பாதகங்களை தவிர்த்து சைவர்களை சான்றோர்களாக உருவாக்க சொல்லுறுதியும் உண்மையை விளங்க வைக்கும் நல்லாற்றலும் பெற்று, தானும் இன்பமடைந்து மற்றோரையும் பேரின்பப் பெருவாழ்விற்கு அமர்த்த வேண்டும் எனக் குறிப்பிடப் படுகின்றது.[23]

## சைவப்புலவர் பட்டம் பெற்றோர் பட்டியல் 1962ற்கு முன்னர்

சைவப்புலவர் கா. அருணாசல தேசிகமணி, மட்டக்களப்பு

சைவப்புலவர் வ. செல்லையா, இளவாலை

சைவப்புலவர் ச. சச்சிதானந்தசிவம், ஏழாலை

சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை
சைவப்புலவர் இ. செல்லத்துரை, சிறுப்பிட்டி
சைவப்புலவர் வ. கந்தசாமி, கந்தர்மடம்
சைவப்புலவர் வ. சித்திவிநாயகம், மட்டக்களப்பு
சைவப்புலவர் இ. கிருஸ்ணபிள்ளை, மட்டக்களப்பு
சைவப்புலவர் வ. செல்லத்துரை, மட்டக்களப்பு
சைவப்புலவர் இ. வடிவேல், திருகோணமலை
சைவப்புலவர் இ. நவரத்தினம்
சைவப்புலவர் இ. திருநாவுக்கரசு, இனுவில்

## 1963ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சு. செல்லத்துரை, இளவாலை
சைவப்புலவர் சி. சிந்தாமணி, யாழ்ப்பாணம்
சைவப்புலவர் கு. மனோன்மணி, அளவெட்டி
சைவப்புலவர் வி.எஸ். சுந்தரலிங்கம், கோப்பாய்

## 1964ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் நா. விசுவலிங்கம், நயினாதீவு
சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை, கொக்குவில்
சைவப்புலவர் ச. கனகசபாபதி அச்சுவேலி
சைவப்புலவர் த. சுவாமிநாதன், மிருசுவில்

## 1965ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சி. பொன்மணி, ஏழாலை
சைவப்புலவர் த. அன்னலட்சுமி, அளவெட்டி

சைவப்புலவர் அ. இரத்தினம், இளவாலை
சைவப்புலவர் V.T செல்லத்துரை, காரைதீவு
சைவப்புலவர் க. தங்கராசா, ஏழாலை
சைவப்புலவர் க. ஜெயமணி, தெல்லிப்பழை
சைவப்புலவர் ஸ்ரீ அப்புத்துரை, இளவாலை
சைவப்புலவர் த. இராசரத்தினம், அளவெட்டி
சைவப்புலவர் சி. இராஜேஸ்வரி, யாழ்ப்பாணம்
சைவப்புலவர் க. சிற்றம்பலம், யாழ்ப்பாணம்
சைவப்புலவர் தி. பத்தினியம்மா, பருத்தித்துறை

## 1966ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் வை. இராமகிருஷ்ண ஐயர், ஊர்காவற்றுறை

## 1967ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் க. தங்கேஸ்வரியம்மா, நாவலப்பிட்டி
சைவப்புலவர் க. நல்லரத்தினம், மண்டூர்
சைவப்புலவர் த. சுந்தரலிங்கம், நாவலப்பிட்டி
சைவப்புலவர் பொன் தங்கவேலு, நாவலப்பிட்டி
சைவப்புலவர் செ. விஜயம், நாவலப்பிட்டி
சைவப்புலவர் வே. இராசலட்சுமி, நாவலப்பிட்டி
சைவப்புலவர் வெ. தம்பிராசா, மட்டக்களப்பு
சைவப்புலவர் சி. பொற்பதி, சாவகச்சேரி
சைவப்புலவர் வே. முத்துலிங்கம், தெல்லிப்பழை
சைவப்புலவர் பொ. தெய்வேந்திரம், பன்னாலை
சைவப்புலவர் ச. தையல்நாயகி, யாழ்ப்பாணம்

## 1968ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சி. கந்தையா, ஏழாலை
சைவப்புலவர் க. வேல்முருகு, மட்டக்களப்பு
சைவப்புலவர் க. பரமேஸ்வரி, தெல்லிப்பழை

## 1969ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் அ.கி. ஏரம்பமூர்த்தி, மீசாலை
சைவப்புலவர் மரகதவல்லி சரவணமுத்து, திருநெல்வேலி
சைவப்புலவர் நா.க. தங்கரத்தினம், சித்தங்கேணி
சைவப்புலவர் கண்மணி சின்னத்தம்பி, தையிட்டி
சைவப்புலவர் சி. வைத்தியலிங்கம், கொழும்பு - 12
சைவப்புலவர் சிவசிதம்பரம் திருநாவுக்கரசு, இளவாலை

## 1972ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன், நாச்சிமார் கோவிலடி
சைவப்புலவர் ஸ்ரீ தயாளன், உடுவில்
சைவப்புலவர் செ. குணபாலசிங்கம், தெல்லிப்பழை

## 1973ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சா.தில்லை நாதன், மண்டூர்

## 1991ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் கலாநிதி செ. திருநாவுக்கரசு, அல்லைப்பிட்டி

## 1992ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் ஆ. கனகரத்தினம், சுழிபுரம்

## 1995ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் கலாவாணி செல்லத்துரை, சிறுப்பிட்டி

## 1997ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் கா. கமலநாதன், வரணி
சைவப்புலவர் மு. முரளிதரன், கோப்பாய்
சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன், மாவிட்டபுரம், புத்தூர்
சைவப்புலவர் சி. நவரத்தினம், கரவெட்டி

## 1998ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் ப. சாந்தகுமார், அளவெட்டி
சைவப்புலவர் க. மணிமார்பன், வட்டுக்கோட்டை
சைவப்புலவர் க. நடராஜா, கைதடி
சைவப்புலவர் சி. பாலமுரளி, கரவெட்டி
சைவப்புலவர் இ. நித்தியானந்தன், திருநெல்வேலி
சைவப்புலவர் விமலரஞ்சினி மயில்வாகனம், கொடிகாமம்

## 1999ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் க. நித்திய தசீதரன், பன்னாலை
சைவப்புலவர் சி. நந்தகுமார், உரும்பிராய்
சைவப்புலவர் வ. ஆ. தங்கமயில், கரவெட்டி
சைவப்புலவர் பூ. நகுலன், யாழ்ப்பாணம்
சைவப்புலவர் சொ. கோவிந்தர், சண்டிலிப்பாய்
சைவப்புலவர் பு. ஸ்ரீபவன், சங்கானை
சைவப்புலவர் ஏ. அனுசாந்தன், குப்பிளான்
சைவப்புலவர் பு. வசந்தகௌரி, சண்டிலிப்பாய்
சைவப்புலவர் செ. யமுனாராணி, அச்சுவேலி
சைவப்புலவர் வ. திலீபா, யாழ்ப்பாணம்
சைவப்புலவர் ந. கல்யாணி, கரவெட்டி
சைவப்புலவர் பா. தாட்சாயணி, நல்லூர்
சைவப்புலவர் சி. விஜயராகினி, பண்டத்தரிப்பு
சைவப்புலவர் இ. சசிகலா, வட்டுக்கோட்டை
சைவப்புலவர் ச. செபமாலைதாசன் யாழ்ப்பாணம்
சைவப்புலவர் செ. இரத்தினேஸ்வரி பண்டத்தரிப்பு
சைவப்புலவர் செ. சுகிர்தா, சங்கானை
சைவப்புலவர் சி. விஜயகௌரி, பண்டத்தரிப்பு
சைவப்புலவர் க. தவராணி, சுழிபுரம்

## 2000ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் நா. ஜெயகௌரி, நீர்வேலி
சைவப்புலவர் ப. ருத்திராதேவி, தெல்லிப்பழை
சைவப்புலவர் செ. தயாளினி, கொக்குவில்

சைவப்புலவர் அ. நாகேஸ்வரி, கந்தர்மடம்
சைவப்புலவர் ந. லலினா, நல்லூர் ஊர்காவற்றுறை
சைவப்புலவர் வி. பராசக்தி, நீர்வேலி
சைவப்புலவர் பா. மீனலோசினி, கொழும்புத்துறை
சைவப்புலவர் தி. தீபன், சண்டிலிப்பாய்
சைவப்புலவர் கு. லலிதா, மல்லாகம்
சைவப்புலவர் யோ. யோகரூபி, யாழ்ப்பாணம்
சைவப்புலவர் நா. பன்னீர்ச்செல்வி, தாவடி
சைவப்புலவர் செ. இந்திரா, கனடா
சைவப்புலவர் த. ஜமுனா, கொக்குவில்
சைவப்புலவர் கு. கிருபாகினி, அச்சுவேலி (கனடா)
சைவப்புலவர் அ. சுப்பிரமணியம், மூளாய்
சைவப்புலவர் க.வே. செல்வகுமார், வரணி
சைவப்புலவர் பா. சர்வேஸ்வரசர்மா, இலண்டன்
சைவப்புலவர் கு. அரசேஸ்வரன், நல்லூர்
சைவப்புலவர் அ. மனோகரன், கொக்குவில்

## 2001ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் மா. சுறாகினி, அளவெட்டி
சைவப்புலவர் உ. உலகநாதன், கோப்பாய்
சைவப்புலவர் ச. கார்த்திகா, தாவடி
சைவப்புலவர் ஜெயந்தி கமலேஸ்வரன், கொக்குவில்
சைவப்புலவர் ஜெயந்தி கோபால பிள்ளை, கொக்குவில்
சைவப்புலவர் வே. கமலேஸ்வரன், கொக்குவில்

சைவப்புலவர் வேலாயுதர், ஜெயகுரு, சுழிபுரம்
சைவப்புலவர் அ. கருணாகரன், சுழிபுரம்
சைவப்புலவர் அ. இராஜரட்ணம், நல்லூர்
சைவப்புலவர் க. விமலநாயகி, கரவெட்டி
சைவப்புலவர் நா. கோகிலவதனி, கொடிகாமம்,
சைவப்புலவர் தி. ரூபி, சண்டிலிப்பாய்
சைவப்புலவர் ச. தயாநிதி, நீர்வேலி
சைவப்புலவர் பொ. சந்திரவேல், குப்பிளான்
சைவப்புலவர் சி. மதனமோகராசா, குப்பிளான்
சைவப்புலவர் வை. பாலகிருஷ்ணன், திருகோணமலை
சைவப்புலவர் டாக்டர். வெ. சக்திவேல்,
தெல்லிப்பழை
சைவப்புலவர் ஹேமலோஜினி, குமரன், கொழும்பு
சைவப்புலவர் ரேவதி செல்வராசா, நீர்வேலி
சைவப்புலவர் சு. மனோரஞ்சனி, அராலி.

## 2002ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் கி. சிவமணி, காரைநகர்
சைவப்புலவர் ச. முகுந்தன், இணுவில்
சைவப்புலவர் ம. சிவலிங்கம், கோண்டாவில்
சைவப்புலவர் வி. ரமணன், நெடுந்தீவு
சைவப்புலவர் வை. சி. சிவசுப்பிரமணியம்,
கந்தர்மடம்.
சைவப்புலவர் சுபாசினி தம்பிராசா,
வண்ணார்பண்ணை
சைவப்புலவர் குலசிங்கம் ரஜீபன், ஏழாலை

## 2003ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சு. மகேஸ்வரி, மீசாலை
சைவப்புலவர் விஜிதா சுரேஸ்குமார், தாவடி
சைவப்புலவர் ஆறுமுகம் சிவகுமார், பண்டத்தரிப்பு
சைவப்புலவர் வை. துளசிமலர், சாவகச்சேரி
சைவப்புலவர் பேபி வதனா தில்லையம்பலம், வரணி
சைவப்புலவர் சிவசக்தி தளையசிங்கம், கோப்பாய்
சைவப்புலவர் திருமூர்த்தி கலைச்செல்வி, சுழிபுரம்
சைவப்புலவர் ஜெ. சிவக்கொழுந்து, சுழிபுரம்
சைவப்புலவர் உமா பாலசிங்கம், ஊடுப்பிட்டி
சைவப்புலவர் பேரானந்தம் உஷாசினி, அல்வாய்
சைவப்புலவர் கவிதா கதிரமலை, கோண்டாவில்
சைவப்புலவர் ஆனந்தி ஜெயரத்தினம், மானிப்பாய்
சைவப்புலவர் இ. திருமாறன், பருத்தித்துறை
சைவப்புலவர் அ. பிருந்தாகுமாரி, மண்டதீவு
சைவப்புலவர் சிவாஜினி கந்தையா, உடுவில்

## 2004ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சு. தேவமனோகரன், கண்டி
சைவப்புலவர் க. சசிலேகா, அச்சுவேலி
சைவப்புலவர் கு. சுரேஸ்குமார், நல்லூர்
சைவப்புலவர் கு. சுமுகலிங்கம், சாவகச்சேரி
சைவப்புலவர் து. சடாட்சரசிங்கம், சித்தன்கேணி

## 2005ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சுதர்சினி ஆறுமுகலிங்கம், வவுனியா
சைவப்புலவர் பிருந்தா தர்மலிங்கம், வவுனியா
சைவப்புலவர் இராசேந்திரமலர் இராசையா, வவுனியா

சைவப்புலவர் செ. பரமேஸ்வரன், புன்னாலைக்கட்டுவன்
சைவப்புலவர் த. குமரன், மல்லாகம்
சைவப்புலவர் வெ. வரதிதாசன், வட்டுக்கோட்டை

## 2006ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் க. கஜரூபன், மிருசுவில்
சைவப்புலவர் சாந்தரூபன் ஜெயசித்திரா, கொழும்பு
சைவப்புலவர் மதிவதனி முருகன், யாழ்ப்பாணம்
சைவப்புலவர் சியாமினி இராசரத்தினம், அச்சுவேலி
சைவப்புலவர் சண்முகராசா ஸ்ரீகாந்தன், யாழ்ப்பாணம்
சைவப்புலவர் சரோஜினி தேவி தம்பிராசா, நல்லூர்

## 2007ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் விமலாதேவி கந்தையா, மாரீசன் கூடல்
சைவப்புலவர் ந. திருக்குமரன், வரணி
சைவப்புலவர் ஜனகா சிவசுப்பிரமணியம், சுன்னாகம்
சைவப்புலவர் ந. புகன் ஸ்ரீந்திரன், சாவகச்சேரி
சைவப்புலவர் பொன். சுகந்தன், கரவெட்டி
சைவப்புலவர் க. சிவானந்தன், இலண்டன்
சைவப்புலவர் பா. இந்திரசர்மா, அவுஸ்ரேலியா

## 2008ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் அ. அரண்மகன், கொழும்பு
சைவப்புலவர் சி. தங்கரத்தினராசா, ஜேர்மனி
சைவப்புலவர் வை. தேவகி, கட்டைப்பிராய்
சைவப்புலவர் சி. இராதாகிருஷ்ணன், கண்டி
சைவப்புலவர் மா. கணநாதன், வட்டுக்கோட்டை

## 2009ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் த. சக்திவேல், பருத்தித்துறை
சைவப்புலவர் சி. ரமணராசா, தெல்லிப்பழை
சைவப்புலவர் வினோ தம்மையா, சாவகச்சேரி

## 2010ம் ஆண்டு பட்டம் பெற்றோர்

சைவப்புலவர் சு. துஷ்யந், மட்டக்களப்பு
சைவப்புலவர் வைரவன் கோகிலன், ஜேர்மனி
சைவப்புலவர் சந்திரா கோகிலன், ஜேர்மனி
சைவப்புலவர் ஜோ. விஜயதர்சினி, இலண்டன்
சைவப்புலவர் ச. ஜெயலட்சுமி, கொழும்பு
சைவப்புலவர் ந. பிருந்தாவனிதை, சாவகச்சேரி
சைவப்புலவர் கை. ரஜிதா, பன்னாலை, நெல்லிப்பழை
சைவப்புலவர் பிரபா பத்மநாதன், புத்தூர் கிழக்கு
சைவப்புலவர் ரஞ்சிதாஇராஜசேகரன், புத்தூர் கிழக்கு.

## 3.3. இணைப் பாடவிதானச் செயற்பாடுகள்

### 3.3.1. புராண படனம்

புராண படனம் என்பது தமிழ் மொழியில் தோற்றம் பெற்ற கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் போன்றவற்றின் பாடல்களை இசையோடு ஒருவர் பாட அப்பாடல் அடிகளுக்கு இன்னொருவர் அதேயிசையிலே கருத்தினைத் தெளிவாகக் கூறல் ஆகும். யாழ்ப்பாணச் சைவக் கல்வி வரலாற்றில் புராண படனம் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றது. முறைசாராக் கல்வி எனும் வகையில் இவற்றைப் பெற்று

வந்திருக்கின்றனர். 19ம் நூற்றாண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரோடு வளர்ச்சியடைந்த இம்மரபு 20 நூற்றாண்டின் முன் அரை நூற்றாண்டுகளில் சிறப்பாக வளர்ச்சியடைந்து வந்தாலும் இன்று புராண படனம் என்பது சற்றுக் குறைந்து விட்டதே என்று கூற முடிகின்றது. இன்று கந்தசஷ்டி விழாக் காலங்களிலே யுத்த காண்டம் படிப்பதற்கு யார் இருப்பார்கள்? எனத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. எனவே, புராண படனத்தில் இளம் தலைமுறையினரை ஈடுபடச் செய்யவும் புராண படனத்தைப் பற்றி இளந்தலைமுறையினர் நன்கு விளங்கிக் கொள்ளவும் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் வழிசெய்கின்றது.

ஆண்டு தோறும் பெப்ரவரி மாதத்தில் புராண படனப் போட்டிக்கான ஏற்பாடுகள் செய்கின்றார்கள். யாழ் மாவட்டத்தில் சுமார் 200 பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு போட்டிகள் நடாத்தப்படுகின்றன. 10, 11, 12, 13ஆம் தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக் கிடையே ஆண், பெண் என இருபிரிவுப் போட்டிகள் மார்ச் மாதத்தில் நடாத்தப்படுகின்றன. இங்கு ஒரு போட்டியில், பாடுபவர் ஒருவர், பயன் சொல்லுபவர் ஒருவர் என இருவராக ஒரு பாடசாலையிலிருந்து மொத்தம் 4 மாணவர்கள் பங்கு பற்றுகின்றார்கள்.

புராண படனப் போட்டிகளை நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாவலர் முன்னிலையில் நிகழ்த்துவது ஒரு தனிச்சிறப்பு பெறுகின்றது. பௌராணிகர் பலர் போட்டிகளை நடாத்துவதோடு வரும் தவறுகளைச் சுட்டிக்காட்டி போட்டி முடிவில் புராண படனத்தின் ஒழுங்கு, சிறப்புக்களை மாணவர்களுக்கும் அவர்களோடு வருகை தந்த ஆசிரியர்களுக்கும் தெரியப்படுத்துவது மிகமிக இன்றியமையாதது. மேலும், முதியவர், இளைஞர்,

யுவதிகளுக்கு இடையே ஒரு பரஸ்பர உறவு, பணிவுடமை என்பன வளர்ச்சி பெறவும், மிகுதிப் புராண நூல்களையும் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் இவர்களிடையே ஏற்படுவதனையும் காணலாம்.

புராண படனம் போட்டியோடு முடிவடையாமல் வருடந்தோறும் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் 1ம் இடம் பெற்ற 2 மாணவக் குழுக்களும் இந்த புராணபடனத்தை நிகழ்த்திக் காண்பிக்கின்றார்கள். இதனால் பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தந்த பலருக்கும் புராண படனம் பற்றிய அறிவு மட்டுமன்றி புராண படனத்தை தாம் செய்ய வேண்டும், தம் மக்களை இச்செயலுக்கு உட்படுத்த வேண்டும் என்ற மனப்பாங்கு ஏற்படவும் வழிவகுக்கின்றது.

புராண படனப் போட்டியில் பரிசில் பெறுவோருக்கு ஆரம்ப காலங்களில் தங்கப்பதக்கம் வழங்கினாலும் பின்னர் நிதி நிலைமை காரணமாகவும், சைவக்கல்வியை வளர்க்க வேண்டும் எனும் காரணத்தினாலும் பெறுமதி மிக்க சைவத்திருநூல்கள் பரிசில்களாக வழங்கப்படுவதோடு சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன.

## 3.3.2. பண்ணிசை

தமிழிசையில் பண்ணிசை சைவர்களின் பொக்கிசம். பன்னிரு திருமுறை, 14 மெய்கண்ட சாஸ்திரங்களில் தோத்திர நூல் பன்னிரு திருமுறை ஆகும். இசையால் வசமாகாத இதயமேது என்பதன்படி சைவக்கலாசாரத்தில் பண்ணிசை முக்கியமானது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தரையும் தமிழோடு இசைபாடல் மறந்தறியேன் என்ற அப்பரது கொள்கைகளையும் பாட வேண்டும், நான் நெக்குருகி ஆட வேண்டும் என்ற சுந்தரரது இசைப்பணியை எண்ணிப் பெற்ற பயனை

உணர்ந்து, பண்ணிசை மூலம் திருமுறைகளைப் பேணிப் பாதுகாத்து அவற்றில் திறமை படைத்தோரை ஊக்குவித்துச் சைவத்தை வளர்த்தல் வேண்டும். இதனால் சைவக்கல்வி வளரும் என்ற நோக்குடன் அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் பண்ணிசைப் போட்டிகளை வருடந்தோறும் நடாத்தி வந்தது. நாட்டின் இனப்பிரச்சினையால் தளர்வுற்றாலும் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. பண்ணிசைப் போட்டிகள் அகில இலங்கை ரீதியாக நடைபெற்றாலும் கூடுதலாகப் பயன் பெற்றவர்கள் கொழும்பு யாழ்ப்பாணத்துச் சைவர்களே ஆவர். கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என ஆண் பெண்ணாகப் பிரித்து 1ம், 2ம், 3ம் பரிசில்களாக முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், திருமுறை நூல்கள் என்பன பரிசாக வழங்கப்படுகிறது.[27]

### 3.3.3 நாடக விழாக்கள்

இச்சங்கமானது சைவசமயக் கருத்துக்களை காலத்துக்குக் காலம் மக்களது இரசனைக்கு ஏற்ற வகையில் நாடகம் மூலம் விளக்கவும் அவ்வகை நாடகங்களை ஊக்குவித்து, வளர்க்கவும் விரும்பி 1969ம் ஆண்டிலிருந்து அகில இலங்கை ரீதியாக சைவ சமய நாடகப் போட்டி ஒன்று நடாத்துதலை புதிய பணியாக ஆரம்பித்து திறம்பட நடாத்தி வருகின்றது.

மற்றைய போட்டிகள் போன்றே நாடகப் போட்டியிலும் முதல் 3 இடங்களைப் பெறுகின்றவர் களுக்கும் 1ம் பரிசு தங்கப் பதக்கமாகவும் 2ம் பரிசு வெள்ளிப் பதக்கமாகவும் வழங்குவதோடு திறமைப்பரிசு பாராட்டுப் பத்திரம் என்பனவும் வழங்குவதோடு சிறந்த நடிகர் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பாராட்டுப் பத்திரமும் பரிசில்களும் வழங்குகின்றது.

இந்தப் போட்டிகூட அகில இலங்கை ரீதியாகப் பல கலை நிறுவனங்கள் பங்கு பற்றினாலும் யாழ் மாவட்ட நிறுவனங்களே கூடுதலாகப் பரிசை தட்டிச் சென்றுள்ளதையும் அவர்களது அறிக்கை மூலம் அறியமுடிகின்றது.[28]

புராண படனப் போட்டி போன்று இப்போட்டிகளில் பரிசில்கள் பெற்றோரது நிகழ்வுகள் சைவ மகாநாடுகளில் மேடையேற்றப்பட்டும் ஊக்குவிக்கப்பட்டும் வருகின்றன. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மேலும் நாடகப் போட்டிகள் நடாத்தப்படும்போது அவை வைபவ ரீதியான நாடக விழாக்களாகவே நடைபெற்றமையால் பலர் முறைசாராக் கல்வியாக இவற்றின் மூலம் பல்துறை அறிவையும் ஆர்வத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.

மேலும், நாடகங்கள் அனைத்தும் சைவ சமயம் சார்ந்ததாக, சைவசமய நம்பிக்கையை ஊட்டுவதாக அமைந்துள்ளது. பரிசு பெற்ற நாடகங்களை நோக்கும் போது அருளும் மருளும், சிதம்பர தரிசனம், வன்றொண்டன், பக்தமார்க்கண்டேயர், மெய்ப்பொருள், அப்பூதியடிகள், குங்குலியக்கலய நாயனார், அருளுள்ளம், எல்லாம் அவன் செயல். யாருக்குச் சொந்தம் கழற்சிங்கநாயனார் போன்றன சைவ சமயக் கருத்துக்களை வெளியுலகத்திற்கு ஊட்டுவனவாக உள்ளது. மேலும், இப்போட்டிக்காகத் தயாரிக்கப் பட்ட இந்த நாடகங்கள் பல பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஆலய நிகழ்வுகளிலும் மேடையேற்றப் பட்டமையால் சைவசமயக் கல்வியோடு பக்தியை வளர்க்கும் ஒரு செயற்பாடாக அமைகின்றது. இத்தோடு புதிய நடிகர்கள் தோற்றம் பெறுவதற்கும் வாய்ப்பு இருக்கின்றது.

## 3.4. சைவ மகாநாடுகள்

சைவ சமயத்தில் எழுச்சி காண வேண்டும் என்ற வகையிலும் சைவக்கல்வியை மிளிரச் செய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடும் சைவப்புலவர் சங்கமானது ஆண்டுதோறும் வெவ்வேறு இடங்களிலும் சைவ மகா நாடுகளை நடாத்தி வருகின்றது. இந்த வகையில் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணம், ஜேர்மனி, இலண்டன் எனப் பல இடங்களிலும் மகாநாடுகளை நடாத்தி வந்திருக்கின்றார்கள்.

இம்மகாநாடுகளைக் களமாக வைத்து பட்டமளிப்பு விழா, புராண படனம், பண்ணிசை, நாடகப்போட்டி, பரிசளிப்புவிழாக்கள், சைவச் சான்றோரைக் கௌரவிக்கும் கௌரவிப்பு விழா, பாராட்டு விழா என்பவற்றை இச்சங்கம் நடாத்தி வருகின்றது. இந்த வகையில் சங்கம் நடாத்திய மகாநாடுகளையும் நடைபெற்ற இடங்களையும் நோக்குவோம்.[29]

1. கண்டி - இந்துக் கனிஷ்ட வித்தியாலயம்
2. மட்டக்களப்பு - நகர் மண்டபம்
3. கொழும்பு - சரஸ்வதி மண்டபம்,
   தமிழ்ச்சங்கம், வெள்ளவத்தை
4. மன்னார் - திருக்கேதீஸ்வர ஆலயம்,
   மாந்தை
5. யாழ்ப்பாணம் - மாநகரசபைக் கட்டடம்
   - வேலணை சேர்வைத்திலிங்கம்

| | | |
|---|---|---|
| | - | துரைசாமி ம.ம.வி. |
| | - | வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை (நாவலர் மகா வித்தியாலயம்) |
| | | இளவாலை மெய்கண்டான் ம.வி. |
| 6. இலண்டன் | - | சைவ முன்னேற்றச் சங்க நால்வர் மண்டபம் |
| 7. ஜேர்மனி | - | ஐரோப்பிய சிவநெறிக் கழகம், கும்மர் ஸ்பாக், குறிஞ்சிக் குமரன் ஆலயம் |
| 8. இந்தியா | - | சிதம்பரம் |
| 9. நாவலப்பிட்டி | - | இந்து இளைஞர் சங்கம் |

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் விழா

ஆண்டுதோறும் கார்த்திகை மாதத்தில் வரும் மக நட்சத்திரத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூசைத்தினத்தை இச்சங்கமானது சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. சைவத்தையும், தமிழையும் புத்துயிர் பெறச்செய்த நாவலர் வழியில் தொழிற்பட்டு வரும் சங்கமானது நாவலர் பெருமானுக்குக் குருபூசை செய்து வழிபடுவதோடு அப்பெருமானின் சீரிய பணிகளை நினைவு கூர்வதும் சிந்திக்க வேண்டியதாகும். அந்த வகையில் நாவலரது சிந்தனைகளை வெளிப்படுத்து வதற்கும் சைவசமயப் பிரசாரம் செய்யவும் நாவலர் குருபூசை விழா மிக மிக இன்றியமையாதது. எனவே

அகில இலங்கை ரீதியாகப் பல இடங்களில் இக்குருபூசைகளைச் சிறப்பு விழாவாக நடாத்தியதோடு அன்றைய தினம் சாதனைகளை மேற்கொள்ளும் முகமாக சைவ சமய தீட்சைகளையும் சிறுவர்களுக்கு வழங்கி, ஆறுமுக நாவலர் வினாடி வினாப் போட்டிகள் நடாத்தி பரிசளித்தும் வருகின்றார்கள்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் குருபூசை விழாக்கள் நடைபெற்ற இடங்கள் நாவலப்பிட்டி, கற்றன், றொசாலை, மன்னார், திருக்கேதீஸ்வரம் யாழ்ப்பாணம், இளவாலை, வண்ணார் பண்ணை என்பனவாகும். இவ்வாண்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சிலை திரும்பவும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வாசலில் உள்ள மணிமண்டபத்திற்கு 31.08.2010 செவ்வாய்க்கிழமை எழுந்தருள பல செயல்களைச் சங்கம் செய்துள்ளது.

## 3.5. பாராட்டு வைபவங்கள்

ஒருவருடைய செயலை ஊக்குவித்தலுக்குப் பாராட்டுதல்கள் இன்றியமையாதன. பாராட்டுதல் என்பது நேர் ஊக்கியாகச் செயற்படுகின்றது. இதனை சைவசமய ஆன்றோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே உணர்ந்துள்ளார்கள். சிவபெருமானே சம்பந்தருக்கு பொற்றாளம், முத்துசிவிகை வழங்கியும் மருள் நீக்கியாருக்கு நாவுக்கு அரசு எனப் பட்டம் வழங்கியும் சுந்தரருக்கு கேட்டதெல்லாம் வழங்கியும் பாராட்டினார். அநபாயச் சோழன் சேக்கிழாருக்கு தொண்டர்சீர் பரவுவார் எனப் பட்டம் வழங்கினான். திருவாவடுதுறை ஆதீனம் நல்லூர் ஆறுமுகப்பிள்ளைக்கு, வட்டுக்கோட்டை அம்பல வாணருக்கு, கோப்பாய் சபாபதிக்கு நாவலர் எனும் பட்டம் வழங்கி கௌரவித்தது. இவற்றால் பட்டம் பெற்றவர்கள் மட்டுமன்றி பட்டத்தை கொடுத்தவர் களையும் நினைவு கூர்ந்து கொள்ளும் பாக்கியம் ஏற்படுகின்றது.

பல்கலைக்கழகங்களிலும் ஒருவரது சேவைகள் கல்விச் செயற்பாடுகள் என்பவற்றைக் கருத்தில் கொண்டு கௌரவப்பட்டங்கள் வழங்கப்படுவதைப் போன்று அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமும் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் சைவ மகாநாடுகளில் இவ்வாறான பாராட்டு விழாக்களை ஏற்படுத்தி பட்டம் அளித்து வருகின்றார்கள். இந்த வகையில் ஈழத்துப் பெரியார்கள் மட்டுமன்றி அயல் நாட்டுப் பெரியார்களும் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

கௌரவிப்புக்களில் பொன்னாடை போர்த்தல், பொற்கிழி வழங்குதல், மலர் மாலைகள் சாத்துதல், வாழ்த்துப்பத்திரங்களை வழங்கல், விருது வழங்கல், பட்டம் வழங்குதல் எனப் பலவாறாக அமைந்திருக்கின்றது. இவ்வாறாகப் பாராட்டப்பட்டவர் களில் சிலரை இங்கு நோக்குவோம். அவர்களுக்கு வழங்கிய பட்டங்களையும் இங்கு தருகின்றோம்.[30]

| | |
|---|---|
| வேலணை வே. பேரம்பலம் | சைவபூஷணம் |
| புங்குடுதீவு கா. கணபதிப்பிள்ளை | சைவபூஷணம் |
| இந்தியா கி.வா. ஜெகந்நாதன் | சைவபூஷணம் |
| கொக்குவில் த. குமாரசாமிப்புலவர் | சைவபூஷணம் |
| மல்லாகம் நமசிவப்பிரகாசம் | சைவபூஷணம் |
| இளவாலை சி. கார்த்திகேசு | சைவபூஷணம் |
| ஏழாலை மு. ஞானப்பிரகாசம் | சித்தாந்தவித்தகர் |
| இளவாலை மு. வயிரவப்பிள்ளை | சித்தாந்த வித்தகர் |
| இளவாலை வ. செல்லையா | சைவப்புலவர்மணி |
| மட்டக்களப்பு இ. கிருஷ்ணபிள்ளை | சைவப்புலவர் மணி |
| மட்டக்களப்பு வ. சித்திவிநாயகம் | சைவப்புலவர் மணி |
| சிறுப்பிட்டி, இ. செல்லத்துரை | சைவப்புலவர் மணி |



அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் உயிர் நாடியாக விளங்கியவரும் யாழ்ப்பாணம் சைவப்பரிபாலன சபையின் தேர்வுச் செயலாளருமான சைவநெறிக் காவலன், சைவப்புலவர் கலாநிதி வ. கந்தசாமி அவர்களுக்கு 2001ம் ஆண்டு நடைபெற்ற அகில இலங்கைச் சைவப்புலவர் சங்க 41வது பட்டமளிப்பு விழாவில் சைவபூஷணம் எனும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. விருதினை நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீன 2வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் வழங்குகின்றார்கள்.

---

| | |
|---|---|
| மட்டக்களப்பு கா. அருணாசல தேசிகர் | சைவப்புலவர்மணி<br>சித்தாந்த சிகாமணி |
| இந்தியா கருணாகரப் பாண்டியனார் | சைவப்புலவர்மணி |
| மட்டக்களப்பு பி.ரி. அரசன் | சைவப்புரவலர் |
| இளவாலை க. வேலுப்பிள்ளை | சைவப்புரவலர் |

வேலணை எஸ். அருணகிரி சைவப்புரவலர்
யாழ்ப்பாணம் (எந்திரி) பொறியியலாளர்
இ. வைத்தியலிங்கம் சைவப்புரவலர்
கந்தர்மடம் சைவப்புலவர் வ.கந்தசாமி சைவபூஷணம்
கொக்குவில்.. ஆ. சபாரத்தினம் சித்தாந்த வித்தகர்
மலேசியா சைவப்பேரறிஞர் கா. இராமநாதன் செட்டியார்
தமிழ்நாடு திருக்கோயிற் பத்திராதிபர்
ந.ரா.முருகவேள் M.A. MOL.,
கவியோகி சுத்தானந்த பாரதியார்
யாழ்ப்பாணம் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
நயினாதீவு பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்
ஏழாலை பௌராணிகர் சிவசண்முக வடிவேல்

## 3.6. நூல் வெளியீடுகள்

சைவசித்தாந்த நூல்கள், சில சைவசமய நூல்கள் பெறுதற்கரியவாதலால் சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகளுக்குக் கற்கும் மாணவர்களின் சிரமத்தை நீக்க வேண்டியும் இவர்களுக்கு உதவும் முகமாகப் பணக்கஷ்டங்களையும் பொருட்படுத்தாது சங்கம் வருடம் தோறும் ஒவ்வொரு நூலாக வெளியிட எண்ணிப் பல நூல்களை வெளியிட்டு வருகின்றது.

பல அரிய நூல்களுக்குத் தெளிவுரை எழுதியும் விளக்கமளித்தும் குறைந்த விலையில் நூல்களை வெளியிட்டமையைக் காணமுடிகின்றது. அந்த வகையில் சைவப்புலவர் சங்கம் வெளியிட்ட நூல்களை நோக்குவோம்.[31]

உண்மை விளக்கம் - மூலமும் புத்துரையும்

வினாவெண்பா - மூலமும் உரையும்

உண்மைநெறி விளக்கம் - மூலமும் உரையும்

கொடிக்கவி - மூலமும் விளக்கவுரையும்

திருவுந்தியார் - பொழிப்புரை

சைவசித்தாந்தம் நூல்களின் தொகுப்பு

அளவை இலக்கணம்

சைவப்புலவர் வரலாறு

இவற்றை விட சங்கத்தைச் சார்ந்தவர்களால் எழுதி வேறு நிறுவனங்கள் வெளியிட்டுள்ள நூல்களும் அனேகம் காணப்படுகின்றன.

கோயிற் பதிகவுரை - பாத்திரமும் அபாத்திரமும்

சைவநெறி - இரண்டாம் வகுப்பு

சைவசமயம் - மாதிரி வினாவிடை

ஸ்ரீலஸ்ரீ - ஆறுமுகத்தம்பிரான் வரலாற்றுச் சுருக்கம்
திருவண்ணாமலை ஆதீனம்

பைந்தமிழ் வளர்த்த சி. வை. தாமோதரம் பிள்ளை
தாமோதரம்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பகுதி- 1

அவ்வப்போது வெளிவந்த பத்திரிகைகளில் தொடர் கட்டுரைகள் - இவைகள் நூலாக்கம் செய்ய வேண்டியவை.

திருவருட்பயன் - இந்து சாதனம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் - இருவர் -
வீரகேசரி

திருவிழாவாற்றுப்படை - ஈழநாடு

காதலால் நோதல் - வரதர் வெளியீடு

## பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள்

சைவப்பயிற்சி நூல்கள் - வரதர் வெளியீடு

2, 3, 4, 5, 6, 7, 8ம் வகுப்பு - சைவ சமயம்

இந்து நாகரிகம், இந்து சமயம் - உயர்தரம்

கோமாதா பொன் விழாவை முன்னிட்டு சங்கத்தின் சஞ்சிகையாக சைவப்புலவன் என்னும் இதழ் 2010 ஒகஸ்ற் மாதம் முதல் இதழ் வெளிவரத் தொடங்கியது. இதன் ஆசிரியராக சைவப் புலவர் சைவசித்தாந்த பண்டிதர் செ. கந்த சத்தியதாசன் துணை ஆசிரியராக சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், க. நித்தியதசீதரனும் தொழிற்படுகின்றார்கள்.

## 3.7. சைவக்கல்வி நிறுவனங்களுடன் உள்ள தொடர்பு

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமானது சைவக்கல்வி நிறுவனங்களுடன் நிறைந்த தொடர்பைக் கொண்டுள்ளது. இத் தொடர்புகள் அன்றில் இருந்து இன்று வரை இடையூறு இன்றி இருந்து வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும். தொடர்புகள் நண்பர்களைப் போல ஒருவருக்கு ஒருவர் உதவிகள் தேவைப்படும்போது உதவக்கூடியன. ஒருவரின் நற்பணியை ஊக்குவிக்க தோளோடு தோள் கொடுத்தல் கட்டாயமாக அமைய வேண்டியது. அந்த வகையில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமானது தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்கள்[32]

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

அகில இலங்கைத் திருமுறை மன்றம்
ஹற்றன் இந்து மகா சபை
வடமாநில சைவ இளைஞர் மன்றம்
நாவலப்பிட்டி இந்து வாலிபர் சங்கம்
மாவை முத்தமிழ் கலை மன்றம்
கொழும்பு தமிழ்ச் சங்கம்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
யாழ்ப்பாணம் நாவலர் தர்ம கர்த்தா சபை
அகில இலங்கை இந்து மாமன்றம், கொழும்பு
விவேகானந்த சபை, கொழும்பு

றொசாலை சைவநீதிக் கழகம்
சாந்தையர் மடம் கற்பக விநாயகர் சைவசமய அபிவிருத்திக் கழகம்
தெய்வீகப் பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சமய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக்குழு
நியந்தரீ, நல்லூர்
வடபிராந்திய இந்து இளைஞர் பேரவை
மாவை சிவநாதம் பட்டி மன்றக் குழு, புத்தூர்
வேலணை நாவலர் மடம்
இளவாலை சைவ நிறுவனம்
யாழ். ஐக்கிய நூல் வெளியீட்டுச் சபை
யாழ் தமிழ் நூல்கள் பதிப்பு விற்பனைக் கழகம்

## 3.8. சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களின் செயற்பாடுகள்

சைவப்புலவர் பட்டம் பெற்றவர்கள் பல்வேறு வகையிலே தொழிற்படுவதைக் காணமுடிகின்றது. வள்ளுவனின் திருக்குறளில் கூறியபடி "தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் கொள்ளப்படும்" என்ற வகையில் சைவப்புலவர் சங்கத்தினுடைய செயற்பாடு களின் விளைவு பட்டம் பெற்றவர்களினுடைய செயற்பாட்டினால்தான் அமைகின்றது. அந்த வகையில் சைவப்புலவர்களாகப் பட்டம் பெற்று வெளியேறி யவர்களின் செயற்பாடுகளை ஆராய்வோமானால் இது நன்கு புரியும்.

### 3.8.1. அதிபர்கள் சேவை

பல சைவப்புலவர்கள் அதிபர்களாக இருந்து பல பாடசாலைகளை நிர்வகித்து சைவக்கல்வி வளரவும், சைவப்பண்பாடு வளரவும் உழைத்து வந்தார்கள்; வருகின்றார்கள். கொக்குவில் சைவப்புலவர் மு. திருஞான சம்பந்தப்பிள்ளை, இளவாலை சைவப்புலவர் சு. செல்லத் துரை, கைதடி சைவப்புலவர் க. நடராசா, சிறுப்பிட்டி இ. செல்லத்துரை போன்றோர்களை உதாரணமாகக் கூறலாம். இதில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபராக இருந்த சு. செல்லத்துரை அவர்கள் அங்கு ஓர் நடராஜர் சந்நிதி அமைத்து நித்திய நைமித்திய பிரார்த்தனை இடம் பெறச் செய்துள்ளார். மகா சிவராத்திரி அன்று நித்திரை விழித்து நான்கு ஜாமப் பூசைகள் நடைபெறச் செய்துள்ளார்.

மேலும், சைவ நாயன்மார்களின் குருபூசை, சந்தனாசாரியார்களின் குருபூசை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக

நாவலரின் குரு பூசை, நவராத்திரி, ஆதிரை விழா ஆகிய சைவ சமய விழாக்களையெல்லாம் நடாத்தி அதன் உட்பொருட்களை எல்லாம் அவ்வப்போதே எடுத்துக் கூறி, சைவசமயக் கல்வியை செய்முறையோடு கூடிய கல்வியாக மாற்றி, மாலை கட்டுதல், கோலம் போடுதல், பண்ணிசை முறைகளைப் பழக்குதல், பெரியோரை கனம் பண்ணப் பழக்குதல் என நற்பழக்கவழக்கங்களை உடைய பல மாணவர்களை உருவாக்கி உள்ளார்.

இவை மட்டுமன்றி பாடசாலைக்கு வெளியேயும் பல பாடசாலைகள், ஆலயங்கள் எங்கணும் சைவத்தின் அருமைபெருமைகளை பிரசங்கித்து வருவதோடு பசுவைப் பாதுகாக்க வேண்டும் எனும் தன்மையில் கோமாதா எனும் நூலையே எழுதி அச்சிட்டு இலவசமாக அன்பர்களுக்கு அன்பளிப்பு செய்து வருகின்றார். வாக்கும் வாழ்வும் எனும் நற்சிந்தனை, அரங்கப் படையல் நூல் வெளியிட்டதோடு பல விழா மலர்களுக்கு அருமையான பல கட்டுரைகளை வரைந்துள்ளார்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் சைவப்பணியோ மதிப்பிட முடியாத அளவிற்கு உயர்ந்து நிற்கின்றது. ஆசிரியராக இருந்து சைவ சமயக் கல்வியை வளர்த்ததோடு பல ஆலயங்களுக்கும் சென்று தேன் ஒழுகும் திவ்வியத் தமிழிலே சொற்பொழி வாற்றினார். கடல் கடந்து, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் எனப் பல நாடுகளுக்கும் சென்று சைவ சமயத்தை வளர்த்துக் கொண்டார்.

இவற்றோடு தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தை நிர்வகித்து வந்தார். சைவசமயக் கல்வி வளர்வதற்கு துர்க்காபுரம் மகளிர் இல்லம் அமைத்து சிறார்களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்து கல்வி வழங்கி வந்தார். பல சைவ மகாநாடுகளை ஒழுங்கு செய்து சைவ

நூல்களை ஆராய்ந்தும் வெளியிட்டும் வந்தார். இவற்றுக்கும் மேலாக ஒரு அச்சுக்கூடத்தையே நிறுவி அதன் மூலம் பல நூல்களை அச்சிட்டு வெளியிட்டார். அந்த வகை நூல்கள் சிலவற்றை நோக்குவோம்.

பெரியபுராண வசனம்
கந்தபுராணச் சுருக்கம்
கந்தபுராணச்சொற்பொழிவுகள்
பஜனைப் பாடல்கள்
அரியவும் பெரியவும்
அபிராமி அந்தாதி - மூலமும் உரையும்
தெல்லிப்பழை துர்க்கா தேவி பிள்ளைத் தமிழ்
முதலாம், ஏழாம், ஒன்பதாம் திருமுறைகள்

அதிபராக சேவையாற்றியவர்களில் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை சிறப்புக்குரியவர், ஆசிரியர் பதவியில் இருந்து பின்னர் அதிபராகப் பல பாடசாலைகளில் சைவக்கல்வி வளர்ச்சியடைய உதவியுள்ளார். பல சைவ சமயக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அளவையிலக்கணம் எனும் நூல் எழுதி வெளியிட்டுள்ளார்.

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் கடமையாற்றிய வேளை சமய குரவர்களது குருபூசை, நாவலர் பெருமானது குருபூசை மிகச் சிறப்பாக நடைபெற்றது. மேலும் நவராத்திரி மகாநோன்பு, விஜயதசமி கலைவிழாக்கள் சிறப்பாக நடைபெற வழிகாட்டினார். ஒவ்வொரு விழாக்களிலும் சைவசமயத்தின் சிறப்புக்களை சைவசித்தாந்த கண்ணோட்டத்தோடு ஆழமான கருத்துக்களையும் பசுமரத்தாணி போலப் பிள்ளைகளுக்கு இலகுவாக விளங்க வைக்கக் கூடிய வகையில் எடுத்துப் பேசுவார்.

இவை மட்டுமன்றி ஆண்டு தோறும் பரிசளிப்பு விழாக்களை ஆரம்பித்து நடாத்தியும் 1980ம் ஆண்டு சைவப்பிரகாச வித்தியாசாலையின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக நடாத்தியும் நூற்றாண்டு விழாமலர் சைவம் பிரகாசிக்கக் கூடியதாக அமைப்பதற்கும் காரணமானார்.

இதே போல் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை, இணுவில் மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளிலும் அதிபராகச் சேவையாற்றி சைவக் கல்விப்பாரம்பரியம் வளர்ச்சியடையச் செய்தவர். இப்பாடசாலையில் திருமுறைக்குப் பெருவிழா எடுத்த பெருமை சைவப்புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை அவர்களையே சாரும். அத்தோடு மட்டுமன்றி சைவசமயபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களைச் சிறந்த முறையில் வழிப்படுத்தி அவ்வப்போது வேண்டிய உதவிகளைச் செய்து சைவக் கல்வி வளரச் செய்தவர் ஆவார்.

## 3.8.2. சைவ சமயப் பிரசாரகர்கள்

சைவப்புலவர்கள் பலர் சிறந்த சைவசமயப் பிரசாரகர்களாக சைவசமயச் சொற்பொழிவுகளை ஆற்றி வருகின்றார்கள். இதனால் அவ்வப்போது சைவசமயத்திற்கு ஏற்படுகின்ற குழப்பங்களைச் சரியான விளக்கம் கொடுத்து அவற்றை நிவர்த்தி செய்து வருகின்றார்கள். சாதாரண பாமர மக்களுக்கு இறைவன் யார், எப்படிப்பட்டவன், எங்குள்ளான், எவ்வாறு வழிபாடு செய்ய வேண்டும் என்ற வகைகளை எடுத்துக் கூறி சைவசமயத்தோடு சைவக்கல்வியை வளர்த்து வருகின்றார்கள். அந்த வகையில் சில பட்டதாரிகளை நோக்குவோம்.

1. சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை
2. சைவப்புலவர் சு. செல்லத்துரை
3. சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்
4. சைவப்புலவர் க. நித்திய தசீதரன்
5. சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்
6. சைவப்புலவர் மு. முரளிதரன்
7. சைவப்புலவர் சி. நவரத்தினம்
8. சைவப்புலவர் வ. ஆ. தங்கமயில்
9. சைவப்புலவர் கா. கமலநாதன்
10. சைவப்புலவர் சி. நந்தகுமார்
11. சைவப்புலவர் இந்திரா செல்வலிங்கம்
12. சைவப்புலவர் இ. செல்லத்துரை
13. சைவப்புலவர் சி. திருநாவுக்கரசு
14. சைவப்புலவர் கு. சுமுகலிங்கம்
15. சைவப்புலவர் சொ. கோவிந்தர்
16. சைவப்புலவர் பா. சர்வேஸ்வரசர்மா
17. சைவப்புலவர் சி. ஸ்ரீதயாளன்
18. சைவப்புலவர் நா. கலாதரன்
19. சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்
20. சைவப்புலவர் தி. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
21. சைவப்புலவர் சி. அப்புத்துரை
22. சைவப்புலவர் த. குமரன்
23. சைவப்புலவர் சுந்தரமூர்த்தி துஷ்யந்
24. சைவப்புலவர் பொன் சுகந்தன்
25. சைவப்புலவர் ஆ. கனகரத்தினம்
26. சைவப்புலவர் இ. திருநாவுக்கரசு
27. சைவப்புலவ் சி. வேலாயுதம்

### 3.8.3. சைவாசிரியர்கள்

அநேகமாகப் பலர் சைவாசிரியர்களாகப் பாடசாலைகளில் கடமையாற்றி சைவசமயக் கல்வியை வளர்த்து வந்தார்கள், வருகின்றார்கள். அந்த வகையில் ஆசிரியர்களாக இருப்பவர்கள், இருந்து ஓய்வு பெற்றவர்களின் விபரங்களை சுருக்கமாக நோக்குவோம்.

சைவப்புலவர் கா. அருணாசல தேசிகமணி
சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை
சைவப்புலவர் சு. செல்லத்துரை
சைவப்புலவர் வ. செல்லையா
சைவப்புலவர் ஸ்ரீ. அப்புத்துரை
சைவப்புலவர் வ. கந்தசாமி
சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன்
சைவப்புலவர் மு. முரளிதரன்
சைவப்புலவர் சி. நவரத்தினம்
சைவப்புலவர் சி. ஸ்ரீதயாளன்
சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்
சைவப்புலவர் தி. சோமஸ்கந்தராஜக்குருக்கள்
சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி
சைவப்புலவர் கலாவாணி ஜெயபாலன்
சைவப்புலவர் ச. சச்சிதானந்தம்
சைவப்புலவர் கா. கமலநாதன்
சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்
சைவப்புலவர் வெ. சக்திவேல்
சைவப்புலவர் ருத்திரா தேவி பகீரதன்
சைவப்புலவர் ஜனகா சிவசுப்பிரமணியம்

சைவப்புலவர் மீனலோஜினி பாரதி
சைவப்புலவர் சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை
சைவப்புலவர் இரத்தினம் அப்புத்துரை
சைவப்புலவர் ஆ. மணிமாறன்
சைவப்புலவர் சா. தில்லைநாதன்
சைவப்புலவர் செ. திருநாவுக்கரசு (கலாநிதி)
சைவப்புலவர் செ. குணபாலசிங்கம்
சைவப்புலவர் நா. க. தங்கரத்தினம்
சைவப்புலவர் அ.கி. ஏரம்பமூர்த்தி
சைவப்புலவர் த. இராசரத்தினம்
சைவப்புலவர் க. தங்கேஸ்வரியம்மா
சைவப்புலவர் த. சாந்தலிங்கம்
சைவப்புலவர் பொன் தங்கவேலு
சைவப்புலவர் வே. இராசலட்சுமி
சைவப்புலவர் பொ. தெய்வேந்திரம்
சைவப்புலவர் சி. கந்தையா
சைவப்புலவர் ஆ. தாமோதரம் பிள்ளை
சைவப்புலவர் க. வேல்முருகு
சைவப்புலவர் க. நடராசா
சைவப்புலவர் ஆ. கனகரத்தினம்
சைவப்புலவர் வசந்த கௌரி புஷ்பலிங்கம்
சைவப்புலவர் ரூபி திருநாவுக்கரசு
சைவப்புலவர் திருநாவுக்கரசு தீபன்
சைவப்புலவர் திலீபா வல்லிபுரநாதன்
சைவப்புலவர் நமசிவாயம் கல்யாணி
சைவப்புலவர் ஸ்ரீ தாட்சாயினி

சைவப்புலவர் தயாளினி செந்தில்நாதன்
சைவப்புலவர் நாகேஸ்வரி அரவிந்தன்
சைவப்புலவர் ஜமுனா மயில்வாகனம்
சைவப்புலவர் வே. செல்வக்குமார்
சைவப்புலவர் கு. சுரசேஸ்வரன்
சைவப்புலவர் அ. மனோகரன்
சைவப்புலவர் வே. கமலேஸ்வரன்
சைவப்புலவர் ஜெயந்தி கமலேஸ்வரன்
சைவப்புலவர் கிட்டினர் சிவமணி
சைவப்புலவர் சண்முகலிங்கம் முகுந்தன்
சைவப்புலவர் மயில்வாகனம் சிவலிங்கம்
சைவப்புலவர் மகேஸ்வரி சுப்பிரமணியம்
சைவப்புலவர் விஜிதா சுரேஸ்குமார்
சைவப்புலவர் ஆறுமுகம் சிவகுமார்
சைவப்புலவர் துளசிமலர் வைத்தி
சைவப்புலவர் திரிமூர்த்தி கலைச்செல்வி
சைவப்புலவர் கவிதா கதிரமலை
சைவப்புலவர் இரத்தின சபாபதிக் குருக்கள் திருமாறன்
சைவப்புலவர் சிவாஜினி கந்தையா
சைவப்புலவர் சுவாமிநாதபிள்ளை தேவ மனோகரன்
சைவப்புலவர் குஞ்சிதபாதம் சுரேஷ்குமார்
சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம்
சைவப்புலவர் இராசேந்திரமலர் இராசையா
சைவப்புலவர் செல்லையா பரமேஸ்வரன்
சைவப்புலவர் மதிவதனி முருகன்
சைவப்புலவர் நடராசாபுகன்ஸ்ரீந்திரன்

சைவப்புலவர் அருளானந்தன் அரண்மகன்

சைவப்புலவர் சின்னத்துரை இராதாகிருஷ்ணன்

சைவப்புலவர் சுந்தரமூர்த்தி துஷ்யந்

சைவப்புலவர் வைரவன் கோகிலன்

சைவப்புலவர் பிருந்தாவனிதை நடராசா

## 3.8.4. வள ஆளணியராகத் தொழிற்படல்

சைவசமயப் பாடத்தைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு பல சைவப்புலவர்கள் கலந்து கொண்டு சைவாசிரியர்களை வளப்படுத்தி, அவர்கள் மூலமாக சைவக்கல்வியை வளர்த்து வருகின்றார்கள்.

கொழும்பில் இயங்கும் தேசிய கல்வி நிறுவனத்தால் வெளியிடப்படும் ஆசிரியக் கல்வி பாடநெறி நூல்கள், இதழ்வடிவங்கள் (மொடியூல்ஸ்), மாணவர்களது இலவச சைவ சமயப் பாடநூல்களை ஆக்குவதற்கும் சைவப் புலவர்கள் அனுசரணையாக உள்ளனர். மேலும் தேசியக் கல்வி நிறுவனத்தில் நடைபெறும் ஆசிரியப் பயிற்சிக் கருத்தரங்குகளில் கலந்து சைவக்கல்வியை வளர்த்து வருகின்றார்கள். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நடாத்தும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள், தர்மாசிரியருக்கான செயலமர்வுகளை நடாத்துவதிலும் சைவப்புலவர்கள் பெரும் பங்காற்றுகிறார்கள். இவ்வகையில் வள. ஆளணியினராகக் கலந்து கொள்ளும் சைவப்புலவர்களை நோக்குவோம்.

சைவப்புலவர் வ. செல்லையா

சைவப்புலவர் இ. அப்புத்துரை

சைவப்புலவர் ஹேமலோஜினி குமரன்

சைவப்புலவர் இ. செல்லத்துரை

சைவப்புலவர் தயாளினி செந்தில்நாதன்
சைவப்புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை
சைவப்புலவர் சு. செல்லத்துரை
சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்
சைவப்புலவர் ந. புகன்ஸ்ரீந்திரன்
சைவப்புலவர் காத்திகேசு கமலநாதன்
சைவப்புலவர் சுந்தரமூர்த்தி துஷ்யந்
சைவப்புலவர் க. நித்தியதசீதரன்

### 3.8.5. நூலாசிரியர்

பல சைவப்புலவர்கள் சைவசமய நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டு சைவக்கல்வி வளர உதவுகின்றார்கள். இந்நூல்களில் மாணவர்களின் பாடசாலைக் கல்விக்கும் மிகப்பொருத்தமான நூல்கள் அமைந்திருக்கின்றன. இவ்வாறு எழுதி வெளியிட்ட நூல்களை நோக்குவோம்.

### சைவப்புலவர் இ. செல்லத்துரை[32]

உண்மை விளக்கம் - மூலமும் புத்துரையும்
வினாவெண்பா - மூலமும் உரையும்
உண்மை நெறிவிளக்கம் - மூலமும் உரையும்
கொடிக்கவி - மூலமும் விளக்கவுரையும்
கோயிற்பதிகவுரை - பாத்திரமும் அபாத்திரமும்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகத்தம்பிரான் வரலாற்றுச் சுருக்கம்
ஆறுமுகத்தம்பிரான் இருவர்
பைந்தமிழ் வளர்த்த சி. வை. தாமோதரம்பிள்ளை
தாமோதரம்

மழவராயர் கந்தையா வரலாறு
இந்துசமயம், சைவநெறி வழிகாட்டி தரம் 5 - 10

## சைவப்புலவர் ஸ்ரீ அப்புத்துரை

நற்சிந்தனை நாற்பது, அமுதுமொழி, நகுலேசர் நான்மணிமாலை, தமிழர் திருமணம், நகுலேஸ்வரம்

## சைவப்புலவர் சு. செல்லத்துரை

வாக்கும் வாழ்வும், கோமாதா, மங்கல மனையறம், வள்ளல் ஏழூர், சிவநெறி, அரங்கப்படையல்

## சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி

கந்தபுராணச் சொற்பொழிவு
சைவக்கிரியைகளும் விரதங்களும்
வாழும் வழி
பத்து சொற்பொழிவு
மலேசியா சிங்கப்பூர் சொற்பொழிவுகள்

## சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன்[33]

குழந்தைகளுக்கான மழலைச் செல்வம்
பாலர் மணிவாசகம்
வாக்குண்டாம் - உரையுடன்
மழலைத் தமிழ் அமுதம்
மழலைத் தமிழ் இன்பம்
சிறுவர் கதைக்கொத்து
வில்லிசை, சிவதரிசனம்

## சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தப்பிள்ளை

சைவசித்தாந்த விளக்கம்

சைவ சித்தாந்த அளவையிலக்கணம்

## சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்[34]

இந்துசமயம் 640 வினாவிடை

இந்து நாகரிகம் 852 வினாவிடை

இந்து நாகரிகம் வினாவிடை

சைவசித்தாந்தம் 500 வினாவிடை

இந்து நாகரிகம் GA, B.A., மாணவருக்கான வினாவிடை

திருவுந்தியார்

நலம் தரும் தோத்திரங்கள்

இந்துசமயம் கட்டுரை வினாவிடை

இந்து நாகரிகம் கட்டுரை வினாவிடை

## சைவப்புலவர் வ. செல்லையா

அற்புதம், ஈழத்துச் சித்தர் சிரோமணிகள், சைவநீதி நாவலர் நெறியில் நால்வர்

## சைவப்புலவர் க. நித்தியதசீதரன்

சமய, சந்தானகுரவர், ஆலயக்கிரியைகள், குருலிங்க சங்கம வழிபாடு, இந்து நாகரிகம், இந்து சமயம்.

### 3.8.6. வானொலி தொலைக்காட்சி நிகழ்வுகள்

இன்று சைவப்புலவர்கள் உலகளாவிய ரீதியில் சைவத்தையும் தமிழையும் வளர்த்துக் கொள்கிறார்கள்

என்று கூறிக்கொள்வதில் மகிழ்ச்சியுறுகின்றேன். குறிப்பாகச் சொன்னால் சைவப்புலவர்கள் பலர் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சைவசமயக் கருத்துக்களை நற்சிந்தனைகளாகக் கூறிக் கொள்கிறார்கள். ஆலயங்களில் நடைபெற்று வரும் மகா கும்பாபிஷேகத்தோடு தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா, திருக்கல்யாண உற்சவம் போன்றவற்றினை வானொலி ஊடாகவும் தொலைக்காட்சி ஊடாகவும் நேர்முகமாக அஞ்சல் செய்யும்போது இன்றைய தொழில்நுட்ப வசதி அதாவது இன்ரநெற் காரணமாக மேற்குலக நாடுகள், கிழக்குலக நாடுகள் என உலகமெங்கும் இருப்பவர்களுக்கு சைவ சமய நிகழ்வுகள், அதன் தத்துவங்கள், பக்திப் பெருக்குகள் என்பவற்றை அறியவும் கேட்கவும் வாய்ப்பிருக்கின்றது. இந்த வகையில் வானொலி நிகழ்வுகளில் பங்கு பற்றிக் கொண்டிருப்பவர்கள் இலங்கை வானொலிகள், தொலைக்காட்சிகள் மட்டுமன்றி IBC வானொலி DAN தொலைக்காட்சி உலகத்தமிழர் வானொலி வாரணம் F.M., கனேடியதமிழ் வானொலி, யாழ் F.M., சக்தி F.M., தமிழ் *1* தொலைக்காட்சியூடாகவும் தம் நிகழ்ச்சிகளை வழங்குகிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் பங்கு பற்றிக் கொண்டிருக்கும் சைவப்புலவர்களை நோக்குவோம்.

சைவப்புலவர் ஹேமலோஜினி குமரன்
சைவப்புலவர் ந. புகன் ஸ்ரீந்திரன்
சைவப்புலவர் சு. செல்லத்துரை
சைவப்புலவர் ஸ்ரீ. அப்புத்துரை
சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்
சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை
சைவப்புலவர் க. நித்திய தசீதரன்
சைவப்புலவர் இ. செல்லத்துரை
சைவப்புலவர் இந்திரா செல்வலிங்கம்

சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி
சைவப்புலவர் பா. சர்வேஸ்வரசர்மா
சைவப்புலவர் வ. செல்லையா
சைவப்புலவர் ஏ. அனுசாந்தன்
சைவப்புலவர் கு. சுமுகலிங்கம்
சைவப்புலவர் கா. கமலநாதன்
சைவப்புலவர் த. குமரன்
சைவப்புலவர் ஸ்ரீதயாழன்

## அடிக்குறிப்புகள்

1. சைவப்புலவர் மணி செல்லையா வ. செவ்வி
2. மேற்படி
3. மேற்படி
4. சைவப்புலவர் செல்லத்துரை இ. சிறுப்பிட்டி செவ்வி
5. **சைவப்புலவர்கள் தேர்வுகள் - விதிகளும் பாடவிதானமும்,** அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம், 2000 ப. 2
6. மு.சு. சைவப்புலவர் மணி செல்லையா வ. செவ்வி
7. சைவப்புலவர் கந்தசாமி வ. கந்தர்மடம், வ. செவ்வி
8. தபால் தலைப்பு, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்
9. கந்த சத்தியதாசன் செ. செயலாளர் கூட்ட அறிக்கை.
10. மு. சு. கந்தசாமி வ. செவ்வி
11. சைவப்புலவர் செல்லத்துரை சு. இளவாலை, செவ்வி
12. மு.சு. சைவப்புலவர் தேர்வுகள் ப. 3
13. சைவசமய தீட்சை குறிப்புப் புத்தகம், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்
14. தேர்வு விபரப் பதிவுப்புத்தகம், அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

15. மு.சு. விதிகளும் பாடவிதானமும் ப. 3
16. மேற்படி விதிகளும் பாடவிதானமும் ப. 4
17. மேற்படி விதிகளும் பாடவிதானமும் ப. 5, 6
18. மு.சு. கந்தசாமி, வ. செவ்வி
19. மேற்படி
20. கந்தசாமி வ. ஆய்வுரைக்கட்டுரையும் பட்டமளிப்பும், கடிதம், அ.இ.சை. பு. சங்கம்
21. சித்தாந்தம், சென்னை சைவசித்தாந்த மகா சமாஜத்தின் திங்கள் தமிழ்தாள் 1962, மார்கழி ப. 344
22. மு. சு. விதிகளும் பாடவிதானமும் ப. 4
23. அகில இலங்கைச் சைவப்புலவர் பட்டதாரிகள் சங்கம், பட்டச்சான்றிதழ்
24. ஒன்பதாம் ஆண்டறிக்கை, அ. இ. சை. பு. சங்கம் 8, 3, 1969 ப. 6.7
25. மு. சு. செல்லத்துரை இ
26. மு. சு. தேர்வு விபரம் பதிவுப்புத்தகம், ப 2, 5, 6, 12, 13, 17, 18
27. பண்ணிசைப் பாடல்கள், அ. இ. சை. பு. சங்கம் பின்புற அட்டை
28. மு. சு. ஒன்பதாம் ஆண்டறிக்கை, ப. 8
29. சைவப்புலவர் திருஞானசம்பந்த பிள்ளை மு. கொக்குவில், செவ்வி
30. மேற்படி
31. மு. சு. செல்லத்துரை இ.
32. திருஞானசம்பந்த பிள்ளை மு. **வரலாற்றுப் பாமாலை,** "சைவப்புலவர் இ. செல்லத்துரை அவர்கள் பாராட்டு விழா" அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் 1999

33. இராசையா ஸ்ரீதரன், **மழலைத் தமிழ் இன்பம்,** பிற்பக்க அட்டை

34. கந்த சத்தியதாசன் செ. **இந்து சமயம் 640 வினாவிடை,** பின்புற அட்டை, 2001, மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழு, புத்தூர்

35. சைவநாதம், அகில இலங்கைச் சைவப் புலவர் சங்க பொன்விழா மலர், 2010



யாழப்பாணம் நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அகில இலங்கை சைவப் புலவர் சங்க பொன் விழா சைவ மகாநாட்டில் பௌராணிகர் ஏழாலை சிவசண்முக வடிவேல் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவித்தனர். தலைவர் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை அருகே வலம்புரி சி. வெற்றிவேலாயுதம், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

உ

சிவமயம்

## அத்தியாயம் - 04

# அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் எதிர்காலத்திட்டங்கள்

### 4.1. சைவசமயப் பிரசாரகர்களை உருவாக்குதல்

*சைவசமயம் மிகமிக அநாதியானது. ஏனைய சமயங்களுக்கு ஊற்றுவாயானது. ஏனைய சமயங்கள் எல்லாவற்றிலும் காணப்படும் கொள்கைகள் அனைத்தையும் தன்னுள் அடக்கியது. முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாயுள்ள சிவபெருமான் கருணையே வடிவமானவர், அன்புருவானவர், இன்பமே செயலானவர், முற்றுமுணர்பவர், பேரறிவு படைத்தவர், பேரின்பமுடையவர், பேராற்றல் வாய்ந்தவர். இப்படியான பெருமைகளைத்தான் புராணங்கள் நமக்கு கதை வடிவில் கூறுகிறது.*

*மேலும், சைவசமயத்தில் கூறப்பட்ட வழிபாட்டு முறைகள், வணக்கமுறைகள் முதலியவை விஞ்ஞானவியல், உளவியல், சுகாதாரவியல், மருத்துவம் சார்ந்தாக அமைவு பெற்றுக் காணப்படுகின்றன. இவை மட்டுமன்றி இந்த*

உலகத்தில் பிறந்த மனிதன் ஒவ்வொரு உயிர்களையும் மதிக்க வேண்டும் எனவும் இவ்வுயிரினங்கள் வாழ்ந்தால்தான் நாம் வாழ முடியும் எனவும், நான் மட்டும் வாழ்ந்தால் போதாது எல்லோரும் வாழ வேண்டும் என்ற சிந்தனையும் அவசியமானது.

ஆலயங்களில் நடைபெறும் கிரியைகள் எதற்காக நடை பெறுகின்றது, அக்கிரியைகளை ஆற்றுவதனால் கிடைக்கும் பயன் என்ன என்று பலருக்கு தெரியாது. ஆலயங்களில் பக்தி குன்றி ஒற்றுமை குன்றி சடங்குச் சமயமாகக் கிரியைகளை நடாத்திக் கொண்டிருக் கின்றார்கள். இவர்களுக்கெல்லாம் சைவசித்தாந்த விளக்கத்தில் கிரியைகளை எடுத்துக் கூற வேண்டிய தேவை உள்ளது.

இவற்றிற்கு மேலாக இன்று சைவன் யார்? என்று கூடத் தெரியாத நிலை. சைவ சமயத்தில் நாம் எதைச் செய்ய வேண்டும், எந்தத் தெய்வத்தை வழிபட வேண்டும் என்று கூடத் தடுமாறிய வண்ணமாக உள்ளனர். இதே பிரச்சினை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டுக் காலத்திலும் இருந்தமையை வரலாறுகள் கொண்டறிகின்றோம்.

இன்றுகூட எமது சமயம் எது? எமது சமயத்தின் கர்த்தா யார்? எனத் தெரியாது. அன்னிய மதங்களைக் கூடச் சென்று வழிபாடாற்றுவதும் அன்னியக் கலாசாரங்களைக் கடைப்பிடிப்பதும் சைவத்துக்கு மாறான செயல்களில் ஈடுபட்டு சைவர்கள் என்று கூறிக் கொண்டிருப்பதுவும் வேதனைக்குரிய விடயமாகின்றது.

இவை மட்டுமன்றி அந்நிய மதமாகிய கிறிஸ்தவம், இஸ்லாம் போன்றன தமது பிரச்சாரகர்களின் மூலம் நமது சமயத்தின் சீர்கேடுகளை எடுத்துப் பேசி வீடுவீடாகச்

சென்று நாய்க்குக் கருவாட்டுத்துண்டு போட்டது போல் பல சைவர்களை இன்று மதம் மாற்றிக் கொள்வதோடு நமது சமயத் தத்துவங்களைத் திரித்துக் கூறி தம்மதங்களைப் பரப்பி, இன்று சிவபூமியாகிய இலங்கையை நிம்மதியற்ற நாடாக்கி விட்டனர் என்றுதான் பல சைவச்சான்றோர்கள் பேசிக் கொள்கின்றார்கள்.[1]

இந்த வகையில் நோக்குகின்றபோது சைவசமயத்தைக் கற்க வேண்டும், சைவத்தில் புலமைபெற வேண்டும் என்ற பெரு விருப்போடு வருகை தந்து இரண்டாண்டுகள் கற்று இரு தேர்வுகளிலும் சித்தி பெற்று, சைவப்புலவர் பட்டம் பெற்றவர்கள் சைவ சமயத்தை வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. எனவே சைவப்புலவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து அவர்களுக்குப் பிரசார உத்திகளை வல்லமைவாய்ந்த பெரியோர்கள், பேராசிரியர்கள், சிவாசாரியார்கள், நல்லைக் குருமணி போன்றவர்களினால் வழங்கிப் பயிற்சி கொடுத்து எங்கெங்கெல்லாம் பிரசாரம் தேவையோ அங்கங்கெல்லாம் துணிந்துநின்று பேசக்கூடிய வல்லமையாளர்களை எல்லாம் வல்ல பரமசிவன் கருணைகொண்டு பார்வதியின் அருள் கொண்டு உருவாக்க வேண்டும் என எண்ணிக் கொள்கின்றார்கள்.[2]

## 4.2. சைவப் புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம் பெற்றுக் கொடுத்தல்

இலங்கையில் ஆசிரிய நியமனங்கள் கல்விப்பொதுத் தராதரப் பரீட்சையில் 3 பாடங்கள் சித்தியெய்திய அடிப்படைத் தகுதியைக் கொண்டு போட்டிப்பரீட்சைகள் நடாத்தித் திறமையானவர்கள் நியமிக்கப் படுகின்றார்கள். பாடசாலைகளில் தொண்டின் அடிப்படையில் கல்விகள் கற்பிக்கச் சென்றவர்களைக் கருணை அடிப்படையில்

நேர்முகப்பரீட்சைகள் வைத்து அவர்களது கல்வித்தராதரங்கள், ஒழுக்கங்கள் என்பனவற்றைக் கணிப்பீடு செய்து ஆசிரிய நியமனம் வழங்குகின்றார்கள். மேலும் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குகின்றார்கள். இத்தோடு கல்வியியற் கல்லூரிகளில் படித்துப் பயிற்சி பெற்று வெளியேறுபவர்களுக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்படுகின்றது.

மேலுள்ளவற்றோடு சைவசமயத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களாக வருடாவருடம் வெளியேறும் சைவப்புலவர் களுக்கு ஆசிரிய நியமனம் கொடுக்கின்றபோது, இரண்டாண்டுகள் சைவசமயத்தை நான்கு பாடமாக விரித்துக் கற்றுக் கொண்ட காரணத்தினால் இவர்கள் சைவத்தில் புலமை பெற்றிருக்கின்றார்கள். இதனாலேயே சைவப்புலவர் பட்டம் வழங்கப்படுகின்றது. எனவே இச்சைவப் புலவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவது பொருத்தமானதாகும்.

எனவே, இந்நிலமையை இந்துக் கலாசார அமைச்சருக்கூடாகக் கல்வி அமைச்சருக்கும் மதிப்பிற்குரிய ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்துவதோடு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக்குருமகா சந்நிதானம், சைவபரிபாலன சபை, வடமாகாண இந்து இளைஞர் பேரவை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம், சைவ வித்தியா விருத்திச்சங்கம் அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்பு விவேகானந்த சபை என்பவற்றின் அனுசரணையோடு சைவப் புலவர்களுக்கு எதிர்காலத்தில் ஆசிரிய நியமனம் கிடைப்பதற்கு உத்தேசித்துள்ளதாக நிர்வாக சபையின் ஏகோபித்த முடிவாகக் கூறியுள்ளார்கள்.

## 4.3. அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தை மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனமாகத் தரமுயர்த்தல்

இன்று உலகளாவிய ரீதியில் கல்வியை மூன்று நிலைகளாகப் பிரித்து நோக்குகின்றார்கள்.

1. ஆரம்பக்கல்வி 3 - 11 வயது வரை
2. இடைநிலைக் கல்வி 11/12, - 17/18 வரை
3. உயர் நிலைக் கல்வி 20 வயதுக்கு மேல்

இப்பிரிவுகளில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி எனுமிரண்டும் பள்ளிக்கூட மட்டத்திலான கல்வியைக் குறித்து நிற்கின்றது. இவை இன்று அநேகமாக எல்லோருக்கும் கிடைக்கின்றது. ஆனால் உயர்கல்வி என்ற மூன்றாம் நிலைக்கல்வி கிடைப்பது குறைவு. ஏனெனில், இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் பொருளாதாரப் பிரச்சினை நிலவுவதால் உயர் கல்விக்கு அதிகளவு பணம் தேவைப்படுகின்றது. எனவே திறமை அடிப்படையில் வெட்டுப் புள்ளிகளைக் கொண்டு உயர்கல்விக்கு குறிப்பிட்ட சதவீதத்தினரையே இன்று உள்வாங்கு கின்றனர். குறிப்பாகச் சொன்னால் ஆரம்பக்கல்வியைப் பெறுகின்ற 100 மாணவர்களில் 1 மாணவரே உயர்கல்வியைப் பெறுகின்றார்.

உயர்கல்வி எனும்போது பல்கலைக்கழக மட்டத்திலான கல்வியையே குறித்து நிற்கின்றது. என்றாலும், இடைநிலை மட்டத்தின் செயற்பாட்டுக்கு அப்பாற்பட்ட கல்விச் செயற்பாடு அனைத்தையும் 3ம் நிலைக்கல்வி தனக்குள் அடக்குகின்றது. அதாவது 17/18 வயதிற்கு அப்பால் பாடசாலையைத் தவிர்த்து பெறப்படும் கல்வி 3ம் நிலைக் கல்வியாக அமைகின்றது.

இந்த வகையில் 3ம் நிலைக் கல்விக்குள் பல்கலைக் கழகம், பல்கலைக்கழகக்கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி, கனிஷ்ட கல்லூரி, ஆசிரிய பயிற்சிக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, வணிகக் கல்லூரி போன்றவை அடங்குகிறது.

3ம் நிலைக் கல்வியினுடைய நோக்கம் பற்றி இங்கிலாந்தில் 1963ம் ஆண்டு வெளியான உயர்கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையில் றொபின்ஸ் பிரபு பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"தொழிற் பிரிவு அடிப்படையிலான ஒரு சமுதாயத்தில் ஏற்றவோர் தொழிலை மேற்கொள்வதிற்கான திறன்களில் பயிற்சியளித்தல், தொழில் திறன்களை மட்டும் கொண்டு மக்களை வளர்க்காது பண்பாடு கொண்ட குடி மக்களை நாட்டுக்கு அளித்தல், உண்மையை ஆராய்ந்து கண்டறியும் அறிவை வளர்த்தல், பொதுப் பண்பாட்டையும் பொது நியதிக்கு உரிய குடிமையையும் நாட்டு மக்களிடையே பரவச் செய்தல்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 3ம் நிலைக் கல்வி பற்றிச் சிந்திக்கும் போது வெறுமனே பட்டங்களையோ, உயர் தகைமைச் சான்றுகளையோ வழங்குவது மட்டுமே இம் மூன்றாம் நிலைக் கல்வியின் நோக்கம் அல்ல. இளம் சந்ததியினரைப் பயிற்றிக் கல்வியளிப்பதோடு நல்ல பண்புள்ளவர்களையும் நாட்டில் உருவாக்க வேண்டும்.

3ம் நிலைக் கல்வியின் நோக்கங்களில் ஒன்று முடிந்தவரையில் எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இந்த வகையில் நோக்கும்போது பல்கலைக் கழகங்களுக்கு ஒரு தொகை மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட மிகுதி மாணவர்கள் வெளிவீசப்படுகின்றார்கள். இவர்களில் ஒரு பகுதியினரே

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தில் இணைந்து கல்வி கற்றுப் பட்டம் பெறுகின்றார்கள்.

பல்கலைக்கழகக் கல்வி போன்று இரண்டாண்டுகள் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் என இரு பரீட்சைகள் நடைபெற்று வருவதை 1ம் வருடம் 2ம் வருடம் எனக் கொண்டாலும், தகுதிகாண் பரீட்சையாக நடத்தப்படும் G.A.Q. பரீட்சை போல பிரவேச புலவர் பரீட்சை என்ற ஒன்றையும் நடாத்தினால் சைவப்புலவர் பட்டம் கலைமாணி பட்டத்திற்கு (B.A.) தகுதியாக மாட்டாதா? என்பது இவர்களது அங்கலாய்ப்பாக உள்ளது.

மேலும், பல்கலைக்கழகக் கல்விபோல் ஒவ்வோர் ஆண்டும் 5 வினாத்தாள்களைக் கொண்டு அவற்றிலே 4, 5 நூல்கள் பாடத்திட்டமாக அமைத்து, முறைப்படி பரீட்சைகளை நடாத்திப் பட்டம் வழங்குவதோடு இறுதி வருடத்தில் ஓர் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிப்பது போன்று இவர்களும் ஆய்வுக்கட்டுரை எழுதுகின்றார்களே, அப்படியென்றால் இப்பட்டம் பல்கலைக்கழகப் பட்டத்திற்குத் தகுதியாகாதா? என்பதும் இவர்களுடைய அங்கலாய்ப்பாக உள்ளதைக் காணமுடிகின்றது.[4]

இச்சிந்தனை ஓரளவு பயன் கொடுக்கும் வகையில், 2008ம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புக்கள் பீடம் சைவப் புலவர் பட்டத்தை ஒரு பட்டச் சான்றிதழாக ஏற்றுள்ளார்கள். சைவசித்தாந்த முதுகலைமாணி கற்கும் தகுதியாக ஏற்றுள்ளமை சங்கத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றது.

மேலும், "இந்தியா போன்ற நாடுகளில் பல்கலைக் கழகக் கல்வியாகிய 3ம் நிலைக்கல்வியை யாரும் வழங்கலாம் என்ற சட்டம் உண்டு. ஏன் இலங்கையில் இப்படியான ஒரு நிறுவனம் 3ம் நிலைக்கல்வி நிறுவனமாக வரமுடியாது?" என்கின்றார்கள்.

அடுத்து, 1963ல் இங்கிலாந்தில் வெளியான உயர்கல்வி ஆணைக்குழுவின் அறிக்கையில் றொபின்சன் பிரபு குறிப்பிட்டதைப் போன்று "பண்பாடு கொண்ட குடிமக்களை வளர்த்து நாட்டுக்குக் கொடுக்க வேண்டும். உண்மையை ஆராய்ந்து கண்டறியும் அறிவை வளர்த்தல், பொதுப் பண்பாட்டையும் பொதுநியதியையும் ஏற்று நடக்கும் குடிகளை நாட்டில் பரவச் செய்தல்" என்ற 3ம் நிலைக்கல்வி பற்றிய கருத்தை நோக்கும்போது அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமும் இக்கோட்பாடுகளை நிறைவேற்றுவதாகக் காணப்படுகின்றது.

எனவே மேற்கூறிய காரணங்களை முன் வைத்து, இந்நிறுவனத்தை கௌரவ இந்துக் கலாசார தமிழ் விவகார அமைச்சருடனும், கல்வி கலாசார உயர்கல்வி அமைச்சுடனும் ஜனாதிபதியுடனும் தொடர்பு கொண்டு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தை 3ம் நிலைக்கல்வி நிறுவனமாகத் தரமுயர்த்தி இச்சங்கத்தால் வழங்கப்படும் பட்டத்திற்கு மதிப்பளிக்கக்கூடிய வகையில் மாற்ற வேண்டும் என சங்கத்தின் தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமியவர்கள் தெரிவித்தமையை அறியமுடிகின்றது.

## 4.4 நூல்நிலையம் அமைத்தல்

மாணவர்களின் கல்வித் தேவையைக் கருத்தில் கொண்டு அவர்கள் கற்க வேண்டிய நூல்களை அவசியமாகக் கொண்ட நூல் நிலையமொன்றை ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் பல நூல்கள் இன்று அரிதாகவே கிடைக்கின்றது. இச் சங்கத்தின் பொருளாதார நிலையோ மிக மோசமாகக் காணப்படுகின்றது. எனவே நன்கொடையாகக் கல்வியாளரிடம் ஒவ்வொரு நூலாகச் சேகரித்து மிகுதித் தேவைக்கு அவசியமான ஒரு சில நூல்களைப் பெற்று நூல் நிலையம் வெகு விரைவில்

திறக்கப்பட வேண்டும் என சைவப்புலவர் சி. திருநாவுக்கரசு அவர்கள் கூறுகின்றார்கள்.

## அடிக்குறிப்புக்கள்

1. கந்தையா மு. பண்டிதமணி, ஏழாலை, செவ்வி
2. கந்தசாமி வ. சைவபூஷணம், கந்தர்மடம், செவ்வி
3. சி. திருநாவுக்கரசு, செவ்வி
4. செல்லத்துரை சு. இளவாலை, செவ்வி



அகில இலங்கை சைவப்புலவர் சங்கப் பொன் விழா சைவ மாநாட்டில் நூலாசிரியர் சைவப்புலவர் சைவசித்தாந்த கலாநிதி செ. கந்த சத்தியதாசன் அவர்களுக்கு சைவசித்தாந்தப் பணி களைப் பாராட்டி சங்கம் சார்பாக பேராசிரியர் மா. வேதநாதன் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஆகியோர் விருது வழங்கி கௌரவிக்கின்றார்கள் - 2010

உ
சிவமயம்

# நிறைவுரை

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கமானது காலத்தின் தேவையை அறிந்து ஆரம்பிக்கப்பட்டது என்றே கருதமுடிகின்றது. ஏனெனில் 1505-ல் இலங்கை வந்த போர்த்துக்கேயரும் தொடர்ந்து ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் ஆட்சியைக் கைப்பற்றி தமிழர்களை அடிமைகளாக்கியது மட்டுமன்றி இயல்பாக இருந்து வந்த சைவப்பண்பாடு, கலாசாரம் என்பவற்றை அழித்தும் கொண்டனர் என்பது வெளிப்படை. இப்படி சைவ சமயம், சைவப்பண்பாடு சீரழிந்த நிலையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில், விடிவெள்ளி போல ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தோற்றம் பெற்று சைவசமயத்தையும் தமிழையும் சைவக் கல்வியையும் வளர்ப்பதற்கு வித்திட்டு நீரூற்றி பசளையிட்டு விலங்குகள் அதைக் கடிக்காதும் பாதுகாத்துக் கொண்டார்.

இவ்வாறு தொழிற்பட்ட நாவலரிடையே இருந்த இரு முக்கிய சிந்தனை யாதெனில் ஒன்று, இந்து சமயத்தைக் காத்துக் கொள்ள நிறுவன அமைப்பு அவசியமானதாகும். இரண்டு, இந்துக்கள் இன்று அறியாமை காரணமாகவே அன்னியக் கலாசாரத்தில் மோகங்கொண்டு அன்னியராகிக் கொண்டிருக்கின்றார்கள். இதை வளரவிடாது தடுப்பதற்கு ஒரே ஒரு வழி யாதெனில் கல்வியை ஊட்டவேண்டும் என்றார்.

இந்த வகையிலேயே இந்துக் கல்லூரி அதிகாரசபை, யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, சைவ வித்தியா

விருத்திச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை என இந்நிறுவனங்கள் காலத்திற்குக் காலம் பணிசெய்யத் தொடங்கிப் பணியாற்றின என்றாலும், 1960ம் ஆண்டுகளில் அரசாங்கம் சகல பாடசாலைகளையும் அரசாங்க மயப்படுத்தி தாங்களே கல்வி வழங்க வேண்டும் என்றும் அதிகாரமும் எங்களிடமே இருக்க வேண்டும் எனவும் கூறி, சகல பாடசாலைகளையும் அன்று அரசாங்கம் கையேற்கத் தொடங்கியது.

இவ்வாறிருந்த காலத்திலேதான் 1960ம் ஆண்டு புரட்டாதி மாதம் சைவர்களின் கலை, கல்வி ஆரம்பத்திற்குரிய வெற்றித்திருநாளாம் விஜயதசமியன்று பெரியோர்களின் ஆசியோடு சைவப்புலவர் சங்கத்தை ஆரம்பித்தார்கள். நாவலர் மரபைப் பின்பற்றி சைவக்கல்வியை வளர்க்க வேண்டும் என்ற உணர்வுடன் தொழிற்படத் தொடங்கினார்கள்.

உண்மையிலேயே இன்று அரசாங்கப் பாடசாலை களில் சமயக் கல்வியானது சரியான முறையில் சமய உணர்வோடு ஊட்டப்படுவதில்லை என்பது ஆய்வாளர்களது கருத்தாகும். இதற்கும் மேலாக சைவசமயத்திற்குப் பயிற்சி பெறாத விஞ்ஞானப் பாட, கணிதப் பாட ஆசிரியர்களுக்கு இரண்டு பாடம் என்று சைவசமயத்தை நேர அட்டவணையில் போடப்படுவதால் அவர்களால் திறமையாகக் கற்பிக்க முடியவில்லை. இதனால் சைவசமயக்கல்வி மழுங்கடிக்கப்படுவதைக் காணலாம். மேலும், இக் கல்வியானது வெறுமனே பரீட்சைக்காகக் கற்பிக்கப்படும் கல்வியாக அமைந்து செயன்முறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாமையால் படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில் என்ற நிலைக்கு ஆளாக வேண்டிய சமுதாயம் ஒன்று எழுச்சி பெற்றமையை காணமுடிகின்றது.

மேலும் பௌத்த, இஸ்லாமிய, கிறிஸ்தவ பாடசாலைகள் சிலவற்றில் சைவசமயம் கற்பிப்பதற்கு ஆசிரியர்களே காணப்படாத நிலையும் காணப்படுகிறது.

எனவே, சைவசமயக் கல்வியைத் திறம்படச் செய்வதற்கு அதற்கேற்ற வகையில் உணர்வோடு கல்வி ஊட்டப்பட வேண்டும். எனவே சைவப்புலவர் சங்கம் ஆரம்பித்து இளம் தலைமுறையினரைப் பயிற்றுவிக்க விரிவுரைகளை நடாத்தி, பரீட்சைகளை நடாத்தி தரங்களோடு பட்டமளித்து வருவது மிகச்சிறந்த காலத்தின் தேவைக்கேற்ற பணியாகும்.

அடுத்து, இச்சங்கத்தின் விரிவுரை வகுப்புக்கள் மட்டுமன்றி தேர்வுகளில் பங்குபற்றுவோரையும் அவதானிப்பின், ஒரு காலத்திலே பல்கலைக்கழகம் 'தந்தக் கோபுரம், அதை எட்ட முடியாது' என்று விரக்தியுற்று பட்டம் எடுக்க முடியாது என்று நினைத்தவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்குகின்ற ஒரு நிறுவனமாக இருந்து பட்டம் வழங்குவதால் உளநிலை பாதிக்கப்படாத வர்களாக, நற்சிந்தனையுடையவர்களாக, மனத் திருப்தி உள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள். இதே போன்று தற்போதைய சூழ்நிலைகளில் வெட்டுப்புள்ளியில் தவறியவர்கள் மற்றும் கற்க வேண்டும் என்ற பேரார்வம் கொண்டவர்களுக்கு இந்நிறுவனம் வாய்ப்பளிக்கும் நிறுவனமாக அமைந்தமை சிறப்பானதாகும்.

இவை மட்டுமன்றி இன்று பல்கலைக்கழகங்களில் கற்பவர்கள்கூட அங்கு பட்டத்தைப் பெற்ற பின்பும் கற்க வேண்டும். கல்வியில் விரிந்து பரந்த அறிவு பெற வேண்டும் என நினைப்பவர்கள் மேலும் கற்றுக் கொள்வதற்கும் இச் சங்கம் வாய்ப்பளிப்பதாக உள்ளது.

இவற்றுக்கு மேலாக, மரபு நெறிமுறையில் நமது சமயத்தை வளர்க்க வேண்டுமாயின் நமது சமய அறிவை

நாம் பெற்றிருக்க வேண்டும் என்று நினைக்கும் சமய ஆர்வலருக்கும் எங்கே கற்க முடியும் என்ற அங்கலாய்ப்பில் உள்ளவர்களுக்கும் இச் சங்கம் கல்வியை வழங்குகின்றது.

இவற்றினை விட மேலை நாடுகளைப் பொறுத்த வரையில் 3ம் நிலைக் கல்வி நிறுவனங்களில் ஒன்று முதியோருக்குரிய பொழுதுபோக்கு நிறுவனமாக இருந்து முதியோரின் தனிமையைப் போக்கிக் கொள்வதற்காக அமைகின்றது. அந்த வகையில் கூட சைவப்புலவர் சங்கத்தில் உத்தியோகம் பார்த்து ஓய்வுபெற்றதன் பிற்பாடு கூட அறுபது வயதிற்கப்பாலும் இந்நிறுவனத்தில் இணைந்து பொழுது போக்காகக் கற்பதோடு, "பாடை போகினும் ஏடுகைவிடேல்" என்ற முதுமொழிக்கமைய, கல்வியை இப்பிறப்பில் பெற்றுக் கொண்டால் இனி வருகின்ற பிறவிகளுக்கும் அது வரும் என்ற நம்பிக்கையோடும் ஞான நூல்களைக் கற்றுக் கொண்டால் நம் வாழ்க்கையை தவ வாழ்க்கையாக்கி பிறவி நோயிலிருந்து நீங்கிவிடலாம் என்ற நம்பிக்கையிலும் கல்வி பெற வருகின்றார்கள். அந்த வகையில் முதியோர் கல்வி நிலையமாகவும் தொழிற்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இளமை வாழ்க்கையிலே கல்வி கற்க முடியாமையால், வாழ்க்கையில் ஏற்பட்ட திருமணப் பிரச்சினையால், கிட்டிய உறவினரின் பிரிவினால், தீராத மன நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கூட தம் பொழுதை நல்ல பொழுதாகக் கழிக்க வேண்டும் என்று கருதியும் இக் கல்வியைத் தொடர்கின்றார்கள் என்றால் இச்சங்கம் சமூகத்திற்கு அவசியமான ஓர் நிறுவனமாகக் காணப்படுகின்றது.

இன்று, 'முதியோரைப் பேணுங்கள் முதியோரைப் பேணுங்கள்' என்று பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற தொலைத் தொடர்பு

சாதனங்கள் மூலம் குரலெழுப்புவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது. சைவக்கல்வியின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றும் இதுவே. முதியோரைத் தெய்வமாகப் பேணுக எனும் வகையில் மாதா, பிதா, குரு, தெய்வம் என்பவர்கள் வணக்கத்துக் குரியவர்களாகும். அந்த வகையில் இச் சங்கத்திற்குக் கல்வி கற்க வருகின்றவர்கள், கற்பிக்க வருகின்றவர்கள் குறிப்பிட்ட வயதைச் சார்ந்தவர்கள் அல்லர். 20 வயது முதல் 80 வயது வரையில் எல்லோருமாக ஒன்று கூடி கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதோடு பரஸ்பர உறவுகளையும் வளர்த்துக் கொள்வதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்த வகையில் முதியவர்களையும் இளைஞர்களையும் இணைக்கும் பாலமாக இச்சங்கம் தொழிற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது போற்றப்படக் கூடியதாகும்.

இவ்வாறு செயற்பட்டுவரும் சங்கமானது சைவசமயத்திற்கு வரும் சவால்களையும் சைவக் கல்வியில் ஏற்படும் பாதிப்புக்களையும் தடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். இன்று சைவசமய அறிவு, ஆலய வழிபாட்டோடும் சடங்குகளோடும் தொடர்புடைய உள்ளார்ந்தமான அறிவியலை அவ்வப்போது விளங்க வைக்க வேண்டிய தேவை இருக்கின்றது. மேலும் சைவத்திற்கு அச்சுறுத்தல்கள் வருகின்ற வேளையில் அவற்றிற்கு குரல் கொடுக்க வேண்டியவர்களாக இச்சங்கம் இருக்க வேண்டும் என்பது ஆய்வாளனின் சிந்தனையாகும்.

மேலும், 1960ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்போது பொன்விழாவையும் கொண்டாடிய அகில இலங்கை ரீதியாகத் தொழிற்படும் இந்நிறுவனத்திற்கு ஒரு கட்டடம் இல்லையா என்பது அதிசயப்படக் கூடியதாக உள்ளது. எனவே ஒரு இடத்தில் சிறிய அலுவலகம் ஒன்றையாவது அமைத்து நடத்த வேண்டும் எனப் பணிவாக வேண்டுகின்றேன்.

இவையோடு இணைந்த வகையில் சைவசமயத் திருநூல்களை மீள்பதிப்புச் செய்து வெளியிடுவதோடு பல நூல்களுக்கு இலகு நடையில் புத்துரை எழுதியும், காலத்திற்குத் தேவையான வகையில் நூல்கள் எழுதியும் பதிப்பித்து வெளியிட வேண்டும். அப்போதுதான் சைவக்கல்வியை சிறப்பாக வளர்க்க முடியும் என்பது ஆய்வாளனின் கருத்தாகும்.

இன்றும் பல சைவசமய நிறுவனங்கள் கல்வியை வளர்த்து வந்த போதிலும், மரபு முறை பிறழாது சைவ இளந் தலைமுறையினரைப் பயிற்றுவித்து சைவப்பற்றுள்ள சைவத்தில் புலமையுள்ள புதியதோர் சமூகத்தை உருவாக்கி சைவக்கலாசாரம் பேணிவளர்த்துக் கொண்டிருக்கும் நிறுவனம் என்றால் அது, அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் ஒன்றுதான் எனக் கூறுவது மிகப் பொருத்த மானதாகும்.

இன்று சைவக்கல்வியைச் சுலபமாக வளர்க்க வேண்டுமானால் சைவ ஆசிரியர்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்து வாண்மை விருத்தி அடையச் செய்தல் வேண்டும். எனவே, சேவைக்காலப் பயிற்சிகள் சைவ ஆசிரியர்களுக்கு அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் வழங்க வேண்டும். இத்தோடு, ஆசிரியரின் வகுப்பறையில் சைவ சமயக்கல்வியைக் கற்பிப்பதில் உபகரணப் பயன் பாடு அவசியமாக உள்ளது. இந்த உபகரணங்களை இனமறிந்து அவற்றைப் பெற்று எல்லா பாடசாலை களுக்கும் வழங்க வேண்டிய தேவையும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்திற்கு உரிய கடமை என ஆய்வாளன் எண்ணுகிறான்.

சைவப்புலவர் சங்கத்திற்கு போதிய நிதிவசதி கிட்டுவதில்லை. பொருள் படைத்தவர்கள், வெளிநாடு களில் வாழ்பவர்கள் நிதியுதவிகளைச் செய்தால் மேலும்

இச்சங்கம் பல சைவ சமயப் பணிகளை செய்ய முடியும் என்பது வெளிப்படையானதாகும்.

மேலும், இச்சங்கம் வளர்ந்து நற்பணியாற்றி, "மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற வாக்கை மெய்ப்பிக்க தொழிற்பட்டு, சைவ நெறி காத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் ஆத்மா குளிர்ச்சி பெற செயற்பட வேண்டி, எல்லாம் வல்ல தில்லை நடராஜப் பெருமான் அருள்புரிய அவனது பாதக்கமலங்களைத் தியானிக்கின்றேன்.

சுபம்



கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெற்ற அகில இலங்கை சைவப் புலவர் சங்க பொன்விழா சைவ மாநாட்டிற்கு எழுந்தருளிய திருவாவடுதுறை ஆதீன 23வது குரு மகா சந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன 2வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோரை நூலாசிரியர் சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் வரவேற்கின்றார் - 2010

## நூல் இரவல் வழங்கும் நூலகம்

நூல்களை இரவலாகப் பெற்றுச் செல்வதற்கு முன்னர் தெரிவு செய்யப்பட்ட நூலின் நிலை பற்றி நன்கு பரிசீலித்து பார்த்து அவற்றின் பக்கங்களோ, அல்லது படங்களோ இல்லா திருந்தால் அல்லது அந்நூலில் வேறு ஏதாவது விதத்தில் சேதம் ஏற்பட்டிருந்தால் அதுபற்றி நூலகருக்கு அறிவிக்க வேண்டும்.

இந்நூலை கீழ்காணும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| 01/10 | (475) | | |
| 18/11/19 | (475) | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

# இந்நூலாசிரியரைப் பற்றி...



சைவப்புலவர்
செ.கந்த சத்தியதாசன் J.P.

சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன் மாருதப்புர வீகவல்லியின் குதிரை முகம் மாற்றிய கந்தசுவாமியார் அருள்பாலிக்கும் மாவிட்டபுரத்தில் சைவநற் தொண்டன் கந்தையா சின்னமணி தம்பதிகளுக்கு நான்காவது புத்திரனாகப் பிறந்து இளமையில் யா/ வீமன்காமம் மகாவித்தியாலயத்திலும் பின்னர் யா/ யூனியன் கல்லூரியிலும் கற்றார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞான பயிற்சி பெற்றுள்ளார். யாழ் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்தில் சிறப்புப் பட்டமும் (B.A., Hons) சைவசித்தாந்தத்தில் முதுகலைமாணிப் பட்டமும் (M.A. in Shaiva Shithantham Distinction) கல்வியியல் டிப்ளோமா (Dip.in-Edu) பட்டமும் பெற்றார். நல்லாசிரியனாக பல மாணவர்களை உருவாக்கி தற்போது யாழ்ப்பாணம் வலிகாமம் கல்வி வலயத்தில் சேவைக்கால ஆசரிய ஆலோசகராக கடமையாற்றி ஆசிரியர்களை வழிப்படுத்தி வருகின்றார். அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தால் சைவப்புலவர் பட்டமும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் சைவசித்தாந்த பண்டிதர் பட்டமும் இலங்கை பரீட்சை திணைக்களத்தால் இந்துதர்மாசிரியர் பட்டமும் கனடா வேதாந்த ஞானமன்றத்தால் அறநெறிக்குரு பட்டமும் பெற்றுள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வளவாளராகவும் தெய்வீக சைவ சொற்பொழிவாற்றுதல், கதாப் பிரசங்கம் நிகழ்த்தல், புராணபடனம் செய்தல், செய்வித்தல் என்பவற்றோடு சிறந்த பட்டிமன்றப் பேச்சாளராகவும், மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழுவின் அமைப்பாளராகவும் அறநெறிப் பாடசாலை அதிபராகவும் பணியாற்றி வருகின்றார். மாணவர் களின் கல்வியில் அக்கறைகொண்டு சைவப்புலவர், சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பாலபண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சைக்கு தோற்றுவோருக்கு கற்பித்தல், பல்கலைக் கழக வெளிவாரி மாணவர்களுக்கு இந்து நாகரிகம் கற்பித்தல் என்பவற்றோடு பல நூல்கள், ஆய்வுக்கட்டுரைகளை எழுதியும் வெளியிட்டும் வருகின்றார். இலங்கை கல்வி வெளியீட்டுத் திணைக்களம் சைவசமய பாட நூலாக்கக் குழுவிலும் இலங்கை தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் அறிவுரைப் வழிகாட்டி நூலாக்கக் குழுவிலும் எழுத்தாளராக செயற்பட்டு வருகின்றார்.

சிவஜோதி,
பொற்பதி வீதி. கோண்டாவில்.

சிவத்தமிழ் வித்தகர்.
**சிவமகாலிங்கம்** M.A.,
விரிவுரையாளரும் உதவிப் பணிப்பாளரும்.